140

140.

PANDIAN

PAINTAMIL KOVAI

Book I for Form IV

24 JAN 1965
MADRAS

COMPILED AND EDITED
BY
Vidvan M. Rajamanikkam Pillai, B.O.L., L.T.
Senior Tamil Pandit,
Muthialpet High School, Madras.

913

THE EDUCATIONAL PUBLISHING Co.,

THYAGARAYANAGAR MADRAS.

பாண்டியன் பைந்தமிழ்க் கோவை

முதற் புத்தகம்—நான்காம் பாரம்

494.81186

தொகுப்பாளர்—பதிப்பாளர்:
வித்வான் மா. இராசமாணிக்கம், B.O.L., L.T.
தலைமைத் தமிழாசிரியர்,
முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

913

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
தியாகராயநகர் :: :: சென்னை

பதிப்புரிமை] 1944 [விலை ரூ. 1-2-0

First Impression Dec. 1944.

93119

முகவுரை

பாண்டியன் பைந்தமிழ்க் கோவை என்ற பெயர் கொண்ட இந்நூல்கள் இரண்டும், 4, 5–ஆம் பாரங்களுக்கு என்று தொகுக்கப்பட்டவை. இவற்றிலுள்ள செய்யுட் பகுதிகள் அவ்வப் பார மாணவர் தகுதி அறிந்தும், தமிழறிவைச் சுவைபட ஊட்ட விரும்பியும், தக்க முறையில் ஆராய்ந்து தேர்ந்து எடுக்கப்பட்டவையாகும். உரைநடைப் பகுதிகளும் இங்ஙனமே பள்ளி இறுதித் தேர்வின் (S. S. L. C.) தமிழ் நூலை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்து எடுக்கப்பட்டவை. தங்கள் கட்டுரைகளை வெளியிட அன்புடன் உரிமை அளித்த அறிஞர் அனைவர்க்கும் எனது நன்றி உரியது.

ஒவ்வொரு நூலின் ஈற்றிலும் செய்யுட் பாடத்திற்குரிய விளக்கக் குறிப்புரை தரப்பட்டுள்ளது. இந்நூல்களைக் கண்ணுறும் நற்றமிழ் அறிஞர் இவற்றை வரவேற்று ஆதரிக்குமாறு வேண்டுகின்றேன்.

சேக்கிழார் அகம்
சென்னை.

மா. இராசமாணிக்கம்

Kabeer Printing Works, Madras.

உள்ளுறை

செய்யுள்

எண்			பக்கம்
I.	வாழ்த்து		
	1. கடவுள் வாழ்த்து	...	1
	2. தமிழ்த்தாய் வாழ்த்து	...	1
II.	நீதி		
	1. இனிது நாற்பது	...	2
	2. பழமொழி	...	2
	3. சிறுபஞ்ச மூலம்	...	3
	4. ஆசாரக் கோவை	...	4
	5. நாலடியார்	...	5
	6. திருக்குறள்	...	7
III.	கதை		
	1. நளவெண்பா	...	9
	2. பெரிய புராணம்	...	13
	3. சீகாளத்திப் புராணம்	...	16
	4. குசேல உபாக்கியானம்	...	20
	5. அரிச்சந்திர புராணம்	...	26
	6. கம்பராமாயணம்	...	30
IV.	பல சுவை		
	1. அழகர் அந்தாதி	...	33
	2. திருவரங்கக் கலம்பகம்	...	33
	3. கலைசைச் சிலேடை வெண்பா	...	33
	4. மீனாக்ஷி அம்மை குறம்	...	33
	5. வருணனை	...	35
	6. அரிவையர் ஆடல்	...	35
	7. தனிப்பாடல்கள்	...	36

913

உரை நடை

எண்			பக்கம்
1.	இந்திய மாணவர் —வித்வான் ச. கு. கணபதி ஐயர் B.O.L.	...	39
2.	உழைப்பால் உயர்ந்தவர் —C. V. நாராயணையர் M.A., L.T.	...	50
3.	கூட்டுறவுப் பண்டசாலைகள் —அ. முத்தையா, M.A.	...	57
4.	நூல்நிலையம் —இராவ்சாஹிப் S. வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.	...	64
5.	இரட்டைப் புலவர் —மணி. திருநாவுக்கரசு முதலியார்	...	69
6.	பண்டைத் தமிழர் வாணிகம் —வித்துவான் வே. வேங்கடராசலு ரெட்டியார்	...	73
7.	எனது இலங்கைச் செலவு —திரு. வி. கலியாணசுந்தர முதலியார்	...	79
8.	சுற்றுப் பிரயாணம் —திரு. Dr. A. சிதம்பரநாதச் செட்டியார், M.A., Ph. D.	...	86
9.	சாந்தி நிகேதனம் —திரு. R. K. சர்மா	...	90
10.	சேக்கிழார் —சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார், B.A.	...	97
11.	புதைந்த நகரங்கள் —வித்வான், மா. இராசமாணிக்கம், B.O.L., L.T.	..	103
12.	சிலம்பால் விளைந்த கதை—I —திரு. C. S. இராசாப் பிள்ளை	...	113
13.	சிலம்பால் விளைந்த கதை—II —திரு. C. S. இராசாப் பிள்ளை	...	119
14.	வேள் – பாரி —இராவ்சாஹிப் மு. இராகவையங்கார்	...	124
15.	கிள்ளி வளவன் —நாவலர்-பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டார்	...	130
16.	வள்ளல் – ஆய் – அண்டிரன் —சிவ. குப்புசாமி பிள்ளை	...	135
	குறிப்புரை	...	142

பாண்டியன் பைந்தமிழ்க் கோவை

முதற் புத்தகம்

செய்யுட் பகுதி

I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே. (1)

அருள்பழுத்த பழச்சுவையே! கரும்பே! தேனே!
ஆரமிர்தே! என்கண்ணே! அரிய வான
பொருளனைத்தும் தரும்பொருளே! கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே! புனித வாழ்வே!
கருதரிய கருத்ததனுள் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துக் கருவி ஆதி
விரிவினையும் கூட்டிஉயிர்த் திரளை ஆட்டும்
விழுப்பொருளே! யான்சொலும்விண் ணப்பம் கேளே. (2)

2. தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழில்ஒழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே!

24 JAN 1945
MADRAS

II. நீதி

1. இனிது நாற்பது

ஏவது மாறு இளங்கிளை முன்இனிதே ;
நாளும் நவைபோகான் கற்றல் மிகஇனிதே ;
ஏருடையான் வேளாண்மை தானினிது ; ஆங்கினிதே
தேறிற்கோள் நட்புத் திசைக்கு. (1)

கொல்லாமை முன்இனிதே ; கோல்கோடி மாராயன்
செய்யாமை முன்இனிதே ; செங்கோலன் ஆகுதல்
எய்தும் திறத்தால் இனிதென்ப ; யார்மாட்டும்
பொல்லாங்கு உரையாமை நன்று. (2)

மானம் அழிந்தபின் வாழாமை முன்இனிதே ;
தானம் அழியாமை தானடங்கி வாழ்வினிதே ;
ஊனம்ஒன் றின்றி உயர்ந்த பொருள்உடைமை
மானிடவர்க் கெல்லாம் இனிது. (3)

நட்டார்ப் புறங்கூறான் வாழ்தல் நனிஇனிதே ;
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகல் முன்இனிதே ;
முட்டில் பெரும்பொருள் ஆக்கியக்கால் மற்றது
தக்குழி ஈதலே நன்று. (4)

சலவரைச் சாரா விடுதல் இனிதே ;
புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே ;
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது. (5)

---

2. பழமொழி

குலவித்தை கல்லாமல் வருதல்

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் ; குலவிச்சை
கல்லாமற் பாகம் படும். (1)

கல்லாரிடம் கட்டுரைத்தல் பொல்லாதாம்

கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவற்கு—நல்லாய்
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை ; இல்லை
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு. (2)

தன் சொல்லாலே தன்னைத் துயர்ப்படுத்தல்

பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும். (3)

செல்வர்க்கு என்றும் சிறப்பு

நாடறியப் பட்ட பெருஞ்செல்வர் நல்கூர்ந்து
வாடிய காலத்தும் வட்குபவோ ?—வாடி
வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும்
புலித்தலையை நாய்மோத்தல் இல். (4)

தன் வலியில்லார் புகழ் எய்தாமை

வன்சார் புடையர் எனினும் வலிபெய்து
தஞ்சார் பிலாதாரைத் தேசூன்ற லாகுமோ ?
மஞ்சுசூழ் சோலை மலைநாட ! யார்க்கானும்
அஞ்சுவார்க் கில்லை அரண். (5)

---

3. சிறுபஞ்ச மூலம்

கற்றவர் — கல்லாதவர்

தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்
பூதரே முன்பொருள் செய்யாதார்—ஆதரே
துன்பமி லேம்பண்டு யாமே வனப்புடையேம்
என்பார் இருகால் எருது. (1)

ஒருவர்க்கு ஒன்றே எளிது

வான்குருவிக் கூடரக்கு வால்உண்டு கோல்தருதல்
தேன்புரிந்தி யார்க்கும் செயலாகா—தாம்பரீஇ
வல்லவர் வாய்ப்பன என்னூர் ஒரோ வொருவர்க்(கு)
ஒல்காதோர் ஒன்று படும். (2)

பெண்டிர் சிறப்பு

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித்—திருவாக்கும்
தெய்வதையும் எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு. (3)

கடமை உணர்வு

தான்பிறந்த இல்நினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிற ரால்கருதற் பாடுணர்ந்து—தான்பிறரால்
சாக எனவாழான் சான்றோரால் பல்யாண்டும்
ஆக எனவாழ்தல் நன்று. (4)

அறிவுடையார்—அறிவில்லார்

பூத்தாலும் காயா மரமும்உள ; நன்றறியார்
மூத்தாலும் மூவார்நூல் தேற்றுதார்—பாத்திப்
புதைத்தாலும் நாறுத வித்துள ; பேதைக்(கு)
உரைத்தாலும் செல்லா துணர்வு. (5)

---

4. ஆசாரக் கோவை

காலைக் கடமைகள்

வைகறை யாமம் துயில்எழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை. (1)

நீராடும் நீர்மை

நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்
நீந்தார் உமியார் திளையார் விளையாடார்
காய்ந்த தெனினும் தலைஒழிந் தாடாரே
ஆய்ந்த அறிவி னவர். (2)

செய்யத் தகாதவை

சுடரிடைப் போகார் சுவர்மேல் உமியார்
இடர்எனினும் மாசுணி கீழ்தம்மேற் கொள்ளார்
படைவரினும் ஆடை வளியுரைப்பப் போகார்
கடனறி காட்சி யவர். (3)

ஆசிரியரிடம் மாணவர் ஒழுகும் முறை

நின்றக்கால் நிற்க அடக்கத்தால் என்றும்
இருந்தக்கால் ஏவாமை ஏகார் பெருந்தக்கார்
சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டீக மீட்டும்
வினவற்க சொல்ஒழிந்தக் கால். (4)

வாழ்க்கைத் திறம்

துன்பத்துள் துன்புற்று வாழ்தலும், இன்பத்துள்
இன்ப வகையால் ஒழுகலும்,—அன்பிற்
செறப்பட்டார் இல்லம் புகாமை இம்மூன்றும்
திறப்பட்டார் கண்ணே உள. (5)

---

5. நாலடியார்

கல்வி

வைப்புழிக் கோட்படா ; வாய்த்தீயின் கேடில்லை ;
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார் ;
எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சை,மற் றல்ல பிற. (1)

நல்லினம் சேர்தல்

ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்—ஒருங்
குலமாட்சி யில்லாரும் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து. (2)

நட்பாராய்தல்

யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் ;—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் ; எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய். (3)

அறிவுடைமை

கடல்சார்ந்தும் இன்னீர் பிறக்கும் ; மலைசார்ந்தும்
உப்பீண் டுவரி பிறத்தலால் தத்தம்
இனத்தனைய ரல்லர் ; எறிகடற்றண் சேர்ப்ப ;
மனத்தனையர் மக்களென் பார். (4)

மானம்

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும்—இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் ; விழுமியோர்
மானம் அழுங்க வரின். (5)

இளமையிலும் அறம் செய்க

'மற்றறிவாம் நல்வினை ; யாம்இளையம்' என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா(து) அறம்செய்ம்மின் ;
முற்றி இருந்த கனிஒழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு. (6)

புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை—இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேள்அலறச்
சென்றான் எனப்படுத லால். (7)

துன்புறுதவர்

அறிவ(து) அறிந்தடங்கி அஞ்சுவ(து) அஞ்சி
உறுவ(து) உலகுவப்பச் செய்து—பெறுவதனல்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது. (8)

உண்மை உறவினர் யாவர்?

காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்;—ஏலா
இடர்ஒருவர் உற்றக்கால், ஈர்ங்குன்ற நாட!
தொடர்புடையேம் என்பார் சிலர். (9)

பெரியவர் நட்பும் சிறியவர் நட்பும்

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்;—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. (10)

---

6. திருக்குறள்

கல்வி

எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு. (1)

தொட்டனைத்(து) ஊறும் மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத்(து) ஊறும் அறிவு. (2)

கேள்வி

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. (3)

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது. (4)

அறிவுடைமை

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (5)

அறிவுடையார் எல்லாம் உடையார் ; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். (6)

சிற்றினம் சேராமை

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு. (7)

மனத்தானும் மாந்தர்க்(கு) உணர்ச்சி ; இனத்தானும்
இன்னான் எனப்படும் சொல். (8)

தெரிந்து செயல் வகை

ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். (9)

எண்ணித் துணிக கருமம் ; துணிந்தபின்
எண்ணுவம் என்ப(து) இழுக்கு. (10)

செங்கோன்மை

வான்நோக்கி வாழும் உலகெல்லாம் ; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி. (11)

இறைகாக்கும் வையகம் எல்லாம் ; அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். (12)

ஆள்வினை உடைமை

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு. (13)

முயற்சி திருவினை ஆக்கும் ; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (14)

சொல்வன்மை

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். (15)

இணருழ்த்து நாறு மலரனையர் கற்ற(து)
உணர விரித்துரை யாதார். (16)

வினைத் திட்டம்

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். (17)

எண்ணிய எண்ணியாங்(கு) எய்துப ; எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின். (18)

மருந்து

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். (19)

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (20)

III. கதை

1. நளவெண்பா

சுயம்வர காண்டம்

நிடத நாட்டுச் சிறப்பு

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத்தே சாகரம்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு. (1)

நளனது செங்கோன்மை

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறம்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடல் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு. (2)

நளன் முன் அன்னம் தோன்றல்

நீணிறத்தால் சோலை நிறம்பெயர, நீடியதன்
தாள்நிறத்தால் பொய்கைத் தலம்சிவப்ப,—மாணிறத்தான்
முன்அப்புள் தோன்று முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு. (3)

பெண்கள் அன்னத்தைப் பிடித்தல்

நாடிமட அன்னத்தை நல்ல மயில்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே—நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து. (4)

நளன் அன்னத்தின் அச்சம் தீர்த்தல்

'அஞ்சல் மடஅனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி அனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண்' என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். (5)

செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனிஅன்னம்—வெய்ய
அடுமாற்றம் இல்லா அரசன்சொல் கேட்டுத்
தடுமாற்றம் தீர்ந்ததே தான். (6)

அன்னம் தமயந்தியின் பெருமை கூறல்

'எழுஅடுதோள் மன்ன! இலங்கிழையோர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளை—உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயும் மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு. (7)

'நாற்குணமும் நாற்படையா, ஐம்புலனும் நல்லமைச்சா,
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா,—வேற்படையும்
வாளுமே கண்ணா, வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.' (8)

[நளன் வேண்ட, அன்னம் அவன்பொருட்டுத் தமயந்திபால் தூது சென்றது. அது போனபிறகு நளன் அதன் வருகையை ஆவலோடு எதிர்பார்த்து இருந்தான்.]

நளன் வருந்துதல்

'இவ்வளவில் செல்லுங்கொல் இவ்வளவில் காணுங்கொல்
இவ்வளவில் காதல் இயம்புங்கொல்—இவ்வளவில்
மீளுங்கொல்' என்றுரையா விம்மினன் மும்மதநின்(று)
ஆளுங்கொல் யானை அரசு. (9)

அன்னம் தமயந்தியை அடைதல்

மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய,—நன்னுதலும்
தன்ஆயம் விட்டுத் தனிஇடம்சேர்ந்(து) ஆங்கதனை
'என்நாடல் சொல்'என்றாள் ஈங்கு. (10)

அன்னம் நளனது பெருமை கூறல்

'அறங்கிடந்த நெஞ்சும், அருள்ஒழுகு கண்ணும்,
மறம்கிடந்த திண்தோள் வலியும்,—திறம்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒப்பரோ
அங்கண்மா ஞாலத்(து) அவற்கு! (11)

அன்னத்தைத் தமயந்தி வேண்டுதல்

'வாவி உறையும் மடஅனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்,—காவினிடைத்
தேர்வேந்தற்(கு) என்நிலைமை சென்றுரைத்தி' என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. (12)

[சுயம்வர நாளில் மன்னர் பலரும் நளனும் மண்டபத்தில் கூடி இருந்தனர்.]

மண மண்டபத்தில் நளன் இருத்தல்

மன்றலந்தார் மன்னர் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீலம்—முன்றில்
குறுவிழிக்கு நேர்நாடன் கோதை பெருங்கண்ணின்
சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய். (13)

தமயந்தி மண மண்டபத்திற்கு வருதல்

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்

செய்யதாள் வெள்ளைச் சிறைஅன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. (14)

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென்(று) இயல்அணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. (15)

தமயந்தி திகைத்தல்

காவலரைத் தன்சேடி காட்டக்கண்(டு) ஈரிருவர்
தேவர் நளன்உருவாச் சென்றிருந்தார் ;—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணநின்(று)
ஊசலா டுற்றாள் உளம். (16)

தெய்வத்தை வேண்டல்

'மின்னுந்தார் வீமன்தன் மெய்ம்மரபில் செம்மைசேர்
கன்னியான் ஆகில், கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருள்'என்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து.)17)

நளனை அறிதல்

கண்இமைத்த லால்அடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு. (18)

மணமாலை சூட்டல்

விண்ணரசர் எல்லோரும் வெள்கி மனம்சுளிப்பக்
கண்ணகல் ஞாலம் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட, வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். (19)

திண்தோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்தா மரையாய் வெளுத்தவே ;—ஒள்தாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது. (20)

பெரிய புராணம்

அப்பூதி அடிகள் புராணம்

அடிகளது பெரும்பக்தி

தாண்டவம் புரிய வல்ல தம்பிரா னருக்(கு) அன்பர் ;
ஈண்டிய தவத்தின் பாலார் ; எல்லையில் தவத்தின் மிக்கார் ;
ஆண்டசீர் அரசின் பாதம் அடைந்தவர் அடையா முன்னே
காண்தகு காதல் கூரக் கலந்தஅன் பினராய் உள்ளார். (1)

வடிவுதாம் காணார் ஆயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையும் தம்பி ரானார் அருளும்கேட் டவர்நா மத்தால்
படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாய் உள்ள
முடிவிலா அறங்கள் செய்து முறைமையால் வாழும் நாளில்.

[அப்பர் பல தலங்களைத் தரிசித்து வருகையில் அப்பூதியடிகள் இருந்த திங்களூர் வந்தார்; வந்தவர், தம்பெயரால் வைக்கப் பட்டிருந்த தண்ணீர்ப் பந்தரைப் பார்த்தார்.]

அப்பர் எங்கும் தம் பெயரையே காணுதல்

வந்தணைந்த வாகீசர் மந்தமா ருதசீதப்
பந்தருடன் அமுதமாம் தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்ததனை எம்மருங்கும் தாம்கண்டார். (3)

[பந்தர் வைத்தவர் திங்களூர் அப்பூதியடிகள் என்பதைக் கேட்டறிந்த அப்பர், அவரது இல்லம் சென்று அவரை நோக்கி,]

அப்பரது கேள்வி

'ஆறணியும் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்எழுத வேண்டியகா ரணம்என்கொல்?
கூறும்' என எதிர்மொழிந்தார் கோதில்மொழிக் கொற்றவனார்.

அடிகள் பதில் கூறல்

நின்றமறை யோர்கேளா நிறைஅழிந்த சிந்தையராய்,
'நன்றருளிச் செய்திலீர் ; நாணில்அமண் பதகருடன்
ஒன்றியமன் னவன்சூழ்ச்சி திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர்தம் திருப்பேரோ வேறொருபேர் ?' எனவெகுள்வார். (5)

'நம்மைஉடை யவர்கழற்கீழ் நயந்ததிருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பதென என்போல்வா ரும்தெளியச்
செம்மைபுரி திருநாவுக் கரசர்திருப் பெயர்எழுத
வெம்மைமொழி யான்கேட்க விளம்பினீர்' எனவிளம்பி,

'பொங்குகடல் கல்மிதப்பில் போந்தேறும் அவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யார்உளரே?
மங்கலமாம் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்;
எங்குறைவீர்? நீர்தாம் யார்? இயம்பும்' என இயம்பினர்.

அப்பர் தம்மை வெளிப்படுத்தல்

திருமறையோர் அதுமொழியத் திருநாவுக் கரசர்அவர்
பெருமைஅறிந்(து) உரை செய்வார்: 'பிறதுறையில் நின்றேற
அருளும்பெருஞ் சூலையினல் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வில்லாத சிறுமையேன் யான்'என்றார்.

அடிகள் மகிழ்ச்சி

அரசறிய உரைசெய்ய அப்பூதி அடிகள்தாம்
கரகமலம் மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தம் சரணகமலம் பூண்டார். (9)

மற்றவரை எதிர்வணங்கி வாகீசர் எடுத்தருள,
அற்றவர்கள் அருநிதியம் பெற்றார்போல் அருமறையோர்
முற்றவுளம் களிகூர முன்னின்று கூத்தாடி
உற்றவிருப் புடன்சூழ ஓடினர் பாடினர். (10)

[அப்பர் அமுதுசெய்ய இசைந்தவுடன், அடிகள் இல்லத்தில் திருவமுது செய்யப்பட்டது. அடிகளது முதல் மகனை மூத்த திருநாவுக்கரசு பெற்றோர் ஏவற்படி தோட்டத்தில் வாழை இலை அறுக்கச் சென்றான்.]

அரவு தீண்டுதல்

'நல்லதாய் தந்தை ஏவ நான்இது செயப்பெற்றேன்' என்(று)
ஒல்லையில் விரைந்து தோட்டத்(து) உள்புக்குப் பெரிய வாழை
மல்லலம் குருத்தை ஈரும் பொழுதினில் வாள்அ ராவென்(று)
அல்லலுற் றழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே. (11)

கையினில் கவர்ந்து சுற்றிக் கண்ணெரி காந்து கின்ற
பையரா உதறி வீழ்த்துப் பதைப்புடன், 'பாந்தள் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா முன்னம்வே கத்தால் எய்திக்
கொய்தஇக் குருத்தைச் சென்று கொடுப்பன்'என் றோடி வந்தான்.

'பொருந்திய விடவே கத்தில் போதுவான் வேகம் முந்த
வருந்தியே அணையும் போழ்து, 'மாசுணம் கவர்ந்த(து) யார்க்கும்
அருந்தவர் அமுது செய்யத் தாழ்க்கயான் அறையேன்' என்று
திருந்திய கருத்தி னேடும் செழுமனை சென்று புக்கான். (13)

எரிவிடம் முறையே ஏறித் தலைக்கொண்ட ஏழாம் வேகம்
தெரிவுற எயிறும் கண்ணும் மேனியும் கருகித் தீய்ந்து
விரியுரை குழறி ஆவி விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயர் பால்வைத்துப் படிமேல் வீழ்ந்தான். ()

[அடிகள் இறந்தவனை மறைத்து அப்பரை அமுதுசெய்ய அழைத்தல்.]

தளர்ந்துவீழ் மகனைக் கண்டு தாயரும் தந்தை யாரும்
உளம்பதைத்(து) உற்றுநோக்கி உதிரம்சோர் வடிவும்மேனி
விளங்கிய குறியும் கண்டு, 'விடத்தினல் வீந்தான்' என்று
துளங்குதல் இன்றித் தொண்டர் அமுதுசெய் வதற்குச் சூழ்வார்.

பெறலரும் புதல்வன் தன்னைப் பாயினுள் பெய்து மூடிப்
புறமனை முற்றிற் பாங்கோர் புடையினில் மறைத்து வைத்தே
'அறஇது தெரியா வண்ணம் அமுதுசெய் விப்போம்' என்று
விறலுடைத் தொண்ட னூர்பால் விருப்பொடு விரைந்து வந்தார்.

[அப்பர் உணவுண்ண அமர்ந்து பிள்ளைகட்குத் திருநீறு கொடுக்கையில் 'மூத்த திருநாவுக்கரசு எங்கே?' என, அடிகள் 'இப்பொழுது இங்கு அவன் உதவான்' என்றார். உடனே அப்பர் உள்ளத்தில் தடுமாற்றம் உண்டானது. அவர், 'உண்மை உரையும்' என்ன, அடிகள், மகன் இறந்ததைக் கூறி வணங்கினர்.]

அப்பர், மகனை உயிர்ப்பித்தல்

நாவினுக் கரசர் கேளா, 'நற்றுநீர் புரிந்த வண்ணம்!
யாவரித் தன்மை செய்வார்?' என்றுமுன் எழுந்து சென்றே,
ஆவிதீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார். (17)

தீவிடம் நீங்க உய்ந்த திருமறை யவர்தம் சேயும்
மேவிய உறக்கம் நீங்கி விரைந்தெழு வானைப் போன்று
சேவுகைத் தவராட் கொண்ட திருநாவுக் கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு புனிதநீ(று) அளித்தார் அன்றே.

அப்பர் அமுதுண்ணல்

புகழ்ந்தகோ மயத்து நீரால் பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச் சிறப்புடைத் தீபம் ஏற்றி
நிகழ்ந்தஅக் கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம்பெற மரபில் வைத்தார்.

மைந்தரும் மறையோர் தாமும் மருங்கிருந் தமுது செய்யச்
சிந்தைமிக்(கு) இல்ல மாதர் திருஅமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக் கூத்தனர் அடியா ரோடும்
அந்தமிழ் ஆளி யார்அங் கமுதுசெய் தருளி னரே. (20)

---

3. சீகாளத்திப் புராணம்

நக்கீரச் சருக்கம்

பாண்டியன் சங்க மண்டபத்தில் பொற்கிழி தூக்குதல்

மதித்த காவல னதுமனங் கொண்டுதன் மனத்தில்
தகைத்த நுண்பொருள் தரவொரு செய்யுள்செய் புலவர்
'இதைக்கொள் கென்'றுபொன் ஆயிரம் ஒருகிழி யியற்றி
அதைப்பொற் சங்கமண் டபத்தின்முற் றூக்கின னன்றே.

புலவர் பலரின் பயனற்ற முயற்சி

புலவர் யாவரும் தாங்கண்ட வாறுபாப் புனைந்து
தலைவன் முன்புபோய்ச் சாற்றிய அனைத்தையுந் தண்டார்
மலைகொ டோளினன் மறுத்தலின், வறிதகன் றனர் ;அவ்
விலகு பொற்கிழி யிருந்ததங் கறுப்பவர் இன்றி.

[தருமி என்பவன் மதுரைச் சொக்கப் பெருமான் கோவில் அருச்சகன். அவன் வறுமையால் வாடிப் புலம்புகையில் சிவபெருமான், 'கொங்குதேர் வாழ்க்கை' என்று தொடங்கும் செய்யுளைப் புனைந்து தந்து, 'இதுகொண்டு பாண்டியனிடம் சென்று பாடிப் பொற்கிழி பெற்று நின் வறுமை நோய் களைக' என்றான். தருமி அதனைப் பாண்டியன்முன் சென்று பாடினான்.]

பாண்டியன் சொற்படியே தருமி சங்கத்தவர்முன் பாடுதல்

மற்றது கேட்டுத் திங்கள் மருகன்தான் நினைந்த வண்ணம்
சொற்றலி னினிது வந்து 'தொகுசங்கத் தவர்பாற் போயிப்
பொற்றபாட் டிசைவி' என்றுன் ; பொருக்கெனத் தருமி சென்று
கற்றவ ரவைமுன் சொன்ஞன் ; கவிகள்கேட் டலுமு வந்தார். (3)

நக்கீரன் தருமி உரைத்த பாட்டுக் குற்ற முடைத்து எனல்

ஆங்கவர் தம்முட் கீரன் அரும்பெறற் கல்விச் செல்வத்(து)
ஓங்கிய தருக்கி னல் "இவ் வுரைத்தபாக் குற்றம்" என்றுன்.
தாங்கிய வுவகை சிந்தித் தருமிதான் துனைவிற் போந்து
தேங்கமழ் கடுக்கை வேணிச் செல்வனே டிதனைச் சொன்ஞன். (4)

"என் பாடலுக்குக் குற்றம் கூறினேர் யாவர்?" என்று இறைவன் கேட்க, நக்கீரன் "நான்" எனல்

கேட்டலும் அங்க யற்கண் கிளியுறழ் கிளவி பங்கன்
பாட்டியற் புலவ ஞகிப் பாவலர் தம்பாற் போய், 'எம்
கோட்டமில் கவிக்குக் குற்றம் கூறின ரியாவர்?' என்றுன்.
நாட்டிய புகழ்நக் கீரன் 'நான்'எனத் தருக்கிச் சொன்ஞன்.

இறைவன் கேட்ட வினக்களுக்கு நக்கீரன் இறுத்த விடைகள்

சொல்லலும், 'குற்றம் யாது? சொல்'லென, 'நெடுங்க ணல்லார்
சில்லிருங் குழற்கு நாற்றஞ் செயற்கையன் றியற்கை யுண்டோ?
இல்லது கூற லால்மற் றிதுகுற்றம்" என்றுன் ; அண்ணல்
'மல்லல்விண் மகளிர் கூந்தல் மணமியல் பன்றே?' என்றுன்.

என்றலும், 'அரம்பை யர்க்கும் இருங்குழல் நறிய நாற்றம்
இன்'றென வுரைத்தான் ; ஐயன் 'இறைவியென் றுலக மேத்தும்
குன்றிறை பயந்த செல்வி கூந்தலெற்(று)' என்றுன், கீரன்
தன்தனித் தருக்கால், 'அம்மை தனதுகூந் தலுமற்(று)' என்றுன்.

நக்கீரன் இறைவனை நோக்கி "நெற்றிக்கண்ணைக் காட்டினும் நீ சாற்றிய செய்யுள் குற்றமே" எனல்

ஏற்றின னெற்றிக் கண்ணு மெரிமருள் சடையுங் காட்ட,
மாற்றரு மருட்சி யான்'கண் வடிவெலாங் காட்டி னலும்
சாற்றிய செய்யுள் குற்றம்; சடைகொண்டு வெருட்டல் வேண்டா;
தோற்றில னிதனுக்(கு)' என்றுன், றெலைவிலான் வெகுண்டு சொல்வான் : (8)

இறைவன் கீரனைச் சபித்தல்

'எம்மொடு முரணி வான்றேய் இமயமால் வரைப்பூங் கொம்பின்
மைம்மலி மறைசொல் லானு மணங்கமழ் குழல்ப ழித்த
செம்மைகொள் அறிவி லாய்! நீ தீர்ப்பருங் குட்ட நோய்கொண்(டு)
இம்மையி லலைக" என்றான். இறப்பநக் கீரன் அஞ்சி. (9)

கீரனது வேண்டுகோள்

முழுமெயும் பனித்தி ரங்கி முருகலர் கமலம் வென்ற
கழலடி வீழ்ந்தி றைஞ்சிக், 'கருணையங் கடலே! எந்தாய்!
இழிபுடை நாயி னன்னேன் இலங்கறி விலாது செய்த
பிழைபொறுத் தருளிச் சாபப் பிணிகெட அருள்வாய்' என்றான்.

இறைவன் கீரனுக்கு அருள்சுரந்து திருக்கோயிலில் மறைதல்

என்றலும் கருணை வள்ளல் எரிசினந் தணிந்து, 'கீர!
சென்றுநீ கயிலை காணிற் றீருமிக் கொடுநோய்" என்று,
குன்றுறழ் புரிசை விண்டோய் கோயிலிற் புகுந்தொ ளித்தான்;
தென்றலம் பொதிய வெற்பிற் றென்னர்கோ னதிச யித்தான்.

தருமி பொற்கிழி பெறுதல்

பொற்குவை தருமி யேற்றுப் பொலிந்தினி திருந்தான்; வெய்ய
வற்கடந் தீர எங்கும் மழைவளஞ் சுரந்த(து); இப்பாற்
சிற்குணன் தந்த சாபத் தீப்பிணி யுடலம் போர்ப்ப
நற்கவி னிகந்து கீர நாவலன் சிந்தை செய்வான்: (12)

மற்றப் புலவர்களையும் மன்னனையும் விட்டுப் பிரிதற்காக நக்கீரன் வருந்துதல்

'பலப்பல நாடி றந்து படரொளிக் கயிலை யென்னும்
உடலப்பில்குன் றெய்தி யிந்நோ யொழிக்குவம்' எனத்து ணிந்தான்
விலக்கரு நண்பி னோரை விட்டக றற்கு நெஞ்சம்
கலக்கமுற் றழுதி ரங்கிக் கரையில்பே ரஞருள் ஆழ்ந்தான்.

தடையில்பே ரறிஞர் தம்மைத் தனித்தனி விளித்து 'நும்மோ(டு)'
உடனுறை வாழ்வு நீங்கு மொருபெரும் பாவி யேனை,
மடனறு நமரங் காள்!நீர் மறவன்மின்' என்று தன்மெய்ப்
படுபிணி நோக்கி மார்பம் படத்தழு வாது நின்றான். (14)

நாவலர் அதைய றிந்து நண்ணிமார் பிறுகப் புல்லி
ஒவில்கண் ணருவி பாய, வுளங்குழைந் தழுது, ‘ நல்லோய் !
மேவரு நின்னை நீத்து வெறுவியம் இருப்ப நின்ற
ஆவல்வல் வினையு ளார்யாம் அல்லதிவ் வுலகத் தியாரே ?’(15)

என்றனர் இரங்க மேலோன் எதிர்தழீஇத் தழுவி யாறிக்
‘ குன்றனீர் ! சிறியற் காகக் குழைந்தழல்; தமியேன் செல்வல் ;
பொன்றலி னட்பி னுக்குப் புணர்வொடு பழகல் வேண்டா ;
நின்றநல் லுணர்ச்சி தானே நிறைக்குமென் றுணர்ந்த நல்லீர்’. (16)

என்றுபல் திறத்தாற் கூறி யிணையிலான் அரிதி னீங்கிச்
சென்றனன் புலவர் கண்ணுஞ் சிந்தையுந் தொடர்ந்து செல்லத்
தன்றிரைக் கையால் மோதித் தான்றியங் குலையு திர்க்கும்
மன்றலம் புதுநீர் வைகை வடகரை கடந்து மன்னோ. (17)

‘என்றினி மதுரை காண்பேம் ! எப்பகல் சவுந்த ரேசன்
தன்றிரு வடிகள் காண்பேம் ! தாயையெஞ் ஞான்று காண்பேம் !
வென்றிவேற் றரும வேந்தர் வேந்தனை யெந்நாட் காண்பேம் !
ஒன்றுயிர்த் துணையாஞ் சங்கத் துறவையெப் பொழுது காண்பேம்!

நுணங்குமா ணறிவின் மிக்க நூல்வலார் மறப்பர் கொல்லோ!
வணங்குதேர்த் தானை மன்னர் மணிமுடி யுழுக ழுற்கால்
அணங்குடை யரிமான் றுப்பி னரசர்கோ னினையான் கொல்லோ
இணங்குநாற் புலவர் நாற்பா னெழுவரென் றுரைக்குங்
கொல்லோ ! (19)

கீரன் தொண்டை நாட்டினை கடத்தல்

‘இனித்தமி ழினிமை யாவர்க் கெடுத்திசைத் திடுவ மன்னோ’
எனப்பல பலவு மெண்ணி யினைந்துவெஞ் சுரமி றந்து
புனற்றிரு நாடு புக்குப் பொருந்திரைப் பெண்ணை நாடு
தனைக்கடந் தந்தண் பாலித் தண்ணடை கண்டு சென்றான்.

4. குசேல உபாக்கியனம்

கண்ணனும் குசேலனும்

குசேலன் கண்ணனைக் கண்டது

எண்அனைக் கிலங்கு மார்பம்
ஈத்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம்
வலமிடம் உறக்கொண் டானை
மண்அனைத் தும்பு ரக்கும்
வாசுதே வனைம ணக்கும்
கள்நனைத் துளவத் தாமக்
கண்ணனைக் கண்ணிற் கண்டான். (1)

கண்ணன் குசேலனை வணங்கித் தழுவிக் கொள்ளுதல்

காண்டலும் உவகை பூத்துக்
கால்விசை கொடுந டந்தான் ;
ஆண்டகை அவனுங் கண்ணுற்(று)
அணையுடைத்(து) எழுநீத் தம்போல்
நீண்டபூம் பள்ளி நீத்து
நிலவுபே ரன்பு பொங்கப்
பூண்டமா தவன்முன் சென்று
பொன்னடி வணங்கி னைல். (2)

திலகமண் தோய ஐயன்
திருவடி வணங்கிப் பின்னர்
நிலவுமெய்ப் புளகம் போர்த்து
நிரமுறத் தழுவிக் கொண்டான் ;
'குலமறைத் தலைவன் என்றும்
கூர்ந்தமெய் நட்பன்' என்றிம்
மலர்தலை உலகம் கூறும்
வாய்மைகாத் தருளி னானே. (3)

கண்ணன் குசேலனுக்கு முகமன் கூறுதல்

'பாக்கியம் உற்ற(து) இந்நாள்
பாக்கியம் உற்ற திந்நாள்
ஆக்கிய அறம்ப லித்த
ஆக்கிய அறம்ப லித்த
யோக்கியம் அடைந்த திந்த
மனையு(ம்)'என் றுரைத்து ரைத்துத்
தேக்கிய புகழி லுன்கொண்
டாடினன் ; சிலைவ லோயே. (4)

கண்ணன் கால்வருடக் குசேலன் தன்னைமறந்து இருந்தமை

'வழிநடந்(து) இளைத்த வே !இம்
மலரடி இரண்டும்' என்று
கழிமகிழ் சிறப்ப மெல்ல
வருடினன் கமலக் கண்ணன் ;
பழியில்பல் உபசா ரங்கள்
பண்ணவும் தெரியா னாகி
ஒழிவறு தவக்கு சேலன்
ஒன்றும்பே சாதி ருந்தான். (5)

'பித்தர்உன் மத்தர் பாலர்
பிசாசர்தம் குணத்தர் ஆவர்
நத்தவர் ஞான யோகர்'
எனமறை நவிலும் ஆற்றால்
சித்தம்விட் டகலா தையன்
திருவுருத் தியானம் செய்து
புத்தமு தூறும் இன்பில்
புணர்ந்தசை வற்றி ருந்தான். (6)

கண்ணன் குசேலனிடம் பேசியவை

இன்னணம் இவனி ருப்ப
இவன்வர வனைத்தும் சொல்லா
முன்னரே உணர்ந்து கொண்ட
முழுமுதல் கண்ணன் என்பான்
மன்னிய உவகை பூத்து
வழிதரு மனத்த னுகி
அன்னவன் வதன நோக்கி
அமைய இன் னனசொல் வானுல்: (7)

“மன்னுடைய மறையனைத்தும்
வகுத்துணர்ந்த மாதவனே,
உன்னுடைய தரிசனத்தால்
உடம்புபூ ரித்தனன்யான்
மின்னுடைய விளங்கொளிவேல்
வேந்தருளும் தேவருளும்
என்னுடைய பெறலரும்பே
றியார்பெற்ருர்! யார்பெறுவார்! (8)

“பொன்னுள்ளான் பூமியுள்ளான்
புந்தியுள்ளான் ஆயிடினும்
என்னுள்ளான் ஆவனவன்?
இரும்தவர்தம் நட்பிலனேல்;
பொன்னில்லான் பூமியில்லான்
புந்தியில்லான் ஆயிடினும்
என்னில்லான் ஆவனவன்?
இரும்தவர்தம் நட்புளனேல்! (9)

“‘பேயோடு பழகுறினும்
பிறிவ(து)அரி (து)அரிதென்று’
தூயோர்கள் மொழிவரால்,
தூயோரும் புகழ்தூயோர்

ஆயோர்கள் பெருநட்பை
அருந்தவத்தால் பெறலன்றி
ஏயோ! எண் மையிற்கிடைப்பின்
இகழ்வரோ இகழ்வில்லார். (10)

"முத்திக்கு வித்தாகும்
முழுதுணர்ந்தோர் பெருநட்பே
தித்திக்கும் நாடோறும்,
தேவர்பெறற்(கு) அருந்திருவும்
சித்திக்கும் படிஅருளும்
செப்பரிதால்; அதுநிற்க,
எத்திக்கும் புகழும்நினக்(கு)
இயன்மணம்நன் காயிற்றே? (11)

"நின்னுடைய மனைக்கிழத்தி
நிரம்புபெரு நீர்மையளே?
மன்னனுடைய சொற்காத்துச்
சோர்விலா மாண்பினளே?
தன்னுடைய உயிராநின்
தனைப்பேணும் தன்மையளே?
உன்னுடைய வருவாய்க்குத்
தக்கசெல(வு) உஞற்றுவளே? (12)

"பைங்குதலை வாய்மைந்தர்
பலர்பிறக்க வேண்டுமே
எங்குமரும் புகழுடையாய்
எத்தனைமைந் தர்கள்பிறந்தார்?
அங்கவரைப் பேரவையோர்
அணிதரச்செய் செயலனைத்தும்
சிங்கல்அறப் புரிந்தனையோ?
செய்தனையோ உபநயனம்? (13)

"'இவர்தந்தை என்னோற்றான்'!
என்றறிஞர் உரைக்கும் வகை
இவர்கின்ற மனத்தினராய்
இருங்கலைதற் றுணர்வாரே?
உவர்கொண்ட கடலாடை
புடைஉடுத்த உலகமெலாம்
உவர்கொண்ட குணமெவர்க்குண்
டெனமொழிய உயர்வாரே? (14)

"இருவேமும் முன்னாளில்
இலங்குசாந் தீபமுனி
வருகாமர் அடிவணங்கி
மாமறைகற் றுணர்ந்திடுநாள்
பெரு(க)ஆர்வத் தொடும்பேசிக்
கொண்டிருந்த பேச்செல்லாம்
திருகார உளத்துநினைத்
திருக்கின்றா யோசிறப்ப? (15)

"பந்தனை அகன்ற மேலோய்,
பற்பல நாட்குப் பின்பு
வந்தனை! எனக்கென் கொண்டு
வந்தனை? அதனை இன்னே
தந்தனை யாயின் நன்று,
தருசுவைப் பக்க ணத்தென்
சிந்தனை நின்றது" என்றான்
தெரிவரும் வஞ்சக் கள்வன். (16)

கொடுவென்று கைநீட்டக் குசேலன் அவலைக் கொடுக்க வெட்கி நிற்றல்

'திருந்தஇங் களித்தி' என்று
செங்கரம் மலர்த்தி நீட்டப்
'பொருந்தஇன் பாலுண் பான்பால்
புளித்தகா டியைக்கொ டுத்திட்(டு)

அருந்திடென் றுரைத்தல் போலிவ்
வவற்கொடை, என்று வாளா
இருந்தனன் குசேல மேலோன்;
இவனுள மறிந்த கண்ணன், (17)

பழங்கந்தையை வாங்கித் தேடிக் கண்ணன் அவல் முடிப்பைக் காணல்

நடலைதீர்ந் தவன்மெய்ப் போர்த்த
நாள்பல கண்ட கந்தைப்
படர்தலைச் சுருக்கி வாங்கிப்
பாங்குவைத் தினிதின் ஆய்ந்து
விடலருங் கற்பு வாய்த்த
மின்னனார் வணங்கும் தெய்வம்
திடமுற முடித்து வைத்த
சிறுபொதி கண்டு கொண்டான். (18)

கண்ணன் அவல் தின்னல்

மலிதரும் அன்பின் வந்த
வண்பொதி அவிழ்த்து நோக்கி
'வலிதரும் அவற்றுள் நன்று
வாய்த்தது நமக்கி(து)' என்ன
ஒலிதரு கழல்கால் ஐயன்
ஒருபிடி அவலைக் காதல்
பொலிதர எடுத்து வாயில்
போகட்டுக் கொண்டான் மாதோ? (19)

அரியஅன் பினிற்கொ டுத்தல்
இழிந்ததா யினும்சி றந்த,
திரியுமன் பினிற்கொ டுத்தல்
இழிந்ததே சிறந்த தேனும்;
பெரியவர் புகழப் பட்ட
பெருந்தவக் குசேல மேலோன்
உரியஅன் பினையும் கூட்டி
ஒருபிடி அவல்தின் றானே! (20)

5. அரிச்சந்திர புராணம்

மயானகாண்டம்

காசிநகர் ஈமத்தின்கண் அரிச்சந்திரனும் சந்திரவதியும்

இறந்த மைந்தனை எடுத்துக்கொண்டு சந்திரவதி சுடுகாடு சேர்தல்

காடுமே டுஞ்செறிந்த செந்நாய் முன்னே
கௌவியிழுத் திடப்,பறந்து கழுகு மோத,
போடுபோ டெனப்பலபேய் தொடரக், கொண்டு
போகேல்நீ யெனக்கொடிய பூதஞ் சூழ,
மாடுதோ றும்பறிக்க நரிகள் தாவ,
வார்குழலுஞ் சோர்துகிலும் வனந்தொட் டீர்க்க,
ஈடுபா டித்தனையும் பட்டு நீண்முள்
இடுகாடுநீந்திநெடுஞ் சுடுகா டுற்றாள். (1)

மகனைக் கொள்ளிக்கட்டை மேல்வைத்துத் தீமூட்ட மன்னன் காணல்

கண்டன(ள்)ஈ (து)ஈமமெனக் கருத்தி லுன்னி
கடவுளர்தங் காவலிற்றன் மகனை வைத்துப்,
பண்டுவெந்து கரிந்தகுறைக் கட்டை யெல்லாம்
பலதிசையும் விரைந்தோடிப் பார்த்தெ டுத்துக்
கொண்டுவந்து பிணங்கள்சுடுஞ் சுடலை நண்ணிக்,
கொள்ளியெடுத் தோடியனல் கூட்டி மூட்டி,
மண்டுதழற் கட்டையின்மேல் மகனை வைத்தாள் ;
வளர்ந்தெரியுங் கனல்விளக்கம் மன்னன்கண்டான்.(2)

அரிச்சந்திரன் மூட்டத்தைக் காலால் எறிதல்

அரவுகடித் தரசிளங்கோ இறந்தா னென்ப(து)
அறியாமல் வெகுண்டிறைவ னூரே யிந்த
இரவுதனிற் பிணஞ்சுடுவா ரறிவோ மென்ன
எழுந்திருந்து விரைந்தோடி 'யேடி மூடி

தரவுரிய பொருளெனக்குத் தாரா தேநீ
தனியேயிப் பனியிருளிற் சவங்கொ ணர்ந்து
கரவின்அழற் சுடுவதுனக் கடைவோ' என்னுக்
கால்வீசிக் கான்முளையை யெடுத்தெ றிந்தான். (3)

சந்திரவதி அரசன் காலில் விழுந்து தனது வறுமையைக் கூறுதல்

எறிந்திடலும் உயிரேங்க ஏங்கி வேனில்
இடிவிழுந்தாற் படிமிசையே யடிசாய்ந் தாடி
முறிந்துவிழு மரம்போற்சென் றடிமேல் வீழ்ந்து
மொழிகுழறி விழியருவி சொரிய வல்லி
'அறிந்துமில னிவ்வூரில் வழங்கு நீதி
அருவினையேன் யாருமிலி அறவும் பாவி
மறிந்தமகன் தனைச்சுடநான் வந்தேன் ஐயா,
வறியேற்குப் பொருளுளவோ? வழங்க' என்றாள். (4)

'பொருளுடையேன் தமருடையேன் ஆனு லிந்தப்
புத்திரனைத் தோண்மீது வைத்துப் போந்திவ்
இருளிடையில் சுடலையில்வந் தெய்து வேனோ?
எரிந்தகுறைக் கட்டையினி லேற்று வேனோ?
தெருளுடையாய் அறமுடையாய் வினையே னீன்ற
சிறுவனையான் சுடக்கருணை செய்யாய் தேயா
அருளுடையா யாதார மற்றேற் குன்றன்
அடியிணையே தஞ்சமெ'ன அலறி வீழ்ந்தாள். (5)

மன்னன் கூற்று

'பொன்னனையாய், விடுவிடுயான் புலையன் என்னிற்
புலையனுமல் லேன்புலையற் கடிமை கண்டாய்,
என்னடிநீ தீண்டுவது தகாது ; நீதான்
இப்பொருட்கியா னுரியனலே னென்னை யாள்வோன்

சொன்னபணங் காலுண்டுகொள்ளி யாடைத்
துண்டமுமொன் றுண்டுதந்து சுடுதி யன்பால்;
அன்னவன்தான் படியாக வெனக்குத் தந்த
வாய்க்கரிசி யானளிப்பேன்' அறிதி என்றான். (6)

மன்னன் மங்கலநாணைக் கண்டமை

'துஞ்சியமைந் தனையெடுத்துச் சுமந்து போந்து
சுடுவாரற் றிடுகாட்டிற் றேரண்மே லேற்றிப்
பஞ்சுபடும் பாடுபடும் பாவி யேற்குப்
பணமேது? கொள்ளிமுறிப் பாதியேது?
நெஞ்சு தளர்ந் தருவினையேன் வருந்தக்கண்டு
நீயிரங்காய்' எனவிரந்து நிற்குங் காலை,
வஞ்சிதிரு மணி மிடற்றில் வயங்கா நின்ற
மங்கலநாண் கண்டிறைவன் மறித்துஞ் சொல்வான்:(7)

மன்னன் மங்கலநாணைக் கேட்கச் சந்திரவதி
பதைத்து வீழ்தல்

நல்லைநல்லை யறச்சமர்த்தி நீயே கண்டேன்,
நன்னுதலா ரனைவரினு மிந்த்ர சாலம்
வல்லைவல்லை; விறகுகளுங் களவே; செம்பொன்
மங்கலநா ணுன்கழுத்தி லிருக்க, ஏதும்
இல்லையெனச் சொல்லுவது சற்றும் ஏலா(து)
இதனையெனக் கீவாய்'என் றியம்ப; வேடர்
பல்லமுயிர் நிலைவாயிற் பட்ட மான்போல்
பதைபதைத்துப் பைந்தொடியாள் பதறி வீழ்ந்தாள்.(8)

கற்பழிந்ததெனச் சந்திரவதி மனங்கலங்கி வருந்துதல்

'அலைவி லாவரிச் சந்திரற் கல்லது,
தொலைவில் யாவர்க்குந் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போதுவ தேவனோ!'
உலையின் மீது மெழுகொத் துருகினள். (9)

'அற்புக் காழிய ஞனரிச் சந்திரன்
விற்பப் போயின மேன்மை குலத்தொடும்
பொற்பும் போம்பொறை போம்நிறை போம்; என்றன்
கற்புப் போவதென்'? என்று கலங்கினுள். (10)

இறந்தவன் தன்மகனேயென அரிச்சந்திரன் தெரிந்து வருந்துதல்

அனைய காலை யரிச்சந் திரனுந்தன்
மனைவி யாமிவ ளென் று மனங்கொளாத்
தனையன் மாண்டது தன்னையுட் கொண்டுளம்
நினைவை நீக்கி மறப்பையு நீக்கினுன். (11)

[தன்னருமை மைந்தன் அரவந்தீண்டி இறந்ததை யறிந்து, அரிச்சந்திரன் பலவாறு சொல்லிப் புலம்பினுன். சந்திரவதி அவனை நோக்கி, 'நீர் இனி மயங்கவேண்டா; அறத்தைக் கடைப்பிடிப்பீராக.' என்றுள்.]

மன்னன் கூற்று

'தோகை கேள்,புலை யற்குத் தொழும்ப(ன்)நான்
ஆகை யால்மற் றவன்பணி நீத்(து)அவன்
ஈகை யானிழந் தால்தவ(று) எய்திடும்;
போகை நன்று பொருள்தரு தற்கெ'ன்றுன். (12)

'உன்னை யாளு மறையவற் குற்றிது
சொன்ன காலந் தரினந்தத் தூசொடு
பொன்னை வாங்கிய ளித்துநின் புத்திரன்
தன்னை நீசுடத் தக்க து(உ)னக்கெ'ன்றுன். (13)

சந்திரவதி அந்தணனிடம் ஏகல்

'அரக்கெ னச்சிவப் புற்றவ ழுற்கணன்,
இரக்க மற்பமு மில்லவ னிப்பொருள்
தரக்க ருத்திலன் தந்திடிற் காண்பனெ'ன்
றுரைத்து வல்லி மகனைவைத் தோடினுள். (14)

6. கம்பராமாயணம்

கும்பகருணன் வதைப் படலம்

கும்பகருணன் கூற்று

முந்திவந் திறைஞ்சி னானை மோந்துயிர் மூழ்கப் புல்லி
' உய்ந்தனை யொருவன் போனா யெனமன முவக்கின் றேன்றன்
சிந்தனை முழுதுஞ் சிந்தத் தெளிவிலார் போல மீள
வந்ததென் தனியே ?'' என்றான் மழையினீர் வழங்கு
கண்ணான். (1)

விபீஷணன் கும்பகருணனை இராமபிரானோடு சேரும்படி வேண்டுதல்

எனக்கவன் தந்த செல்வத் திலங்கையு மரசு மெல்லாம்
நினைக்குநான் றருவன்; தந்துன் னேவலி னெளிதி னிற்பன் ;
உனக்கிதின் உறுதி யில்லை; உத்தம ! உன்பின் வந்தேன்
மனக்குநோய் துடைத்து வந்த மரபையும் விளக்கு வாழி. (2)

தீயவை செய்வ ராகிற் சிறந்தவர் பிறந்த உற்றார்
தாயவை தந்தை மாரென் றுணர்வரோ தருமம் பார்ப்பார் ?
நீயவை யறிதி யன்றே, நினக்குநான் உரைப்ப தென்னே ?
தூயவை துணிந்த போது பழிவந்து தொடர்வ துண்டோ? (3)

மக்களைக் குருக்கள் தம்மை மாதரை மற்று ளோரை
ஒக்குமின் னுயிரன் னாரை யுதவிசெய் தாரோ டொன்றத்
துக்கமித் தொடர்ச்சி யென்று துறப்பராற் றுணிவு
பூண்டோர்
மிக்கது நலனே யாகில் வீடுபே றளிக்கும் அன்றே. (4)

' உடலிடைத் தோன்றிற் றொன்றை யறுத்ததன் உதிர மூற்றிச்
சுடலுறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரந் தீர்வர் ;
கடலிடைக் கோட்டந் தேய்த்துக் கழிவது கரும மன்றால்,
மடலுடை யலங்கன் மார்ப ! மதியுடை யவர்க்கு மன்னே. (5)

' திருமறு மார்பன் நல்க அனந்தருந் தீர்ந்து செல்வப்
பெருமையு மெய்தி வாழ்தி ; ஈறிலா நாளும் பெற்றாய் ;
ஒருமையே யரசு செய்வாய் ; உரிமையு முளதே ஒன்றும்
அருமையு மிவற்றி னில்லை ; காலமு மடுத்த தையா ! (6)

'தேவர்க்குந் தேவ னல்க இலங்கையிற் செல்வம் பெற்றால்
யாவர்க்குஞ் சிறியை யல்லை ; யாருனை நலியும் ஈட்டார் ?
மூவர்க்குந் தலைவ ரான மூர்த்தியார் அறத்தை முற்றுங்
காவற்குப் புகுந்து நின்றார் காகுத்த வேடங் காட்டி. (7)

'உன்மக்க ளாகி யுள்ளார் உன்னொடு மொருங்கு தோன்றும்
என்மக்க ளாகி யுள்ளார் இக்குடிக் கிறுதி சூழ்ந்தான்
தன்மக்க ளாகி யுள்ளார் தலையொடுந் திரிவ ரன்றே
புன்மக்கள் தருமம் பூணப் புலமக்கள் தருமம் பூண்டால். (8)

முனிவருங் கருணை வைப்பர் ; மூன்றுலக கத்துந் தோன்றி
இனிவரும் பகையு மில்லை ; ஈறுண்டென் றிரங்க வேண்டா ;
துனிவருஞ் செருந ரான தேவரே துணைவ ராவர் ;
கனிவருங் காலத்(து) ஐய! பூக்கொய்யக் கருத லாமோ ? (9)

'வேதநா யகனே யுன்னைக் கருணையால் வேண்டி விட்டான் ;
காதலா லென்மேல் வைத்த கருணையாற் கரும மீதே ;
ஆதலால் அவனைக் காண அறத்தொடுந் திறம்பா(து) ஐய!
போதுவாய் நீயே'' என்னப் பொன்னடி யிரண்டும்
பூண்டான். (10)

தன் தாள்களில் விழுந்த தம்பியை எடுத்துத் தழுவிக் கும்பகருணன் கூறத் தொடங்குதல்

தும்பியந் தொடையல் மாலைச் சுடர்முடி படியில் தோயப்
பம்புபொற் கழல்கள் கையாற் பற்றினன் புலம்பும் பொற்றோள்
தம்பியை யெடுத்து மார்பிற் றழுவித்தன் தறுக ணூடு
வெம்புணீர் சொரிய நின்றான் இனையன விளம்ப லுற்றான் : (11)

நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலஞ் செய்து விட்டாற் குயிர்கொடா தங்கு ப்போகேன்
தார்க்கோல மேனி மைந்த ! என்றுயர் தவிர்த்தி யாகிற்
கார்க்கோல மேனி யானைக் கூடுதி கடிதி னென்றான். (12)

" கருத்திலா இறைவன் தீமை கருதின லதனைக் காத்துத்
திருத்தலா மாகில் நன்றே ; திருத்துதல் தீரா தாயிற்
பொருத்துறு பொருளுண் டாமோ ? பொருதொழிற் குரிய ராகி
ஒருத்தரின் முன்னஞ் சாதல் உண்டவர்க் குரிய தம்மா. (13)

'தும்பியந் தொடையல் வீரன் சுடுகணை துரப்பச் சுற்றும்
வெம்புவெஞ் சேனை யோடும் வேறுள கிளைஞ ரோடும்
உம்பரும் பிறரும் போற்ற ஒருவன்மூ வுலகை யாண்டு
தம்பியை யின்றி மாண்டு கிடப்பனோ தமையன் மண்மேல்? 14

'செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்ச் செல்வந் தேறி
வம்பிட்ட தெரிய லெம்முன் உயிர்கொண்ட பகையை வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னங் கொண்ட புண்ணுடை நெஞ்சோ(டு) ஐய!
கும்பிட்டு வாழ்கி லேனியான் கூற்றையுமாடல் கொண்டேன்.

' ஆகுவ தாகுங் காலத் தழிவது மழிந்து சிந்திப்
போதுவ தயலே நின்று போற்றினும் போதல் செய்யும்;
சேகற உணர்ந்தோர் நின்னி லியாருளர் வருத்தஞ் செய்யா(து)
ஏகுதி, யெம்மை நோக்கி யிரங்கலை, யென்று முள்ளாய்!' 16

என்றவன் றன்னை மீட்டும் எடுத்துமார் பிறுகப் புல்லி
நின்றுநின் றிரங்கி யேங்கி நிறைகணுல் நெடிது, நோக்கி
'இன்றொடுந் தவிர்ந்த தன்றே யுடன்பிறப்பென்ப' தென்றான்.
வென்றிவெந் திறலி னானு மவனடித் தலத்து வீழ்ந்தான். (17)

விபீஷணன் திரும்பி வருதல்

வணங்கினன் வணங்கிக் கண்ணும் வதனமும் மனமும் வாயும்
உணங்கின னுயிரோ டியாக்கை யொடுங்கின னுரைசெய்தின்னும்
பிணங்கின லாவ தில்லைப் பெயர்வதென் றெழுந்து போந்தான்
குணங்களா லுயர்ந்தான் சேனைக் கடலெலாங் கரங்கள் கூப்ப. (18)

விபீஷணன் சென்றபின் கும்பகருணனது கண்ணீர் புண்ணீராதல்

'கள்ளநீர் வாழ்க்கை யேமைக் கைவிட்டுக் காலும் விட்டான்
பிள்ளைமை துறந்தான், என்னப் பேதுறு நிலைய னாகி
வெள்ளநீர் வேலை தன்னில் வீழ்ந்தநீர் வீழ வெங்கண்
உள்ளநீ ரெல்லா மாறி யுதிரநீ ரொழுக நின்றான். (19)

விபீஷணன் நிகழ்ந்தவற்றை இராமபிரானிடம் தெரிவித்தல்

எய்திய நிருதர் கோனும் இராமனை இறைஞ்சி 'எந்தாய்!
உய்திற முடையார்க் கன்றோ அறன்வழி ஒழுகும் உள்ளம்?
பெய்திற னெல்லாம் பெய்து பேசினன்; பெயருந் தன்மை
செய்திலன், குலத்து மானந் தீர்ந்திலன் சிறிதும்' என்றான்.

IV. பல சுவை

1. அழகர் அந்தாதி

தொலைந்தானை ஓதும் தொலையானை அன்னைசொல் லால்மகுடம்
கலைந்தானை ஞானக் கலையானை ஆய்ச்சிகலைத் தொட்டிலோ(டு)
அலைந்தானைப் பாலின் அலையானை வாணன்கை அற்றுவிழ
மலைந்தானைச் சோலை மலையானை வாழ்த்தென் மடநெஞ்சமே!

—பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

---

2. திருவரங்கக் கலம்பகம்

தேனமருஞ் சோலைத் திருவரங்கர் எப்பொருளும்
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலர்காண் அம்மானை!
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலரே ஆமாகில்,
சானகியைக் கொள்வாரோ தாரமாய்? அம்மானை!
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தால் அம்மானை!

—பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

---

3. கலைசைச் சிலேடை வெண்பா

ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழும் கலைசையே—மேவும்
அரிவையம் பாகத்தான் அரண்ஒருமூன் றெய்தோன்
அரிவையம் பாகத்தான் அகம்.

—தொட்டிக்கலை, சுப்பிரமணிய முனிவர்

---

4. மீனாக்ஷி அம்மை குறம்

திங்கள்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை என்மலையே. (1)

மந்தமா ருதம்வளரும் மலைஎங்கள் மலையே;
வடகலைதென் கலைபயிலும் மலைஎங்கள் மலையே;
கந்தவேள் விளையாடும் மலைஎங்கள் மலையே;
கனகநவ மணிவிளையும் மலைஎங்கள் மலையே;
இந்தமா நிலம்புரக்கும் அங்கயற்கண் அம்மை
இன்பமுறுந் தென்பொதிய மலைஎங்கள் மலையே. (2)

சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடும் ஒருபால்;
சினப்புலியும் மடப்பிணையும் திளைத்திடுமங் கொருபால்;
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்;
விடஅரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்;
அங்கண்மா நிலம்கவிக்கும் வெங்கவிகை நிழற்கீழ்
அம்பொன்முடி சூடுமெங்கள் அபிடேக வல்லி
செங்கமலப் பதம்பரவும் கும்பமுனி பயிலும்
தென்பொதிய மலைகாண்மற்(று) எங்கள்மலை அம்மே! (3)

குறவர் தொழில்

செழுங்கோடியின் விழுந்தவள்ளிக் கிழங்குகல்லி எடுப்போம்;
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக் கொடியில்வைத்துத் தொடுப்போம்;
பழம்பிழிந்த கொழுஞ்சாறும் தேறலும்வாய் மடுப்போம்;
பசுந்தழையும் மரவுரியும் இசைந்திடவே உடுப்போம்;
செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்போம்;
சினவேங்கைப் புலித்தோலின் பாயலில்கண் படுப்போம்;
எழுந்துகயற் கணிகாலில் விழுந்துவினை கெடுப்போம்;
எங்கள்குறக் குடிக்கடுத்த இயல்பிதுகாண் அம்மே! (4)

குறவர் குடி இருப்பு

புல்வாயின் பார்வையைவெம் புலிப்பார்வை இணங்கும்;
புதுத்தினைகல் உரற்பாறை மூன்றில்தொறும் உணங்கும்;
கல்விடரில் வரிவேங்கை கடமானோ(டு) உறங்கும்;
கருமலையில் வெள்ளருவி கறங்கிவழிந்(து) இறங்கும்;

சில்வலையும் பல்வாரும் முன்இறப்பில் தூங்கும் ;
சிறுதுடியும் பெருமுரசும் திசைதொறும்நின் றேங்கும் ;
கொல்லையில்மான் பிணையும்இளம் பிடியும்விளை யாடும் ;
குறிச்சிஎங்கள் குறச்சாதி குடிஇருப்ப(து) அம்மே!

—குமரகுருபர சுவாமிகள்

---

5. வருணனை

மருத நிலம்

ஆறுபாய் அரவம், மள்ளர் ஆலைபாய் அமலை, ஆலைச்
சாறுபாய் ஓசை, வேலை சங்குவாய் பொங்கும் ஓதை,
ஏறுபாய் தமரம், நீரில் எருமைபாய் துழனி, இன்ன
மாறுமா றாகித் தம்மில் மயங்குமா மருத வேலி. (1)

தண்டலை மயில்கள்ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ. (2)

—கம்பர்

---

6. அரிவையர் ஆடல்

அம்மானை

வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணம் காத்த உரவோன்யார்? அம்மானை!
ஓங்கரணம் காத்த உரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை!
சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை! (1)

புறவு நிறைபுக்குப் பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்யார்? அம்மானை!
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை!
காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை! (2)

கந்துக வரி

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய்கோதை வில்லிட
மின் இலங்கு மேகலைகள் ஆர்ப்பஆர்ப்ப எங்கணும்
'தென்னன்வாழ்க வாழ்க' என்று சென்றுபந் தடித்துமே ;
'தேவரார மார்பன்வாழ்க' என்றுபந் தடித்துமே. (3)

பின்னுமுன்னும் எங்கணும் பெயர்ந்துவந் தெழுந்துலாய்
மின்னுமின் இளங்கொடி வியனிலத் திழிந்தெனத்
'தென்னன்வாழ்க வாழ்க' என்று சென்றுபந் தடித்துமே ;
'தேவரா ரமார்பன் வாழ்க' என்றுபந் தடித்துமே. (4)

ஊசல் வரி

ஒரைவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல் !
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ ஊசல் ! (5)

வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்
தென்குமரி ஆண்ட செருவில் கயல்புலியான்
மன்பதைகாக் கும்கோமான் மன்னன் திறம்பாடி
மின்செய் இடைநுடங்க ஆடாமோ ஊசல் !
விறல்வில் பொறிபாடி ஆடாமோ ஊசல் ! (6)

---

7. தனிப்பாடல்கள்

தமிழ்நாட்டின் சிறப்பு

வேழம் உடைத்து மலைநாடு ; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து ;—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து ; தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து. (1)

—ஔவையார்.

பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடை

ஆடிக் குடத்தடையும் ; ஆடும்போ தேயிரையும் ;
மூடித் திறக்கில் முகங்காட்டும் ;—ஓடிமண்டை
பற்றில் பரபரெனும் ; பாரில்பிண் ணாக்குமுண்டாம் ;
உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது. (2)

பாம்புக்கும் எலுமிச்சம் பழத்திற்கும் சிலேடை

பெரியவிட மேசேரும் ; பித்தர்முடி ஏறும் ;
அரியுண்ணும் ; உப்புமேல் ஆடும் ;—எரிகுணமாம் ;
தேம்பொழியும் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம். (3)

—காளமேகப் புலவர்.

ஆடையின் சிறப்பு

மேலாடை இன்றிச் சவைபுகுந் தாலிந்த மேதினியோர்
நாலா யிரம்படித் தாலுமெண் ணார் ;நுவல் பாற்கடலோ
மாலா னவரணி பொன்னுடை கண்டு மகளைதந்தே
ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும் அரன்தனக்கே. (4)

—நையாண்டிப் புலவர்.

பெய்யாத மேகத்தினிடம் பேசியது

செல்லென்றுன் நாமத்தைச் செப்பினதே அல்லாமல்
செல்என் றுனைநாங்கள் செப்பினமா ?—அல்லென்று
மெய்யா உவமிக்க விண்மீது தோன்றியநீ
பெய்யாமற் போனதென்ன ? பேசு. (5)

—வேதநாயகம் பிள்ளை.

சீதக்காதிப் பிரபு இறந்தபோது பாடியது

பூமா திருந்தென்ன ? புவிமா
திருந்தென்ன ? பூதலத்தில்
நாமா திருந்தென்ன ? நாமிருந்
தென்ன ?நன் னுவலர்க்குக்

கோமான் அழகமர் மால்சீதக்
காதி கொடைமிகுந்த
சீமான் இறந்திட்ட போதே
புலமையும் செத்ததுவே. (6)

—படிக்காசுப் புலவர்.

எல்லோருக்கும் விசனம் உண்டு

பாலுக்குச் சக்கரை இல்லையென்
பார்க்கும், பருக்கையற்ற
கூழுக்குப் போடஉப் பில்லைஎன்
பார்க்கும், குற்றித்தைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லைஎன்
பார்க்கும், கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை இல்லையென்
பார்க்கும் விசனமொன்றே. (7)

—கம்பர்.

கவித் திறமை

வெங்காயம் சுக்கானல் வெந்தயத்தால் ஆவதென்ன ?
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை ?—மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியா ரே! (8)

—சொக்கநாதப் புலவர்.

உரை நடைப் பகுதி

1. இந்திய மாணவர்

[வித்வான் ச. கு. கணபதி ஐயர் அவர்கள், B. O. L.]

ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமானல் அதி லுள்ள இளைஞர்கள் முதன் முதலில் நல்ல நிலைமையை அடையவேண்டும். அதற்குக் கல்வி இன்றியமையாதது. தேச முன்னேற்றத்துக்கு அவசியமான விஷயங்களைச் சிறுவர் மனத்திற் பதியும்படி போதித்தல் எளியதாகும். அவர்கள் மனம் எந்தக் கொள்கையையும் வெறுப்பின்றி ஏற்றுக்கொள்ளத்தக்க நிலையையுடையது. சிறுவர் மனத் தில் விஷயங்கள் பசுமரத்தாணிபோல் உறுதியாகவும் எளி தாகவும் பதிந்துவிடுகின்றன. இளமைப் பழக்கம் என் றும் மாறுவதில்லை. சிறு வயதில் நல்ல பயிற்சி பெற்ற வர்கள் பெரியவர்களாகும்போது அவர்களால் நாட்டுக்கு எவ்வளவோ நன்மைகள் உண்டாகின்றன. இவற்றை நினைந்தே பல பெரியோர்கள் 'ஒரு நாடு சிறப்படைவதற்கு அந்நாட்டுச் சிறுவர் முன்னேற்ற மடைதலே முதற் கார ணம்' என்று கூறியிருக்கிறார்கள். மாணவர்களுடைய நோக்கங்களுக்கேற்ப அவர்களைப் பயிலுவிக்காமையா லேயே இக்காலத்தில் நாம் பலதுறைகளிற் பிறநாட்டவருக் குப் பின்னடைந்திருக்கிறோம் என்ற உணர்ச்சி இப் பொழுது பல இடங்களில் பரவியுள்ளது. இக்குறையைப் போக்க இந்தியாவின் பல பாகங்களில் பல இயக்கங்களும் சங்கங்களும் தோன்றியுள்ளன. பண்டைக் காலத்தில் இந் திய மாணவர்களின் நிலை எவ்வாறு இருந்தது, பிற்காலத் தில் அந்த நிலை எவ்விதம் மாறுபட்டது என்பன போன்ற விஷயங்கள் நாம் அவசியம் அறிந்துகொள்ளத் தக்கவை

யாகும். இந்திய மாணவர் சரித்திரத்தை, இதிகாச புராண காலம், இடைக்காலம், பிற்காலமென மூன்ருகப் பகுத்துக் கொண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. இதிகாச-புராண காலம்

இராமாயண மகாபாரத காலம் முதல் கி. பி. 11-ஆம் நூற்ருண்டு முடிய இதிகாச புராணகாலமாகும். அதனை ஆதிகாலமென்றும் கூறலாம். அக்காலத்தில் மாணவர்கள் சிறந்த நிலையில் இருந்துவந்தார்கள்; அதனுல் நாடும் சிறப் புற்றிருந்தது.

அக்காலத்தில் ஒரு மாணவனுக்கு ஏழு எட்டு வயதான வுடன் அவன் ஓர் ஆசிரியரிடம் சேர்ப்பிக்கப்பெற்று வந்தான். அவன் பல ஆண்டுகள் குருவுடன் வாசம் செய்துவர வேண்டியவனுனன். அவனுடன் அவனைப் போன்ற வேறு மாணவர்களும் அந்த ஆசிரியரிடம் கல்வி பயின்று வந்தார்கள். மாணவர்கள் தங்களுடைய பெற் ரேர்களைப் பிரிந்து குருவினிடமிருந்து கல்வி கற்று வந்த மையைக் **குருகுல வாசம்** என்பார்கள். தேவகுலம் என்பது தேவாலயத்தைக் குறிப்பதுபோல், குருகுலம் என்பது குரு வின் உறைவிடத்தைக் குறிக்கும்.

ஆதிகாலத்து மாணவர்களுக்கு அமைந்த ஆசிரியர்கள் ஆடம்பர வாழ்க்கையில் வெறுப்புள்ளவர்கள்; நல்ல பழக் கங்களை உடையவர்கள். காடுகளிலும் மலைகளிலும் நதி தீரங்களிலும் இயற்கையன்னை கொலு வீற்றிருக்கும் தனி யிடத்தில் அவ்வாசிரியர்கள் வசித்து வந்தார்கள். அதனுல் தூய காற்றும், நீரும், நிலனும் மாணவரின் உடல் வளர்ச் சிக்கு ஏற்றவையாக அமைந்திருந்தன.

இயற்கை வழியில் கல்வி பயின்று வந்தமையால் மாணுக்கர்களின் அறிவு கூர்மையாக இருந்தது. முற் பகுதி யெல்லாம் மனனஞ் செய்வதற்கும், பிற்பகுதி ஆராய்ச்சி செய்வதற்குமாகக் குருகுல வாசம் அமைந் திருந்தது. மாணவர்கள் தங்கள் ஆசிரியரிடமிருந்து கற்

றுக் கொண்டவற்றைவிடக் கேட்டுக் கொண்டவையும், அவருடைய நடையைக் கண்டு நேரில் அறிந்துகொண்டவையும் மிகப் பலவாம்.

ஒவ்வொரு மாணவனும் தன் தன் வசதிகளைத் தானே தேடிக்கொள்ளுமாறு ஆசிரியர்கள் மாணவர்களைப் பழக்கி வந்தார்கள். பிள்ளைகள் தினந்தோறும் அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று உணவை ஐயமாகப் பெற்று வருவார்கள். மாணவ நிலையில் ஐயம் எடுப்பது இழிவாகக் கருதப்படவில்லை. மாணவன் பிக்ஷை யெடுப்பது இன்றும் சில சாதியினரிடத்தில் போலிச் சடங்காக உபநயனங்களில் நடைபெற்று வருவதை நாம் காணலாம். எளிய வாழ்க்கையோடு கூடிய இயற்கை நிலையில் ஈடுபட்டிருந்ததனால் அவர்களுக்கு வேண்டிய பொருள்கள் மிகக் குறைவாகவே இருந்தன. இயற்கைக் காட்சியும், மனமொத்த நண்பர்களின் கூட்டுறவும், ஆசிரியர்களின் அன்பும், தாங்கள் கற்றுவந்த கல்வி முறையின் அமைப்பும் மாணவர்களுக்கு அளவற்ற மகிழ்ச்சியை யளித்து வந்தன. வீட்டின் நினைவு அவர்களைத் துன்புறுத்தவில்லை. தங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் தாங்களே தேடிக் கொள்ள வேண்டியவர்களாக இருந்தபடியால் இளமையிலேயே அவர்களுக்கு செயலாற்றுந் திறன் ஏற்பட்டது.

அவர்கள் அறிவுப் பயிற்சியில் மிக்கவர்கள். உடற் பயிற்சியில் அதற்கு இளைத்தவர்கள் அல்லர். நீந்துதல், மல்யுத்தம், சிலம்பம், ஆயுதப்பயிற்சி முதலியவைகள் கல்வியின் ஒரு பாகமாக இருந்துவந்தன. அதனால் குருகுல மாணவர்கள் உடல் வலிமை வாய்ந்தவர்களாகவும், நோயற்றவர்களாகவும் இருந்து வந்தார்கள்.

நகரங்களில் அரசவைகளில் அடிக்கடி சொற்பொழிவுகள் நடைபெறுவது வழக்கம். அவற்றிற்குக் குருகுல வாசிகள் தங்கள் ஆசிரியர்களுடன் செல்வதுண்டு. இதனால் பல பெரியவர்களின் பழக்கமும் உலகாநுபவமும் மாணவர்களுக்கு எளிதில் அமைந்தன.

குருகுல வாசத்தின் இறுதியில் மாணவர்கள் தாங்கள் கற்ற கல்வியை அனுபவத்தில் மேம்படுத்திக் கொள்ளத் தேச சஞ்சாரம் செய்து வந்தார்கள். தேச சஞ்சாரமின்றி ஒரு மாணவன் மணஞ் செய்துகொள்ளச் சாஸ்திரங்கள் இடந்தரவில்லை. மாணவர் தேச சஞ்சாரம் செய்வது அறவே ஒழித்துவிட்ட நம் காலத்தில், மணவினைக்கு முன்பு மணமகன் மாணவ வேடத்தோடு காசியாத்திரை செய்து வருதல் என்ற வழக்கம் மட்டும் இருந்துவருவது மேற் குறித்த முறைகளின்படி நாம் நடக்கிறோம் என்பதைக் காட்டவேதான். இந்தியாவில் முக்கிய ஸ்தலங்களும் தீர்த் தங்களும் தேசத்தின் பல கோடிகளில் அமைக்கப்பட்டிருப் பதன் நோக்கம் என்ன? ஒரு கோடியிலுள்ள மக்கள் மற் றொரு கோடிக்குச் சென்று உலகஞானம் பெறுவதற் கென்றேயன்றோ! தேச சஞ்சாரத்தை மேற்கொண்டு அக் கால மாணவர்கள் பல சங்கங்களைக்கண்டு தங்கள் கல்வி யறிவைப் பெருக்கிக் கொண்டார்கள்; தாங்கள் நேரிற் கண்டவற்றையும், கேட்டவற்றையும், அநுபவித்தவற்றை யும் பிற்காலத்தாரும் உணரும்படி சுவடிகளிற் பொறித்து வந்தனர். அவர்கள் ஆராய்ந்து எழுதிவைத்த விஷயங் களையே நாம் இப்பொழுது பாராட்டிப் படித்து வரு கிறோம்.

குருகுலங்களைத் தவிர ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு பள்ளிக்கூடம் இருந்திருக்கவேண்டும். தமிழர்கள், ஊருக் கொரு பள்ளி இருக்க வேண்டியதன் அவசியத்தைச் சங்க காலத்திலேயே உணர்ந்திருந்தனர் என்பது:

“கணக்காய ரில்லாத ஊரும்.........
....
நன்மை பயத்தல் இல”

என்றதனுல் அறியப்படும். நூல்களைப் புகட்டும் ஆசிரியர் கணக்காயரெனப்படுவர். அக்காலத்தில் பள்ளிகளைத் தவிர்த்து ஒவ்வோரூரிலும் சிலம்பக் கூடங்களுமிருந்தன வென்பதற்கும் சில சான்றுகள் உள.

மேற்கூறியவற்றால் மாணவநிலை பண்டைக் காலத்தில் சிறந்து விளங்கியதாக அறிந்து கொள்ளுகிறோம்.

2. இடைக்காலப் பகுதி

கி. பி. 11-ஆம் நூற்றாண்டுக்கு மேலே ஏறக்குறைய, கி. பி. 1850 வரையில் உள்ள காலம் மத்தியகாலம் எனப் படும். இந்திய சரித்திரத்தைக் கூர்ந்து நோக்குவார்க்கு இம்மத்தியகாலப் பகுதியின் தொடக்கத்தில், வட இந்தியா வில் நிலையான வல்லரசு ஒன்றுமில்லை என்பது புலனாகும். தென்னாட்டில் அரசர்களுள் ஒருவரோடொருவர் போர் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்துவிட்டமை தெரியவரும். சிலவிடங்களில் குடிகொண்ட அராஜரிகத் தாலும், வேறு சிலவிடங்களில் புறநாட்டாரின் படையேற் றங்களாலும், உள்நாட்டுக் குழப்பங்களாலும் இந்தியாவில் கல்வி முறை முற்றிலும் மாறுதலடைந்தது.

குருகுலங்களை ஆதரிக்கத்தக்க சிறந்த அரசர்கள் இல்லாமற்போனார்கள். அவைகள் நிறுவப்பெற்றிருந்த காடுகள் முதலியவை கொள்ளைக் கூட்டத்தாரின் தாயக மாயின. தேசசஞ்சாரம் செய்வதில் பல இடையூறுகள் குறுக்கிட்டன. பலவிதமான குழப்பங்களுக்கிடையில் பெற் றோர்கள் தம் பிள்ளைகளை விட்டு நெடுங்காலம் பிரிந்திருக்க விரும்பவில்லை. இந்நிலையில் குருகுலங்கள் வீழ்ச்சியுற்றமை வியப்பன்று.

இம் மத்தியகாலத்தின் இடையிடையே இந்தியாவின் சில பாகங்களில் இரண்டொரு தலைமுறைவரையில் சில அரசுகள் புகழ்படைத்து ஓங்கியிருந்தன. அச்சமயங்களில் எல்லாம் அங்கே அந்த அந்த அரசாங்க மொழி சம்பந்த மான கல்விமட்டும் விருத்தியாயிற்று. என்றாலும் பொது வாக மாணவ உலகம் பழைய சிறப்பை இழந்துகொண்டு வந்ததாகவே கூறவேண்டும். இக்காலத்தில் அறிவுப் பயிற்சியும் உடற் பயிற்சியும் வெவ்வேறாகப் பிரிந்து

போயின. இவற்றுள் ஒன்றைப் பெறுவோர்க்கு மற்றொன்று இல்லாமற் போயிற்று.

நாட்டில் கலைவளம் குன்றி வருவதையும் மாணவ நிலை நாளுக்கு நாள் தேய்ந்து வருவதையும் கண்ட பலர் மாணவ நிலையைத் தம் காலத்திற்கு ஏற்பச் சிறிதளவு செப்பனிட முன் வந்தனர். இவ்விதத் தொண்டை முக்கியமாகக் கோவில்களும் மடங்களும் கைக்கொண்டன. முக்கியமான ஒவ்வொரு கோவிலைச் சார்ந்தும், மடத்தைச் சார்ந்தும் ஒவ்வொரு கல்வி நிலையம் இருந்துவந்தது. அதில் பல மாணவர்கள் இலவசமாகக் கல்வி பயின்று வந்தனர். அந்த நிலையங்களின் சார்பிலேயே மாணவர்களுக்கு ஊண் உடை உறைவிடமும், பிறவும் வழங்கப்பட்டன. உடல் உழைப்பின்றி எளிதில் மாணவர்கள் அறிவு சம்பந்தமான கல்வி ஒன்றை மட்டும் பெற்று வந்ததனால் அவர்களுக்குச் இன்பநுகர்ச்சிகளிலே அதிக விருப்பம் தோன்ற, மெய் வருந்தி உழைத்துச் சாப்பிடவேண்டு மென்பதை அவர்கள் அடியோடு மறந்துவிட்டனர்.

ஒரு பாலுள்ள மாணவர்கள் மற்றொரு பாலுள்ள மாணவர்களுடன் கலந்து பழகச் சமயங்களும் வசதிகளும் வாயாமையினால், ஒரு கூட்டத்தாருக்கு மற்றொரு கூட்டத்தார்மேல் வெறுப்பு இயற்கையாகத் தோன்றிவிட்டது. தாம் எழுதும் நூல்களுள் ஒருவர் மற்றொருவர் கொள்கையை இகழ்ந்து எழுதத் தொடங்கியது இக்காலத்திலிருந்தே அதிகமாயிற்று. இருந்தாலும் நூற் கல்வி இக்காலத்தில் பல புதுமுறைகளைப் பெற்று வளர்ச்சி அடைந்ததாகவே கூறவேண்டும். இவ்வித வளர்ச்சிக்குக் காரணமான மடங்களையும் கோவில்களையும் நாம் போற்றவேண்டும்.

காலம் செல்லச் செல்ல நாட்டின் பலவிடங்களில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டன. பட்டிகளில் ஆடுகளை அடைத்து வைப்பதுபோல் செயற்கை வெம்மை செறிந்த கட்டடங்களில் பல மாணவர்களை அடைத்து வைத்துக் கல்வி கற்பிப்பதே இப்பள்ளிகளின் நோக்க

மாகும். தாங்கள் பெறும் கல்வியிலாவது, அது கற்பிக்கப் படும் முறையிலாவது மாணவர்களுக்கு விருப்பம் செல்ல வில்லை. ஆசிரியர்கள் உடலுக்கு வேலை தராமல் காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணி வரையில் பட்டிகளில் மாணவரை அடைத்துவைத்த காரணத்தினால் அம் மாண வரின் வாழ்க்கை துன்பமானதாயிற்று. பள்ளிக்கூடங்கள் அவர்களுக்குச் சிறைக்கூடங்களாகவே தோன்றின. பல மாணவர்கள் படிப்பினிடத்து வெறுப்பைக் காட்டத் தொடங்கினர். அதன் காரணமாக ஆசிரியர்கள் தண்டக் கொடுமையையும், கொடிய பிற அடக்குமுறைகளையும் கைக்கொள்வாராயினர். ஆசிரியர்பால் மாணவர்கள் இன்னபடி ஒழுகவேண்டுமென்பதை மாணவர்களே அறிந்துகொள்வதுபோக, இன்னவாறுதான் ஒழுகவேண்டு மென்று மாணவர்கள் சில வகைகளால் வற்புறுத்தப்பட் டார்கள். '**கோலாடக் குரங்காடும்**' என்றது போன்ற பழமொழிகள் இக்காலத்திற்றான் தோன்றின போலும்! அன்பு காரணமாகவன்றி அச்சம் காரணமாகவே மாணவர்கள் ஆசிரியர்களுக்குக் கீழ்ப்பட்டு வந்தனர்.

பண்டைக்காலத்தில் மிகவும் மேன்மையாக இருந்த மாணவநிலை இவ்விதமாக இடைக்காலத்தில் இரங்கத்தக்க கேவல நிலைக்கு வந்துவிட்டது.

3. பிற்காலப் பகுதி

ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் நிலைபெற்ற பிறகு கல்வியில் ஒரு புதிய யுகம் ஏற்பட்டது என்னலாம். ஆங்காங்கே பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. ஒரு பல்கலைக்கழகத்தை சார்ந்து பல்லாயிரம் பள்ளிகள் தோன்றியுள்ளன. இவற்றிற் படித்து வரும் மாணவர் களுக்கு ஆங்கிலமும், தாய்மொழியும், வேறு பல பாட வகைகளும் கற்பிக்கப்படுகின்றன. அச்சுப் பொறிகளும், பத்திரிகைகளும் கல்வியைக் கிராமந்தோறும் பரப்புதற் குரிய கருவிகளாயின.

இந்த நிலையிலும் குறைகள் இல்லாமற்போகவில்லை. ஆங்கிலப் பள்ளிகளில் படித்தவர்களுக்குச் சுலபமாக உத்தியோகங்கள் கிடைத்துவந்ததை எண்ணிப் பெற்றோர்கள் வறிய நிலையில் இருந்தபோதிலும் மிகவும் முயன்று தம் பிள்ளைகளை ஆங்கிலக் கலாசாலைகளுக்கு அனுப்பி வைத்தனர். இப்பிள்ளைகளுக்கு தகுதித்தாள் (யோக்கியதா பத்திரம்) வாங்கிக் கொடுக்கும் வகையில்தான் ஆசிரியர்கள் உழைப்பை எடுத்துக்கொண்டனர். அறிவு வளர்ச்சிக்குரிய கல்வியைப் பெறும் சந்தர்ப்பம் அமைந்தும், பலர் அதைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இவ்விதமாகவே ஆண்டுதோறும் பல்கலைக் கழகங்களிலிருந்து பட்டதாரிகள் வெளிவந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யாவருக்கும் நாட்டில் உத்தியோகம் அகப்படுவதில்லை. கல்வி சம்பந்தமாகவன்றிப் பிறவழிகளில் உழைக்க இம்மாணவர்கள் திறமையற்றவர்களாக இருக்கின்றனர். திறமைவாய்ந்த சிலரும் வேறு துறைகளிற் புகுவது தமது நிலைமைக்கு இழிவென்று கருதுகின்றனர். வயிற்றுப் பிழைப்புக்குத் தான் கல்வி என்று கருதிவந்ததனால் வந்த குறைவே இது.

இதே சமயத்தில், கற்பிப்பதில் பல புதிய முறைகள் தோன்றியுள்ளன. மாணாக்கர்கள், விஷயங்களைத் தாங்களே சோதனை செய்தோ, நேரிற் கண்டோ தெரிந்து கொள்வதுதான் கல்வியென்றும்; ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் துணையாக நின்று வழிகளைக் கற்பிக்க வேண்டுமென்றும் பலர் எண்ணுகின்றனர். பண்டைக்கால மாணவர்கள் பலவிடங்களுக்குச் சென்று விஷயங்களை நேரிற் கண்டு தெளிவடைந்ததுபோல இவர்களும் தேச சஞ்சாரம் செய்யவேண்டுமென்றும், எல்லோரும் தேச சஞ்சாரம் செய்வது இயலாத காரியமாதலால் பள்ளிகளை ஒட்டிப் பொருட்காட்சிச்சாலைகள் அமைக்கப்படவேண்டுமென்றும், ஒளி விசித்திரப் படங்கள் சினிமா முதலியவற்றின் துணையும் கல்வி வளர்ச்சிக்கு அவசியமென்றும் பலர் கிளர்ச்சி செய்து வருகின்றார்கள். குருகுலவாசத்தில்

மாணவர்கள் ஆசிரியருடன் இருந்து வந்ததுபோல் தற்கால மாணவரும் ஒழுக (ஹாஸ்டல்) மாணவர் விடுதி வாழ்க்கையை வற்புறுத்துவோர் பலராவர். பண்டைக்கால மாணவர்கள் தங்கள் புத்தியை மட்டுமின்றிக் கையையும் கண்ணையும் பயன்படுத்தி வந்ததுபோல் இக்கால மாணவர்களும் நடக்க வேண்டி அவர்களுக்குப் பள்ளிகளில் தொழிற் கல்விப் பயிற்சி (Manual Training) வேண்டுமென்று ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அக்கால மாணவர்களுக்கு இருந்ததுபோல உடற்பயிற்சிக்கு வேண்டிய வசதிகளை இக்கால மாணவர்களும் பெறப் பல இயக்கங்கள் தோன்றியுள்ளன.

ஆங்கிலக் கல்வியால் நம் நாட்டில் முக்கியமாக ஒரு குறை இருந்து வருகின்றது. நம் தேசத்தில் வழங்கிவரும் ஊண், உடை, வழக்கங்கள் முதலியவற்றையெல்லாம் தாழ்ந்தனவாகப் பாவிக்கும் ஒரு தன்மை எப்படியோ மாணவர்களிற் பலருக்கு ஏற்பட்டுவிடுகின்றது. அந்நிய நாட்டுப் பழக்க வழக்கம் முதலியவற்றில் தமக்கிருக்கும் காதலினால் இவர்கள் தங்கள் கொள்கைகளைத் தம்மைச் சார்ந்த பாமரருக்கும் பரப்பி வருகின்றனர். இதனால் எத்துணையோ தீமைகள் ஏற்படுகின்றன. நல்லவேளையாகத் நாட்டுப்பற்றுடையோர் பலருடைய நல்ல முயற்சியின் பயனாக மாணவர்களின் இக்கொள்கைகள் எல்லாம் மெல்ல மெல்ல ஒடுங்கி வருகின்றன.

மேல் வகுப்புகளில் நாட்டு மொழியைத் தவிர மற்றப் பாடங்கள் எல்லாம் ஆங்கிலத்திலே போதிக்கப்பட்டு வருகின்றன. ஒரு மாணவன் கீழ்வகுப்புக்களில் தன் தாய்மொழியில் அறிந்துகொண்ட விஷயத்தையே சிறிதளவு கூடுதலோடு மறுபடியும் மேல் வகுப்புக்களில் ஆங்கிலத்திற் கற்கவேண்டியவனாகின்றான். இதனால் எவ்வளவோ காலம் வீணாகின்றது. தன் தாய்மொழியிலேயே அவன் கலைகளையெல்லாம் கற்பதனால் இப்பொழுது கற்று வருவதைப் பார்க்கிலும் இன்னும் அதிக விஷயங்களை வெகு நன்றாகச் துன்பமின்றிக் கற்றுக்கொள்ளக்கூடும்;

காலமும் வீணுகாது. ஆங்கிலத்தைத் தவிர வேறு பாடங்கள் எல்லாம் உயர்தரப் பாடசாலைகளில் தாய்மொழி வாயிலாகவே புகட்டலாம் என்று சில பல்கலைக் கழகங்கள் அநுமதி அளித்திருக்கின்றன. பள்ளிகளின் தலைவர்களில் பலர் அம்முறையைத் தம் பள்ளிகளிற் புகுத்த இன்னும் மயங்குகின்ருர்கள். எப்படியும் சில ஆண்டுகளில் நம் நாட்டுப் பள்ளிகள் தாய்மொழி மயமாய்விடும் என்பதில் ஐயமில்லை.

முடிவுரை

தற்கால மாணவ நிலையை பண்டைக்கால மாணவ நிலைக்குச் சமமாக உயர்த்த முயற்சிகள் நம் காலத்தில் நடந்து வருகின்றனவென்று கூறினேம். எத்துறைகளில் மாணவர் முன்னேற்ற மடையவேண்டும்? அவர்களின் உரிமைகளும் கடமைகளும் என்ன ? என்பவற்றை ஆராய்வோம்.

மாணவர்களின் மனம் ஒரு நிலையினதன்று. இன்று ஒருவர் உடற்பயிற்சியைப் பற்றிப் பேசுவதைக் கேட்டால் அவர்கள் சிலநாள் உடற்பயிற்சியில் ஈடுபடுவார்கள். வேருெருநாள் மற்ருெருவர் பொதுமக்கள் சேவையைப் பற்றி பேசினல் அதில் சிலநாள் வரையில் ஈடுபடுவார்கள். அவர்கள் மனம் ஒன்றிலும் நிலையாக ஊன்றி நில்லாது. நம் மாணவர்களுக்கு ஒரே நோக்கம் வாழ்வின் குறிக் கோளாக அமைவதில்லை.

பருவத்திற் கேற்ற செயல் மாணவர்பால் இலங்க வேண்டும். மரங்கள் தளிர்த்துப் பூத்துக் காய்த்தபிறகே கனிய ஆரம்பிக்கின்றன. அதுபோல் இவர்களும் படிப் படியாகத்தான் உயரமுடியும். நினைத்த மாத்திரத்தில் ஆகாயத்தில் பறந்துவிட முடியாது. பெரியவர்களைப்போல் சிறுவயதில் ஆட்சி செய்ய விரும்புவது புலியைக் கண்டு பூனை சூடுபோட்டுக்கொண்ட கதையாக முடியும்.

எதையும் நடத்த வேண்டுமென்பதிலும், பிறர் தம்மைக் கண்டு புகழவேண்டு மென்பதிலும் மாணாக்கர்களுக்கு பெரு வேட்கை இருந்து வருகின்றது. அது வளர்ச்சி அடையும் பொருட்டுச் சில முக்கிய காரியங்களை அவர்களிடம் ஒப்பி வித்து நடத்தச் செய்தால் அவர்கள் அவற்றை ஒழுங்காகச் செய்வார்கள். 'எட்டாள் வேலையைச் சிட்டாள் செய்யும்' என்பது உலக வழக்கு. மாணவர் சங்கங்கள், விளையாட்டுகள் முதலியவற்றை அவர்களே நடத்தும்படி ஆசிரியர்கள் ஒப்புவித்தால் மாணவர்களுக்கு செயலாற்றுந் திறன் விரைவில் ஏற்பட்டுவிடும்.

தற்கால மாணவரிடம் பலகுறைகள் இருக்கின்றன. அவற்றை அவர்கள் நீக்கிக்கொள்வது தங்கள் மேன்மைக்கு வழிகோலுவதாகும். எடுத்தவற்றிற்கெல்லாம் கோபம், ஆலோசியாமல் காரியங்களில் புகுந்துவிடுதல், காரியங்களைச் செய்வதில் உடனுக்குடன் கைமேல் பலனை வேண்டல், தாங்கள் செய்தவையெல்லாம் சரியென்ற நினைவு, நட்பு முறையில் அடிக்கடி மாறுதல் முதலியன. இக்குறைகளை எல்லாம் நம் மாணவ உலகம் என்று விட்டொழிக்குமோ?

மனத்திற்றோன்றும் அபிப்பிராயங்களைச் சித்திரங்கள் மூலமாகவோ, குறும்புப்பாட்டுக்கள் மூலமாகவோ எழுதிக் காட்டுவதில் மாணவர்களுக்கு விருப்பமதிகம். அவர்கள் இப்பயிற்சியை தீயவழிகளிலே பெரியோர் அறியாமல் செய்துவருவது வழக்கம். அவ்வழக்கத்தை நல்லவழிகளிலே செலுத்தும்படி செய்பவர்கள் தோன்றுவார்களேயானல் நம் மாணவர்கள் எவ்வளவோ மேன்மைக்கு வருதல் கூடும். அவர்கள் எழுதும் செய்யுட்கள் பிழையுள்ளனவாகத் தோன்றினும் நாம் மாணவர்களை ஊக்கிவருவோமானல் பிற்காலத்தில் செய்யுள் செய்யும் பழக்கம் அவர்களுக்கு எளிதாகிவிடும்.

சில புத்தகங்களை மட்டும் பாடமாகவைத்து ஆண்டு முழுவதும் அவற்றை வாசிக்கச் செய்வதால் அவர்களுக்கு

புத்தகத்தில் வெறுப்பேற்பட்டு விடுகின்றது. பலவிதமான புத்தகங்களை வகுப்பில் தொகுத்துவைத்து மாணவரே தம் எண்ணம்போல் அவற்றை உபயோகிக்க அநுமதிக்கப்படு வார்களேயானல் அவர்கள் புத்தக விருப்பம் உடையவர் களாய்விடுவார்கள்.

இவ்வாறு மாணவர்களுடைய மனநிலையையும், அறி வாற்றலையும் நாட்டுக்கு நலம்புரியும் வழியில் திருப்புவதே ஆசிரியர்களது முதற் கடமையாகும். இது நன்கு நடை பெறும்படி பிறரும் துணைபுரிதல் வேண்டும். இத்தகைய முயற்சிகளால் நம்நாட்டுப் பழைய மாணவர்கள் பெற்ற பயனேடு புது உலகத்தால் உண்டாகும் பயன்களையும் இனிவரும் உலக மக்களாகிய மாணவர்கள் பெறுவார்க ளென்பதில் ஐயமில்லை.

---

2. உழைப்பால் உயர்ந்தவர்

[C. V. நாராயணையர் அவர்கள், M.A., L.T.]

1. உழைப்பினுல் ஒருவன் உயர்வடைகின்முனே அன்றிப் பிறப்பினுல் இல்லை. —சர். பி. சி. ரே

உழைப்பினுல் உயர்வடையும் எவனையும் மேனுட்டார் மகிழ்ச்சியோடு வரவேற்கின்றனர். உலகெலாம் புகழும் உயர்நிலையில் இருந்தவர்களும் இருப்பவர்களுமான பெரு மக்களிற் பலர், ஆரம்பத்தில் மிகத் தாழ்ந்த வேலையைச் செய்துகொண்டிருந்தவரே ஆவர். அவர்தம் வரலாறுகள் உங்களுக்குப் பெருவியப்பை அளித்து, 'உழைப்பு ஒன் றுக்கே உயர்வுண்டு' என்னும் உயர்ந்த நோக்கத்தை உண்டாக்குமாதலின், அவற்றுட் சிலவற்றை ஈண்டுக் கூறு கின்றேன் :

லாயிட் ஜார்ஜ்

இவர் ஓர் எளிய குடும்பத்திற் பிறந்தவர். இவர் மூன்று வயது சிறுவராக இருந்தபோது, இவர் தந்தையார் கால

மானுர். எனவே, இவர், ஒரு கிராமத்தில் செருப்புத் தைத்துப் பிழைத்துக்கொண்டிருந்த தம் தாய் மாமனிடம் வளர்ந்து வந்தார். அவரது உதவியால் இவர் கிராமப் பள்ளியிற் படித்துத் தேறினர். பின்னர், வக்கீல் குமாஸ்தாவுக்கு வேண்டிய கல்வியைக் கற்று, வக்கீல் குமாஸ்தாவானர்; அவ்வேலையில் இருந்துகொண்டே ஊக்கத்துடன் வக்கீல் வேலைக்கு வருந்திப் படித்துத் தேர்ச்சியுற்று வக்கீலானர்; வெகு விரைவில் தமது தொழிலில் மேன்மையடைந்து, சொல்லாற்றலிற் சிறந்து விளங்கினர். பின்னர், இவர் அரசியல் துறைகளில் கலந்து, தந்நம்பிக்கையாலும் சலியா உழைப்பாலும் அரும்பாடுபட்டுப் பாராளுமன்றத்தில் (Parliament) உறுப்பினரானர்; பின்னர், பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தில் **பிரதம மந்திரியானர்.** இன்று உலகில் உள்ள பேராற்றல் வாய்ந்த சொற்பொழிவாளர்களில் இவர் ஒருவராக விளங்குதல் குறிப்பிடத்தக்கது.

தாமஸ் மாசரிக்

இவர் மிக எளிய குடும்பத்திற் பிறந்தவர். தமது பதின்மூன்ரும் வயதில் பள்ளி இறுதித் தேர்வுக்குச் செல்லப் பணமின்றி மூன்ருண்டுகள் இவர் காத்திருக்க நேர்ந்தது. அக்காலத்தில் இவர் கொல்லச் சிறுவனுகவும், செருப்புத் தைப்பவனுகவும், பிணம் புதைப்பவனுகவும் இருந்துகொண்டே பிரஞ்சு மொழியைக் கற்றுத்தேர்ந்தார்; வேறு பல மொழிகளிலும் சிறந்த பயிற்சி பெற்ருர். பின்னர் இவர் வியன்ன நகத்துக்குச் சென்று, பரீட்சையில் தேறி, ஓர் இராப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியரானர். சில ஆண்டுகள் கழிந்த பின்னர்க் கல்லூரி ஒன்றில் பேராசிரியர் பதவியை ஏற்றுப் பல நூல்களை எழுதினர்; பல அரிய சொற்பொழிவுகள் செய்தார்; தம் தாய்நாடான **ஜெக்கோஸ்லோவேகியாவின்** மேனிலைக்குப் பெரிதுழைத்தார். அதன் பயனுக, இவர், இன்று அந்நாட்டின் **குடியரசுத் தலைவராக** விளங்கி வருகின்ருர்.

ஆர்தர் மக்னமரா

இவர் இங்கிலாந்தில் பர்மிங்ஹாமில் இருந்த ஓர் ஏழைக் குடியிற் பிறந்தவர். இவர் பதினொரு வயதுடைய சிறுவராக இருக்கையில் இவர் தந்தையார் காலமானர். எனவே, இவர் தாயையும், தம்பியையும், மூன்று தங்கைகளையும் காப்பாற்ற வேண்டியவரானர். பாவம்! சிலநாட்கள் வரையில் இவரும் மற்றவரும் பட்டினியாகவே இருந்தனர். பின்னர், இவர் ஒரு கசாப்புக் கடைக்காரரிடம் வேலையில் அமர்ந்தார். கடையிலிருந்து, இறைச்சியை வழக்கமாக வாங்குவோரின் இல்லங்கட்கு எடுத்துச் செல்வதே இவரது வேலையாகும். இவ்வேலை போக எஞ்சிய நேரங்களில் இவர் ஊக்கத்துடன் பள்ளியிற் படித்து வந்தார். சாப்பாட்டிற்கு விட்ட நேரங் களில் நகரத்தின் பல பாகங்களிலுமுள்ள தொழிற்சாலை களின் வாயில்களில் நின்று இரந்து வந்தனர். இவரது தாழ்ந்த நிலையைக்கண்டு இரங்கிய தொழிலாளிகள் இவ ருக்கு ரொட்டித் துண்டுகளைக் கொடுப்பது வழக்கம். இவர் அவற்றை எடுத்துக்கொண்டு தம் வீடு சென்று, பட்டினியாற் பரிதவிக்கும் தாய்க்கும் தம்பிக்கும் தங்கை களுக்கும் கொடுத்து மகிழ்வது வழக்கம்.

மக்னமரா பதின்மூன்ரும் வயதில் கலாசாலையை விட்டார்; அது முதல் நூற்றைம்பது இடங்களில் வேலை பார்த்தார்; அவ் வேலைகளில் இவர் அடைந்த இன்னல்கள் மிகப் பலவாம். முடிவில் 1924-ஆம் ஆண்டில் ஆகாயத் தந்தியைப்பற்றி யோசித்து, தம்மிடம் இருந்த நாற்பத் தெட்டுப் பொன்னை மூலதனமாகக்கொண்டு, மிகச் சிறிய அளவில் மின்சாரத் தொழிற்சாலையொன்றை ஏற்படுத்தி னர். ஆகாயத் தந்திக்குரிய கருவிகளைச் செய்து விற்பதே இவரது வேலையாகும்.

முதலில் இரண்டு பேரைக் கொண்டு தொடங்கிய அத் தொழிற்சாலை நாளடைவில் மிக்க முன்னேற்றமடைந்தது; 1925-ஆம் ஆண்டில் 300 பொன் லாபங் கிடைத்தது.

1926-ல் 900 பொன்னும், 1928-ல் 3500-ம், 1930-ல் பதினே ராயிரம் பொன்னும், 1932-ல் 1,90,000 பொன்னும் லாபங் கிடைத்தது. இப்பொழுது இவரது தொழிற்சாலை மிகப் பெரிதாக மாறியுள்ளது. அதில் மூவாயிரம் தொழிலாளர் வேலை செய்கின்றனர். ஒவ்வொரு நாளும் ஓயாமல் ஓடிக் கொண்டிருக்கும் இயந்திரங்கள் ஒரு நாளில் இரண்டரை லட்சம் கருவிகளைச் செய்து குவிக்கின்றன.

கசாப்புக் கடையில் இருந்த மக்னமரா—தொழிற்சாலை களின் வாயிலில் நின்று யாசித்த மக்னமரா—இன்று இங்கி லாந்தில் செல்வச் சீமானாக விளங்குகின்றார்.

செருப்புத்தொழில் அரசர்—தாமஸ் பாட்டா

உலகெலாம் **செருப்பரசர்** எனப் புகழத்தக்க உயர்நிலை யில் இருந்த இவர், ஜெக்கோஸ்லோவேகியா நாட்டைச் சேர்ந்தவர்; செருப்புச் செய்துவந்த தாய்தந்தையர்க்குப் பிறந்தவர். இவர் சிறுவராக இருக்கையில், வீட்டுக்கு வீடு சென்று, தம் பெற்றோர் செய்துமுடித்த செருப்புகளை விற்று வந்தார். நாளடைவில் தொழில் வளர்ச்சியடையவே, இவர் பெரிய செருப்புத் தொழிற்சாலைக்குத் தலைவராகி, உலகிலேயே செருப்புத் தொழில் செய்வோருட் சிறந்தவ ராகிச் 'செருப்பரசர்' எனப் பெயர் பெற்றார். இவர் தொழிற்சாலைகள் உள்ள இடம் ஒரு பெரிய நகரமாகும். இவர் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஆயிரக் கணக் கான தொழிலாளிகள் அங்கு வசிக்கின்றார்கள். அவர்கள் இவரால் அளிக்கப்பட்டுள்ள வீடுகளில் இருக்கின்றார்கள்; இவரால் அமைக்கப்பெற்ற சாப்பாட்டு விடுதிகளில் இன் னும் சாப்பிடுகின்றார்கள்; இவரால் அமைக்கப்பெற்ற படக்காட்சிகளுக்குச் சென்று இன்றும் களிக்கின்றார்கள்.

செருப்பு வைக்கப்படும் அட்டைப் பெட்டிகளும், காகி தமும் இவர் தொழிற்சாலைகளிலேயே செய்யப்படுகின்றன. ஆண்டுதோறும் உலகில் உள்ள எல்லா மொழிகளிலும் கேடலாக் (Catalogue) அச்சிடப் பெறுகின்றது. இவரு

டைய தொழிற்சாலைகளில் ஒரு நாளில் பல்லாயிரக் கணக்கான செருப்புகளும் மிதியடிகளும் செய்யப்படுகின்றன.

தாமஸ் பாட்டா உலகமெங்கும் சுற்றுபவர். இவர் 1931-ஆம் ஆண்டில் காலமானார். இப்போது இவர் வேலையை இவர் புதல்வர் பார்த்து வருகின்றார். இவர் தம் வியாபாரத்தை முன்னிட்டு ஒரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டுக்கு ஆகாய விமானத்திற்றான் செல்கின்றார். பத்து ஆகாய விமானங்கள் இவருக்குச் சொந்தமாக இருக்கின்றனவெனின், இச்செருப்பரசரின் வாணிபச் சிறப்பை என்னென்பது!

ஸ்டாலின்

நவீன இரஷியாவின் சர்வாதிகாரியாக விளங்கி வருபவரான ஸ்டாலின் என்பவர், ஓர் ஏழைத் தொழிலாளர் புதல்வராவர். இவர் சிறு வயதில் கூலி வேலை செய்து பிழைத்து வந்தவர்; எனினும், உழைப்பை மேற்கொண்டு கல்விகற்று, அரசியல் நடவடிக்கைகளில் கலந்து, அரசியல் முன்னேற்றத்துக்கு மிகவும் பாடுபட்டார்; முடிவில் சோவியத் அரசாங்கத் தலைவரானார். இன்று இரஷியா முழுவதும் இவரது சொற்கேட்டு நடந்து வருவது குறிப்பிடத் தக்கது.

மாக்பர்சன் இராபர்ட்ஸன்

இவர் மிகவும் ஏழைக்குடும்பத்திற் பிறந்த ஆங்கிலேயர்; இளமைப் பருவத்தில் வயிற்றுச் சோற்றுக்கு மிக வருந்தி உழைத்தவர்; சகிக்க முடியா இன்னல்களிலும் சிறிது கல்வி கற்று, சிறிது காலம் '**நாவிதத் தொழில்**' செய்து பிழைத்தார். பின்னர், இவர் ஆஸ்ட்ரேலியாவுக்குச் சென்று, அங்குப் பலவித வேலைகளைச் செய்து பிழைத்தார்; முடிவில், பொம்மைகளைப் போன்ற வேடிக்கையான மிட்டாய்களைச் செய்து விற்று அத்தொழிலில் மிக்க முன்னேற்றம் அடைந்தார்; மிட்டாய் செய்யும் மிகப் பெரிய

தொழிற்சாலையை வைத்தார். அதில் இன்று 2600 தொழிலாளர் வேலை செய்து வருகின்றனர். ஆ! உழைப்பு அளிக்கும் உயர்வுதான் என்னே!

ஆண்ட்ரூ கார்னகி

இவர் ஸ்காட்லண்ட் தேசத்தில் ஓர் எளிய குடும்பத்திற் பிறந்தவர். இவர் சிறுவராக இருக்கையில் இவர் பெற்றோர் அமெரிக்காவை அடைந்து, வறுமையாற் சொல்லொணுத் துன்பங்களை அடைந்து வாட்ட முற்றனர். இவர் தாயார் சில்லரைச் சாமான்களை விற்றுக்கொண்டும், செருப்புகளைப் பழுது பார்த்துக்கொண்டும் இருந்தார்; தந்தையார் நெசவு வேலை செய்துகொண்டிருந்தார். கார்னகி சிறிது கல்விகற்றுத் தந்தையாருடன் நெசவு வேலையிற் சிறிது காலம் இருந்தார்; பின்னர்த் தந்திச் செய்திகளைக்கொண்டு செல்லும் சிறுவராக இருந்தார்; பிறகு, தந்தி அடிக்கக் கற்று ஒருவரிடம் குமாஸ்தா ஆனுர்; பொறுப்பு வாய்ந்த தந்தியடிக்கும் பதவியைப் பெற மிக உழைத்தார். புகை வண்டிகளில் பிரயாணிகளுக்குப் படுக்கை வண்டிகள் இருக்க வேண்டுமென வற்புறுத்தி, அப்படுக்கை வண்டிகளை விலைபேசித் தந்ததில் அடைந்த ஊதியத்தைக் கொண்டு வேருெருவரோடு வியாபாரஞ் செய்து வந்தார். அக்காலத்தில், இரசாயன மூலமாக இரும்பை எஃகாகச் செய்யலாமென்பதைக் கண்டுபிடித்து, உலகம் வியக்குமாறு செய்தார். எஃகின் ஏற்றம் உலகெலாம் பரவ, எஃகு வியாபாரம் விரைவில் செழிப்புற்றது. கார்னகி பெரிய எஃகுக் கம்பெனி ஒன்றை வைத்துத் திரண்டபொருள் சம்பாதித்து, 'எஃகு அரசர்' எனப் பெயர் பெற்ருர். இப்பெரியார் தாம் சம்பாதித்த பொருளில், 7,50,00,000 பொன்களைப் பல அற நிலையங்களுக்குக் கொடுத்துள்ளார்.

எச். ஜி. வெல்ஸ்

இவர், இன்று இங்கிலாந்தில் உள்ள பிரபல நூலாசிரியராவர். இவர் முதலில் ஒரு ஜவுளிக்கடையில் சிற்ருளாக

இருந்தவர்; வேலை செய்த நேரம் போக எஞ்சிய நேரத்தில் கல்வி கற்றுப் பின்னர் ஒரு சிறிய பள்ளிக்கூட ஆசிரியரானார். ஆசிரியராக இருந்துகொண்டே மேலும் மேலும் படித்துச் சிறந்த அறிஞரானார்; யாவரும் விரும்பிப் படிக்குமாறு நூல்களை எழுதும் வன்மையைப் பெற்றார். இவர் எழுதியுள்ள நூல்கள் பல. இவர் இக்காலத்திய சிறந்த நூலாசிரியருள் ஒருவராக விளங்குகின்றார்.

துருக்கித் தலைவர் முஸ்தபா கெமால்

இவர் மிக எளிய முகம்மதிய குடும்பத்திற் பிறந்தவர். 'கல்வி கற்காத மூடன்' என ஆசிரியரால் இகழப்பட்டுப் பள்ளியினின்றும் வெளியேற்றப்பட்ட இவர், துருக்கி இராணுவப் பள்ளியிற் சேர்ந்து படைக்கலப் பயிற்சி பெற்றார்; சேனையில் சாதாரணப் போர்வீரரானார்; பின்னர்த் தேசீய நூல்களைக் கற்றுத் நாட்டுப்பற்று மிகுந்து, தம் தாய் நாட்டை மேனிலைக்குக் கொண்டுவர இரவும் பகலும் சிந்தித்து வந்தார். அக்காலத்தில் ஐரோப்பியப் பெரும் போர் மூண்டது. அது சமயம் இவர் 'தேசீயக் கட்சி' ஒன்றைத் தோற்றுவித்துத் தம் நாட்டை பகைவர் கையினின்றும் காப்பாற்றினார். போர் முடிந்ததும், நாட்டு நலத்தைக் கவனியாதிருந்த துருக்கிச் சுல்தானை ஓட்டிவிட்டு, அந்நாட்டின் சர்வாதிகாரியானார்; அன்று முதல் நாட்டு நலத்துக்கெனத் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அளித்து உதவி வருகின்றார்; துருக்கிப் பெண்களை வீரப் பெண்மணிகளாக்கிக் கல்விஞானம் அளித்துள்ளார்; பழைய குருட்டுப் பழக்க வழக்கங்களை வேரோடு களைந்துள்ளார். மிக எளிய குடும்பத்திற் பிறந்த இவர், துருக்கியின் முடிசூடா மன்னராகி, நாட்டுக்குச் செய்யுந் தொண்டுகள் மிகப் பல. இவர் செய்துள்ள தீவிரமான சீர்திருத்தங்களைக் கண்டு மேனாடுகளும் வியக்கின்றன.

---

3. கூட்டுறவுப் பண்டசாலைகள்

[அ. முத்தையா, M.A.]

கடந்த ஒரு நூற்றாண்டாகப் பொருளாதார உலகில் பெரிய மாறுதல்கள் உண்டாகி வருகின்றன. நம் நாட்டைவிட, மேல் நாடுகளில் இம்மாறுதல்கள் இன்னும் அதிகம். பொருளுற்பத்தி முறையில் பெரிய மாறுதல்கள் உண்டாவதன்முன் பல பண்டங்களையும் பல தொழிலாளிகளே செய்து வந்தார்கள். அதனால் வரும் இன்ப துன்பங்களை அவர்களே அநுபவித்து வந்தார்கள். இப்போது அந்தப் பண்டங்களெல்லாம் பெரிய பெரிய தொழிற்சாலைகளில் செய்யப்படுகின்றன. பொருள்களை உற்பத்தி செய்பவர்களுக்கும் அவைகளை வாங்கி அநுபவிப்பவர்கட்கும் இடையே நெருங்கிய சம்பந்தம் இல்லை.

சாமான் வாங்குகிறவர்கள் சில்லரைக் கடைகளில் வாங்குகிறார்கள். சில்லரைக் கடைக்காரர்களோ, மொத்த வியாபாரிகளிடம் வாங்கி விற்கிறார்கள். மொத்த வியாபாரிகள், பொருள் உற்பத்தி செய்வோரிடம் வாங்குகிறார்கள். சில சமயங்களில் ஒரு பொருள் அதனை உற்பத்தி செய்வோரிடமிருந்து அதை அநுபவிப்பவர் கைக்கு வருவதற்குள் அநேக வியாபாரிகளின் கை மாறுகின்றது. அந்த வியாபாரிகளில் ஒவ்வொருவரும் சிறிது சிறிது இலாபம் வைத்துக்கொண்டாலும், மொத்தம் அதிகமாகி விடுகிறது. பெரும்பாலும் சில்லரைக்கடை வைத்திருக்கும் வியாபாரிகள் அதிக இலாபத்தையே விரும்புகின்றார்கள். கடைக்காரர்கள் தங்களுடைய சிரமத்திற்குக் கொஞ்சம் ஊதியம் பெற விரும்புவது நியாயமானதே. ஆனால், அவர்கள் அடையும் இலாபம் அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு எவ்வளவு இருக்கலாமோ அதைவிட மிகவும் அதிகமாகவே இருக்கின்றது எனப் பல தேசங்களிலும் பண்டங்களை வாங்குவோர் எண்ணவேண்டி இருக்கிறது. பொருள் உற்பத்தி செய்வோருக்கும், அவைகளை உபயோகிப்போ

ருக்கும் இடையில் எந்த நடுவர்களும் இல்லாவிட்டால், அநேகமாக எல்லாச் சாமான்களையும் குறைந்த விலைக்கே பெறமுடியும் என மக்கள் எண்ணலானார்கள். எனவே, வியாபாரிகளின் உதவி இல்லாமல் சாமான்களைத் தாங்களே வாங்குதல் பல வகையிலும் நல்லது என உறுதி கொண்ட சிலருடைய முயற்சியே, இப்போது கூட்டுறவுப் பண்டசாலைகள் என்னும் உருவம் பெற்று விளங்குகிறது. பண்டங்களை நேரே வாங்கும்போது, பலர் சேர்ந்து வாங்கலாம் ; பலர் சேர்ந்து அதிகமான அளவு பண்டங்களை வாங்கும்போது குறைந்த விலைக்கு வாங்கவும் கூடும்; நல்ல சாமான்களாக வாங்க முடியும். முன் வியாபாரிகளைச் சேர்ந்த இலாபமெல்லாம் இப்பொழுது பண்டங்கள் வாங்குவோரையே சேரும். இதுவே கூட்டுறவுப் பண்டசாலைகள் தோன்றியதின் முக்கிய காரணம்.

அநேகமாக ஏழைகள்தாம் தாங்கள் வாங்கும் சாமானுக்கு அதிக விலை கொடுக்கும்படி நேரிடுகிறது. ஏழைகளும் தொழிலாளிகளுமே சில்லரைக்கடையிலே தங்கட்கு வேண்டிய சாமான்களை வாங்குகிறார்கள். ஒரு மாதத்திற்கு வேண்டும் சாமான்களைக்கூட மொத்தமாக வாங்க அவர்கட்கு முடியாது. பெரும்பாலும் ஒரு நாளைக்கு, அல்லது ஒரு வாரத்திற்கு வேண்டும் சாமான்களை அவர்கள் வாங்குகிறார்கள். அந்தச் சாமான்களுக்குச் சில்லரைக் கடைக்காரர் வைத்ததுதான் விலை. அநேகமாக அந்தக் கடைக்காரர் வைத்துவிற்கும் சாமான்கள் மிகவும் மோசமானவை. சில்லரை வியாபாரிகள் தாழ்ந்த சரக்குகளை உயர்ந்த விலைக்கு விற்று ஏழைகளின் வாழ்க்கை அடிப்படையை உறிஞ்சிவிடுகிறார்கள். இன்னும் கடனுகச் சாமான் வாங்குவதென்றாலோ, கேட்க வேண்டுவதில்லை. விலை உயர்ந்துவிடும் ; சாமானுடைய நிலை இன்னும் குறைந்து விடும். இத்துன்பத்தினின்றும் முக்கியமாக ஏழைகளை விடுவிக்க எழுந்துள்ளதே கூட்டுறவுப் பண்டசாலை ஆகும்.

பண்டம் வாங்குவோர்தாம் இக்கூட்டுறவுப் பண்டசாலைகளை நடத்துகின்றனர். 'வியாபார நுட்பங்கள் தெரியாத கௌரவ உழைப்பாளிகள் இக்கூட்டுறவுப் பண்டசாலைகளை எப்படிச் சிக்கனமான முறையில் திறமையாக நடத்த முடியும்?' என்று சிலர் நினைக்கக்கூடும். 'இலாபத்தைக் கருதி உழைக்காத சிலர் இந்தப் பண்டசாலைகளை நன்றாக நடத்துவதில் எப்படி அக்கறை எடுத்துக் கொள்ளக்கூடும்?' எனச் சிலர் கருதலாம். ஆனால், நடைமுறையில் இப்பண்டசாலைகள் மிகச் செவ்வையாகவே வேலை செய்து வருகின்றன. ஏனெனில், இப் பண்டசாலைகட்குத் தனிப்பட்ட சில வசதிகள் இருக்கின்றன.

1. இப்பண்டசாலைகள் சாமான்களை உறுப்பினர்கட்கே விற்கின்றன. பண்டசாலையின் உறுப்பினர்கள் அங்கேயே எல்லாச் சாமான்களும் வாங்குவதால், யாராவது வாங்க வருவரோ, வரமாட்டாரோ என்னும் கவலை இதை நடத்துவோருக்குச் சிறிதும் இல்லை. மாதா மாதம் உறுப்பினர் இவ்வளவு வாங்குவர் என்னும் ஒரு திட்டம் தெரியுமாதலால், அதிகமாகக் கட்டுக்கடைச் சரக்குத் தங்குவதற்கு இடமில்லை. சாதாரணக் கடைகளைப் பலருடைய கண்ணில் படும்படி பெரிய இடத்தில் பெரிய தெருவில் வைக்கவேண்டி இருக்கிறது. சாதாரணக் கடைகளுக்கு விளம்பரம் அவசியம். ஆகையால், அவை இக்காரியங்களுக்காக மிக்க பொருள் செலவிடவேண்டி இருக்கிறது. கூட்டுறவுப் பண்டசாலைகளுக்கோ, இந்த வகையில் செலவே இல்லை. ஒரு சந்தில் வைத்தாற்கூட உறுப்பினர்கள் வந்து சேர்ந்து விடுவார்கள். உறுப்பினரல்லாத மற்றவர்கட்கு விளம்பர மூலமாகத் தெரிவிக்க வேண்டுமென்ற அவசியமுமில்லை. சாதாரணக் கடையை ஒருவர் மற்றொருவருக்குச் அறிமுகம் செய்யமாட்டார். ஆனால் கூட்டுறவுப் பண்டசாலையையோ ஒருவர் தம் நண்பர் பலருக்கும் அறிமுகம் செய்ய விரும்புவர்.

2. சாதாரணப் பண்டசாலைகளில் கடன் வியாபாரமும் நடக்கிறது. பலருக்குக் கடன் கொடுக்கும்போது, சிலர் கடனைத் திருப்பிக் கொடுக்காமல் மோசம் பண்ணவும் கூடும். இதுபோலச் சில கடன் கொடுக்கப்படாமல் போனாலும் தங்களுக்கு நஷ்டம் உண்டாகாதவாறு, கடன் வியாபாரத்தில் எல்லாச் சாமான்களையும் அதிக விலைக்குத் தான் அந்த வியாபாரிகள் கொடுக்கிறார்கள். ஆனால், கூட்டுறவுப் பண்டசாலையில் இவ்வகையான அதிக விலையே இல்லை. ஏனென்றால், கூட்டுறவுப் பண்டசாலைகளில் நடைபெறும் வியாபாரம் எல்லாம் ரொக்க வியாபாரமே; கடன் வியாபாரம் இல்லவே இல்லை. ஆகவே, கூட்டுறவுப் பண்டசாலையின் சாமான்கள் அதிக விலை உடையவை அல்ல.

3. தனிப்பட்ட மனிதன் கடை வைத்து நடத்தினால், எல்லா வேலைக்கும் சம்பள ஆட்களையே வைக்க வேண்டி இருக்கிறது. கூட்டுறவு முறையில் வைத்து நடத்தினாலோ, செயலாளர் முதலியவர்கட்கு மிக்க சம்பளம் கொடுக்க வேண்டி இருக்கிறது. ஆனால் கூட்டுறவுப் பண்டசாலைகளிலோ, பெரும்பான்மையான வேலைகள் ஊதியத்தை விரும்பாதவர்களால் செய்யப்படுகின்றன. பலர் குறைந்த சம்பளத்துக்கு வேலை செய்ய முன்வருகின்றனர். ஒரு பெரிய உபகாரமான இயக்கத்துக்கு வேலை செய்யும்போது குறைந்த ஊதியம் கிடைத்தால் போதுமென்று பலர் எண்ணுகின்றனர். பல சிறந்த அறிவாளிகள் கூட்டுறவு இயக்கங்களில் மிகக்குறைந்த சப்பளம் பெற்றுக்கொண்டு ஊக்கத்துடன் உழைத்து வருகிறார்கள். கூட்டுறவு இயக்கத்தில் குறைந்த சம்பளத்துக்கு வேலை செய்துவந்த ஒரு பெரிய அறிவாளரை ஒருவர் கேட்டபோது, "நான் அதிக சம்பளத்தை விரும்பவில்லை. என்னை என்னுடன் வேலை செய்பவர்கள் பெரிதும் மதிக்கிறார்கள். என்னிடம் ஆட்சி உரிமை இருக்கிறது. எனக்குக் கூட்டுறவு இயக்கத்தின் கொள்கையில் முழு நம்பிக்கை உண்டு. இவை தாம் என்னை

முற்றிலும் அமைதி அடையச் செய்கின்றன " என்று மகிழ்ச்சியோடு பதில் கூறினாராம்.

4. ஒவ்வொரு சங்கமும் பண்டசாலையும் அதற்கு வேண்டிய சாமான்களைத் தனியே வாங்குவதில்லை. இந்தக் கூட்டுறவுப் பண்டசாலைகள் பல சேர்ந்து, கூட்டுறவு மொத்த வியாபாரப் பண்டசாலைகளை ஏற்படுத்திக்கொண்டு உள்ளன. இந்த மொத்தப் பண்டசாலைகள் சாமான்களை அதிகமாக வாங்குவதால் குறைந்த விலைக்கு வாங்க முடிகிறது. மேலும், மொத்தப் பண்டசாலைகள் தாமே தொழிற்சாலைகளை ஏற்படுத்தி நடத்திப் பல கூட்டுறவுப் பண்டசாலைகட்கும் வேண்டும் சாமான்களைக் கொடுக்கின்றன. உதாரணமாக, இங்கிலாந்தின் மொத்தப் பண்டசாலை, தனக்கு வேண்டிய தேயிலை, காப்பிக்கொட்டை இவைகளைத் தனக்குச் சொந்தமான தேயிலை காப்பித் தோட்டங்களிலேயே உற்பத்தி செய்து கொள்ளுகிறது. இந்தத் தொழிற்சாலையில் செய்யும் சாமான்களையே பல பண்டசாலைகளும் வாங்கி விற்கின்றன.

5. இந்தப் பண்டசாலைகளில் சாமான்களை வாங்குவதனால் நம்மை அறியாமலே நாம் பணத்தைச் சேர்க்கிறோம். எப்படி என்றால், இப்பண்டசாலைகள் நாம் வாங்கும் சாமான்கள் எவ்வளவெனக் கணக்கு வைத்துக்கொள்ளுகின்றன. ஆறுமாதங் கழித்தோ, ஒருவருஷம் கழித்தோ, பண்டசாலையின் கணக்குப் பார்க்கும்போது வருகிற இலாபத்தைச் சாமான் வாங்கிய அளவுக்கேற்பப் பங்கிட்டுக் கொடுப்பதால், நமக்கு ஒரு மொத்தமான தொகை கிடைக்கிறது.

6. இந்தக் கூட்டுறவுப் பண்டசாலைகள் ஆங்காங்குத் தோன்றி இருப்பதால், அந்த இடங்களிளெல்லாம் ஏனைய வியாபாரிகளும் தங்களுடைய சாமான்களைக் குறைந்த விலைக்கு விற்கிறார்கள். அவ்விதத்தில் இப்பண்டசாலைகளின் உறுப்பினர்களே அன்றி மற்றவர்களும் நன்மை அடைகிறார்கள்.

7. பண்டசாலைகள் அநேக ஏழைத் தொழிலாளி கட்கு அறிவூட்டும் இயக்கங்களாகவும் விளங்குகின்றன. **பேராசிரியர் சி. ஆர். பே** (Prof. C. R. Fay) என்பவர் இப்பண்ட சாலைகள் நான்கு வகையாகத் தொழிலாளர்கட்கு உதவியா யிருக்கின்றன எனக் கூறியிருக்கிறார் :

முதலாவது, தொழிலாளிகளிடையே இது தன்னாட்சி முறையைப் புகுத்தி இருக்கிறது.

இரண்டாவது, தொழிலாளர்கள் எல்லாச் சாமான்களை யும் காசு கொடுத்தே, அதாவது ரொக்கத்துக்கே வாங்கும் படி செய்திருக்கிறது.

மூன்றாவது, தொழிலாளர்களிடையே சிக்கனத்தைப் பரப்பி, அவர்கள் பணம் சேர்த்துவைக்கும் பழக்கத்தை வளர்ச்சி செய்துள்ளது.

நான்காவது, தங்களுடையவும், பொதுவாக எல்லாத் தொழிலாளர்களுடையவும் அறிவு வளர்ச்சிக்காகவும், நன் னடத்தை வளர்ச்சிக்காகவும் எல்லா உறுப்பினரும் உழைக்கச் செய்து வருகின்றது.

8. இவை இப்பண்டசாலைகளால் உண்டாகும், **பொது நன்மைகள்,** ஆகும்.

(1) இந்த இயக்கங்களில் ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒவ்வோர் ஓட்டே இருப்பதால், சில கம்பெனிகளில் இரண் டொருவர் தம்முடைய ஓட்டு வன்மையால் மற்றவர்கள் முயற்சியை வீணாக்கல் போல இங்கே செய்வதற்கில்லை. பண்டசாலைகளின் பல காரியங்களையும் உறுப்பினர்களே பார்ப்பதால், வியாபாரத்திலும், சிறு இயக்கங்களை நடத்து வதிலும், உறுப்பினருக்குப் பயிற்சி உண்டாகிறது. இந்தப் பயிற்சியினால் அவர்கள் தங்கள் நன்மைக்கான பல காரி யங்களைச் செய்து கொள்ளும் ஆற்றலைப் பெறுகின்றார்கள்; பல பொறுப்பான நிலையங்களை நடத்தத் திறமை உடை யவர்கள் ஆகின்றார்கள்.

(2) வியாபாரிகள் பலர் சாமான்களைக் கடன் கொடுக் கிறார்கள். அநேகமாகப் பலர் கடனுக்குச் சாமான்களை

வாங்குவதையே விரும்புகின்றனர். இக்கூட்டுறவுப் பண்டசாலைகளில் சேர்வோர் கடன் வாங்காதிருப்பதால், நாளடைவில் சிக்கன வாழ்க்கை முறைகளைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது ; வருவாய்க்கேற்ற செலவு செய்யும் பழக்கமும் உண்டாகிறது.

(3) இலாபத்தில் பங்கு கொடுப்பதென்ற முறை சிக்கனத்தை வளரச் செய்கிறது. இந்த வகையில் இங்கிலாந்து தேசத்தில் உறுப்பினர் பெருந் தொகையினராக இருக்கின்றனர்.

(4) கூட்டுறவு இயக்கங்களில் வரும் இலாபத்தில் ஒரு பகுதி கல்வி முன்னேற்றத்திற்காகப் உபயோகிக்கப்படுகிறது. இங்கிலாந்திலே இவ்வகையில் கூட்டுறவு இயக்கங்கள் செலவிடும் தொகை அதிகம்.

(5) இந்தப் பணத்திலிருந்து கூட்டுறவைப் பற்றிய அறிவைப் பரப்பும் வேலை செய்யப்படுகிறது. அங்கே கூட்டுறவு இயக்கத்தின் வரலாறும், கூட்டுறவு இயக்கம் பல தேசங்களிலும் எப்படி நடக்கிறதென்னும் விவரங்களும் தெரிவிக்கப்படுகின்றன.

(6) இந்த இயக்கங்கள் பல புத்தக சாலைகளையும் வைத்து நடத்துகின்றன ; பல சொற்பொழிவுகள் நடைபெறும்படி செய்கின்றன.

(7) இவை மேலும் பல வாசகசாலைகளை ஏற்படுத்தி இருக்கின்றன ; வெளியூருக்குப் பலர் சேர்ந்து போகும் ஏற்பாடுகளைச் செய்கின்றன ; பலவித விளையாட்டுக்களையும் உறுப்பினரின் நன்மைக்காக ஏற்படுத்துகின்றன.

கூட்டுறவுப் பண்டசாலைகள் தொழில் உலகிலும் தலைசிறந்து நிற்கின்றன. இப்பண்டசாலைகள் தமக்கு வேண்டும் சாமான்களில் பலவற்றைத் தாமே செய்துகொள்ளுகின்றன.

4. நூல்நிலயம்

[S. வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.]

அறிவினல் ஆராய்ந்து கற்றற்குரிய பொருள்கள் அளவினடங்காது பெருகியுள்ளன. அவை பற்றிய கல்வியை நமது நாட்டில் பரக்கவித்துதற்கு அரசாங்கத்தினரே நேரில் முயன்று வருகிருர்கள். எனினும், நம்மவர்களில் நூற்றுக்கு மூன்று பேர் வீதமே எழுத்தறியும் அத்துணையளவு கல்வி பயின்றுள்ளார்கள். 40 கோடி மக்கள் உள்ள நம் நாட்டில் நூற்றுக்கு 97 பேர்கள் எழுதவும் வாசிக்கவுந் தெரியாத பாமரரா யிருக்கின்றனர். மேலைத் தேயங்களிற் கல்வியறிவில்லார் நூற்றுக்கு மூன்று வீதத்தினும் குறைந்திருக்க, நமது நாட்டில் அத்துணையளவாகவே கற்ருேர்கள் இருக்கின்றனர். நமது தேச மக்களை இருள்போற் சூழ்ந்திருக்கும் இவ்வறியாமையைப் போக்குதற்கு, அரசாங்கத்தினரும் கல்வி மிக்க நல்லறிஞர்களும் கூடி யொன்றுபட்டுத் தீவிரமாக முயற்சி செய்ய வேண்டுவது ஆவசியமாகின்றது. இம்முயற்சியில் இருதிறத்தாரும் ஒருங்கு போற்றுதற்குரிய பெருங் கருவியாயுள்ளது நூல்நிலயப் பிரசாரம்.

நகரங்களிலும், கிராமங்களிலும், ஆங்காங்குள்ள மக்களின் தகுதிக்கும் அளவிற்கும் ஏற்றவாறு பலதிறப்பட்ட நூல்களையுந் தொகுத்து வைத்து, வேண்டியோர்க்கு வேண்டுஞ் சமயத்து எளிதினுதவிக் கல்வியறிவைப் பரவச் செய்வதே நூல்நிலயப் பிரசாரத்தின் முக்கிய நோக்கம். அறிவு பெருகி வளர்தற்கு நூல்களைக் காட்டினுஞ் சிறந்த கருவி இல்லையென்றே கூறலாம். 'ஆசானுரைத்தது அமைவரக்கொளினும் காற்கூறல்லது பற்றலனுகும்' என்ருர் **பவணந்தியாரும்**. ஆசிரியரது துணை பெரிதும் வேண்டத் தகுவதும், போற்றத்தகுவதுமாகவே யுள்ளது. எனினும், உண்மைக் கல்வியெனப்படுவது கற்கும் மாணவன் நூல்

களைத் தானே ஓதியுணர்ந்து தானே சிந்தித்து ஆராய்ந்து துணிவதன் பயனாகவே அமையுமென்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்ததாம். ஆகவே தாமே ஓதியுணர்தற்குரிய நூல்கள் மக்களிடையே பரவப் பரவ, கல்வியும் பரவி அஞ்ஞானமும் அகன்றொழியும் என்பது கூறவேண்டா.

நூல்நிலயங்கள் இக்காலத்தே புத்தம் புதிதாக ஏற்பட்டனவென்று நினைத்தல் தவறு. கடைச்சங்க நூல்களனைத்தும் தொகை நூல்களாகவுள்ளன. புலவர்கள் பற்பலர் பாடியனவற்றைத் தனி நூல்களாகத் தொகுத்த காரணத்தாலே இப்பெயர் வழங்குதலாயிற்று. கடைச்சங்க நூல்களிற் பெரும்பாலனவற்றைத் தொகுத்தான் இன்னவன் என்றும் தொகுப்பித்தான் இவ்வரசனென்றும் கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் தொகை நூல்கள் எழுந்தனவாயின் புலவர்கள் பலர் பாடிய நூல்கள் ஓரிடத்தே அரசர் முதலியோராற் போற்றி வைக்கப் பெற்றிருந்தனவென்பது உண்மையாகக் கொள்ளக் கூடியதே. இவ்வகை நூல்நிலயங்கள் விளங்கிய இடமே சங்கம் என வழங்கப்பெற்றதென்று கொள்ளுதல் பொருத்த முடையதாகத் தோன்றுகிறது. கடைச்சங்க காலம் கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டென்பர். அக்காலமுதற்கொண்டே தமிழ் நாட்டில் நூல்நிலயங்கள் உள்ளனவாகுமென்னுந் துணிபு ஒப்புக்கொள்ளத் தகுந்ததே. அரசர்களும், சைனசங்கத்தவரும், தேவாலய கர்த்தகர்களும் நூல்நிலயங்களமைத்துப் போற்றிவந்தார்கள். கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் வச்சிரநந்தியின் சங்கம் இருந்தமை நன்கறியப்பட்டதே. தேவாரம் என்னுந் தெய்வப்பாடல்கள் சிதம்பரமாகிய திருக்கோயிலுள்ளே சேமித்து வைக்கப்பெற்றிருந்தனவென்பது வெளிப்படை. சீவகசிந்தாமணிக் காலமாகிய 9-ஆம் நூற்றாண்டினிறுதியிற் சங்கமொன்றிருந்ததும் ஆராய்ச்சியாளர் அறிவர். மடாதிபதிகள் தத்தம் மடங்களிலே நூல்களைத் தொகுத்து வைத்துப் போற்றிவந்தமையும் யாவரும் உணர்ந்ததே. தஞ்சை அரண்மனையைச்சார்ந்த சரஸ்வதி

மஹால் கலைவாணரது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுஞ் சிறப்பு மிக்கதொரு நூல்நிலயமாக இன்றுவரை விளங்கி வந்திருக்கின்றமை நாம் கண்கூடாகக் கண்டதே. எனவே, மக்களால் நூல்களின் ஆவசியகம் உணரப்பெற்ற மிகப் பழைய காலந்தொட்டே நூல்நிலயங்கள் தமிழ்நாட்டில் உள்ளனவென்று கொள்ளுதல் வேண்டும்.

ஆனல், முற்காலத்திலிருந்த நூல்நிலயங்கட்கும், தற் காலத்தில் நிறுவப்பெறும் நூல்நிலயங்கட்கும் மிகப் பெரிய தொரு வேறுபாடு உண்டு. நூல்கள் இறந்துபடாமற் காத்தற்பொருட்டு ஓரிடத்துத் தொகுத்து வைத்தலே முற் காலத்து நோக்கமாயிருந்தது. பெரும்பாலும் பண்டைநூல் களே இவ்வாறு போற்றி வரப்பெற்றன. இந்நூல்நிலையங் கள் ஒவ்வொன்றும் யாரேனுமொருவருக்குத் தனிப் பட வுரியதாயிருந்தது. நூல்கள் தவறிவிடாம லிருத்தற் பொருட்டும், பழுதுபடாம லிருத்தற்பொருட்டும் கடினமான நியமங்கள் கையாளப்பட்டு வந்தன. நிலயங்களிலிருந்து நூல்களைப் பெரும்பாலும் இரவல் கொடுப்பதே இல்லை. பொது மக்கள் இவற்ருற் சிறிதும் பயன் கொள்ளத் தகாத முறையில் இந்நியதிகள் அமைந்தன. தற்காலத்து வேண்டப்படும் நூல்நிலயங்களின் நோக்கம் முற்றிலும் வேருகவுள்ளது. பொதுமக்கட்குப் பயன்பட்டு அவர்களது கல்வி அபிவிருத்தியாக வேண்டுமென்பதே இவற்றின் முக்கியமான தனிப்பெருநோக்கம்.

இந்நோக்கத்தினை முற்றுவித்தற்குரிய உபாயங்களெல் லாம் நூல்நிலயப் பிரசாரத்திற்கு உரியனவேயாகும். பொது ஜனங்கள் அனைவரது உள்ளத்தையுங் கவருமாறு, நகரம், ஊர், சிற்றூராதிய பலவிடங்களிலும் நூல்நிலயங்கள் அமைக்கப்பெறுதல் வேண்டும். மக்களின் விருப்பத்தை யும் சௌகரியத்தையும் தகுதியையும் நோக்கி அவர்களுக்கு வேண்டும் புத்தகங்களைக் கொடுத்துதவுதல் வேண்டும். பரந்துபட்ட அறிவின் பல்வேறு பகுதிகளைப்பற்றிப் புதுப் புது நூல்கள் வெளிவர வெளிவர, அவற்றையெல்லாம்

பொது ஜனங்களிடையே பரக்க விதைத்தல் வேண்டும். கல்வி யறிவு இன்றியமையாததாகு மென்பதை வற்புறுத்திக் கூறி, அதனை யடைதற்குச் சாதனமாகுங் கருவி நூல்களைக் குறித்து சொற்பொழிவுகள் செய்து வரல் வேண்டும். சுருங்கக்கூறின், அரசியல் நெறிப்பட்ட ஒரு நாட்டிற் பல திறத்தாரும் உத்தம வாழ்வு வாழ்வதற்கு வேண்டப்படும் கல்வியறிவனைத்தையும் நூல்கள்மூலம் உதவுதற்குப் பல வகையாலும் முயற்சி செய்வதே நூல்நிலயங்கள் மேற்கொள்ளுதற்குரிய தனிப்பெருங் கடமையாகும்.

இந் நூல்நிலயங்கள் பலதிறத்தனவா யிருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை. குழந்தைமுதல் முதியோர் வரையுள்ள அனைவர்க்கும் கல்வி யூட்டுதற்கான நூல்நிலயங்கள் ஆயிரக்கணக்காக அமைக்கப் பெறுதல்வேண்டும். இவைகளேயன்றிக் கல்வித் துறைகள் பலவற்றிற்குந் தனித்தனியே யுரிய நூல்நிலயங்களும் மிகப்பலவாக நிறுவப் பெறுதல் வேண்டும். மேலும், பற்பல கல்வித் துறைகளிலும் ஆராய்ச்சிக்கெனத் தனியாயமைந்த நூல்நிலயங்கள் பல நிறுவப் பெறுதல் வேண்டும். பிற்கூறிய இரண்டு வகை நூல்நிலயங்களும் சர்வகலா சங்கங்களாலும் கலாசாலைகளாலும் நிறுவப்பெற வேண்டுவனவென்பது கூறாமலே அமையும்.

நமது நாட்டிற் பெரிதும் வேண்டப்படுவதாகும் பிறிதொரு நூல்நிலய வகையை இங்கே விசேடித்துக் கூறுதல் அமைவுடைத்தென்று எண்ணுகிறேன். அங்கங்கே கிடைப்பனவாகிய ஏட்டுப் பிரதிகளை தொகுத்துப் போற்றிப் பாதுகாத்தற்கெனத் தனி நூல்நிலயங்கள் பல முற்பட நிறுவ வேண்டுவது மிகப் பெரியதோர் ஆவசியகமாம். இக் கடமையை நாம் வெகுகாலமாக மறந்து விட்டோம். எத்தனையோ அரிய நூல்கள் பாதுகாக்கப் பெறாது அழிந்தொழிந்து போயின. நம்முடைய முன்னோர்கள் ஈட்டி வைத்துள்ள பெறற்கருஞ் செல்வங்களை நமது மடமையா

லும் மடிமையாலும் பாழ்போக விடுவதாயின், தமிழ் மக்கள் என்னும் உயரிய பெயர்க்குத் தான் நாம் தகுதியுடையரா வோமோ! இன்னுஞ் சிறிது காலத்தில் இப்போது கிடைக் கும் ஏட்டுச்சுவடிகள்தாமும் இறந்து போய்விடுமன்றோ! அதற்குமுன் அவைகளை அங்கங்கே சேகரித்து வைத்து நகரப் பொதுவிடங்களில் நூல்நிலயங்கள் அமைத்துச் சுவடி கள் பழுதுபடாவண்ணம் காப்பாற்றி வருதல் நமது பெருங் கடமையாகும். இம்முறையில் அரசாங்கத்தினர் எடுத்து வரு முயற்சி ஒரு சிறிதும் போதாதென்பதை விசனத் துடன் வற்புறுத்திக்கூறவேண்டியதாயிருக்கிறது. மதுரைத் தமிழ்ச்சங்கம் இம் முயற்சியின்கண் பெரிதும் உழைத்து வருகின்றது. எனினும் முயற்சியினளவு போதியதெனக் கருதக்கூடவில்லை. ஆண்டுக் கொருமுறை அளவற்ற ஏட்டு நூல்கள் நெருப்பினும் நீரினும் அழிவெய்துவதைக் கண்டு வைத்தும் நாம் வறிதேயிருத்தல் அழகன்று. நம் முடைய முன்னோர்கள் இயற்றிவைத்துள்ள அரிய நூற் செல்வங்களைப் பரிபாலிப்பதன்கண் நாம் மேற்கொள்ள வேண்டுங் கடமையை இனியேனும் உணர்ந்து உரியவாறு முயன்று வருவோமாக.

மேலே விவரித்தன போன்ற நூல்நிலயங்கள் நாடெங் கும் நிரம்புதல் வேண்டும். நமது நாட்டிலே நீடித்துக் குடி கொண்டிருக்கும் அறியாமையைக் கால்தரிக்கவொட் டாது வெருட்டுதல் வேண்டும். அறிவுச் சுடரின் பேரொளி நாடெங்கும் பரந்து வீசுதல் வேண்டும். அறிவின் வழித் தாய் ஒற்றுமை மிகுதல் வேண்டும். அறிவு சிறந்து ஒற் றுமை மிக்கு நம்மவர்கள் நல்லின்ப நெறியிலே நிற்றல் வேண்டும்.

5. இரட்டைப் புலவர்

[மணி. திருநாவுக்கரசு முதலியார்]

இன்றைக்குச் சற்றேறத்தாழ நானூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர்ச் சோழ வளநாட்டின்கண் **ஆமிலந்துறை** என்னும் ஊரிலே செங்குந்தர் மரபிலே இருவர் தோன்றினர். இவ்விருவரும் ஒருவரை யொருவர் எவ்வாற்ருனும் ஒத்திருந்தமையானும், ஒருங்கு சேர்ந்து செய்யுள் பாடிவந்தமையானும் **இரட்டையர்** என வழங்கப்பட்டனர். இவர்தம்முள் **ஒருவர் முடவர்; மற்றவர் குருடர்.** முன்னை வினைப்பயனலே கால் முடம் பட்டாரேனும் அறிவான் முடம்பட்டிலர் முடவர்; முகக்கண் ஒழிந்தும் அகக்கண் விளங்கப் பெற்றூர் குருடர். இவ்விருவருக்கும் **முதுசூரியர்** என்றும், **இளஞ்சூரியர்** என்றும் முறையே பெயர் வழங்கலாயின. முடவர், குருடர் தோள்மீது இவர்ந்து அவருக்கு வழி காட்டுவர். குருடர் முடவரைச் சுமந்து செல்வர். இவ்விருவரும் உறவின் முறையால் ஒருவருக்கொருவர் அம்மான் சேயாகவும், அத்தை மகனகவும் அமைந்தனர். இவர், திருவருட் செல்வம் பெற்றவராய்க் கல்விவளம் பழுத்த இனிய செந்தமிழ்ப் பாக்களை முயற்சியும் உழைப்புமின்றி எளிதாகப் பாடிய காரணத்தாலே 'தெய்வப் புலவர்' எனவும் சிறப்பித்தோதப் பெற்றூர்.

இப்புலவர் தமது சமயமாகிய சைவ சமயத்திலே பெரும்பற்றும் அன்பும் உடையராய்த் திகழ்ந்தனர். தமது வாழ்நாள் முழுவதும் சிறந்த திருத்தலங்களுக்குச் சென்று, ஆங்காங்குக் கோயில் கொண் டெழுந்தருளியுள்ள அருட்பெருங்கடவுளைப் பலவாறு கனிவு தோன்றப் பழிச்சுதலும், தணிவு தோன்ற உள்ளமுருகிச் சிந்தித்தலும், பணிவு தோன்றத் தலையாரக் கும்பிட்டு வணங்குதலும் ஆகிய இவற்றையே அரும்பெருந் திருப்பணியாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர்; அக்காலத்துச் செந்தமிழ் நாட்டிலே

வதிந்த செல்வரை யணுகி, அவர்மீது அரிய பெரிய தமிழ்ச் செய்யுட்களைப் பாடிப் பரிசு பெற்று அதனல் வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு பாட்டையும் இருவரும் கலந்தே பாடுதல் இவருக்கு இயல்பு. ஒவ்வொரு நூலையும் இருவரும் சேர்ந்தே பாடி முடிப்பர். ஒரு பாட்டில் அரைப் பகுதியை ஒருவர் பாடி முடிக்க, மற்றப் பகுதியைக் கருத்துப் பிறழாது சொல்வகையும் ஒப்ப, ஒருவரே பாடியது போலத் தோன்றுமாறு மற்றவர் பாடி முடிப்பர். இப்பரிசு எவரானும் பாராட்டப் படுமென்பதில் ஐயமுண்டோ? உறுப்பானும் புலத்தானுங் குறைபாடுடைய மக்கள் கல்வி கற்றலே அருமை! அதனினுங் கவி பாடுவதென்றால் அஃது அருமையினும் அருமை யன்றோ! அங்ஙனம் பாடுங் கவிகளும் சொற்சுவை பொருட்சுவை செறிந்திருத்தல் எல்லாவற்றினும் அருமையாதலை மறுப்பார் யாவர்? இதனல் இவர் கற்றார் கல்லாதார் ஆகிய எல்லாரானும் நன்கு மதிக்கப்பட்டுத் தெய்வப் பாவலர் என்னும் புகழுரையும் பெற்று, இனிதுறைவாராயினர்.

இவ்விருவரும் சிவஸ்தல யாத்திரை செய்து போதருங் கால், ஒருநாள் பூலோக கைலாயம் எனப் புகழ் பெற்ற சிதம்பரத்துக்குச் சென்று, ஆண்டுப் பொன்னம்பலத்தே வீற்றிருக்கும் இன்னமுதை இரு கண்களாலும் பருக விழைந்து, கோயிலுக்கு வழிக்கொண்டனர். அப்போது இடைவழியில் செல்வமிக்குடைய ஒருவன், ஆடை அணிகள் மட்டு மிதமின்றி அணிந்து போதலை முடவர் கண்ணுற்றுப் பரிசிலைக்கருதி, அவனைப் புகழ்ந்து முதலிரண்டடி தொடுத்துப் பாடக் குருடர் பின்னிரண்டடி பாடி முடித்து நின்றனர். அவிழ்ச் சுவையே யன்றித் தமிழ்ச்சுவை யறியாத அச்சீமான் செல்வச் செருக்கால் நிமிர்ந்து நெடு மரம் போல் நின்றான். அத்தகைமையைக்கண்ட முடவர்,

'முடர்முன்னே பாடல் மொழிந்தால் அறிவரோ
ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா!'—

என்று துவங்கிப் பாடினர். அக்குறிப்பினை அறிந்த

குருடர், கவிப் பொலிவைக் காணற்குரிய கண் அச்செல்வற்கில்லை என்பதை உணர்ந்து,

—‘ ஆடகப்பொற்
செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனு னால் ?’

எனக் கூறி முடித்தனர். அப்பாட்டைக் கேட்டார் பலர். அதன் பொருளை வியந்து, அச்செல்வனுக்கு இவர்தம் அருமை பெருமைகளை எடுத்துரைத்தனர். அதன் பின்னர் அவனும் தனது குற்றத்தை உணர்ந்து அவரை உபசரித்து, வேண்டும் பரிசில் அளித்துக் கொண்டாடினன்.

பின்னொருகால் இரட்டையர் சிவராசதானியாகிய மதுரைமா நகரஞ் சென்று, ஆலவாயின் அவிர்சடைக் கடவுளைத் தரிசிக்க விழைந்து, பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடப் புக்கனர். அப்போது முடவர் கரையின்மேல் அமர்ந்திருந்தனர். குருடர் படித் துறையில் இறங்கித் தமது ஆடையைத் துவைத்து அலசும் பொழுது, அது கையினின்று நழுவிவிட்டது. நழுவிய ஆடையைத் தேடித் தண்ணீரைத் தடவித் தடவி நண்பர் தவித்ததைக் கண்ணுற்ற முடவர்,

‘அப்பிலே தோய்த்திட் டடுத்தடுத்து நாமதனைத்
தப்பினுல் நம்மையது தப்பாதோ ?’

எனக் கூறி மைத்துனக் கேண்மையான் எள்ளி நகையாடினர். அது கேட்ட குருடர் நாணி,

—‘ அப்படியே
ஆனாலுங் கந்தை ; அதிலுமோர் ஆயிரங்கண் ;
போனால் துயர்போச்சுப் போ.’

என்று இயம்பினர். அதுகேட்ட முடவர்,

‘கண்ணு யிரமுடைய கந்தையே ஆனாலும்
தண்ணார் குளிரையுடன் தாங்காதோ ?’

என்று மீண்டுஞ் செப்பக் குருடர்,

—‘ எண்ணுதீர் ;
இக்கலிங்கம் போனலென் ? ஏகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்கம் உண்டே துணை.’

என்று விடையிறுத்தனர். உடனே அவ்வாடை காற்றால் உந்தப்பட்டுக் கரை சேர்ந்தது. பின் இருவரும் சொக்க லிங்கப் பெருமானையும் அங்கயற்கண்ணியையும் தொழுது மீண்டு, அத்தலத்தின்கண் சின்னாள் வதிவாராயினர்.

இரட்டையர் ஒருகால் ஆசுகவி பாடுவதில் தமக்கிணை தாமே யாகிய **காளமேகப் புலவரைச்** சந்தித்து அவருடன் கமலாலயம் எனச் சீர்த்திபெற்ற **திருவாரூரை** அடைந்து, தியாகராயப் பெருமானை முருகி வளர்ந்த அன்போடு வணங்கினர். அப்போது குருடர் சிவபெருமானைப் பாவால் பரவ நினைத்து,

'நாணென்றால் நஞ்சிருக்கும் ; நற்சாபங் கற்சாபம் ;
பாணந்தான்...'

என்ற அளவில், அவருக்கு நாத் தடைப்பட்டது. முடவருக்கும் அதனை முடிக்கச் சீர் வரவில்லை. இருவரும் ஆழ்ந்து சிந்திக்கத் தலைப்பட்ட அளவில், அவ்வேளை அருகே யிருந்த காளமேகப் புலவர் உடனே, *'**மண்தின்ற பாணமே**' என்றனர். இச்சீர் எழுந்த மாத்திரையானே முடவர்,

'தாணுவே !
சீராரூர் வாழுஞ் சிவனே ! சிரிப்பன்றோ
நேராரூர் செற்ற நிலை.'

என்று கூறி வெண்பாவை நிரப்பினர். பின்னர், இரட்டையரும் காளமேகப்புலவரும் ஒருவரோடொருவர் அளவளாவி,

'உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்'

என்னுந் தமிழ் மறையின்படி, மிக்க வருத்தத்துடன் பிரிவாராயினர்.

சில்லாண்டுகள் சென்றபின்பு இரட்டையர் திருவானைக் காவிற்குச் சென்று திருக்கோயில் வழிபாடு புரிந்து, காள மேகப் புலவரைக் காண விழைந்து அவரகத்துக்குச் சென்றனர் ; அப்போது அங்குள்ளார் அன்றுதான் அவர்

*உலகமுண்ட திருமால்

சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தாரெனவும், அப்போது தான் அவரது யாக்கை சுடலைக்குக் கொண்டு போகப்பட்டதெனவும் இயம்பக் கேட்டு, நடுக் கடலிற் கவிழ்ந்த கலம்போல் வருந்திச் சுடலைக்கு விரைந்து சென்றனர். ஆண்டுப் பிணம் வேதலைக் கண்டு மீளாத் துயருற்று,

'ஆசு கவியால் அகில உலகெங்கும்
வீசு புகழ்க்காள மேகமே!—பூசுரா!
விண்தின்ற செந்தழலில் வேகுதே ஐயையோ!
மண்தின்ற பாணமென்ற வாய்.!'

என்று பாடிப் புலம்பினர்.

இளமையிலே கவி பாடுந்திறன் வாய்ப்பப்பெற்று, கலம்பகம், உலா முதலிய சிறந்த பிரபந்தங்களைப் பாடி முடித்த செந்தமிழ்ப் புலவராகிய இரட்டையர் இருவரும் சிறிதுகாலஞ் சென்றபின் ஒருங்கே செம்பொருளின் அம்புயத்தாள் சேர்ந்தனர்.

---

6. பண்டைத் தமிழர் வாணிகம்

[வித்துவான். வே. வேங்கடராசலு ரெட்டியார்]

நந்தம் தமிழ் நாட்டிற்குப் பண்டைக்காலத்தில் தமிழகம் என்னும் பெயர் வழங்கி வந்தது. தமிழகம் நெடுங்காலத்திற்கு முன்னரே சிறந்த நாகரிகம் படைத்து உயர் நிலையில் ஒளிர்வுற்றிருந்தது. அக்காலத்துத் தமிழ்மக்கள் கல்வி, கைத்தொழில், வாணிகம், அரசியல், இல்வாழ்க்கை முதலிய பல துறைகளிலும் மேம்பாடு எய்திருந்தனர் என்பது ஒருதலை. ஈண்டு, அவர்களது வாணிகச் சிறப்பினைச் சிறிது கூறுவோம்.

ஏறக்குறைய இரண்டாயிரம் யாண்டுகளுக்கு முன்னரே தமிழ் மக்கள் பிற நாட்டவரோடு வாணிகம் நடத்தி வந்தனர். கிரீஸ், ரோமாபுரி முதலிய ஐரோப்பிய நாட்டி

னர், அக்காலத்தில் நம் நாட்டின் விளைபொருள்களை அறிந்து விரும்பி வந்து, அவற்றைக் கொள்வாராயினர். வாணிகத்தின் பொருட்டு நமது நாட்டினின்று ரோம் தேசத்திற்குத் தூதுசென்ற செய்தி, வரலாற்று நூல்களால் அறியப்படுகின்றது. கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவராகிய **ப்ளினி** என்னும் யவன ஆசிரியர் எழுதியுள்ள வரலாறுகளால், நம் நாட்டு வாணிகச் செய்திகள் சில அறியவருகின்றன. அவையாவன, ஐரோப்பாவினின்று நமது நாட்டிற்குக் கப்பல்கள் வரும் வழியும், நமது நாட்டினின்று ஐரோப்பாவிற்குக் கொண்டு செல்லும் பலவகைப் பொருள்களின் விலையும், நமது நாட்டிலுள்ள முக்கியமான துறைமுகங்களின் நிலையும் பிறவுமாம்.

அக் காலத்தை அடுத்து எழுதப்பட்ட **பெரிப்ளூஸ்** என்னும் நூலினும், மேலைக் கடற்கரையிலுள்ள **முசிறி** என்னும் துறைமுகப் பட்டினத்தில், ஐரோப்பிய நாட்டினின்று மரக்கலங்கள் வந்து தங்கியிருக்கும் என்றும்; ஆண்டுக் கலங்கள் தங்குதற்கு ஏற்ற அமைதியுண்டு என்றும்; ஈயம், தகரம், கண்ணாடி, மது முதலிய பொருள்களை விற்றுவிட்டு; மிளகு, யானைமருப்பு, வயிரம், பவழம், வெற்றிலை, பட்டாடை முதலியவற்றை இங்கு நின்றும் கொண்டும் செல்வர் என்றும் எழுதப்பட்டுள்ளன. இவையே அல்லாமல், நெய்மயில் தோகை முதலிய பொருள்களையும், குரங்கு கடுவாய் யானை முதலிய விலங்குகளையும், மயில் கிளி முதலிய பறவைகளையும் இங்கிருந்து கொண்டு போயினர் எனவும் அறியவருகின்றது.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த யவன ஆசிரியராகிய **தாலமி** என்பவரும் நம் நாட்டு வாணிகத்தைக் குறித்துத் தம் நூலில் எழுதியுள்ளார். சிறந்த துறையாகிய முசிறியையும், கருவூர் கன்னியாகுமரி முதலிய ஊர்களையும், பெரியாறு தாமிரவருணி முதலிய யாறுகளையும் பற்றிய செய்திகள் அவர் நூலிற் காண்கின்றன. அன்றியும், முசிறியில் ரோம் தேசத்தவர்களின் ஆலயம் ஒன்று

அமைந்திருந்தது என்னுஞ் செய்தியும் அறியப் படுகின்றது. இது நிற்க.

தமிழ் நாட்டில், வேலூர் மதுரை முதலிய இடங்களில் வெட்டி யெடுக்கப்பட்டுள்ள நாணயங்களாலும் வாணிகச் செய்தி வலியுறுகின்றது. அவை, கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த **க்ளாடியஸ்** என்னும் அரசன் முதலியோர் காலத்தவை என்று அறியப்படுதலின், அக் காலத்திலேயே ரோம் தேசத்தோடு நம் நாட்டவர் வாணிகஞ் செய்து வந்தனர் என்பது திண்ணம். இவையே யன்றி, பிறநாட்டு வாணிகத்தைக் குறித்துப் பண்டைத் தமிழ் நூல்களிலும் சில செய்திகள் கூறப்பட்டுள்ளன. அவற்றை இனி நோக்குவோம்.

பண்டைத் தமிழ் நூல்களுள் ஒன்றாகிய **அகநானூற்றில்,** 'சேரர்களுக்கு உரிய முசிறி என்னும் துறைமுகப் பட்டினத்தில், யவனருடைய கப்பல்கள் பொன்னைக் கொண்டு வந்து கொடுத்து மிளகு வாங்கிக்கொண்டு மீளும்' என்று கூறப்பட்டுளது. அன்றியும், அக் கப்பல்கள் முசிறியை அடுத்துப் பாயும் பேராற்றில் வந்து தங்கும் என்பது குறிக்கப்பட்டுளது. **புறநானூறு** என்னும் தொகைநூலில் 'முசிறித் துறைக்கண், கப்பலில் வந்த பொன்னை மிளகின் விலைக்குப் பெற்று, அதனைத் தோணியில் வைத்துக் கரைக்குக் கொண்டு வருவர்' எனக் கூறப்பட்டுளது. அக் காலத்தில், மேல் நாடுகளிலிருந்து சிறந்த தேன் வகைகள் நம் நாட்டிற்கு வருதல் உண்டு. அரசர்கள் அவற்றை விரும்பிப் பெற்று அருந்தி இன்புறுவர். மேற்கூறிய வாற்றால், முசிறித்துறை, கப்பல் வந்து தங்குதற்கு ஏற்ற வசதியுடையதாயிருந்தது என்பது புலனாகும். இவ் வுண்மை 'சேரவேந்தருடைய முசிறிப்பட்டினத்தில், எகிப்து தேசத்துக் கப்பல்களும் பிறவும் வந்து தங்குகின்றன. அது, மிக்க வளமுள்ள நகரமாய் இலங்குகின்றது' என்று **பேரிப்ளூஸ்** என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளதனாலும் வலியுறும்.

பண்டைத் தமிழ் நூல்களில் யவனருடைய பெயர் பல விடங்களில் காண்கின்றது. அவற்றில் அப்பெயர், கிரீஸ் தேசத்தவரையும், ரோம் தேசத்தவரையும் குறிப்பதாகும். அரேபியா தேசத்தவரைக் குறிக்கும் இடனும் உண்டு. இதனை ஆராய்கையில், யவனர் என்னும் பெயர், முதன் முதலில் கிரேக்கரைக் குறித்து வழங்கியது எனவும், பின்னர், அஃது உரோமர் முதலியோரைக் குறிக்கலா யிற்று எனவும் தோன்றுகின்றது. முதற்கண் வரும் புற நாட்டவர்க்கு வழங்கும் பெயர், பின்னவர் வரும் பிறநாட்ட வர்க்கும் வழங்குதல் உண்டு. மலையாளிகள் புறநாட்டவ ராகிய முஸ்லிம்களை வழங்கிய 'ஸாயபு' என்னும் பெய ரையே ஐரோப்பியருக்கும் வழங்குதல் ஈண்டைக்கு அறி யத்தக்கதாகும். இவ்வாறே கன்னடரும் முஸ்லிம்களுக்கு வழங்கிய 'ஸாஹேபர்' என்னுஞ் சொல்லை ஆங்கிலேய ருக்கு வழங்குதல் இவ்வழக்கினை வலியுறுத்தும்.

பண்டைக் காலத்தில், மேலைக்கடல் சேர வேந்தருக்கு உரிமையுடையதா யிருந்தது. அக்கடலில் அவருடைய கலங்களே செல்லலாகும்; அவரது ஆணையின்றிப் பிறர் கலங்கள் ஆங்குச் செல்லுதல் கூடாது. சேரர், பெருங் கடலில் கருங்கலங்களைச் செலுத்துதலில் தேர்ந்தவராய்த் திகழ்ந்திருந்தனர்.

நம் நாட்டில் துறைமுக நகரங்கள் பலவற்றிலும் பல் வேறு நாட்டினர் தங்கியிருப்பர். சோழருக்குரிய புகார் நகரத்தைக் கூறுமிடத்து இளங்கோவடிகள்,

'பயனற அழியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்
ஓசுநர் செறிந்த ஊன்மலி யிருக்கையும்'

உள்ளன என்று உரைத்திருப்பது அறியத் தக்கது. அந் நகரில் உயர்ந்தோங்கிய கலங்கரை விளக்கம் (Light house) இலங்கியிருந்தது. சாகவ நாட்டினருக்கும் நம் நாட்டின ருக்கும் வாணிகம் நடந்துவந்த செய்தி, **மணிமேகலை** என்னும்

காப்பியத்தானும் நன்கு அறியப்படும். கடாரத்திலிருந்து இரும்பும், ஈழத்திலிருந்து செம்பும், யவனத்திலிருந்து பொற் பணிகளும் இந்தத் தேயத்திற்கு வந்தன என்று **பெருங்கதை** என்னும் பழங்காப்பியம் பகரும். சேய்நாட்டினின்று பெரிய மரக்கலங்கள், கடும் பரிகளைக்கொண்டு ஒருங்கு கூடி வந்து, பாண்டிநாட்டில் பகர்ந்து செல்லும் என்பது **மதுரைக் காஞ்சியால்** அறிய வருகின்றது. இனி, புகார் நகரத்தின் துறைநிலையைக் குறித்துப் பண்டை நூலிற் கூறியிருப்பன வற்றை ஈண்டு நோக்குவோம் :

புகார்த் துறைக்கண், ஈழத்தினின்று வந்த உணவுப் பொருள்களும், கடாரத்தினின்று வந்த விளைபொருள்களும், கங்கையாற்றினின்று வந்த மணியும் பொன்னும் களிறும், இமயமலையினின்று வந்த மணியும் பொன்னும், பொதியில் மலையினின்று வந்த ஆரமும் அகிலும், தென் கடலிற் பிறந்த தரளமும், கீழ்க்கடலிற் பிறந்த பவளமும், மேல் மலையில் விளைந்த கறியும், கலங்களில் வந்த சிறந்த புரவி களும், கருப்பூரம் முதலிய சிறப்புடைப் பொருள்களும், பிறவும் எந்நாளும் ஒழிவின்றி இலங்கும். ஆங்கு நீரில் வந்த பொருள்களை நிலத்திற் பரப்புவர் ; நிலத்தில் வந்த பொருள்களைப் புலிப் பொறி பொறித்து, கலத்தில் ஏற்று வர் ; பொதிகளைப் போராக அடுக்குவர். துறையாளர் பொருள்களை நிறுத்து வரி விதிப்பர் ; காவலர் கடற்கரை யில் நொடியளவும் மடிவின்றி ஆங்காங்கே பொருள்களை நோக்கிக்கொண்டு சூழ்ந்து திரிவர். ஆதலின் அப்பொருள் களைக் களவுகோடற்குப் பிறர் உளம் நடுங்குவர்.

அத்துறையின் சார்பில், பல்வேறு தேயத்தினின்றும் வந்து தங்கியிருக்கும் பல்வேறு மொழியாளரும் தம்முட் கலந்து மகிழ்ந்து இன்புறுவர். ஆதலின், அந்நகர், வாணி கத் தொழிலிற் சாலச் சிறந்து விளங்கிற்று என்பது யாவர்க்கும் உடன்பாடேயாகும். அக்காலத்திலேயே தமிழ் மக்கள் கருங்கடலிற் பெருங் கலங்களைச் செலுத்துத லிற் பயிற்சி மிக்கிருந்தனர் என்பது சிறப்புடையதேயாம்.

இது நிற்க. இனி, உள்நாட்டு வாணிகத்தை ஒரு சிறிது நோக்குதும்.

பண்டைக் காலத்தில் நந்தம் தமிழ்நாட்டில் பலவகைத் தொழில்களும் நிகழ்ந்து வந்தன. பட்டினுலும், பருத்தியினுலும், எலி மயிர் முதலிய மயிரினுலும் பலவகை ஆடைகள் நெய்தனர்; கிழியானும், கிடையானும் தொழில் பல பெருக்கினர்; ஐவகைத் தொழிலாளரும் தம்தம் வினைத்திறத்தில் மேம்பாடுற்றிருந்தனர். ஆதலின், பலவகைப் பொருள்களை மறுகிடைப் பகருவர். அக்காலத்தில் மதுரை நகரில் நிகழ்ந்த வாணிகத்தைக் குறித்துக் கூறியிருப்பவற்றை ஈண்டுச் சிறிது கூறுவோம்:

அந்நகரில் ஒருபால், பல வகையான பண்டிகளும் கவசங்களும் கிடுகுகளும் குத்துக் கோல்களும் ஈர்வாள் முதலியவும் விற்கப்படும். ஒருபால் செம்பு வெண்கலம் முதலியவற்ருல் சமைத்தனவும், யானையின் மருப்பினுல் இழைத்தனவும், கயிற்றினுல் முடித்தனவும் பரப்பி வைத்திருப்பர். ஒரு சார், வயிரம் மரகதம் மாணிக்கம் புருடராகம் வயிடூரியம் நீலம் கோமதேகம் முத்து பவளம் என்னும் நவமணிக் கடைகளும், சாதரூபம் கிளிச்சிறை ஆடகம் சாம்பூநதம் என்னும் நால்வகைப் பொற்கடைகளும் பொலிவுறும்.

ஒரு சார், பட்டினுலும் பருத்தியினுலும் எலிமயிராலும் செய்யப்பட்ட பலவகை அறுவைகளும், ஒரு சார், நெல் புல் வரகு தினை சாமை இறுங்கு தோரை என்னும் **எண்வகைத் தானியமும்**, எள் கொள் உழுந்து பயிறு துவரை கடலை அவரை மொச்சை என்னும் **எண்வகைத் தவசமும்**, என்றும் விலையாகும் வேறு பல் பொருள்களும் விற்கப்படும்.

மேற்கூறியவற்ருல் நம் நாட்டின் இருவகைப்பட்ட வாணிகத்தின் பெருஞ் சிறப்பும் இனிது விளங்கும்.

பண்டைத் தமிழ்மக்கள் வாணிகத்தில் தேர்ந்திருந்தனராதலின் அவர்கள் எண்ணும் எழுத்தும் நன்கு பயின்றிருத்தல்வேண்டும் என்பது தானே போதரும். ஆயிரம்

வரைக்கும் உள்ள எண்ணின் பெயர்களும் வெள்ளம் ஆம்பல் என்னும் பேரெண்களும், ஒன்றற்குக் கீழ்ப்பட்ட சிற்றெண்களும், ஆழாக்கு உழக்கு உரிகலம் முதலிய **அளவுப் பெயர்களும்**, மஞ்சாடி, கழஞ்சு, தொடி முதலிய **நிறைப்பெயர்களும்**, பிறவும் தனித் தமிழ்ப் பெயர்களாகக் காணுதலே பண்டைத் தமிழ்மக்களின் கணிதநூற் புலமையைத் தெளிவுறக் காட்டும். இற்றைக்கு இரண்டாயிரம் யாண்டிற்கு முற்பட்ட **தொல்காப்பியம்** என்னும் இலக்கண நூலில், நிறைப்பெயர், அளவுப் பெயர், எண்ணுப் பெயர்களைக் கூறியிருப்பதே பண்டைத் தமிழ்மக்களின் எண்ணும் பயிற்சிக்கு இயைபுடைச் சான்றாகும். அன்றியும்,

‘எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு’

என்னும் **முதுமறை**, பழைய தமிழ்மக்கள் எண்ணிலும் எழுத்திலும் கண்ணிய ஊற்றத்தைத் தெள்ளிதின் தெரிவிக்கும். அக்காலத்தில் வாணிகர் ‘கொள்வதூஉம் மிகை கொள்ளாது கொடுப்பதூம் குறை கொடாது’ வாணிகம் நடத்தி வந்தனர் என்பதை உளங்கொள்வோர்க்கு, அவரது வாணிக முறைமை தானே நன்கு விளங்கும்.

---

7. எனது இலங்கைச் செலவு

[**திரு. வி. கலியாணசுந்தர முதலியார்**]

‘இலங்கைச் செலவு’ என்னும் தலைப்பை நோக்கியதும் சிலர் ‘இலங்கைக்குச் சென்று திரும்பியதற்கு நேர்ந்த செலவுபோலும்’ என்று நினைக்கலாம். ஈண்டுச் ‘செலவு’ என்னுஞ் சொல்லைப் பொருட்செல வென்னும் பொருளில் பெய்தேனில்லை. தரை-நீர்ச் செலவு என்னும் பொருளில் அச் சொல்லைப் பெய்தேன். ‘இந்நாளில், செலவு என்னுஞ் சொற்குப் பதிலாகப் பெரிதும் ‘யாத்திரை’ என்னுஞ் சொல் ஆட்சிபெற்றிருக்கிறது. பண்டைத்

தமிழ் நூல்களில் செலவு என்னுஞ் சொல்லே ஆட்சிபெற்றிருத்தல் காணலாம். 'செங்கோன் தரைச் செலவு' என்று பெயர் தாங்கிய ஒரு தமிழ் நூலுண்மையும் கவனிக்கற்பாலது.

நாங்கள் கப்பலினின்றும் இறங்கி, இலங்கைப் புகை வண்டியில் ஏறினேம். வழி நெடுகப் பசுமை உமிழும் மலைகளின் செறிவும், சூழலும், நிரையும், அணியும் உள்ளத்தைக் கவர்கின்றன. முகிற் குழாங்கள் மூண்டெழுந்து படிப்படியே அசைந்தும் ஆடியும் ஓடியும் மலைமுகடுகளிற் சூழ்ந்து தவழ்ந்து பாகைபோல் பொலியுங் காட்சியும்—அம் மலைகளின் உடல் புலனுகாவாறு பசும்பட்டுப் போர்த்தாலெனப் பொழில்கள் துதைந்துள்ள அழகும்—புலன்களை ஒன்றச் செய்கின்றன. மலையுச்சியினின்றும் தரைவரை, நிரை நிரையாகச் சரிந்தும் செறிந்தும் நிற்கும் தெங்கின் பெருக்கும், அவ்வாறே தெங்கைவிட்டுப் பிரியாது அணித்தே புடைசூழ்ந்து நிற்கும் கமுகின் உயர்வும், அவைகளுடன் நீக்கமின்றி வாழ்க்கைத் துணையெனச் சுற்றிச் சுற்றிப் பின்னிக்கிடக்கும் கான்பரந்த செடிகொடிகளின் ஈட்டமும், வானுலகேறப் பச்சைப்படாம் விரித்த படிகளெனத் திகழ்கின்றனவோ? என்றும் ஐயுறலாம். புகை வண்டி அப்பசுமை நிலத்தில் பறந்தோடுவதை நோக்குழி, அது பச்சை மரகத மலையைக் கிழித்தோடும் அம்பெனத் தோன்றுகிறது. பசுமைக் காட்சி யில்லாத இடனும் உண்டோ? கண்ணுக்கும் மனத்துக்கும் இனிமையூட்டும் பசுமையின் பெற்றியை என்னென் றுரைப்பேன்!

புகைவண்டியின் விரைவில், இடையிடை யோடுஞ் சிற்றருவிகளின் தோற்றம், பசிய வானில் மின்னெலி தோன்றி மறைவதுபோலப் புலப்படுகிறது. பச்சைப் பசுங்கடலில் சிறு சிறு தீவுகள் நிலவுவதைமான, கூரை வேய்ந்த சிறு சிறு குடில்கள் நிலவுகின்றன. அக் குடில்களின் நடுவண் ஆடவர் மகளிர் குழந்தைகள் காளை மயில் கன்றுகளென நிற்கின்றனர். அவ் வீட்டமும் இக் கூட்டமும் இயற்

கையோ டியைந்த இன்பமாகப் பொலிகின்றன. ஆங் காங்கே சிற்சில இடங்களில் தற்கால நாகரிகக் கட்டிடங் களும் புலனுகின்றன. அவைகளைக் காணுந்தோறும் காணுந்தோறும் பொல்லா அரக்கர் குழுவைப் பார்ப்பது போன்ற நிகழ்ச்சி யுள்ளத்துறுமற் போகாது. கூரை வேய்ந்த வீடுகள் இயற்கையோடியைந்த இன்பூட்டுவது போலப் பெரும்பெரும் மாடிகள் இயற்கையோ டியைந்து நிற்பினும் இன்பூட்டுவ தில்லை.

இந்நிலையில், வண்டி குறித்த காலத்துக்கு இரண்டரை மணி நேரங் கடந்து, நிலையம் சேர்ந்தது. சேர்ந்ததும், கொழும்பிலுள்ள 'இந்திய வாலிப சங்க' நேயர்கள், ஆண்டுப் போந்து, 'தென்னுடைய சிவனே போற்றி' என்று ஒருவர் முழங்க மற்றவர், "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று எதிரொலிபோல் முழங்க, எங் களை வரவேற்றார்கள். செயற்கை வெம்மையில் வீழ்ந்து வருந்திகொண்டிருந்த எனதுள்ளம் தமிழ்மறை மீது ஓடிற்று. 'தென்னுட்டவர்க்குச் சிவனுக விளங்குவோனே, எந்நாட்டவர்க்கும் இறைவனுக விளங்குகிருன்' என்று எண்ணி எண்ணி, அம் மறை அருளிய மாணிக்கவாசக ஞரை உள்ளத்தால் போற்றிப் போந்தேன். எனது எளிய வாழ்வுக்கும் எனது மனத்துக்கும் இனியதாய், வெளியில் போந்ததுங் கடற்காட்சி நல்கவல்லதா யுள்ள ஓர் இன்ப நிலையத்தில் வதியுமாறு அன்பர்கள் என்னையும் நண்பரை யும் விடுத்தார்கள்.

கொழும்பிற் கணித்தாயுள்ள வெள்ளவத்தையில் நாங் கள் தங்கி யிருந்தோம். நாங்கள் சென்ற காலம் ஆடிவேல் விழாக் காலம். கதிர்வேற் பெருமான் வெள்ளித் தேர்மீது இவர்ந்து, கொழும்பினின்றும் வெள்ளவத்தைக்கு எழுந் தருளி அடியவர்க் கருள்செய்கிருர்.

அவ் விழாவில் முருகப்பெருமானைப் போற்ருத குலத்தார் இல்லை. எல்லாச் சமயத்தாரும் சாதியாரும் காணிக்கை செலுத்தி நெற்றியில் திருநீறணிந்து செல்கின்

றனர். 'முருகக்கடவுள் தமிழ்க்கடவுள்' என்பது அவ்விழா வில் நன்கு தெரிகிறது. பல சமயக் கொள்கை உடைய தமிழ்மக்கள் அனைவரும் முருகக்கடவுளை வழிபடுதல் கருதத் தக்கது. நமது தென்னாட்டில் வேறு மதம் புகுந்த தமிழ் மக்கள் முருகக் கடவுளை வழிபடுகிறார்களில்லை. இலங்கைத் தமிழ் மக்கள் முருகன் வழிபாட்டில் ஒன்றி நிற்கிறார்கள்.

கொழும்பு 'இந்திய வாலிப சங்க'த்தின் ஆண்டு விழா வில் தலைமை வகிக்கவே யான் அழைக்கப்பட்டேன். அவ் விழா அழகியதொரு கொட்டகையில் நடைபெற்றது. எனக் குச் சங்கச் சார்பாக வழங்கப்பெற்ற நன்மொழியில் சங்கத் தார் என்மாட்டுள்ள முழு அன்பையும் காட்டி யிருக்கிறார். அவர்க்கு நன்றிகூறுமுகத்தான், அந் நன்மொழியைத் தழுவியே எனது முன்னுரைக் கடனாற்றினேன். அம் முன்னுரைக்கண் இந்தியாவில் பல குறைகள் இருக்கின் றன என்றும்—அவை (1) பெண்ணை அடிமைப் படுத்தி யிருத்தல், (2) மக்களுள் பிறப்பால் உயர்வு தாழ்வு கொண் டமை, (3) பிறப்பில் தீண்டாமை வகுத்தது, (4) கருத்து வேற்றுமைக்கு மதிப்புக் கொடாமை, (5) பொறாமை என் பன என்றும்—பேசி, அவைகளைப் பீடிகையாகக்கொண்டு, சுமார் ஒன்றரை மணிநேரம் சொற்பொழிவு நிகழ்த்தி னேன். இந்திய இளைஞர் உலகில் அவ்வைம்பெருங் குறைகள் இருத்தலாகாதென்றும், அக் குறைபாடுகள் உள்ளமட்டும் இந்தியா உரிமைபெறல் அரிதென்றும், அவை களை அன்புவழி நின்று களைய இளைஞர்கள் முயலல்வேண்டு மென்றும் இளைஞர்களுக்கு விண்ணப்பஞ் செய்துகொண் டேன்.

இலங்கை வாசிகளில் பெரும்பான்மையோர் சிங்கள வரே. அவருள் ஆங்கிலம் பயின்ற ஆண்மக்களும் பெண் மக்களும் ஐரோப்பிய நடை உடை பாவனைகளைக் கொண் டிருத்தலால் அவர்களைப்பற்றி ஒன்றுங் கூறவேண்டுவ தில்லை. ஐரோப்பிய நாகரிகத்தில் தோயாத சிங்களவ ஆண்மகன் மிக வலியனாய், கூரிய நோக்குடையனாய்க்

காணப்படுகிறான். அவன் முகத்தில் சாந்தம் காணேம். அவன் எளிய உடையே அணிகிறான். பலர் மயிரைக் கோலிக்கட்டி, வளைந்த தந்தச் சீப்பைச் செருகியிருக்கின்றனர். பெண்மகள் மிகத் திண்ணமாயிருக்கிறாள். அறிவு விளக்கம் புலப்படவில்லை. அவள் தன் அரையில் நான்கு முழத் துண்டையும், மார்பு மறைய ஒரு கஞ்சுகத்தையும் அணிந்திருக்கிறாள். மற்ற மேலாடை ஒன்றுமில்லை.

கொழும்பினின்றும் கண்டிக்குப் புறப்பட்டோம். எங்களை வழிகூட்டி அனுப்பப் போந்த அன்பர்களோடு நாங்கள் பேசிக்கொண் டிருந்தமையால், எங்கட்குச் செயற்கை வெம்மை புலனுகாம லிருந்தது. வண்டி புறப் பட்டதும் அவ் வெம்மைக்கொடுமை வருத்தத் தொடங் கிற்று. சிறிது நேரத்துக்குள் இயற்கை அன்னை காட்சி வழங்கினாள். அவ்வழியின் இயற்கை வளத்தை என் னென்று சொல்வேன்! ஸ்ரீநகர், டார்ஜிலிங், ஆல்ப்ஸ் முத லிய இடங்களிலுள்ள இயற்கை வளங்களைப்பற்றிக் கேள்வி யுற்றிருக்கிறேன்; நூல்கள் வாயிலாகப் படித்துமிருக் கிறேன்; அவைகளை நேரே கண்டதில்லை. கண்டிக்குச் செல்லும் வழிநெடுக இயற்கை அன்னையின் திருவோலக்க மன்றி வேறென்ன இருக்கிறது? எங்கணும் மலைகள்-மலைத் தொடர்கள் - மலைச் சூழல்கள்; எங்கணுஞ் சோலைகள் - சாலைகள் - செடிகள் கொடிகள் - பைங்கூழ்கள்; எங்கணும் அருவிகள் - ஆறுகள் - நீர்நிலைகள்—இவை யாவும் ஒன்றோ டொன்று கலந்து அளிக்குங் காட்சி யன்றோ கடவுட் காட்சி? நூற்றுக் கணக்கான குற்றாலங்கள் - நூற்றுக் கணக்கான பாபநாசங்கள் - ஆண்டுள்ளன. மலைகள் எத் துணை எத்துணை விதமாகக் காட்சி வழங்குகின்றன! சில இடங்களில் மலைகள் படிப்படியாக இழிந்து இடைவெளி யிட்டு இவர்ந்து நிற்குந் தோற்றம் இயற்கை ஊசல்போல் விளங்குகிறது. சில இடங்களில் மலைகள் சிங்கம் எழுந்து நின்று பாயவருந் தோற்றத்தை வழங்கிக்கொண்டு நிற்கின் றன. சில இடங்களில் அவைகள் செய்கரைபோல் நேர்

மையாக நிற்கின்றன. பசுமை நிலவாத மலைப்பாங்கரே காணேம். தெங்கும் கமுகும் ரப்பர் மரங்களும் ஒரு பெரும் பசுங்கடல் பொங்கிவருதல் போல் காணப்படுகின்றன. சில இடங்களில் நாலுப்பக்கங்களிலும் மலைசூழ்ந்து நிற்ப, அவை களினின்றும் பொழியும் அருவி அவைகளினடியில் நீரரண் என ஓடித்திகழ, நடுவண் பச்சைப்பசேலென வான்பயிர் தலையசைத்து நிற்கும் அழகைக் கண்டு கண்டு உவந்தேன். பசிய மலைச் சோலைகளைப் பார்க்குந்தோறும் பார்க்குந் தோறும் இயற்கை இன்பவாழ்வு உள்ளத்தில் தோற்றமுரு நிற்கும். இப்பொழுது ஐரோப்பியத் தோட்டக்காரரும் மற்றவரும் இப் பசுங்காடுகளைப் பண்படுத்திப் பொருளீட் டுந் துறை கண்டிருக்கின்றனர். நம் முன்னேர் அவ் வியற்கை நிலையங்களிடை வதிந்து, இயற்கையின் வாயிலாக இறைவனைக் காணும் எளிய வாழ்வு நடாத்தினர். பசுமை பொங்கும் மலைகளைப் பார்த்துக்கொண்டே கண்டி சேர்ந் தோம். நிலையத்தருகே கண்டித் தமிழ்மக்கள் அன்போடு எங்களை வரவேற்ருர்கள். நாங்கள் 'தமிழக' நிலையத்தில் தங்கியிருந்தோம். ஆங்குச் 'சைவம்', 'தமிழ் வரலாறு' என்னும் இரண்டு சொற்பொழிவுகள் நடைபெற்றன. ஆங் குள்ள தமிழர், தமிழ் மனத்தோடு எங்களுடன் உறவாடினர் என்று சுருங்கச் சொல்லி மேலே செல்கிறேன்.

கண்டி, கண்டின்புறத்தக்க இடங்களில் ஒன்று. கண்டியை இயற்கைக்குடில் என்று கூறுவது மிகையா காது. கண்டியிலுள்ள விவசாயக் கல்லூரி, தோட்டம் முதலியவற்றைக் கண்டோம். அத்தோட்ட வனப்பை வருணிக்கப்புகுந்தால் இக்கட்டுரை வருணனை உரையாகவே முடியும். இயற்கை அரசியின் உறையுளெல்லாங் கண்டு, பின்னர்ப் பௌத்தமடம் - கலாசாலை - கோயில் - முதலிய அறநிலையங்களுக்குச் சென்ருேம். மடத்தில் பெரிய பௌத்த குருவைப் பார்த்து உரையாடப் போனேன். அவர்க்குத் தமிழுந் தெரியவில்லை; ஆங்கிலமுந் தெரிய வில்லை. அவர் ஆணைப்படி பௌத்த வித்தியாலயம்

போந்து, ஆண்டுள்ள ஓர் ஐரோப்பியர்பால் உரையாடினேன். அவர் பௌத்த நூல்களில் ஆராய்ச்சியுடையவர் என்பது, அவரது அன்பார்ந்த பேச்சால் தெரியவந்தது. சம்பாஷணையால் நாங்கள் ஒருமை முடிவே பெற்றோம்.

கண்டியின் பலதிறக் காட்சி கண்டு, அன்பர்பால் விடைபெற்று, யாழ்ப்பாணம் நோக்கினோம். யாழ்ப்பாணத்தின் இயற்கைவளம் நமது தென்னாட்டு இயற்கை வளத்துக்கு அரண் செய்வது. இலங்கையின் மற்றப் பகுதியின் இயற்கைவளம் யாழ்ப்பாணத்தில் இல்லை. புகையிலைப் பெருக்குக் குறிக்கத்தக்கது. கொழும்பு வழியிலும் கண்டி வழியிலும் தெங்கின் பசுமை கண்ணுக்கு விருந்தளித்தது. யாழ்ப்பாணத்திலோ அத் தென்னங்கீற்றுக்களின் வேலிகள் கண்ணைக் கவர்ந்துநின்றன. யாழ்ப்பாணத்தில் சொற்பொழிவுகள் பல நிகழ்ந்தன. ஒரே நாள் நான்கு இடங்களில் சொற்பொழிவு நிகழ்த்தலும் நேர்ந்தது. பல கல்லூரிகளிலும் சொற்பொழிவுகள் நடைபெற்றன. கல்லூரிகளில் எனதுள்ளத்தைக் கவர்ந்தது ஸர். பொன்னம்பலம் இராமநாதன் பெண்மக்கள் கல்லூரி. அக் கல்லூரியைப் பெருஞ் சிதம்பரமாக மனத்தால் தொழுதேன். தமிழும் சைவமும் ஆண்டிருந்து புத்துயிர் பெறும் என்னும் உறுதியும் எனக்குத் தோன்றிற்று.

யாழ்ப்பாணக் குடிமக்கள் தமிழர்; வேளாளர்; சைவர். அவர் நமது தமிழ்நாட்டினின்றும் அவண் குடிபுகுந்தவர். அவருடன் போந்த வேறு சிலருமிருக்கின்றனர். தாய் நாட்டின் நினைவு தோன்ற ஆண்டுள்ள தமிழ்மக்கள் சில இடங்களுக்குத் திருநெல்வேலி, பட்டுக்கோட்டை முதலிய பெயர்களைச் சூட்டி இருக்கிறார்கள். யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் எங்கள்பால் காட்டிய அன்பு என்றும் மறக்கற்பாலதன்று. தென்னாட்டுத் தமிழ்மக்களுக்கும் தங்கட்கும் இடையறாத் தொடர்பிருத்தல் வேண்டுமென்று கூறாத அன்பர்கள் இல்லை.

---

24 JAN 1945

8. சுற்றுப் பிரயாணம்

[திரு. Dr. A. சிதம்பரநாதஞ் செட்டியார், M. A., Ph. D.]

சுற்றுப் பிரயாணம் என்றுஞ் சொற்றொடர் ஒரு நாட்டையோ, உலகத்தையோ சுற்றிச் செய்யப்படும் பிரயாணம் என்று பொருள்படும். மானிடர் யாவரும் இயைந்த அளவு ஊர் சுற்றிப் பார்க்கவேண்டுவது அவசியம். அவ்வாறு அவர் செய்யாரேல், உண்மை அறிவு அவர்க்கு நிரம்பியது என்று கூறுவதற்கில்லை. இக்காரணம் பற்றித்தான் மேனாட்டுக்குப் படிக்கப்போகும் நம்மவருட் பலர், உலகத்திலுள்ள பல தேசங்களையும் சுற்றிப் பார்த்து வருகின்றனர். அவர்களைப் போலவே, மேனாட்டார் பலர், நம் நாடு வந்து பார்த்துப் போகின்றனர் என்பது பலருக்குந் தெரிந்திருக்கலாம். உலகமெங்கும் சுற்றிப் பார்க்கும் எண்ணத்துடன் சிற்சில சமயங்களில் சிறு சிறு கூட்டத்தாரும் ஆங்காங்குப் புறப்படுகின்றனர் என்பது சமாசாரப் பத்திரிகை படிக்கும் எவரும் அறிந்ததே.

ஆனால், முற்காலத்தில் செய்யப்பட்ட பிரயாணங்களுக்கும் தற்காலத்தில் செய்யப்படும் பிரயாணங்களுக்கும் வேற்றுமை யுண்டு. முற்காலத்தில் இரயில் வண்டிகள் இல்லை; மோட்டார்கள் இல்லை; ஆகாயக் கப்பல்கள் முயற்கொம்பே. ஆதலால் அக்காலத்து மக்கள் பெரும்பாலும் நடந்தும், சிறுபான்மை கட்டை வண்டி குதிரை இவற்றிலுமாகவே பிரயாணத்தை மேற்கொண்டார்கள். அங்ஙனம் நடந்து செல்லுங்கால், அவர்கள் பற்பல விநோதங்களைக் கண்டு அறிந்து ஆனந்தித்திருக்கக் கூடும்; இயற்கை அன்னையின் எழிலைக்கண்டு வியந்து போற்றி யிருக்கக்கூடும்; பல திறப்பட்ட மக்கள் வாழும் ஊர் வழியே சென்று அவர்களுடைய நடையுடை பாவனைகளை அறிந்திருக்கக் கூடும். ஆனால், இக்காலத்திலோ, துரிதமாகச் செல்லும் இரயில் வண்டிகள், உறுமிக்கொண்டு ஓடும் மோட்டார் வண்டிகள், அமைதி

யாகச் செல்லும் நீராவிக் கப்பல்கள், 'வாயுவேகம் இது தானே!' என்று வியந்து சொல்லும்படி பறந்துபோகும் ஆகாயக் கப்பல்கள் ஆகிய எல்லாம் ஓர் ஊரிற்கும் மற்றோர் ஊரிற்குமுள்ள தூரத்தை அற்பமாக்கி விடுகின்றன. இம் மட்டோ! வீட்டில் செய்துகொள்ளக் கூடிய சௌகரியங் களில் பலவற்றை இவ்வாகனங்களில் செய்துகொள்ள முடி வதால், 'ஒருவரையும் எதிர்பார்க்க வேண்டா; ஒருவரோடும் பேச வேண்டா' என்று நினைப்பவர்களும் கூட்டத்திடை யேயும் தன்னந் தனியாகச் செல்லக்கூடியவர்களாய் இருக் கிறார்கள்.

சில ஊர்களுக்குச் செல்வோர் மாலையில் வண்டியில் ஏறிப் படுத்தால், காலையில் குறித்தவிடம் சென்று விழிக் கின்றனர். 'இடையே நிகழ்ந்தது என்ன? என்னென்ன ஊர்களின் வழியே இரயில் சென்றது? ஓர் ஊரிற்கும் மற் றொன்றிற்கும் காணப்பட்ட வேறுபாடு என்ன? ஓர் ஊரி லிருந்து வந்த மக்களுக்கும் மற்றோர் ஊரிலுள்ள மக்க ளுக்குமுள்ள வேற்றுமை என்ன?' என்னும் விஷயங் களைப்பற்றி அறிந்துகொள்ளக் கவலையின்றிச் செல்கின்ற னர் பலர். இவ்வாறு புறக்கணித்துச் செல்வது, கால்நடை யாகவோ, கட்டை வண்டியிலோ, குதிரைமீதோ முற்காலத் திற்போலப் பிரயாணஞ் செய்யப்படுமாகில், சாத்தியப் படுமா என்பது சந்தேகமே.

'கிணற்றுத் தவளையாக இராமல் நானுவித நாட்டுவளப் பங்களையும் மக்கள் அறிய வேண்டும் என்னும் உயரிய எண் ணத்துடன்தானே யாத்திரைகள் சாத்திரங்களில் விதிக்கப் பட்டிருக்கின்றன?' என்று நினைக்க இடமுண்டு. யாத்திரை செல்லுங்கால், மனைவியையும் அழைத்துச் சென்று பல நதிகளில் நீராடித் தலங்களைத் தரிசிக்காவிட்டால் புண்ணிய மில்லை என்று பல நூல்கள் நுவலுவது பெண் பாலாரும் அத்தகைய அறிவு வாய்க்கப் பெற்றவராக வேண்டும் என் னும் நேரிய கருத்தினாலன்றோ? எனவே, 'சிதம்பரத்தைச் சேவிக்க முக்தி', என்று பலர் அங்குப் போவதற்கும்,

'பள்ளிகொண்ட பரமனைப் பார்க்கலாம்' எனச் சீரங்கத்திற்குச் சிலர் செல்வதற்கும், 'பட்டினத்தார் மணலில் புதைந்துகொண்ட திருவொற்றியூர் ஏகித் தியாகேசரைத் தரிசிக்கலாம்', எனப் பக்தர் பலர் அவ்விடத்தை அடைவதற்கும், வடலூர் ஞான சபை, சேக்கிழார் வாழ்ந்த குன்றத்தூர், கதவு திறக்கப்பட்ட திருமறைக்காடு முதலான இடங்களை ஆன்மகோடிகள் நண்ணுவதற்கும், கங்கை கலக்கும் மகாமகக் குளத்தில் நீராடக் கருதிக் கும்பகோணம் குறுகுவதற்கும் உள்ளூர ஓர் அருங் கருத்துப் பொருந்தி யிருக்கிறது என்றால், அது பிழையன்றே?

சமயப் பற்றுடன் பிரயாணம் மேற்கொள்வோர் சிலர் இருக்க, கல்வி குறித்தோ, தொழில் குறித்தோ அதனை மேற்கோள்வோர் பலருளர். ஆனால், பிரயாணஞ் செய்யும் பொருட்டுப் பிரயாணம்—அதாவது சிறுவர் அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கும், முதியோர் அனுபவத்தை அடைவதற்குமான பிரயாணம்-செய்கிறவர்களது தொகை நம் நாட்டில் மிகச் சிறிதே என்று சொல்லிவிடலாம். இப்பொழுது பிரயாணத்துக்காகவே பிரயாணம் செய்கிறவர்களைவிட நம் நாட்டில் அதிகமான பேர்கள் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டும். எந்த இரயில்வே கம்பெனிக்காவது முகவராக (ஏஜண்டாக) இருந்துகொண்டோ, எந்த மோட்டார்க் கம்பெனிக்காரருடைய தூண்டுதலின்மீதோ, இஃது இவ்வாறு எழுதப்படுகிறது என்று எவரும் எண்ண வேண்டா. நண்பர் தத்தமக்குள்ள அறிவை இன்னும் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்னும் ஒரே கருத்தினாற்றான் இது வரையப்படுகிறது. இது நிற்க.

பிரயாணங்களால் ஏற்படும் நன்மைகள் எவை என்பதை நோக்குவோம்: அறியாமையால் தம்மையே பெரியாராக மதித்துவருஞ் சிலருக்குப் பிரயாணத்தால் புத்திவரும். தன்னளவு பெரிய சீமான் தன்னூரிலில்லை என்று அகங்கரித்துத் திரியுமொருவன், வேற்றூர் சென்று பார்ப்பானேயானால், 'இவர் செல்வத்திற்கு நம்மது எம்மாத்திரம்!'

என்று அவனே சொல்லும்படி சிறந்தோங்கும் சீமானைக் கண்டு, இறுமாப்பு ஒழிவான்; தன்னூரில் பட்டம் பெற்றவன் வேறொருவனில்லையென எண்ணித் தலைகால் தெரியாது திரியும் ஒருவன், பிறிதோர் ஊர்சென்று வருவானேயானால், 'பட்டதாரிகள் இத்துணையர் உளரோ!' என்று எண்ணித் தன்னகந்தை அகற்றுவான். இப்படியே கைத்திறம் மிக்க தொழிலாளியும், சக்திமிக்க மந்திரவாதியும், முக்காலம் உரைக்கும் சோதிடனும், தீராத நோயைத் தீர்க்கும் வைத்தியனும், நன்றாக அலங்கரிக்கும் அர்ச்சகனும், சக்கர வட்டமாகப் பேசும் சொல்வல்லானும் உண்மையறிந்து செருக்கு ஒழிவர்.

பிரயாணம் செய்வதால், ஒருவருக்குண்டான பிறரைப் பற்றிய தப்பெண்ணங்கள் நீங்கும். 'ஆனை தாண்டவபுரத்தார் அத்தனை பேரும் அயோக்கியர்; கும்பகோணத்தார்கள் அவ்வளவு பேர்களும் போக்கிரிகள்; காரைக்காலார் அனைவரும் கயவர்; சென்னையார் அனைவரும் முடிச்சவிழ்ப்போர்' என்பன போன்ற தவறான கருத்துகள் நீங்குவதற்கு அவ்வவ்வூரை நேரிற் சென்று காண்பதே தகுந்த வழியாக இருக்கின்றது. சமாதானமும் அமைதியும் நாட்டில் நிலவுதற்குப் பிரயாணங்கள் பயன்படுகின்றன. நம் நாட்டாரைப்பற்றிப் பிற நாட்டார் கொண்டுள்ள தப்பு அபிப்பிராயங்களை நாம் பிரயாணஞ் செய்யுங்கால் களைந்து வருவோமாயின், அவர்கள் நம்பால் நேசமும் அன்புங் காட்டிப் பழகுவார்கள். ஆதலால், ஊர் திரும்பியதும் அவர்களிடத்து வெறுப்புக் காட்டலாகாது என நம்மனோர்க்குச் சொல்லி, நம் ஊரில் அமைதியையும் சமாதானத்தையும் நிலவச் செய்யலாம்.

பிரயாணத்தால், வருவாய் விருத்தி உண்டாகும். நாம் சுற்றுப் பிரயாணஞ் செய்துவரும் சமயங்களிலே, எவ்வெவ்வூரில் எந்தெந்தச் சாமான் மலிவாகக் கிடைக்கிறதென்பதை அறிந்துகொண்டால், ஊர் திரும்பியதும் அவ்வச் சாமானை அங்கங்கிருந்து தருவித்து, ஊதியம் பெறலாம்.

அதேபோல, எவ்வெவ்வூரில் எந்தெந்தச் சாமான் அருகி இருக்கிறது என்பதை அறிந்துகொண்டால் அங்கங்கு அந்தந்தச் சாமானைச் சேர்ப்பித்து ஊதியமடையலாம்.

பிரயாணத்தால் மனிதனுக்குத் தன்னம்பிக்கை பிறக்கும். பல ஊர்களில் சுற்றுங்கால், ஒரு துறையில்லாவிட்டால் இன்னொரு துறையிலிறங்கி, ஒரு தொழிலில்லாவிட்டால் இன்னொரு தொழிலை மேற்கொண்டு, உயிரை உடலுடன் வைத்துக்கொள்ளக்கூடிய சக்தி தனக்கும் உண்டு என்பதில் நம்பிக்கை பிறக்கும்.

பிரயாணத்தால், எவ்வளவு குறுகிய மனமும் விரியும். 'இன்னவரோடு பேசலாகாது; இன்னவரோடு பழகலாகாது; இன்னவரைத் தொடலாகாது; இன்னவருக்குக் கொடுக்கலாகாது,' என்பவை போன்ற குறுகிய எண்ணங்கள் எல்லாம் குறுகி, 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்,' என்றது போன்ற விரிந்த நோக்கம் மக்களுட் பிறந்து வளரும்.

---

9. சாந்தி நிகேதனம்

(திரு. R. K. சர்மா அவர்கள்)

கல்விப் பயிற்சியில் ஒரு மாறுதல் உண்டாக்க வேண்டும் என்பதும், ஆங்கிலப் பயிற்சிமுறை நம் நாட்டவர்க்கு ஏற்றது அன்று என்பதும் ரவீந்திரரின் நீண்டநாட் கருத்தாகும். அதனை ரவீந்திரர் 1901-ஆம் வருடம் செயலில் காட்ட முனைந்தார். மகரிஷி தேவேந்திரர், பல நாட்களுக்கு முன் தனிமைநாடி, தவவேடம் பூண்டு, போல்பூர் என்னும் ஊருக்கு இரண்டு மைல் தூரத்தில் இருந்த மரங்கள் அடர்ந்த சோலைக்குச் சென்று ஆசிரம வாழ்வைக் கொண்டார். ஒருமுறை அந்த இடத்திற்குச் சிறுவராயிருந்த ரவீந்திரரையும் அழைத்துச் சென்றிருந்தார். அப்போழ்து ரவீந்திரரும், மகரிஷியுமாகச் சேர்ந்து, ஆங்குப் பல செடி

கொடிகளை நட்டுப் பயிராக்கினர். ரவீந்திரர் அந்த இடத்தில்தான் தம் 'புதிய முறைக் கல்லூரி'யை ஏற்படுத்தல் வேண்டும் என்னும் அவாக் கொண்டார்; அங்ஙனமே இன்று உலகம் புகழும் பல்கலைக் கழகமாக விளங்கும் **சாந்தி நிகேதனம்** என்னும் கல்வி நிலய'த்தை 1901-ஆம் ஆண்டு ஏற்படுத்தி, அதற்குக் கடைக்கால் இட்டார். ரவீந்திரரின் மூத்தவர் துவிஜேந்திரநாத தாகூர் தாமிறக்கும் (1926) வரை அங்குத்தான் நிரந்தரமாக இருந்தனர். அதே ஆண்டில், வங்கதர்சன் என்ற பத்திரிகை புத்துயிர் பெற்று வெளிவரத் தொடங்கியது. ரவீந்திரர் அதன் ஆசிரியராக அமர்ந்தார்; 'காந்தாரியின் பிரார்த்தனை,' 'கன்னனும் குந்தியும்' போன்ற நாடகங்கள் வரைந்தார்.

சாந்தி நிகேதனம், முதலில் ஒரு சிறு பள்ளிக்கூடமாகத் தொடங்கப்பட்டது. அவர் கல்கத்தாப் பல்கலைக் கழகத்திலிருந்து இதற்கு ஆதரவு கேட்கவோ, அதனுடன் கூட்டுறவு வைத்துக்கொள்ளவோ விழைந்தனரில்லை. இயற்கையோடு ஒத்து, பண்டை இந்திய முறையைக் கைக்கொண்டு, ஆசிரம வாழ்வினைக் கொண்டு குருகுலம் போலத் தம் கலா நிலையத்தை நடத்திச் செல்லவேண்டும் என்பதே அவரது உட்கிடக்கையாக இருந்தது. உயர்ந்த நோக்கங்கள் கொண்டவர்களாக மக்கள் உள்ளம் பண்படுத்தப்படல் வேண்டும் என்பது அவரது ஆழ்ந்த பெரு நோக்கமாயிருந்தது.

தொடக்கத்தில் சாந்தி நிகேதனத்திற்குப் பத்து மாணவரே வந்தனர். தளரா உள்ளம் படைத்த ரவீந்திரர் அச்சம் கொள்ளவில்லை; உறுதியினின்று பிறழவில்லை. அவர், இடைவிடாமல் ஊக்கங்குன்றாமல் உழைத்து வந்ததன் பலனாக நான்காண்டுகளுக்குள், அங்கு அறுபது மாணவர்கள் சேர்ந்துவிட்டனர்.

நாளடைவில் சாந்தி நிகேதனத்தின் பெருமை நாடெங்கும்—உலகெங்கும் பரவத் தொடங்கிற்று. அந்தக் கலாநிலையத்தில் கல்வி கற்றுக்கொடுக்கப்படுவது அனைத்

தும் தாய்மொழியில்தான். தாய்மொழி மூலமே பிற கலைகள் அனைத்தும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

அந்தக் கலாநிலையம் எவ்வண்ணம் நடைபெறுகிறது என்பதை அனைவரும் அறிந்துகொள்ளல் வேண்டும்: விடியற்காலை 4-30 மணிக்கு மாணவர் சிலர், காலைப்பாட்டுப் பாடிக்கொண்டு சாந்தி நிகேதனக் கலா நிலையத்தைச் சுற்றி வருவர். பிற மாணவர்களும், ஆசிரியர்களும் உறக்கத்தை விட்டு விழித்து எழுந்துகொள்வர். உடனே மாணவர்கள் அனைவரும் தத்தம் அறையைக் கூட்டிச் சுத்தப்படுத்திவிடுதல் வேண்டும். இந்த வழக்கம் தொடக்கத்திலேயே அளிக்கப்படுவதால், அவர்களுக்கு எப்பணி ஆற்றுதலும் இழிந்த செயல் ஆகாது என்னும் எண்ணம் உறுதிப்பெறுகிறது; அதனுடன் உடல் உழைப்பின் கஷ்டமும் அறியமுடிகிறது. பிறகு, அனைவரும் திறந்த வெளியிடம் சென்று உடற்பயிற்சி செய்தல் வேண்டும். அது முடிந்ததும், கிணறுகளிலிருந்து தண்ணீர் இழுத்துக் குளித்தல் வேண்டும். இங்ஙனம் காலைக் கடன்கள் அனைத்தும் முடிந்தபிறகு பதினைந்து நிமிஷங்கள்வரை அமைதியாகத் தியானம் புரிதல் வேண்டும். இது கட்டாயமன்று. விருப்பம் இல்லாதவர்கள் தியானத்தில் கலந்துகொள்ளாது இருக்கலாம். ஆயின், தியானம் செய்வோருக்கு இடையூறின்றி இருக்கப் பேசாமலும், சத்தமிடாமலும், அமைதியாக இருத்தல் வேண்டும். தியானம் முடிந்தபின் மணி அடிக்கும். மாணவர்கள்ஓசையின்றி ஒழுங்காகக் கலாநிலையக் கோவிலுக்குச் செல்லல்வேண்டும்.

இவை அனைத்தும் முடிந்து, காலை உணவு உட்கொண்ட பிறகு, 7-மணி முதல் 10-மணி வரை கல்விப் பயிற்சி நடக்கும்; மீண்டும் 2-மணியிலிருந்து 5-மணி வரை நடக்கும். வகுப்புகள் மரங்களின் அடியில்தாம் நடைபெறும். ஒவ்வொரு வகுப்பிலும் பதினைந்து மாணவர்களுக்குமேல் இரார். குறித்தநாளில் குறித்த பாடம்தான் படித்துத் தீரல் வேண்டும் என்னும் கட்டாயம் அங்கில்லை. பிள்ளைகள்

விரும்பும் கலையை, அக்கலை பயிற்றுவிக்கப்படும் வகுப்பிற் சென்று உட்கார்ந்து பயிலலாம். எந்தப் பிள்ளைக்கும் கல்வி பயிலும் வகையில் கட்டுப்பாடு ஒன்றுமில்லை. அன்றன்று அவ்வப் பிள்ளை விரும்பும் கலையைப் பயிலலாம். ஆனால் ஒழுக்கத்திலும், ஒற்றுமையிலும் கட்டுப்பாடு இருக்கவேண்டுவது இன்றியமையாதது எனக் கருதப்படுகிறது. மாலைப் போதில் விளையாட்டு நேரம் முடிந்து, உணவருந்தும் நேரம் வரும் வரையில் ஆசிரியர்கள், மாணவர்களுக்குக் கதைகள் சொல்லுதல், அவர்களை நடிக்கச் செய்தல், பண் இசைக்கச் செய்தல் முதலியவற்றில் ஈடுபடுத்துவர். சில சமயங்களில் வயது முதிர்ந்த மாணவர்கள் இம்மாலைப் போதில் சுற்றுப் புறக் கிராமங்களுக்குச் சென்று கிராமப் பிள்ளைகளை அழைத்து உட்காரவைத்துக் கல்வி பயிற்றுவிப்பர்.

சரியாக இரவு ஒன்பதரை மணிக்கு மாணவர் அனைவரும் படுக்கைக்குச் சென்றுவிடுதல் வேண்டும். படுக்கும்போது, மாணவர் குழு ஒன்று மாலைப்பாட்டுப் பாடிக்கொண்டு சாந்தி நிகேதனக் கலாசாலை நிலையத்தைச் சுற்றி வரும். இங்ஙனம் இன்னிசை மூலம் நாளைத் தொடங்கி இசையிலேயே நாளை முடித்து உறங்கச் செல்லும் உயர்ந்த பழக்கம் அக்கலா நிலையத்தினரால் கைக்கொள்ளப்பட்டு வருகிறது.

தொடக்க வகுப்பிலிருந்தே ஆண்களுடன் பெண்களும் ஒன்ருக அமர்த்தப்பட்டே கல்வி அளிக்கப்படுகின்றனர். ஆசிரியர்களுடைய புதல்விகளும் அங்குப் படிக்கின்றனர். இவ்வாறு முதல் வகுப்பிலிருந்து முடிவு வரை ஆண்களும் பெண்களும் கலந்தே படிக்கின்றனர். ஆயின், பெண்களுக்கெனத் தனி விடுதி உண்டு. அவ் விடுதியின் நிர்வாகத்திற்காக ஒரு பெண் அதிகாரியும் இருக்கிருர். பெண்கள் நாள்தோறும் வைகறையில் துயில் நீத்து மாலைகள் தொடுக்க மலர்கள் பறித்து வரல் வேண்டும்.

சாந்தி நிகேதனத்தில் மாணவ மாணவிகள் சேர்ந்து, தங்களுக்கென்று ஒரு பால் பண்ணை வைத்து நடத்து கின்றனர். தபால் நிலையம், மருத்துவக்கூடம், அச்சுத் தொழிற்சாலை, நெசவுத் தொழிற்சாலைபோன்ற கைத் தொழிற்சாலைகள் ஆகியவற்றினையும் மாணவர்களே தங்கள் பொருப்பில் நேர்மையாக நடத்தி வருகின்றனர். மாணவர்களே சேர்ந்து நடத்தும் சட்டசபைகளும், நீதி மன்றங்களும் சாந்தி நிகேதனத்தில் இருக்கின்றன. அந்த மன்றத்தில் அடித்தல் போன்ற கடும் தண்டனைகள் விதிப்பது இல்லை எனினும், தங்களுக்குள் ஒழுக்கமும் ஒற்றுமையும் கட்டுப்பாடும் குறையாவண்ணம் இருக்கத் தக்க சீரிய முறைகள், அனைத்தையும் அந்த மாணவ நீதி மன்றத்தினர் புரிகின்றனர். கல்வி, இசை, ஓவியந் தீட்டல், நடனம் போன்ற கலைகள் அனைத்தும் அங்குக் கற்பிக்கப் படுகின்றன. அந்தக் கலாநிலையத்தினை நடத்திவர, ரவீந்திர நாத தாகூர் தமக்குக் கிடைத்த 'நோபல்' பரிசுத் தொகையாகிய 8000 பவுனையும், தம் நூல்களின் மூலம் கிடைக்கும் இலாபத் தொகை அனைத்தையும் உபயோகித் துள்ளார்.

சாந்தி நிகேதனத்தில் படிக்கும் பெரிய மாணவர்கள் சுற்றுப்புறக் கிராம மக்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கும் முறை கவனித்ததற்கு உரியது: கலா நிலையத்தைச் சுற்றி யிருக்கும் கிராமங்களில் 'சந்தால்கள்' என்னும் ஒடுக்கப் பட்ட மக்களே பெரும்பான்மையினராக வசிக்கின்றனர். சாந்தி நிகேதன மாணவர்கள் சிலர், கைகளில் பந்துகளை எடுத்துக்கொண்டு அக்கிராமங்களுக்கு அருகிற் சென்று விளையாடத் தொடங்குவார்கள். இந்த விளையாட்டினைக் காண விரும்பிச் சந்தால் மக்கள் பலர் வந்து குழுமுவர். உடனே விளையாடிக்கொண்டு இருப்பவர்கள் விளையாட்டை நிறுத்திவிட்டுக் குழுமி இருக்கும் கிராம மக்களுக்கு அறிவுக்கான செய்திகளை எடுத்துப் போதனை செய்வார் கள். அம்மாணவர்கள் நாள்தோறும் தவறாமல் சென்று,

அம்மக்களுக்குக் கல்வி பயிற்றுவிப்பர். இதே முறையில் சாந்தி நிகேதனம் உண்மைக் கல்வியைப் பரப்பிவரும் நற்றொண்டை ஆற்றிவருகிறது.

சாந்தி நிகேதனத்தில் அளிக்கப்படும் கல்வி முறை மிக்க உயர்வானது. அங்கு ஆசிரியர்களும் மாணவர்களும் ஒன்றாக வாழ்கின்றனர்; படிக்கின்றனர். அம்முறை பண்டைக் குருகுலத்தினையே ஒத்திருக்கிறது. ஆசிரியர்களேனும் சரி, அன்றி மற்றை மாணவர்களேனும் சரி, எளிய வாழ்வையே மேற்கொண்டு இருக்கின்றனர். சாந்தி நிகேதனத்தில் பயிற்றுவிக்கும் கல்விக்கும், இந்தியாவிலுள்ள பிற கலாசாலைகளில் பயிற்றுவிக்கும் கல்விக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு இருக்கிறது. அங்கு இயற்கைக் கல்வி கிடைக்கிறது; மற்ற இடங்களில் செயற்கைக் கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது.

சாந்தி நிகேதனத்தில் மாணவ மாணவிகள் உட்கார நாற்காலிகள் இல்லை. மரத்தடியில் அனைவரும் பாய்களில் அமருதல்வேண்டும். ஆசிரியரும் அங்ஙனமே. வகுப்புகளோ, மற்றைப் பிற ஆடம்பர ஆரவாரங்களோ அங்குக் காணப்படா. பாடங்களைக் குருட்டுப் பாடமாகப் படித்து ஒப்புவித்தே தீரல் வேண்டும் என்னும் வற்புறுத்தல் இல்லை. மாணவர்களுக்கு விளங்காதவற்றை எங்ஙனமேனும் நெட்டுருப் போட்டுவிடல் வேண்டும் என்று ஆசிரியர்கள் கூறுவது இல்லை; அங்ஙனம் கூறுதல் கூடாது. பிள்ளைகள் படியாததற்குத் தண்டனை விதித்தல் இல்லை. இயற்கையாகவே அவர்களுக்கு கல்வியில் விருப்பமும் ஆர்வமும் எழ முயற்சி செய்யப்படுகிறது. அவர்கள் விரும்பிக் கற்கும் முறைகளே அங்குள்ள எல்லா ஆசிரியர்களாலும் கையாளப்படுகின்றன. பிள்ளைகள் வெறும் புத்தகப் படிப்புடன் இருந்துவிடல் சாந்தி நிகேதனத்தில் முடியாது. இயற்கையைக் கொண்டு கற்பிக்கும் முறைதான் அங்குச் சிறப்புப்பெற்றிருக்கிறது. வானவெளி, நீலக்கடல், யாறு, மலை ஆகியவற்றின் எழிலைக் காட்டி, அவற்றி

ளோடு மக்கள் வாழ்வு எங்ஙனம் இயைந்துசெல்கின்றது என்பதை விளக்கி, மாணவர்களுக்கு அச்சமோ, வெறுப்போ ஏற்படாத வழியில் கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. ஆசிரியர்கள் என்றால் பிற இடங்களில் மாணவர்கள் அச்சங் கொள்வது போன்று சாந்தி நிகேதன மாணவர்கள் அச்சங் கொள்வதில்லை; ஆனால் மாணவர்களும் ஆசிரியர்களும் அன்பால் பிணைக்கப்பட்டு இருக்கின்றனர். எனவே, அங்குக் கல்வி பயிலுவோர், மிக உயர்ந்த அறிவூட்டும் அரிய கல்வியையும், ஒழுக்கத்தையும், வாழ்வுக்கு உரிய இதர நன்முறைகளையும் பள்ளிக்கூட வாழ்விலேயே பயின்று கொள்ளுகின்றனர். அதனுடன், வெறுங் கல்வியில் மட்டும் கவலை செலுத்தி விடுவதோடு நின்று விடாமல் காவியம் புனைதல், ஓவியம் தீட்டுதல், சிற்பம் கற்றல், பண் இசைத்தல், மலர் மாலை தொடுத்தல், தோட்டத் தொழில் புரிதல், மக்கட்குத் தொண்டாற்றுதல், தாம் கற்றதைப் பிறரையும் கற்கச் செய்தல் ஆகியவற்றினையும் மாணவர்கள் அறிந்து கொள்ளுமாறு செய்வதில் சாந்தி நிகேதனம் மிகுந்த கவலை எடுத்துக்கொண்டுள்ளது. அங்கு உள்ள ஆசிரியர்கள் அவ்வத்துறையில் அறிஞர்கள்; ஆடம்பரம் அற்றவர்கள்; ஒழுக்கத்தில் உயர்ந்தவர்கள்; மாணவர்களுடன் ஒத்துழைக்கும் கருத்து உள்ளவர்கள். தோட்ட வேலையில் ஒரு மாணவன் மண் வெட்டினால், ஆசிரியர் அம்மண்ணைத் தூக்கிச் செல்வார். இங்ஙனம் வேறுபாடு இன்றி ஆசிரியரும் மாணவர்களும் ஒத்துழைத்து வருவதில் சாந்தி நிகேதனம் ஒரு புதிய முறையை ஏற்படுத்தி உள்ளது.

அங்குப் பல்கலைக் கழக 'மெட்ரிக்குலேஷன்' வகுப்புக்கு ஒத்த கல்வி வரை கற்பிக்கப்படுகிறது. சாந்தி நிகேதனம் இன்று வெளிநாட்டு அறிஞர்கள் மனத்தைக் கவரும் பெருமை பெற்றதாய் இலங்குகிறது. பல வெளிநாட்டு அறிஞர்கள் சாந்தி நிகேதனத்திலேயே ரவீந்திரருடன் தங்கி இருந்தனர். இந்திய அறிஞர் பலரும் ஆங்குத் தங்கியுள்ளனர்.

10. சேக்கிழார்

(சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார், B.A.)

அருண்மொழித் தேவர் என்னும் சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தின் ஆசிரியர் ஆவர். அவர் சரித்திரத்தைப் பற்றி அறிவதற்கு உமாபதி சிவாசாரியர் செய்தருளிய திருத்தொண்டர் புராண வரலாறு மிக உதவி புரிகின்றது. அப்புராணத்தில் அறிந்த வகையில் சேக்கிழார் சுவாமிகள் சரிதச் சுருக்கமாவது :—

'சான்றோர் உடைத்து' என்று விதந்து ஓதப்பெற்ற தொண்டை நன்னாட்டினுடைய இருபத்து நான்கு கோட்டங்களில் ஒன்றாகிய புலியூர்க் கோட்டத்திலே - குன்றத்தூர் நாட்டிலே - குன்றத்தூரிலே - வேளாளர் மரபிலே **சேக்கிழார் என்ற குடி**, சிறப்பாய் விளங்கியது. அந்தக் குடியின் குலதீபம்போல **அருண்மொழித்தேவர்** என்ற பெரியார் அவதரித்தார். அவர் இளமையிலேயே பல கலைகளிலும் வல்லவராய், அறிவின் முதியவராய் விளங்கிய செய்தி கேட்டு அந்நாளில் நாடாண்ட அநபாயச் சோழப் பேரரசர் அவரை வரவழைத்து அவரது மேம்பாட்டைக் கண்டு அவர்க்கு '**உத்தமச் சோழப் பல்லவர்**' என்ற பட்டம் கொடுத்துத் தம்மிடத்தே தலைமை அமைச்சராய் அமர்த்திக் கொண்டார்.

சேக்கிழார் சுவாமிகள் சோழ நாட்டில் உள்ள **திருநாகேச்சுரம்** என்ற தலத்தில் மிகுந்த பயபக்தி உடையவராய், அதனைத் தமது ஆன்மார்த்தத் தலமாகக்கொண்டு வழிபட்டு வந்தார். அந்த அன்பு மேலீட்டினாலே அதற்கு அறிகுறியாகத் தமது குன்றத்தூரிலே ஒரு கோயிலும், அதைச் சுற்றித் திருமடவளாகமும் அமைத்து, அதற்குத் 'திருநாகேச்சுரம்' என்று பேரிட்டார். அமைச்சராய் அரசாங்கம் நடத்தி வருநாளில் அரசர் தமது சமுகத்தில் **சீவக சிந்தாமணி** என்ற சமண நூலைப் பாராட்டிப் படித்து மகிழ்ந்து வந்ததைக் கண்டார்; "இந்நூல் நும்போன்ற

அரசன் வரலாறுகும். இதனைவிட்டு இம்மை மறுமைகட்குப் பயன் அளிக்கவல்ல சிவகதைகள் படிக்கக் கேட்டால் மிக்க நலன் அளிக்கும்'' என்று அறிவுறுத்தினர். அரசர் அது கேட்டு வியந்து, "அப்படியாயின், அந்தச் சிவகதைகள் யாவை? அவற்றைச் சொல்லுங்கள், கேட்போம்'' என்று கேட்டார். அருண்மொழித் தேவர், "அவை தாம் சிவனடியார்களின் சரிதைகள் ஆகும். அவ்வடியவர்களைச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையினுள் தொகுத்துத் துதித்தருளினர்; திருநாரையூரில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பிகள் அவற்றைத் திருத்தொண்டர் திருவந்தாதியால் வகைப்படுத்தி விரித்தருளினர்'' என்று கூறி அச்சரித்திரங்களைச் சொன்னர்.

அதுகேட்ட அரசர் வியந்து, நயந்து, அற்புதம் எய்தி, உள்ளம் உருகி "இச்சரிதங்களை ஒரு காப்பியமாகச் செய்து தருதல் வேண்டும்'' என்று வேண்டினர். அருண்மொழியார் அதற்கு இசைந்து, "இங்குத் தங்கி அக்காரியம் செய்தல் இயலாது; அதன்பொருட்டுத் திருத்தில்லைக்குச் சென்று தங்குதல் வேண்டும்'' என்று அரசரிடம் விடைபெற்றுச் சென்றார். அரசர் அவருக்கு வேண்டிய பரிசனங்கள் முதலிய வசதிகள் எல்லாம் செய்து தந்தார். அருண்மொழித் தேவர் திருத்தில்லையிலேயே சென்று ஸ்ரீ நடராசப் பெருமானை வணங்கி, "என் உயிர்த் தலைவரே! தேவரீரது அடியார் பெருமை அறிதற்கரியது. அதனை எடுத்துச்சொல்ல அடியேனுக்குத் துணை செய்து அருள்புரிதல் வேண்டும்'' என்று போற்றி நின்றார். அப்போது 'உலகெலாம்' என்ற திருவாக்கு அனைவரும் கேட்க வானத்தில் எழுந்தது. அவ்வாறு இறைவர் எடுத்து அருளிய முதலை முதலாக வைத்துக் கொண்டு அருண்மொழித் தேவர் தில்லையில் தங்கிச் சில காலத்தில் இப்புராணத்தை இயற்றி முடித்தார். புராணம், இரண்டு காண்டங்களாகவும், பதின்மூன்று சருக்கங்களாகவும் வகுக்கப்பெற்று 4253 செய்யுள்களில் முடிந்

தது. புராணம் எப்போது முடியுமென்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அரசர் அது நிறைவெய்தியதனைக் கேட்டதும் உளம் மிக மகிழ்ந்து தமது சேனை முதலிய பரிசனங்களுடன் சிதம்பரத்துக்கு வந்து சிவவேடப் பொலிவுடன் விளங்கிய அருண்மொழித் தேவரைக் கண்டு வணங்கினர். தம்மை எதிர்கொண்ட தில்லைவாழ் அந்தணர்கள் மடபதிகள் முதலிய அனைவருடன் அரசர் ஸ்ரீ நடராசரைத் தரிசித்தார். அப்போது, "அரசனே, 'உலகெலாம்' என்று நாம் அடியெடுத்துக்கொடுக்க நமது அன்பன் சேக்கிழான் நமது திருத்தொண்டர் புராணத்தைப் பாடி முடித்திருக்கின்றான். நீ அதை விரைவில் விரும்பிக் கேட்பாயாக!" என்று அம்பலக் கூத்தர் அருள் வாக்கு வானத்தில் அனைவரும் கேட்க எழுந்தது; இறைவன் திருப்பாதத்து அணிந்த திருச்சிலம்பு ஒலியும் உடனே கேட்டது. அரசரும் தில்லைவாழ் அந்தணர்களும் மகிழ்ந்து அந்தப் புராணத்தை வாசித்துப் பொருள் விரித்து உரைக்குமாறு சேக்கிழாரை வேண்டினர்கள்.

அரசர் பல ஊர்களுக்கும் ஓலை போக்கிப் பல சிற்றரசர்களையும் ஏனைய அன்பர்களையும் அது கேட்க வருமாறு அழைத்து, அனைவருக்கும் உண்டி உறையுள் முதலான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தார். தில்லைவாழ் அந்தணர்களுக்கும் மடபதிகளுக்கும் தினமும் படியமுது ஏற்படுத்தினர். ஸ்ரீ நடராசருக்குத் தினந்தோறும் சிறப்புப் பூசை நியமித்தார். சேக்கிழார் ஆயிரக்கால் மண்டபத்திலேயிருந்து, சித்திரை மாதத்துத் திருவாதிரையிலே புராணத்தை வாசித்துப் பொருள்விரித்துரைக்கத் தொடங்கி, அடுத்த சித்திரைத் திருவாதிரையிலே நிறைவேற்றி முடித்தார். அரசர் தம்முடைய சபையினரோடு இருந்து கேட்டனர். நிறைவேறினவுடன் நடராசர் சந்நிதியில் அறுகாற்பீடமிட்டு, அதன்மேல் பசும்பட்டும் வெண்பட்டும் இட்டு, அதன்மேல் அந்தப் புராணத்தை வைத்துத் தில்லைவாழ் அந்தணர்கள் சிவமூல மந்திரத்தாலே பூசித்தார்கள். அதன்

பின் பொன் தாம்பாளத்தில் அதனை வைத்து யானைச் சிரத்திலே எழுந்தருளுவித்துச் சேக்கிழாரையும் ஏற்றி, அரசர் தாமும் ஏறிப் பின்பாக இருந்துகொண்டு, தமது இரண்டு கைகளாலும் சாமரைகளை வீசிக்கொண்டு நகர் வலம் செய்வித்து, "இதுவன்றோ நான் செய்த தவப் பயன்" என்று மகிழ்ந்தார். நகர் வலத்தின் பிறகு நடராசர் சந்நிதியில் வைத்து அதற்குமுன் இராசராச சோழ தேவர் காலத்திலே நம்பி யாண்டார் நம்பிகளால் வகுக்கப்பெற்று இருந்த பதினொரு திருமுறைகளுடன் அதனைப் பன்னிரண்டாவது திருமுறையாகச் சேர்த்துச் செப்பேடு செய்து "சைவத் திருமுறைகள் பன்னிரண் டாகும்" என்று கோவை செய்து, சேக்கிழார் பெருமா னுக்குத் "தொண்டர் சீர் பரவுவார்" என்ற பெயரும் ஞானமுடியும் சூட்டி அரசர் வணங்கினர். சேக்கிழார் அதன்பின் திருத்தில்லையில் தங்கிப் பெரிய புராணத்தில் உள்ள அடியவர் கதைகளைச் சிந்தித்து உணர்ந்துகொண்டு, சிவனடியார்களுடன் கூடித் தவஞ் செய்துகொண்டு இருந்து இறைவன் திருப்பாத நீழலடைந்தனர். அரசர் அவரது தம்பியாராகிய பாலறுவாயரைப்பற்றி விசாரிக்க, அவர் தமது பெயராலே குன்றத்தூரிலே "பாலறுவாயர் குளம்" என்ற குளம் உண்டாக்கித் திருநாகேச்சுரத்தில் திருப்பணி செய்துகொண்டு இருந்ததனைக் கேள்வியுற்று, அவரை வர வழைத்துத் தமது மந்திரியாக அமர்த்திக்கொண்டார். அவருக்குத் 'தொண்டைமான்' என்ற பட்டமும் கொடுத் தார். அவர் தமது ஊரிலே இருந்தபடியே அரசு செய்தமை யாலே 'தொண்டை மண்டலம் நின்று காத்த பெருமான்' என்று எங்கும் பெயர் வழங்கிற்று. இதுவே உமாபதி சிவாசாரியார் செய்து தந்தருளியபடி அறியப்பெறும் சேக் கிழாரது புராண வரலாறாகும்.

சேக்கிழார் சுவாமிகள் காலத்திற்கு இருநூறு ஆண்டு களின் பின் வாழ்ந்த சைவ சமய சந்தான குரவர்களில் ஒருவரான உமாபதி சிவாசாரியரால் இவ்வரலாறு நமக்குக்

கிடைத்தது தமிழும் சைவமும் செய்த பெரும் பாக்கியமே. சைவ சமய ஆசாரியர் மூவர் முதலிகளுக்குப் பின், தமிழ்க் கவிவாணர்களியே தமது சரிதம் நம்பும் வகையில் எழுதப் பெற்றோர் நமது சேக்கிழார் சுவாமிகள் ஒருவரே என்று சொல்லலாம். இச்சரிதம், ஏறக்குறைய முழுதும் நமக்குக் கிடைக்கும் பிற சாதனங்களாலே உறுதி பெறுகின்றது. புலியூர்க் கோட்டமும், குன்றத்தூரும் இன்றைக்கும் அப் பெயராலேயே நிலவுகின்றன. குன்றத்தூருக்கு அப் பெயர் வந்ததற்குக் காரணமாகிய குன்றமும் அதில் விளங் கும் முருகன் ஆலயமும் இன்றும் நாம் சென்று கண்ணுக்கு இனிய காட்சியாகக் காணப் பொலிகின்றன. குன்றத் தூரிலும், பிற ஊர்களிலும் வேளாளர் மரபில் சேக்கிழார் குடி இப்போதும் இருக்கின்றது. பாலறுவாயர் குள மும் இன்றைக்கும் இருக்கக் காண்கிறோம். ஆனால் அதை மக்கள் "பல்லவராயர் கேணி" என மருவி வழங்குகிறார்கள். சேக்கிழார் தமது ஆன்மார்த்தமாய் அமைத்த திருநாகேச்சுரக் கோயிலும் இன்றைக்கும் நாம் கும்பிடக்கூடியதாய் விளங்குகின்றது. இவ்வூரிலே சேக்கி ழார் சுவாமிகளுக்கு ஒரு சிறு கோயிலும் இருக்கிறது. அந பாயன் அரசசபையானது, இப்புராணத்து உரையினைக் கொண்டு விரும்பும் என்று சேக்கிழார் சுவாமிகள் புராணத் திலே பாயிரத்துள்,

"மேய விவ்வுரை கொண்டு விரும்புமாஞ்
சேய வன்திருப் பேரம்ப லஞ்செய்ய
தூய பொன்னணி சோழன் நீடூழிபார்
ஆய சீர்அநபாயன் அரசவை"

எனப் பாடியிருக்கின்றமையால், அநபாயர் கேட்க அவர் இதைப் பாடினர் என்பது தேற்றமாம். அநபாயர் காலத் திலே அவர் ஆதரவில் இஃது இயற்றப்பெற்றது என்ப தற்கு மேலே குறித்த பாயிரச்செய்யுள் அல்லாமல் இனியும் பற்பல இடங்களில் சுவாமிகள் அநபாயரைச் சுட்டிக் குறித்து இருப்பது சான்றாகும். "கொற்றவன் அநபாயன்

பொற்குடை நிழல் குளிர்வது" சோழநாடு என்று நாட்டுப் படலத்தில் 35-வது செய்யுளில் நிகழ்காலத்திற் குறிப்பதால் இப்புராணம் பாடப்பெற்ற நாளில் சோழநாடு அநபாயர் செங்கோலின்கீழ் வாழ்ந்தது என்பது துணிபாம். பெரிய புராணத்திற் பேசப்பெற்ற அடியார் சரிதங்கள் அக்காலத் திலே வழங்கி வந்தன என்றும், அவை தமிழ் மக்களாற் பாடப்பெற்றன என்றும் தமது தக்கயாகப் பரணியிலே சைவப் புலவரான ஒட்டக்கூத்தர் திருஞானசம்பந்தப் பிள்ளையாரது சரிதம் கூறும் வகையில் இருந்து தெரிகின் றோம். திருத்தில்லையில் இப்புராணம் இயற்றினர் என்ப தற்கு வேறு புறச்சான்றுகள் இப்போது கிடைக்கவில்லை. ஆயினும் புராணத்தினுள்ளே எங்கெங்கே தில்லையைப் பற்றிப் பேச நேரிடுகின்றதோ அங்கங்கு எல்லாம் சேக் கிழார் சுவாமிகள் அதனை மிகச் சிறப்பித்து விரிவாகப்பேசி உள்ளதால் அங்கே தங்கி நடராசர் தமக்குச் செய்த பேரருளினலே புராணம் இயற்றினர் என்று உறுதியாய் ஊகிக்கலாம்.

தில்லையைப்பற்றி வரும் நூற்றுக்கணக்கான இடங் களில் எல்லாம் சிறப்பு மொழிகளாகிய அடைமொழிகளும் சொற்றொடர்களும் தராமல் தனியாகத் 'தில்லை' என்று சேக்கிழார் கூறக் காணவில்லை. 'ஆனதசீர்த்தில்லை', 'வீடருள்தில்லை மல்லம்பதி', 'தேனரு மலர்ச்சோலைத் திருத்தில்லை' என்றெல்லாம் காண்போம். சேக்கிழார் சுவாமிகள் சோழநாட்டுத் திருநாகேச்சுரம் என்னும் தலத் தைத் தமது அபிமானத் தலமாகவும், ஆன்மார்த்தத் தல மாகவும் கொண்டார் என்பதும் பலவகையால் விளங்கு கிறது. அத்தலத்தே அவர் பலகாலம் தங்கினர் என்றும், அத்திருக் கோயிலிலே திருப்பணிகள் செய்தார் என்றும், தமது மந்திரித் தொழிலுக்கு ஏற்ற உறைவிடமாக அதனை வைத்துக்கொண்டு அதில் பலகாலம் வசித்தார் என்றும் சொல்லுகிறார்கள். இத்திருத்தலத்திலே அவரும், அவர் தம்பியாராகிய பாலறாவாயரும், அவர்களது தாயாராகிய

அம்மையாரும் பெரிய திருவுருவங்களாற் பிரதிட்டை செய்யப்பெற்று இன்றைக்கும் அக்கோயில் தென்புறம் உட்பிரகாரத்தில் வைத்து வழிபடப் பெறுகின்றுர்கள். அன்றியும் திருநாகேச்சுரத்திலே வழிபட்டு, சுவாமிகளின் தாயார் இக்குழந்தைகளைப் பெற்றனர் எனவும் ஊகிக்க இடம் இருக்கிறது.

"மாநாகம் அருச்சித்த மலர்க்கமலத் தாள்வணங்கி
நாணாளும் பரவுவார் பிணிதீர்க்கும் நலம்போற்றி"

என்ற சேக்கிழாரது திருப்பாட்டிலே திருஞான சம்பந்த மூர்த்திகளின் திருப்பதிகத்தின் உட்குறிப்பும், சுவாமிகளின் சரிதக் குறிப்பும் ஊகித்துச் சிந்திக்கத் தக்கனவாம்.

---

11. புதைந்த நகரங்கள் *

[வித்வான், மா. இராசமாணிக்கம், B.O.L., L.T.]

பஞ்சாப் மாகாணத்தில் லாஹூர், முல்டான் என்னும் இடங்கட்கு இடையே தோண்டி எடுக்கப்பட்ட நகரம் 'ஹரப்பா' என்பது. சிந்து மாகாணத்தில்—லர்க்கான ஜில்லாவில் புதைந்து கிடந்த நகரம் 'மொஹெஞ்சொ-தரோ' என்பது. இவ்விரு நகரங்களும் அமைந்துள்ள இடம் ஒரு காலத்தில் செழிப்புற்ற இடமாக இருந்தது. அப்பகுதியில் அக்காலத்தில் மழை மிகுதியாக இருந்திருந்தல் வேண்டும் என்பது, இரு நகரங்களிலும் காணப்படும்

---

* இக்கட்டுரை :—

(1) 'Religion of Mohenjo-daro and Harappa'—in the 'Indus civilization' Vol. 1.
(2) 'Hindu civilization' by Prof. R. K. Mookerji.
(3) 'Aryanisation of India' by Prof. N. K. Dutt.
(4) Articles in the 'New Review' by Father Heras (1936).

இவற்றின் துணையைக்கொண்டு எழுதப்பெற்றது.

பெரிய கழிநீர்ப் பாதையால் விளக்கமாகிறது. சிந்து நதியுடன் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு வரை 'மஹாமிஹ்ரான்' என்னும் யாறும் அப்பகுதியில் ஓடிக்கொண்டிருந்தது. இவ்விரண்டுடன் சிந்துவின் உபநதிகளும் சேர்ந்து பாய்ந்த நீர்வளப்பம் இவ்விரு நகரங்களையும் உயர் நாகரிகத்தில் உய்த்ததெனல் மிகையாகாது. வெள்ளப் பிரதேசமாதலின் அப்பகுதியில் கட்டப்பட்ட கட்டிடங்கள் வன்மையுடையனவாகவும் மேற்கூரை உயர்ந்தவையாகவும் அமைக்கப்பட்டிருந்தன.

மொஹெஞ்சொ-தரோ நகரம் உள்ள இடம் (70 அடி முதல் 20 அடி வரை) மண்ணால் மூடப்பட்டிருந்தது. ஏழு அடுக்குகள் தோண்டி எடுக்கப்பட்டன. அடி முதல் மூன்று அடுக்குகள் பழையன; இடைப்பட்ட மூன்று இடைக்காலத்தன; மேலுள்ள 7-ம் அடுக்குப் பிற்பட்டகாலத்தது. இவற்றிற்கும் கீழே சுமார் 40 அடி ஆழத்தில் சில அடுக்குகள் காணப்படுகின்றன. அவை பின்னும் பழையனவாக இருக்கக்கூடும் என்பர் ஆராய்ச்சியாளர். முதலில் எடுக்கப்பட்ட ஏழு அடுக்குகளும் உயரிய நாகரிகத்தை வெளிப்படுத்துகின்றன என்பது அறியத்தக்கது.

கட்டிடங்கள் :— கட்டிடங்கள் பலவகைப்பட்டவை. இரண்டு அறைகளைக்கொண்ட வீடுகள் முதல் பெரிய மாளிகை ஈறாகக் காணப்படுகின்றன. மாளிகையின் முன்புற வெளி 85 அடி; 97 அடி பின்புறம்; பெரிய கூடம், செங்கல் பதித்த மேன்மாடம், மேலிருந்து கழிநீர் இறங்கச் சிறிய வழிகள், கழிநீரைத் தேக்கிக்கொள்ள ஆங்காங்குப் பெரிய சால்கள், சுற்றிலும் அறைகளைக்கொண்ட 32 சதுர அடியுள்ள வீட்டு முற்றம் முதலியன ஒவ்வொரு மாளிகையிலும் காணலாம். பல பெரிய கட்டிடங்களும் காணப்படுகின்றன. அவை கோயில்களாக இருந்திருக்கலாம் என்பர் ஆராய்ச்சியாளர்.

இவற்றினும் கவனிக்கத் தக்கது 'பெரிய நீராடு குட்டை' ஆகும். நாற்புறமும் படிக்கட்டுகள், அறைகள்;

39 அடி நீளம், 23 அடி அகலம், 8 அடி ஆழம் உள்ள நீராடும் இடம்; நாற்புறமும் நீர்நிலைக்கு—நீர் உதவும் கிணறுகள். இக்குட்டைக்கு, 'மேல் மூடி' மரத்தால் ஆயது. இந் நீராடு குட்டையைக் கட்டியவர் சிறந்த விற்பன்னராக (Engineers) இருத்தல் வேண்டும் எனக் கூறி வியக்கின்றனர் ஆராய்ச்சியாளர். இக்குட்டையைச் சுற்றியுள்ள சுவர் 4 அடி கனமுள்ளது. அதைச் சுற்றிலும் வேறொரு சுவரும் உண்டு. அஃது, இங்ஙனம் உயர்ந்த முறையில் கட்டப் பட்டதாற்றான் 5000 ஆண்டுகள் ஆகியும் இன்றும் நன்னிலையில் இருக்கின்றது.

பயிர், உணவு:—இப்பெரிய நகரங்களில் வாழ்ந்த மக்கள் கோதுமை, பார்லி இவற்றை பயிரிட்டவர் என்பது தெரிகிறது; இப்போழ்தைய, இயந்திரம் (எந்திரம்) இன்றி, வேறொரு கற்கருவியால் கோதுமையையும் பார்லியையும் அரைத்து வந்தனர்; மாட்டு இறைச்சி, ஆட்டு இறைச்சி, பன்றி இறைச்சி, பறவைகளின் இறைச்சி, ஆமை இறைச்சி, மீன் இவற்றை உண்டு வந்தனர் என்பதற்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன.

விலங்குகள்:—எருது, எருமை, ஆடு, யானை, ஒட்டகம், பன்றி, கோழி, நாய், குதிரை இவற்றை வளர்த்து வந்தனர். (இந்நகரங்களில் கீரி, கறுப்பு எலி, மான் பைசன், காண்டா மிருகம், புலி, குரங்கு, கரடி, முயல் முதலியவற்றின் எலும்புகளும் அகப்பட்டன.)

கனிப்பொருள்கள்:—பொன், வெள்ளி, செம்பு, தகரம், ஈயம் (இரும்பு இல்லை) இவற்றை அப்பண்டை மக்கள் பயன்படுத்தி வந்தனர். பொன், வெள்ளி கலந்ததாக இருத்தலின் அப்பொன் கோலார், அனந்தபூர் இவ்விடங்களிலிருந்து வந்திருத்தல் வேண்டும் என்பர் ஆராய்ச்சியாளர். நகைகட்கே பொன் பயன்பட்டது. செம்பு, ஈயத்தோடு கலந்திருத்தலின் அது இராஜபுதனம், பலுசிஸ்தான் அல்லது பாரசீகம் ஆகிய இடங்களிலிருந்து வந்திருத்தல் வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து; அது வளையல்,

கத்தி, ஈட்டி, உடைவாள் முதலியன செய்யப் பயன்பட்டது. வெள்ளீயம், (தகரம்) செம்போடு கலந்து பித்தளையாகிப் பலவற்றிற்குப் பயன்படுவது அடித்தட்டில் கிடைத்ததால், தகரம் கி. மு. 3000-க்கு முன்னரே இந்தியாவில் பயன் பட்டதென்பது ஒருதலை. இத்தகரம் அல்லது பித்தளை, இப்புதைந்த நகரங்களில் காணப்படலால், 'இந்தியாவில் பித்தளைக் காலம் இல்லை' எனக் கூறிவந்தது பொய்த்து விட்டது.

கற்கள் :—பலவகைப்பட்ட கற்கள் கட்டிடங்கட்குப் பயன்பட்டன: 'சுக்கூர் சுண்ணாம்புக் கற்கள்' கழிநீர்ப் பாதையை மூடப் பயன்பட்டன. 'கிர்தர்' மலைக்கற்கள் பாத்திரங்கள், சிமென்ட், சிலைகள் இவற்றுக்குப் பயன் பட்டன. வேறு கற்கள் நிறை முதலியவற்றுக்குப் பயன் பட்டன. ஒருவகை மஞ்சட்கல் லிங்கம் முதலியவற்றுக்குப் பயன்பட்டது. பல உயர்தரக் கற்கள் அணிகட்கும் பிற வற்வற்றுக்கும் பயன்பட்டன. அழகிய பச்சை 'அமெ ஸான் கல்' என்பது, நீலகிரியில் உள்ள 'தொட்ட பெட்டா' விலிருந்து கொண்டு வரப்பட்டது (இந்தியாவில் இக்கல் உள்ள இடம் இஃது ஒன்றே). எலும்பு, தந்தம், சங்கு முத லியவையும் பயன்பட்டன.

பஞ்சு :—மொஹெஞ்சொ-தரோவில் உள்ள வீடுகளில் எல்லாம் நெய்தற் றொழில் நடந்து வந்தது என்பதற்கு உரிய அடையாளப் பொருள்கள் காணப்படுகின்றன. கம் பளியும் பஞ்சுமே நெய்யப்பட்டு வந்தவை. அங்கு அகப் பட்ட பஞ்சு, இப்போதைய இந்தியப் பஞ்சுபோன்றே இருக்கிறது. இப் பழைய பஞ்சே பாபிலோனியர்க்குச் 'சிந்து' ஆகவும், கிரேக்கருக்கு 'சின்டன்' (Sindon) ஆக வும் தெரிந்திருந்தது. இப்பஞ்சு பருத்திச் செடியினதே அன்றி, இலவம் பஞ்சு அன்று! அன்று!

மயிர் முடிப்பு :—அக்கால உடைகளுள் நீண்ட 'போர்வை'யும் அடங்கியிருந்தது. இவ்வுண்மை அங்கு அகப்பட்டுள்ள சிலைகள் மீதுள்ள போர்வை வேலைப்பாட்

டால் நன்கறியலாம். அக்கால மக்கள் சிறிய தாடியும் மீசையும் வைத்திருந்தனர்; சிலர் மீசையின்றித் தாடி மட்டுமே வைத்திருந்தனர். இப்பழக்கம் சுமேரியர் பழக்கமாகும். தலைமயிர் பின்னல் முடியிடப்பட்டது. பெண்கள், மயிரைச் சுற்றிலும் சுருட்டி இடப்பக்கம் கொண்டைபோல் போட்டிருந்தனர். அங்கு அகப்பட்ட மூன்று பித்தளைப் பெண் உருவங்கள் இவ்வாறே தலைமுடி உடையவாயுள.

அணிகள் :—கழுத்தணி, கங்கணம், மோதிரம், காப்பு, ஒட்டியாணம், காதணி முதலியன அக்கால மக்கள் பயன்படுத்தியவை. இவற்றைப் பணக்காரர்—பொன், வெள்ளி, தந்தம், உயர் கற்கள் இவற்றால் செய்து வந்தனர்; ஏழைகள் சங்கு, பித்தளை, செம்பு ஒருவகைக் கல் இவற்றால் செய்து வந்தனர்.

கருவிகள் :—போர்க் கருவிகள் கல்லாலும் பித்தளை அல்லது செம்பாலும் செய்யப்பட்டவை. கோடரி, இரம்பம், சிரைக்கும் கத்தி முதலியவை செம்பாலும் பித்தளையாலும் செய்யப்பட்டவை. கல்லால் ஆய தட்டுகள், பாத்திரங்கள் முதலியன, மொஹெஞ்சோ-தரோவில் வாழ்ந்த மக்கள் காலம் 'மாக்கல் காலம்' என்று நினைக்கவே இடந்தருகின்றன. போர்க் கருவிகள் இருந்த நிலையை நோக்குகையில், அக்கால மக்கள் எதிர்ப்பை நோக்கி வாழ்ந்தவராகத் தெரியவில்லை.

நிறைகள் :—சிறியவை கற்பலகையால் ஆனவை; முச்சதுர உருவில் அமைந்தவை. பெரியவை சர்க்கரைப் பொட்டணம் போன்ற உருவில் அமைந்தவை. இவை 'ஏலம்' 'மெசபொட்டோமியா' முதலிய இடங்களில் அகப்பட்ட நிறைகளைவிட, நிறையில் சரியானவை; பின்ன அளவையும் குறிக்கத்தக்கவை; 1, 2, 4, 8, 16, 32, 64, 160, 200, 320, 640, 1600, வரை பின்ன அளவை உடையவை.

பாத்திரங்கள் :—வீட்டுக்கு உரிய பாத்திரங்களுள் பெரும்பாலன மட்பாண்டங்களே. கோப்பைகள் மிகுதியாகப்

பயன்பட்டன; நீர்ச் சாடிகளும் அங்ஙனமே. மட்பாண்டங்கள் சக்கரத்தின் உதவிகொண்டு செய்யப்பட்டவை; கருமை, செம்மை நிறங்கள் கொண்டவை; 'இப்பாண்டங்களே உலகில் மிகப் பழமையானவை' என்பர் ஆராய்ச்சியாளர்.

பொம்மைகள் :—களிமண் பொம்மைகள் பெருவாரியாகக் காணப்பட்டன; எலிகள், ஊதுகுழல், (பறவைகள் உருவில்) மனித உருவங்கள், பறவைகள், வண்டிகள், முதலியன. இவ்வண்டிகள் 'ஊர்' (Ur) நகரத்தில் (கி. மு. 3200) அகப்பட்ட கல்லில் செதுக்கப்பட்ட தேரைப்போல இருத்தல் கவனிக்கத் தக்கது.

எழுத்துக் குறிகள் :—சிந்துப் பிரதேச மக்கள் எழுதக் கற்றவர். அவர்தம் எழுத்துக்கள் சித்திரக் குறிகள். அக் குறிகள் பழைய ஏலமைட், பழைய சுமேரிய, எகிப்திய எழுத்துக்களைப் போன்றவையே. அவற்றில் 396 குறிகள் அகப்பட்டுள்ளன. அவை பாத்திரங்களின் மீதும், காப்புகளின் மீதும், முத்திரைகளின் மீதும், பிறவற்றின் மீதும் காணப்படுகின்றன. எழுத்துக்கள் சேர்ந்தும் காணப்படுகின்றன. அவை வலப்புறமிருந்து இடப்புறம் நோக்கி எழுதப் பட்டுள்ளன. 'அவை சித்திர சங்கேதக் குறிகளே தவிர எழுத்துக்கள் அல்ல' என்பர் ஆராய்ச்சியாளர் சிலர்.

சிலைகள் :—இச் சிந்துப் பிரதேச மக்கள் சிற்பத்திறமை ஓரளவு வாய்ந்தவர்கள்: இதைத் திமில்கொண்ட எருது, எருமை, பைசன் முதலியவை தீட்டப்பெற்ற முத்திரைகளைக் கொணடும்; வேட்டை நாய், செம்மறியாடு, அணில், குரங்கு இவற்றின் பொம்மைகளைக் கொண்டும் அறியலாம். கற்சிலைகள் மூன்றில், ஒன்று யோகியின் உருவத்தில் அமைந்துள்ளது; யோகியின் பார்வை மூக்கின் நுனி மீது படிந்துள்ளது. இரண்டாவது, தலைமட்டுமே உள்ள சிலை. அது எழும்பிய கன்ன எலும்புகள், பெரிய மெல்லிய உதடு கொண்ட வாய், அகண்ட விகாரமான காதுகள் முதலியவற்றை உடையது. மூன்றாவது சிலை, போர்வை போர்த்து

அமைந்துள்ள உருவம். இவற்றேடு நடனமாது ஒருத்தியின் சிலையும் காணப்படுகிறது. அச் சிலையின் கால்கள் மிக நீண்டவையாய் இசைக்கு ஏற்பத் தாளம் போடும் நிலையில் அமைந்துள்ளன. கைகளும் மிக்க நீளமானவை. ஹரப்பாவில் காணப்பட்ட சிலைகள் இரண்டு. அவற்றுள் ஒன்று சிவந்த கல்லில் செய்யப்பட்டது; தடித்த மனிதன் உருவைக்காட்டுவது. மற்றென்று பழுப்பு நிறம் அமைந்த கற்பலகையால் ஆயது; இடக்கால் வலக்கால் மீதுநின்றும் நடனம் ஆடுவதுபோல அவ் வுருவம் (ஆண்) அமைந்துள்ளது. இது 'சிவ—நடராசரது பழைய உருவம், என்பர் ஆராய்ச்சியாளர்; இச் சிலைகளில் அமைந்த வேலைப்பாடு கிரேக்கருடையது என்பர்.

நெறி (மதம்):—பெருவாரியான பெண் உருவங்கள் (Terracotta வில் செய்யப்பட்டவை) பலுசிஸ்தானத்திலும், சிந்துப் பிரதேசத்திலும் கிடைத்துள்ளன. இவை போன்றவை பல மேற்கு ஆசிய நாடுகளில் (ஏலம், மெசபெட்டோமியா, சிரியா, பாலஸ்தீனம், டிரான்ஸ்கஸ்பியா, சிறிய ஆசியா, சைப்ரஸ், க்ரீட், சைக்லேட்ஸ், பால்கன் நாடுகள், எகிப்து) கிடைத்துள்ளன. இவை தாயின் (இயற்கைத் தாயின்) உருவச் சிலைகள் என்பதை ஆராய்ச்சியாளர் ஒப்புக்கொண்டுள்ளனர். ஹரப்பாவில் கிடைத்துள்ள முத்திரை ஒன்றில் தாயின் வயிற்றிலிருந்து ஒரு செடி தோன்றுகிறது; ஒருவன் கத்தியை வைத்துக்கொண்டு நிற்கின்ருன். பெண் ஒருத்தி தூக்கிய கைகளோடு (பலியிடப்படுபவள் போலும்) நின்றுகொண்டு இருக்கிருள்.

சிவ வணக்கம் :—வேறெரு முத்திரையில் முக்கண்களையும், மூன்று முகங்களையும் உடைய சிவன் உருவம் யோகத்தில் இருப்பது போல் காணப்படுகிறது. அவ்வுருவினைச் சுற்றிலும் யானை, புலி, காண்டாமிருகம் முதலிய விலங்குகள் முத்திரையில் செதுக்கப்பட்டுள்ளன. ஆசனத்தின் கீழ் இரு கொம்புள்ள மான் நிற்கிறது; 'இவற்றை நோக்குகையில், சிவன்—பசுபதி(விலங்குகளின் தலைவன்) என்பது

குறிக்கவே இம்முத்திரை என்பது பயன்படுகிறது' என்பர் ஆராய்ச்சியாளர். சிவனது தலையில் இரண்டு கொம்புகள் இருக்கின்றன. அவை சைவர் தம் திரிசூலத்தைக் குறிப் பனவாக இருக்கலாம் என்பர். மொஹெஞ்சொ-தரோவில் உள்ள வேறொரு முத்திரையில் 'யோகி' உருவத்தின்முன் 'நாகன்' ஒருவன் பிரார்த்தனை புரிவதாகக் காணப்படு கிறது. வேறொன்றில் அதே யோகி (ஒரே தலையுடன்) தனியாக இருப்பதாக உள்ளது.

'சிந்துப்பிரதேசக் குறியீடுகளில் காணப்படும் நான்கு கைகளையுடைய சித்திரங்கள்' பிற்கால இந்துக் கடவுள ராய (நாற்கைகளையுடைய) பிரமன், விஷ்ணு, சிவ னைக் குறிப்பனவாகலாம், என்பர் R. P. சண்டா என் னும் பேராசிரியர். அவரே, "நிற்கின்ற நிலையில் ஆறு உருவங்கள் சில முத்திரைகளில் காணப்படுகின்றன ; அவை சமண யோகிகளைப் போல உள்ளன ; 'மட்ரா' கண்காட்சிச் சாலையில் உள்ள கி. பி. 2-ஆம் நூற்றாண்டின தாகவுள்ள ரிஷபதேவர் நிலையில் உள்ளாவாறே மேற் கூறியவை காணப்படுகின்றன ; நின்று யோகத்தில் இருப்பது சமண யோகிகட்கே சிறப்பானது ; 'ரிஷபம்; எருது ; இது சமணரது அடையாளக்குறி ; சில முத்திரிகை களில், யோகிக்குமுன்பு தரையில் எருது இருப்பதாக உள்ளது வியக்கத் தக்கது ; எனவே, இவ்வுருவங்கள் ரிஷபதேவரைக் குறிப்பனவாக இருக்கக் கூடுமோ" என ஐயுறுகின்றனர். அங்ஙனம் இருத்தல் கூடுமாயின், சைவத்துடன் சமணமும் மிக்க பழமை வாய்ந்ததாக இருத் தல் வேண்டும் என்பது அவர்தம் கருத்தாகும். வேறு சிலர் எருதும் தேவரும் சைவத்தையே குறிப்பன என்பர்.

பீட-இலிங்க வழிபாடு:—"முற்கூறிய சிவ-சக்தி வழி பாட்டைத் தவிர, பீட இலிங்க வணக்கமும் இருந்ததாகத் தெரிகிறது. சிந்துப் பிரதேசத்திலும் பலுசிஸ்தானத்திலும் இவை கிடைத்துள்ளன. இவை அவற்றைக் குறிப்பனவே என்பதை அவற்றைக் கண்ணுறுவோர் நன்கறியக்கூடும்.

ஹரப்பாவிலும் மொஹெஞ்சொதரோவிலும் கிடைத்துள்ள வற்றுள் சிறிய அளவின, திருஷ்டிதோஷாதிகளும் பேய் பிசாசுகளின் சேட்டைகளும் தாக்காதிருக்கும் பொருட்டு அணியப்பட்டு வந்தன. பெரியவை வழிபாட்டுக்கு உரியதாக இருந்தன." *

மர வணக்கம் :—பண்டை மக்கள் மரங்களையும் அவற்றில் உறைவனவாகக் கருதப்பட்ட தேவதைகளையும் வழிபட்டு வந்தனர் என்பது ஹரப்பாவில் அகப்பட்ட சில முத்திரைகளிலிருந்து தெரிகிறது. (இப்பழக்கம் தமிழகத்தில் இன்றும் பெருவழக்குடையதாம்). மொஹெஞ்சொ-தரோவில் கிடைத்த ஒரு முத்திரையில் அரசமரக் கிளைகள் இரண்டுக்கு இடையில் பெண் தெய்வம் ஒன்று காணப்படுகிறது. அதனை நீண்ட கூந்தலையுடைய ஏழு பெண்கள் வழிபடுவதாகத் தெரிகிறது. வேறொரு பெண் உருவம் பாதி குனிந்து வழிபடுவதாக உள்ளது. அவ்வுருவத்தின் பக்கத்தில் மனித முகத்துடன் பாதி உருவம் எருதாகவும் பாதி ஆடாகவும் உள்ள விலங்கொன்று காணப்படுகிறது. அது மரதேவதையின் வாகனமோ யாதோ அறியக்கூட வில்லை. ஹரப்பாவில் கிடைத்துள்ள வேறு இரண்டொன்றிலும் இத்தகைய பெண் தெய்வமும் நூதன விலங்கும் காணப்படுகின்றன.

விலங்கு வணக்கம் :—இது சிந்துப் பிரதேச மக்களிடம் இருந்த தென்பது வெளிப்படை. மனித முகம், பாதி எருது உருவம், பாதி ஆடு அல்லது யானை யுருவம்; பாதி மனித வுருவம், பாதி வேறு வுருவம்; இந்நூதன விலங்கு கொம்பு முளைத்த புலியோடு போரிடல் மாதிரி முத்திரைகளில் தெய்வங்கட்கும் நாகங்கட்கும் கொம்புகள் இருப்பதாகக் காணப்படுகின்றன. கொம்புள்ள விலங்குகள் சில வழிபாடு பெறுவது சில முத்திரைகளால் தெரிகிறது. எருது, யானை, எருமை காண்டாமிருகம், குட்டைக் கொம்புள்ள எருது, புலி, —இவை வழிபாடு பெற்றன என்பதும் சில முத்திரைகளால் வெளியாகிறது. இங்ஙனமே பல பறவைகள், வேறு விலங்கு

* (R. R. Mookerji's 'Hindu Civilisation,' p. 21).

கள் முதலியனவும் காணப்படுகின்றன. (இன்றும் விலங்குகளுள் சிலவும், பறவைகளுள் சிலவும் இந்துக்களால் தூய்மையாகக் கருதப்படுகின்றமை இங்கு நினைத்தற்குரியது; மயில், கருடன், எருது, ஆடு, பசு, யானை, எருமை, அன்னம், சிங்கம், சேவல், பன்றி முதலியன வழிபாட்டுக்கு உரியனவாக உள்ளன அல்லவா?)

சுருங்கக் கூறின், சிந்துப் பிரதேச மக்களது மதம்—சக்தி (தாய்) வணக்கத்தையுடையது; சிவ வழிபாட்டை உடையது; யோகத்தில் பற்றுடையது; விலங்கு வணக்கத்தை உடையது; மர வணக்கத்தையும், மரம்வாழ் தெய்வ வணக்கத்தையும் உடையது; கற்சிலைகளாய பீட லிங்க வணக்கத்தை உடையது; தூப-தீப வழிபாடு உடையது; திருஷ்டிதோஷாதிகளிலும் பேய் பிசாசுகள் தாக்குதலிலும் நம்பிக்கை உடையது. இவற்றுள் பெரும்பாலன இந்தியாவுக்கே சிறப்பாக உடையவை.

இடுதலும் சுடுதலும்:—இம்மதத்தைப் பின்பற்றி வந்த பண்டைய மக்கள், இறந்தார் உடலை எரித்து வந்தனர்; எரித்துச் சாம்பலையும் எலும்புகளையும் பெரிய மட்பாத்திரங்களில் (தாழிகளில்) இட்டு, அந்த ஆவி உண்பதற்கென்று சில பொருள்களையும் இட்டு வந்தனர்; சில தாழிகளில் சாம்பலும் உணவுப் பொருள்களுமே காணப்படுகின்றன. எலும்பை வீசிவிட்டனர் போலும்! அல்லது எலும்பே அகப்படவில்லைபோலும்! இத்தகைய தாழிகள் பல பலுசிஸ்தானத்தில் கிடைத்துள்ளன. பிணங்களைப் புதைத்தல் சிறு வரவிற்று. மொஹெஞ்சொ-தரோவில் புதைக்கப்பட்ட 21 எலும்புக்கூடுகள் அகப்பட்டனவாம். இவை அகப்பட்ட இடத்தைச் சோதித்துப் பார்த்த ஆராய்ச்சியாளர், 'இவை அந்நகரம் அழிவடைந்தபோழ்து இறந்தவருடைய எலும்புகள்' எனக்கூறுகின்றனர். எலும்புக்கூடுகளில் சில, பழைய ஆஸ்ட்ரேலியர், (Proto-Australoids) மத்திய தரைக்கடற்பிரதேசத்தினர் (Mediterraneans), அல்பைனர் (Alpines) இவர்களின் எலும்புக்கூடுகளை ஒத்துள்ளன என்பர் ஆராய்ச்சியாளர்.

12. சிலம்பால் விளைந்த கதை-I

[திரு. C. S. இராசாப் பிள்ளை அவர்கள்]

[பண்டைக் காலத்தில் சீரும் சிறப்பும் பெற்றிருந்த சோழர் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தில் **மாச்சாத்துவான்** என்ற வணிகர் தலைவற்குக் **கோவலன்** என்னும் அரும் பெறற் புதல்வன் இருந்தான். அப்பெருநகரில் வாழ்ந்த **மாநாய்கன்** என்ற மற்றொரு வணிகர் தலைவற்குக் **கண்ணகி** என்ற கவினுறு பெண் இருந்தாள். கோவலற்கும் கண்ணகிக்கும் திருமணம் சிறப்புற நடந்தது. இருவரும் சிறிதுகாலம் இல்லற வாழ்க்கை இனிதே நடத்தி வந்தனர். கோவலன் ஆடல்பாடல்களிற் சிறந்த **மாதவி** என்ற நாடக மகளிடம் அன்புபூண்டு அவள் வழி ஒழுகி வறிஞன் ஆனான்; திருவருளால் நல்லறிவு பெற்றுக் கண்ணகியிடம் மீண்டான். தன் தவற்றைக் கண்ணகி உணருமாறு கூறி வருந்தித் தான் மதுரை சென்று வாணிபம் நடத்த விரும்பியதை விளக்கினான். கண்ணகி, தானும் உடன் வருவதாகவும், தன் காற்சிலம்பை விற்றுவரும் பொருளை முதலாகக் கொண்டு வாணிபம் செய்யலாம் எனவும் கூறினாள்.

அன்றிரவே அவ்விருவரும் ஒருவர்க்கும் தமது செலவைக் கூறாது புகார் நகரைவிட்டு நீங்கி மதுரை நோக்கி நடந்தனர். வழியிற் **கவுந்தி அடிகள்** என்ற சமணப் பெண் துறவியாரின் துணைக்கொண்டு மதுரையை அடைந்தனர். நகர்ப்புறத்தே இடைச்சேரியில் **மாதரி** என்ற உத்தமியின் வீட்டில் தங்கினர். உணவுண்ட பின்னர்,]

கோவலன் விடைபெறுதல்

கோவலன் கண்ணகியை அழைத்து, "கொடிய வேனிற் காலத்தில், பரல்நிறைந்த இக்காட்டு வழியில் பெருந் துயருற்று வந்த நம்மை நினைத்து நம் பெற்றோர் என்ன துன்பமுற்றாரோ? நாம் இத்துன்பமுற்றது கனவோ? அன்றி நனவாயின், இத்துணைத் தீமை யடையும்படி முன் செய்தீவினை யாதோ? யானேது மறிகிலேன்; வீணர்களோடும், புறங்கூறும் பாவிகளோடுங்கூடிப் பயனற்ற சொற்

களைப் பேசுவதிலும், பயனின்றி நகைப்பதிலும் பொழுது போக்கினேன். அதனல் இருமுது குரவர்க்கும், தொண்டு செய்யும் பேறும் இழந்தேன்; மேலோர் மொழிந்த அற வுரைகளையும் இனியவாகக் கொள்ளாது வெறுத்தேன்; நல்லறிவும் நற்குணமுடைய உனக்கும் சிறுமை செய்தேன்; இவையெல்லாந் தீமை தருவனவெனக் கனவிலுங் கருதா தொழிந்தேன்; இவ்வாறிருந்தும் உன்னை நான் 'என் னுடன் வருக' என்றழைத்தபோது, எதிர்மொழி ஒன்றும் பகராது உடன் போந்தனை; அதனற்பல இன்னலுற்றாய்" என்றிரங்கினன். அதைக் கேட்ட கண்ணகி, "காதல, உமது போற்ரு ஒழுக்கத்தால் இல்வாழ்க்கைக்குரிய அற வோர்க்களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க்கெதிர்தல், விருந்தினர்ப் பேணல் முதலிய கடமைகளை யெல்லாம் இழந்தேனுயினும், உமது ஆணையின் வழுவாதொழுகக் கடமைப் பட்டேனுகலின், உம்முடன் வந்தேன்" என்ருள். கோவலன் அங்ஙனமுரைத்த பொற்கொடியை நோக்கி,

"குடிமுதற் சுற்றமுங் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீக்கி
நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னெடு போந்திங் கென்றுயர் களைந்த
பொன்னே! கொடியே! புனை பூங்கோதாய்!
நாணின் பாவாய்! நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!

இனி உன் காற்சிலம்பிலொன்றைக் கொண்டுபோய் விற்று வருகின்றேன்; வருமளவுந் தனிமையால் மயங்கா தொழிக" என்று அன்புடன் கூறி, அவளைத் தனிமையாக விட்டுப்பிரிதலை நினைத்து உளம் வெதும்பிக் கண்களில் நீர் பெருக, அக்கண்ணீரை அவள் கண்டால் இன்னும் வருந்து வளே என்று மறைத்துக்கொண்டே ஆயர்பாடியைக் கடந்து அகநகர்க்குட் போயினன். அன்று பிரிந்த கோவ லனைக் கண்ணகி மீண்டும் உயிருடன் கண்டிலள். நிற்க.

கோவலன் கொல்லப்படுதல்

கோவலன் செல்லும்போது ஓர் எருது அவனை நோக்கிப் பாய்ந்தது. இடையர்களுக்கு அது தீய சகுனமென்று தெரியும். கோவலன் அதை யறியானாகலின் கவனிக்காமலே சென்றான். பல வீதிகளையுங் கடந்து, கடைவீதி வழியாகச் செல்லும்பொழுது, உருக்குத்தட்டாரும் பணித்தட்டாருமாகிய நூறு பொற்கொல்லர் பின்னே வர, அரசனிடம் பெற்ற வரிசையோடும், கைக்கோலுடனும் ஒதுங்கி நடந்து எதிரேவந்த ஒரு பொற்கொல்லனைக் கண்டு, "அரசமாதேவி அணிதற்குரிய சிலம்பொன்று என்னிடம் உளது; நீ அதனை விலை மதிப்பாயோ?" என்றான். தட்டான் கோவலனை வணங்கி, "மடந்தையர் காலிலணியுஞ் சிலம்பை விலை மதிக்க யானறியேன்; மன்னவர் முடியிலணியும் அணிகலன்களைச் செய்யும் ஆற்றலுடையேன்" என்றான். அம்மொழி கேட்ட கோவலன் சிலம்பை அவனிடங் காட்டினான். பொற்கொல்லன் அச்சிலம்பின் வேலைத் திறமையைக் கண்டு, முன் அரண்மனையில் தான் திருடிக்கொண்டு வந்த சிலம்போடு அஃது ஒப்புமை யுடைத்தாகலின், தான் திருடியதை அரசனறியு முன்னமே, அச்சிலம்பே அரண்மனையிற் களவுபோயதென்றுரைத்தால் தன் மேலுள்ள ஐயம் நீங்கிவிடும் என்று தன் மனத்துள் துணிந்து கோவலனை நோக்கி, "இச்சிலம்பு அரசன் தேவிக்கு ஆகுமேயன்றி மற்றையோர்க்கு ஆகாது; நான் இதோ சென்று அரசனுக்குரைத்து வருகின்றேன்; அதுவரையில் இவ்விடத்திலேயே இருப்பாயாக" என்றுரைத்து, ஆங்கொரு குடிசையைக்காட்டி விரைந்து சென்றான். போகும்போது "எனது நற்காலமே இவனை என்னிடஞ் சேர்த்தது; நான் சிலம்பைத் திருடியதை நமதரசர் அறிவாராயின் என் கதி யாதாகும்? இனி எவ்வாறேனும் இவனே திருடனென்று மன்னன் துணியும்படி செய்துவிடல் வேண்டும்" என்று சிந்தித்துக்கொண்டே மன்னன் மாளிகையை அடைந்தான்.

அப்பொழுது, பாண்டியன் நெடுஞ் செழியன், தன்னிடம் ஊடல் கொண்ட தேவியை ஊடல் தணித்து மகிழ்விக்குமாறு தன் கோயிலை நீங்கி, அவள் கோயிலை நோக்கி விரைந்து சென்றான். அச்சமயம் பொற் கொல்லன் சென்று அடிபணிந்து, "அரசே! கன்னக்கோல் முதலிய கருவிகள் ஒன்றுமின்றி, தான் பயின்ற மந்திரமே துணையாகக் கொண்டு, வாயில் காலவரை மயக்கி, உள்ளே நுழைந்து, கோயிலின்கணிருந்த சிலம்பைத் திருடியவன் அச்சிலம்போடு அடியேன் குடிசைக்குள் இருக்கின்றான்" என்றான். பாண்டியன் அதுகேட்டு காவலாளரை அழைத்து, "எனது தேவியணியுஞ் சிலம்பு இவன் கூறிய கள்வன் கையிடத்ததாயின், அவனைக் கொல்லுதற்கு அச்சிலம்புடன் கொண்டு வருக" எனக்கூற, நினைத்தவன் வினைவிளைகின்ற காலம் வந்தமையால் சிறிதுந் தேரானாகிக் "கள்வனைக் கொன்று சிலம்பினை இங்கே கொணர்க" என்றுரைத்தான். உடனே, காவலாளருடன் பொற்கொல்லன் கோவலன் இருக்குமிடத்தை அடைந்து அவனை அவர்களுக்குக் காட்டி, கோவலனை நோக்கி, "இவர்கள் அரசன் ஆணையாற் சிலம்பு காண வந்தவர்களென்று சொல்லி அச்சிலம்பினை அவர்களுக்குக் காட்டி, அதன் இலக்கணங்களை உரைப்பவன் போலப் பொய்யாக நடித்துப் பின் அவர்களைத் தனியே அழைத்துச் சென்று, அரசனாணையையும் தன் கருத்தையும் வெளியிட்டு, "உங்கள் கடமையை விரைவிற் செய்யுங்கள்" என்றான். காவலாளர் கோவலனுடைய முகக்குறி முதலியவற்றை உற்று நோக்கி அவன் கள்வனல்லன் எனத் துணிவுகொண்டு, பொற்கொல்லனை நோக்கி, "இவன் கள்வனல்லன்; இவன் கொலை செய்யத்தக்கவனுமல்லன்" என மறுத்தனர். பொற்கொல்லன் மீண்டுங் காவலாளரை நோக்கிக் களவு நூலில் உள்ள முறையை உரைக்கத் தொடங்கி, "தீயொழுக்கத்தாற் களவு செய்துண்போர் மந்திர முதலிய எட்டையுந் துணையாகக் கொண்டு திரிவார்கள்; நீங்கள் இவன் வலியை

அழித்துத் தப்புவதன்றி இவன் மருந்திற் பட்டீராயின், அரசனுற் பெருந்தண்டமடைவீர்கள்; இது துணிபு; இன்னும் இத்தகைய கள்வர், தாங்கள் பழகிய மந்திரங்களை நாவால் ஓதுவார்களாயின் தேவர்களைப்போல நமது கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போவார்கள்; தங்கள் தெய்வத்தை மனதில் நினைப்பார்களாயின், தங்கள் கையிலகப்பட்ட பொருளை நம்மிடங்காட்டியும் தப்பி ஓடிவிடுவார்கள்; மருந்தால் மயக்குவாராயின் நாம் இருந்த இடத்தைவிட்டுப் பெயர்தலுமாகாது; கிடைப்பதற்கரிய பொருள் கிடைப்பதாயினும் நன்னிமித்தங் கண்டாலன்றித் திருடப்போகமாட்டார்கள்; அக்களவு நூலிற் கைதேர்ந்தவராயின், இந்திரன் அணிந்த மாலையாயினும் எளிதாகக் கொணர்வர்; இது தக்க இடமென்று அறிவார்களாயின், எவர் கண்ணிலும் அகப்படாமல் அவ்விடம் எய்துவார்; இது தக்க காலமென்று ஒரு பொருளைக் கைப்பற்றிவிடுவாராயின் அவர்களை மேலோராயினும் தடுக்கற்பாலரல்லர். கருவியைக் கொண்டு ஒருபொருளைக் கைப்பற்றிவிடுவாராயின், எவர்தாம் அதைக் காண்பார்! அவர்கட்கு இரவுமில்லை; பகலுமில்லை; மனிதர்கள் உள்ள இடங்களெல்லாம் அவர்களுக்கும் இடமே" என்று விளங்க உரைத்தான்.

வஞ்சகப் பொற் கொல்லன் கூறியவற்றைக் கேட்ட காவலாளரிற் பழிக்கஞ்சாத ஒரு மூடன், சிறிதும் ஆராய்ச்சியும் அச்சமுமின்றி அரசன் ஆணையை நிறைவேற்றினன். அந்தோ! கோவலன் மேனி இருதுண்டாகக் கீழே விழுந்தது.

"நண்ணு மிருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே
கண்ணகி தன்கேள்வன் காரணத்தால்—மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை."

ஆய்ச்சியர் குரவை

சிலம்பு விற்கச்சென்ற கோவலன் நிலை இவ்வாருக; இமயமலையின் மீது தன் கயற் கொடி நாட்டியவனும், ஏனைய முடி தரித்த மன்னவரும் குறுநில மன்னரும் தன்னடி வணங்க வெண் கொற்றக்குடையும், நவமணி முடியுஞ் சிங்காதனமுங் கொண்டு உலகெலாம் புரக்கும் ஒரு பெரு வேந்தனுமாகிய பாண்டியன் நெடுஞ்செழியனது அரண்மனையில் வழக்கமாக ஒலிக்குங் காலை முரசொலி அதிர்ந்தது. அதனைக் கேட்ட ஆயர்குலத் தலைவி மாதரி அன்று அரண்மனைக்கு நெய்யளந்து கொடுக்கும் முறையாகலின் அப்பொழுதே எழுந்து தனது காலைக்கடன்களை முடித்துத் தன் மகள் ஐயையுடன் கடைகயிறும் மத்தும் எடுத்துக்கொண்டு தயிர் கடையச் சென்ருள்; தயிர்த் தாழியிற் பால் உறையாதிருக்கக் கண்டாள்; பின் தொழுவத்திற்குச் சென்ருள்; ஏற்றின் கண்களிலிருந்து நீர் சொரிந்தன; பசுக்களின் கழுத்து மணிகள் அறுந்து விழுந்தன; மேலும் அவை மெய்ந்நடுங்கி அரற்றின; ஆட்டுக் குட்டிகள் துள்ளி விளையாடாமல் சோர்ந்து கிடந்தன; முதனுள் வெண்ணெயும் உருகா தொழிந்தது; இவற்றை யெல்லாம் பார்த்த மாதரி, தன் மகள் ஐயையை நோக்கி "மகளே, இத்தீய குறிகளால் நமக்கு ஏதோ துன்பம் வருமென்று தோன்றுகின்றது; ஆயினும் இவற்ருல் நீ சிறு கவலையுங் கொள்ளற்க; முன்பு ஆயர்பாடியில் மாயவன் பலராமனேடு ஆடிய பல நாடகங்கள் உள்ளன; அவற்றுள் வேற்கண்ணுள் பின்னையோடாடிய குரவைக் கூத்தினை மாதர்க்கணியாய கண்ணகியுங்காண இன்று ஆடுவோமாக; இக்கன்றுகளும், மறிகளும், பசுக்களும் இன்ப மெய்துக" என்று சொல்லித் தேற்றினள்.

மாதரியின் மொழிப்படியே ஆயர்குல மகளிரும் ஐயையுடன் கூடித் தங்கள் வழிபடு தெய்வமாகிய திருமாலை,

"மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே!
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே!"

எனத் துதித்தும், 'பாண்டியன் முரசம் என்றும் வெற்றியுடன் ஒலிப்பதாக' என்று மன்னனை வாழ்த்தியும் குரவைக் கூத்தினை முடித்தனர்.

---

13. சிலம்பால் விளைந்த கதை-II

கண்ணகி துயரம்

இங்ஙனம் ஆடிய குரவைக் கூத்து முடிந்த அளவில் மாதரியும் ஏனைய மகளிரும் இடையருது நீர் வளஞ் சுரக்கும் வையை நதிக்கரையை அடைந்து, அங்குத் திருமாலை மலர் முதலியவற்றைத் தூவி வழிபடுதற்கு அந்நதியில் நீராடச் சென்றார்கள். அக்காலத்து, உள் நகரிலிருந்து வந்த ஓர் ஆயர்குல மாது மதுரையில் நடந்த கொடுஞ் செயலை அறிந்தனளாகலின், அதை மாதரிக்கு உணர்த்துமாறு விரைந்தணுகினள்; அவ்வளவிற் கண்ணகியும் அருகிருக்கக் கண்டாள்; தான் அறிந்த கொடுஞ் செயலைத் திடீரெனக் கூற அஞ்சி ஒதுங்கினள்; அயலில் நின்ற தங்கள் மரபிற் குரிய ஓர் பெண்மணியிடங் கண்ணகியைக் குறிப்பாற் காட்டி நடந்தவற்றை உரைத்தாள். கண்ணகி அக்குறிப்பினை அறிந்து அவளிடஞ் சென்று, "நீ என்னைப்பற்றி ஏதோ பேசியதாக அறிந்தேன் அஃதியாது"? என்றாள். அவள் தன்னெதிரே பூங்கொம்பு போல நிற்குங் கண்ணகியின் அழகையும், இளமையையும், தனிமையையுங் கண்டு நெஞ்சழிந்து நாவெழாமல் மெய்ந்நடுங்கி வாய்புதைத்து ஒன்றுஞ் சொல்லாது நின்றாள். கண்ணகி, அவள் நிலையை அறிந்து, அவள் வாய் திறந்து கூறாளாயினும் ஏதோ சொல்ல முடியாத் துயர் விளைந்ததெனக் கருதி, "தோழி!

மதுரைக்குச் சென்ற என் காதலன் இன்னும் வரக் காணேன்; ஏதோ வஞ்சகம் நடந்திருக்கின்றது; உலைக் களத்திலிருந்து ஊதுகின்ற துருத்திவாயினும் விரைவாக எனக்குப் பெருமூச்சு எழுகின்றது; இவர் பேசிய மறை மொழி எளிதன்று; அதற்குத் தக என் தலைவனும் இன்னும் வரக்காணேன்; என் மனம் மறுகுகின்றது; இவர் குறிப்பு இன்னதென் றறிகிலேன்" என்றிரங்கினள்.

இவளிரங்கியதைக் கண்ட அம்மாது, "இனி நாம் மறைத்து ஆவதென்? எப்படியும் இவள் அறிந்தே தீரு வாள்; மறைப்பதாற் பயனில்லை" என்று நினைத்துக் கண்ணகியைப் பார்த்து, "நின் கொழுநனைச் சிலம்பு திருடியவனென்று அரசன் ஏவலாற் காவலாளர் வெட்டி வீழ்த்தினர்" என்றாள். அதுகேட்ட கண்ணகி எங்ஙனஞ் சகிப்பாள்? "தாய் தந்தையரையும், மாமன் மாமியரையும், உற்றார் உறவினரையும் ஒரு பொருட்டாக எண்ணமற் காதலனடி நிழல் வாழ்வே பேரின்பமெனக் கொண்டு, யாமத்தில் நகர் துறந்து எய்தரிய துன்பங்களை எய்தி மதுரையை அடைந்த எனது வாழ்வு இவ்வளவோ!" என்று வேரற்ற மரம் போல நிலத்தில் விழுந்து புரண் டாள்; மூர்ச்சை அடைந்தாள்; சற்று நேரங் கழித்து எழுந்தாள்; கையால் முகத்தில் அறைந்து கொண்டாள்; பலவாறு புலம்பினள்; பின் ஆங்குத் திருமாலை வழி படுதற்குத் திரண்ட ஆயர்குல மாதர்களை அழைத்து, "நீங்கள் கேளுங்கள்" என்று சொல்லிக் கதிர்ச் செல்வனை நோக்கி, "காய் கதிர்ச் செல்வனே! நீயறிய என் கணவன் கள்வனோ?" என்றாள். அப்பொழுது அனைவருங் கேட்க, "நானறிய நின்கணவன் கள்வனல்லன்; அவனைக் கள் வன் என்ற இவ்வூரை விரைவில் தீப்பற்றி அழிக்கும்" என்றோர் அசரீரி தோன்றியது. உடனே கண்ணகி மற் றொரு சிலம்பைக் கையிலேந்தி மதுரையின் அகநகரை நோக்கி விரைந்து சென்றாள்.

கண்ணகி கணவனைக் காணல்

கண்ணகி புலம்பிக்கொண்டே விரைந்து சென்றாள். தனியாகப் புலம்பிக்கொண்டு வீதிவழியாகச் செல்லும் கண்ணகியின் நிலையைக் கண்ட மதுரை மாநகரத்தாருட் சிலர், “இறக்குமளவும் நீங்காத துயரத்தை இம்மாதரசிக்குச் செய்து என்றுங் கோடாப் பாண்டியன் செங்கோலும் வளைந்ததே! இதனால் யாதுவிளையுமோ!” என்றார். வேறு சிலர், “மதிபோலுங் குடையையுடைய மன்னர் மன்னனாகிய வழுதியின் செங்கோல் அழிந்தது; உலகத்திற்கு அறத்தையும் பகைவர்க்கு மறத்தையும் புரியும் வேற்படை தாங்கிய பாண்டியனுடைய தண்மையைச் செய்யுங் குடையும் வெம்மையை விளைத்தது” என்றார். இன்னுஞ் சிலர், “செம்பொன்னாற் செய்த சிலம்பொன்றினைக் கையிலேந்திய இத்தெய்வம் துன்பக்குறியுடன் நமது நகருள் வந்து தோன்றியதே! இதனால் விளையும் இன்னல் யாதோ!” என்றார். மற்றுஞ் சிலர், “அரிபரந்த கண்களையுடைய இம் மாது தெய்வ ஆவேசங் கொண்டவள்போல அரற்றுகின்றனளே! இது யாது விளக்குமோ!” என்றார். இங்ஙனம் பலர் பல வாறுரைத்து அவள் நிலைமைக்கு இரங்கினார்கள்.

அரசன் செங்கோல் வழுவிய செய்தி நகரமுழுதும் பரவியது; கதிரோனும் மேற்றிசையில் மறையும் மாலைக் காலம் அணுகியது; அப்பொழுது நகரமக்களிற் சிலர் கண்ணகியைப் பின்தொடர்ந்து சென்று அவள் கணவன் வெட்டப்பட்டுக் கிடக்கும் இடத்தைக் காட்டினார்கள்; உடம்பெலாம் உதிரம் ஒழுகப் பூமியிற் கிடக்கும் காதற் கொழுநனைக் கண்டாள் கண்ணகி. தான் அவனைக் கண்டும், தன்னையவன் காணப் பெறு நிலையை யெய்தியது கண்டு கலங்கினாள்; கண்ணீர் சொரிந்தாள்; அவன் மேனியில் விழுந்து புரண்டாள்; பூங்கொடி போலத் துவண்டு நின்றாள். “ஆருயிர்க் கணவ! சிலம்பினை விற்று வரும் வரையில் தனிமையால் வருந்துதலை ஒழிவாய்,” எனத்

தேற்றிச் சென்ற நீர், இன்று என் தனிமையைக் கண்டும் இரங்காதொழிந்த தென்னே!" என்றாள்; "கண்ணின் மணியனையீர்! இந்தக் கோலங் காண்பதற்கோ புகார் நகரி னின்றும் போந்தேன்" என்றாள்; "என் தெய்வமே! பொன்னரிமாலை அணிந்து திகழும் உமது மார்பு புழுதியிற் படிந்து கிடக்கின்றதே! இதனைக் காண யான் என்ன பாவஞ் செய்தேனோ!" என்றாள்; "இத்தகைய தீமை நிகழ முன் செய்த வெவ்வினை இது என்றுரைப்பார் இந்நகரில் யாருமிலரோ!" என்றாள்;

இங்ஙனம் கண்ணகி அழுது கொண்டே அவனது மார்பைத் தழுவிக் கொண்டாள். அவ்வளவில் அவன் உயிர் பெற்றெழுந்து நின்று "நிறைமதிபோன்ற நின் முகம் ஒளி மழுங்கியதே" என்று சொல்லி, அவள் கண் ணீரைத் தன்கையால் மாற்றினான். கண்ணகியும் தன் காதலனடியிற் பணிந்து அவனடிகளை இருகரங்களாலும் பற்றிக்கொண்டாள். அவன் கண்ணகியைப் பார்த்து "நீ இங்கிருக்க" என்றுரைத்துத் தெய்வ வுலகத்தை அடைந் தான். கண்ணகியும், அரண்மனை வாயிலை அடைந்து காவ லாளனை நோக்கி, "தெளிந்த அறிவும் புண்ணியமும் இன்மையான் நீதியிற் பிழைத்த மன்னன் வாயிலைக் காக் குங் காவலனே, கணவனை யிழந்த ஒருத்தி ஒற்றைச் சிலம் பைக் கையிலேந்தி வாயிற் கடையில் வந்தனள் என்று நின் மன்னனுக்கு அறிவிப்பாய்" என்றனள். காவலாள னும் அரசன் திருமுன்படைந்து வணங்கிக் கூறுவான்:— "அரண்மனை வாயிலில் ஒரு பெண் சிலம் பேந்திய கையுடன் நிற்கின்றாள்; கணவனை யிழந்தவளென்று கூறு கிறாள்; அவள் மகிடன் தலையைப் பீடமாகக் கொண்ட கொற்றவையும் அல்லள்; சிவபிரானை ஆடல் கண்ட காளியும் அல்லள்; அடங்காச் சீற்றமும் ஆறாத்துன்பமும் உடையவளாகக் காணப்படு கின்றாள்" எனத் தெரிவித் தான். அரசன், "அவளை இவ்விடம் அழைக்க" என்றான். காவலாளன் கண்ணகியை உள்ளே போக விடுத்தான்.

சென்ற கண்ணகி மன்னவன் முன்னர்ப் போய் நின்றாள். அரசன், "மடக் கொடியே, அழுத கண்ணீருடன் என் முன் வந்த நீயார்?" என்றான். கண்ணகி "தெளிந்த அறிவில்லாத காவல, யான், தன்னை அடைக்கலமாக அடைந்த சிறு புறாவின் உயிரைக் காத்தற் பொருட்டுத் தனதுடம்பை அரிந்து கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியும், தன் மகனேறிச் சென்ற தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டு உயிரிழந்த பசுக் கன்றின் உயிரை மீட்டுக் கொடுக்க முடியாமையால், கன்றிழந்த தாய்ப் பசுவின் துயரை யானடைவேனென்று உளத்தே கொண்டு தன் குலத்துக்கொரு மகனைத் தேர்ச்சக்கரத்தின் கீழ் வைத்துத் தேரை நடத்திய மனு நீதி கண்ட சோழனுமாகிய இப்பெரியோர்களால் ஆளப்பட்ட சோழவள நாட்டினள்; பழிப்பற்ற புகழ் சான்ற மாசாத்துவான் மருகி; சிலம்பினை விற்றுப் பொருள் தேட வந்து நின்னாற் கள்வன் என்று கொல்லப்பட்ட கோவலன் மனைவி. கண்ணகி என்பது என் பெயர்" என்று சொல்லிக், "காவல, நீ முறை தவறி என் கணவனைக் கொன்றது ஏன்?" என்றாள். அரசன் அது கேட்டு, "கள்வனைக் கோறல் எப்படி முறை தவறியதாகும்?" எனக், கண்ணகி, "அரசே, நீ நன்கு விசாரியாது செய்தனை; நீதியைப் பற்றாது அநீதியைப் பற்றினாய்; நீ செய்தது பிழையென்று காட்டினால் என் கணவனுயிரை மீட்டுத்தர வல்லையோ? எனது காற்சிலம்பின் பரல் மாணிக்கம்." என்றாள். எனலும், பாண்டியன், "இது மிகவும் பொருத்த முடையதே; என் சிலம்பின் பரல்முத்து" என்று, உடனே காவலாளர் கொணர்ந்த சிலம்பை வருவித்து எதிரே வைத்தான். கண்ணகி அதனை உடைத்தாள். உள்ளே இருந்த மாணிக்கப் பரல் தெரித்தது. கண்டான் காவலன்! "அந்தோ! என் நினைந்து என் செய்தேன்!" என்றான். "வழிவழியாகப் பழியென்பதை அறியாத பாண்டியர் குலத்திற்குத் தீராப்பழி விளைத்தேனே! வஞ்சகப்

பொற்கொல்லன் வார்த்தையைச் சிந்தையிற் கொண்டேனே! இத்தகைய இழி தொழிலைச் செய்த யானோ அரசன்? யானே கள்வன்" என்று அரியணையில் மயங்கி வீழ்ந்தான். அப் பொழுதே ஆருயிர் நீத்தான். அவ்வளவிற் கோப்பெருந்தேவி குலைகுலைந்து நடுநடுங்கி, "தந்தை முதலியோரை இழப்பினும் அம்முறையில் மற்றவர்களைக் கொள்ளலாம்; கணவனை இழந்தோர்க்கு வேறு கதி யாது?" என்று சொல்லிக் கண்ணகியின் இரண்டு பாதங்களையும் பற்றிக்கொண்டு தொழுதாள்.

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையிற் றனிச்சிலம்புங் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றான்அக் காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்.

---

14. வேள் - பாரி

(ஒரு பகுதி)

[இராவ்சாஹிப் மு. இராகவையங்கார் அவர்கள்]

பழைய வேளிருடைய வரலாறுகளுட் பாரி என்னும் பெருந்தகையின் சரித்திரம் இனிமையும் பெருமையும் இரக்கமுமுடையதாகும். மாரியன்ன வரையா ஈகையால் உலகமுள்ளளவும் ஓங்குபுகழ் நிறுவிய தமிழ் வள்ளல்களில் இவ்வேளிர் தலைவனையே முதல்வனாகச் சொல்லத்தகும். தமிழ் மூவேந்தரும் மற்றைச் சிற்றரசர்களும் போல, இப் பாரி, நாடும் பொருளும் நன்கு படைத்தவன் இல்லையாயினும், இவனது வள்ளன்மை அவரெல்லாரையும் பெரிதுங் கீழ்ப்பட வைத்தமையால், இவனது பெருமை மலைமேல் விளக்குப்போல் விளங்குவதாயிற்று. இவ்வேளிர் தலைவனது வள்ளன்மையையே, கொடைப் பெருமைக்கு ஓர் எல்லைக் கல்லாகப் பிற்காலத்துப் பெரியோர்களுங் குறித்து வைப்பாராயினர். எத்தனையோ வள்ளல்கள் முன்னாளில்

விளங்கி யிருப்பினும், "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரில்லை" என்னும் அருமைத் திருவாக்கால் குறிக்கப்பட்டவன், இப்பெருந்தகையே அன்றோ? முற்காலத்தே புலவரையும் இரவலரையும் இவன் எவ்வாறு போற்றி வந்தவனென்பதும், பண்டைச் செந்தமிழ்ப் புலவர் இவனது தடங்கருணையையும் பெருங் கொடையையும் எங்ஙனம் புகழ்ந்துள்ளாரென்பதும், பிற வரலாறுகளும் சங்க நூல்களில் இவ்வள்ளலைப்பற்றிய பாடல்களை நோக்குவார்க்கு நன்கு விளங்கும். அந்நூல் களிலும் பிறவற்றிலும் இவனது வாழ்க்கை பற்றிக் கூறும் வரலாறுகளைச் செவ்வணம் ஆராய்ந்து ஸேது ஸம்ஸ்தான வித்வான் ஸ்ரீ. ரா. இராகவையங்கார் அவர்கள் செந்தமிழ்ப் பத்திரிகை இரண்டாந் தொகுதியில், ஒளவையார், பாரி மகளிர் என்ற வியாசங்களிலே நன்கு விளக்கிக் காட்டி யிருக்கிறார்கள். அவர்கள் கூற்றை இவ் வியாசத்துக் கேற்ப ஒழுங்குபடுத்துக் கூறிப், பின்பு இவ்வள்ளலைப்பற்றி யாமறிந்த சில விசேடங்களையும் எழுதுவோம்.

பாரி என்பான், தமிழ் நாட்டிற் பண்டைக் காலத்தே பெரும்புகழ் பெற்று விளங்கிய வள்ளல்கள் எழுவருள் தலைமை வாய்ந்தவன்; வேள் என்னும் பட்டம் பெற்ற உழுவித்துண்போர் வகையினன்; செல்வமிக்க முந்நூறு ஊர்களையுடைய பறம்பு நாட்டுக்குத் தலைவன். இவன் பறம்பென்னும் பெயருடைய வளமலைக்கண்ணே வலி யுடையதோர் பேரரண் அமைத்து, அதனைத் தன் அரசிருக்கையாக்கி, அதன்பாற் சிறக்க வீற்றிருந்தோன். இவனது மலையரண், பெரிய அழகும் அரிய காவலும் உடையது எனவும், பகைவர் முற்றியகாலத்தும், வறங் கூர்ந்த காலத்தும் தன்னகத்து வாழ்வார் இனிதுண்டு செருக்குதற்குரிய மூங்கில் நெல்லும் பலாப்பழமும் வள்ளிக் கிழங்கும் நறுந்தேனும் தன்பால் மிக்க தெனவும், என்றும் வற்றாதனவும் பேரினிமை பயப்பனவுமாகிய குளிர்ந்த நீரையுடைய பைஞ்சுனைகளை தன்கண் உடையதென

வும் சான்றோர் கூறுவர். இப்பறம்பு பாண்டி நாட்டதென்பது, "வரிசைத் தமிழ்புனே பாரியும் பாண்டியன் மண்டலமே" என்னும் பாண்டிமண்டல சதகச் செய்யுளாற் புலப்படுகிறது. இப்பாரி, நல்லிசைப் புலவர்களால் மேம்படுத்தேத்தப்பட்ட கபிலர் என்னும் புலவர்தலேவர்க்கு உயிர்த்தோழனனவன்; ஔவையாராலும் பேரன்பு பாராட்டப்பட்டவன். இவன், நிழலில்லாத நீண்ட வழியில் தனிமரம்போல் நின்று, தன்னே அடைந்த அறிஞர் மடவர் வலியர் மெலியர் யாவர்க்கும் இன்னருள் சுரந்து, மூவேந்தரினும் மிகுதியாக நன்கு வழங்கிய வள்ளியோன். இவனது பெருங் கொடைக்குக் கபிலர் மாரியினேயே பல்லிடத்தும் உவமை கூறுவர்.

இவன் ஒருநாள் பொற்றேரூர்ந்து ஒரு காட்டிற் செல்லும்போது, முல்லேக்கொடியொன்று படர்தற்குக் கொழுகொம்பின்றி வெற்றிடையிலெழுந்து காற்ருல் தளர்ந்து நடுங்குவது கண்டு, அவ்வோரறிவுயிர்மாட்டும் உண்டாகிய பேரருளால், அஃது இனிது படருமாறு, தனது பொற்றேரை அதன் பக்கத்திட்டுத் தன் இணேயடி சிவப்ப நடந்துபோயினன் என்பர். தன் அரசிருக்கையாகிய பறம்புமலே ஒழியத் தன்னுட்டு முந்நூறு ஊர்களேயும் இவன் இரவலர்க்கு அளித்தனன் என்று கபிலர் கூறுவர்.

இவனது வரையா வண்மை, 'கொடுக்கிலாதானேப் பாரியே என்று கூறினுங்கொடுப் பாரிலே' என்று சைவ சமயாசாரியராகிய சுந்தரமூர்த்தி நாயனராலும் எடுத்தாளப்பட்டது என்பதொன்றே இவனது வள்ளற்றன்மையைத் தெள்ளிதிற் புலப்படுத்தும். இங்ஙனம் மாரிபோன்ற வரையா ஈகையால் இவன் யாரினுஞ் சிறக்க விளேத்த பெரும்புகழ்க்கு அழுக்காறு கொண்டும், தமக்கு மகட் கொடுக்க மறுத்தமை பற்றியும் தமிழ்மூவேந்தரும் ஒருங்கு கூடிப் படையெடுத்துப் போய், இவனது பறம்பாகிய மலேயரணே நெடுங்காலம் முற்றுகை செய்ய, அதனல் அவ்வரண் அடைமதிற்பட்டது. அப்போது, வேள்பாரிக்கு உயிர்த்

துணைவராய் அக்காலத்தும் அங்கிருந்த கபிலர் என்னும் புலவர்பெருமான் கிளிகளை வளர்த்து விடுத்து, அரணுக்கு அப்புறத்தே விளைநிலங்களில் உள்ள நெற்கதிர்களை நாளுங் கொணரச் செய்து, அங்கிருந்த குடி படைகளை அருத்திப் போரால் தளராவண்ணம் பாதுகாத்து வந்தனர்.

பின் கபிலர், பறம்பை முற்றிய மூவேந்தரையும் நோக்கி, "நீவிர் முத்திறத்தீரும் ஒருங்கு கூடித் தானை யானை குதிரை முதலிய படைகொண்டு எத்துணைக்காலம் முற்றிப் பொருதீராயினும், இப் பாரியுடைய பறம்பு உம்மாற் கொள்ளுதல் அரிது. இவனது முந்நூறூரையும் இவன்பாற் பாடிப்பெற்ற பரிசிலர்போல நீவிரும் பாடினராய்வரின், கொள்ளுதல் எளிது" என்று, இவனது புரலவர்க் கருமையும் இரவலர்க்கு எளிமையுமாகிய பெருநிலையைத் தம் இனிய பாடலான் அறிவிக்க, அதனால் அவ்வேந்தர், இவனை எதிர்த்து வெல்லுதல் அரிதென்ப தோர்ந்து, இவனோடு பொருதற் கஞ்சி ஓடினர் என்பர். இதன்பின், மூவேந்தரும் ஒருங்கு கூடி வேறொரு சூழ்ச்சி செய்து பாரியை வஞ்சித்துக் கொன்றனர். இதனை, கக௨—ஆம் புறப்பாட்டுரையில், "ஒருவனை மூவேந்தரும் முற்றியிருந்து வஞ்சித்துக் கொன்றமையின்" என வருதலால் அறிக. அவ்வேந்தர் மூவரும் இவனியல்புக்குத்தகப் பரிசிலர் வேடம் பூண்டோ, பிறரைப் பரிசிலராக விடுத்தோ இவனை இரந்து தம்மகப் படுத்திக் கொன்றனராதல் வேண்டும்.

இங்ஙனம், புரவலர்க்கு இன்னனாய், இரவலர்க்கு இனியனாய் விளங்கிய நல்லிசை வள்ளலான வேள்பாரி, மூவேந்தர் சூழ்ச்சியால் இறந்த பின்னர், அவனுக்கு இன்னுயிர்த் தோழராகிய புலவர் பெருமானான கபிலர், அவ்வள்ளலை நீத்துத் தமித் துயிர்வாழ்வதற்கு மனமிலராயினும், அவனுடைய அறிவுடை மகளிரைக் காப்பதற்கு வேறொருவரும் இலராதல் பற்றி உயிர்கொண்டு நின்று, அம்மகளிர்க்குத் தக்க அறிவும் பெருமையுமுடைய கணவரைத் தேட நினைந்து, அவர்களுடன், அவர்கட்குந் தமக்கும் பேரன்பு

மிக்க பறம்பினை விடமுடியாமலே விடுத்து, அப்பாரியை நினையுந் தோறும், பறம்பினைத் திரும்பி நோக்குந்தோறும், உள்ளம் நெக்கு நெக்குருகி, கண்ணீர் வார நின்று, ஆற்றெணாத்துயராற் பொங்கி யெழுந்த அன்புடைப் பாடல்களால் பாரியையும் பறம்புமலையையும் புகழ்ந்துகொண்டே சென்று ஒரூரிற்றங்கினர். அங்கு அன்றிரவு நிலாத் தோன்றியபோது அவருடனிருந்த பாரியின் அருமை மகளிர், தாம் இதற்கு முந்திய நிலாக் காலத்தில் தமது அரசு நிலையிட்ட திருவுடை நகர்க்கண்ணே இனிது மகிழ்ந்து விளையாடியதும், அடுத்த நிலாக்காலத்துத் தாம் தந்தையிழந்து, தண்பறம்பிழந்து, தமியராய், துச்சி லொதுங்கித் துயர்மிக நின்றதும் தம்முள்ளத்தே தோன்ற, அப்போது மனமுருகி,

“அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேம், எங் குன்றும் பிறர்கொளார் ;
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எங்
குன்றுங் கொண்டார் யாம் எந்தையு மிலமே”

என்னும் பாடலைப் பாடினர். இப்பாடலால் இச்செய்யுள் செய்ததற்கு ஒரு மாதத்துக்கு முன், பாரி, தன் அரசிருக்கையாகிய பறம்பின்கண் தன்மகளிர் முதலியோருடன் இருந்து வாழ்ந்துவந்தனனென்பது புலப்படும். இப்பாடல் சங்கத்தாராற் றொடுக்கப்பட்ட புறநானூற்றில் ஒன்றாகக் காணப்பட்டவாற்றால் இம்மகளிர் நல்லிசைப் புலவராதல் உணரப்படும்.

பாரிமகளிர் இருவர் என்பது மேலே புலப்படுதலின், ஈண்டும் ‘பாரி மகளிர் பாடியது’ எனப் பொதுப்படக் கூறப்பட்டமைபற்றி, அவ்விருவருமே செந்தமிழ்ப் புலமையிற் சிறந்தவரென்பது தெளிவாகும். புலவரிருவர் சேர்ந்து ஒரு பாடல் பாடுவது முன்னை வழக்கே. இம்மகளிரது செந்தமிழ்ப் புலமை, தம் அரும்பெறற் றந்தையாகிய வள்ளற் பாரிக்கு ஆருயிர்த் தோழரான கபிலர் என்னும் புல

வர் தலைவர்பாற் பெற்றதாகும். இதன்மேற் கபிலர் அவ் வூரை விடுத்து இளவிச்சிக்கோ என்பவனிடஞ் சென்று, இம்மகளிரது உயர்குடிப் பிறப்பு முதலியவற்றை எடுத் துரைத்து இவர்களை மணஞ்செய்து கொள்ளும்படி அவ னைப் பாடிவேண்ட, அவனுடம்படாமையால், இருங்கோ வேள் என்பானிடஞ் சென்று, அவனையும் அவ்வாறு வேண்ட, அவனும் அங்ஙனமே உடம்படானாய் மறுக்க, இதற்காக அவனை முனிந்துபாடி, பாரி குடிக்கும் மூவேந் தர்க்கும் உண்டாகிய பகைமைபற்றி அரசரொருவரும் இவர்களை மணஞ் செய்துகொள்ள இயையாமையால் மனம் நொந்து, கபிலர் அம்மகளிரைத் தமக்கினிய பார்ப்பார் சிலர்பாற் படுத்து, பாரியின் பிரிவாற்றாது வடக்கிருப்பா ராயினர். இதற்கிடையில், கபிலர் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்ற சேரமான்பாற் சென்று, அவனைப் பத்துப் பாடல்களால் புகழ்ந்துபாடி நூறாயிரங் காணமும், அவன் மலைமேறிக் கண்டு கொடுத்த நாடும் அவன்பாற் பெற்றனர் எனத் தெரிகின்றது. இதுவே பதிற்றுப் பத்தி னுள் ஏழாம் பத்தாவது. இவர், பாரி யிறந்த பின்னே தான், அவனது நற்குண நற்செய்கைகள் செல்வக் கடுங்கோவாழியாதனிடமும் இருப்பனவாகக் கேட்டு அவ னைக் காணச் சென்றனராவர். இதனை,

'மலர்ந்த மார்பின் மாவண் பாரி
முழவுமண் புலர இரவலர் இனைய
வாராச் சேட்புலம் படர்ந்தோன்'

என்னும் பதிற்றுப்பத்தான் அறிக. இச்சேரன்பால் இவர் சென்ற காலத்து இப் பாரிமகளிரும் உடனிருந்தனர் போலும்.

மேற் கூறியவாறு தம் முயிர்க்குயிராயிருந்த வள்ள லிறந்ததன்பின் உலகத்தே தாம் உயிர்வாழ ஒருப்படாது 'பாரி, நீயும் யானுங்கலந்த நட்பிற்குப் பொருந்த யானும் நின்னுடன் கூடப் போதற்கு மனமியையாமல், "நீ

ஈண்டுத் தவிர்க" என்று சொல்லி, இவ்வாறு மாறுபட்டணையாதலின், நினக்கு நான் பொருந்தினவனல்லேன். அதனால் நீ எனக்கு உதவிசெய்த காலங்களிலும் என்னை வெறுத்திருந்தனைபோலும்; இங்ஙனமாயினும் இப்பிறப்பின்கண் நீயும் நானுங்கூடி இன்புற்றிருந்தவாறுபோல மறுபிறப்பினும் நின்னொடு கூடி வாழ்தலை விதி கூட்டுவதாக" என்ற கருத்துப்பட ஒரு செய்யுளைப்பாடி உள்ள முருகி, வடக்கிருந்து உயிர்நீத்தனர். 'நீ ஈண்டுத் தவிர்க' என்று பாரி கூறியிருத்தலால், அவனுடன் தாமும் இறக்கத்துணிந்திருந்த கபிலரை அவன் தடுத்தனன் என்பது உணரப்படும். இங்ஙனம் கபிலரைத் தடுத்தது பாரி, தன் மகளிரை இப்புலவரைக் கொண்டு வாழ்க்கைப்படுத்தற்குப் போலும்.

---

15. கிள்ளி வளவன்

[நாவலர்–பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டார்]

கிள்ளிவளவன் கரிகால் வளவன் மகனென்று கருதப்படுகின்றான். நலங்கிள்ளி, மாவளத்தான் என்னும் இருவரும் இவன் தம்பியர். புகார்நகரில் இருந்தவனாக மணிமேகலையிற் கூறப்படுகின்ற சோழ மன்னன் இவனே. அக்காப்பியத்திலிருந்து இவனுக்கு நெடுமுடிக்கிள்ளி, மாவண்கிள்ளி, வடிவேற்கிள்ளி என்னும் பெயர்களும், இவனது தேவியாகிய சீர்த்தி என்பாள் மாவலி வம்சத்திற் பிறந்தவள் என்பதும், இவள் வயிற்றுப் பிறந்தோன் உதயகுமரன் என்பதும் அறியப்படுகின்றன. இவன் நாக நாட்டரசனாகிய வளைவணன் என்பானது மகளாகிய பீலிவளையை மணந்து ஓர் மகனைப் பெற்ற செய்தியும் அதிலிருந்து தெரிகிறது.

பல புலவர்கள் இவனைப் பாடிய புறப் பாட்டுக்களிலிருந்து இவன் மிக்க வீரமும், வன்மையும் உடையவனென்

றும், புலவர்கள் தன்னை நெருங்கிக்கூறும் அறிவுறூஉக் களைச் செவிமடுத்து அந்நெறி யொழுகுதலால், தன் குறை களைப் போக்கிவந்தவன் என்றும் தெரிகிறது.

மணிமேகலையிலுள்ள ஓர் வரலாறு, முறை செய்தலில் இவனுக்கிருந்த உயர்ந்த கருத்தைப் புலப்படுத்துகிறது. இவன் மைந்தனாகிய உதயகுமரன், பௌத்த சமயத்தைச் சார்ந்து துறவு பூண்டிருந்த மணிமேகலை என்னும் தவ மகளைக் காதலித்து அவளைக் கைப்பற்றுவான் இரவிற் சென்றபொழுது ஓர் விஞ்சையனால் வெட்டுண்டிறந்தனன். இச்செய்தி அந்நகரத்திருந்த முனிவர்களால் இவனுக்கு அறிவிக்கப்பட்டது. இதனைக் கேட்டலும், இவ்வளவன், தன் அமைச்சனும் படைத்தலைவனுமாகிய சோழிய ஏனா தியை நோக்கி,

'மாதவர் நோன்பும் மடவார் கற்பும் காவலன் காவல் இன்றெனில் இன்றாகும்; தன் மகனைப் புவியிலே கிடத்தி அவன்மீது தேர்க்காலைச் செலுத்தி முறைசெய்த அரசர் பிரான் வழியில் ஓர் தீவினையாளன் பிறந்தானென்பதை மற்றை அரசர்கள் கேட்கு முன்னம் அவனைப் புறங் காடடைவிக்க' என்று கூறினன். தன் மகன் இறந்ததற் குச் சிறிதும் துயருறாது இவன் கூறிய இம்மொழிகள், முறையினை முட்டாமற் செலுத்தும் பண்பு இம் மரபின ருக்கு இயல்பாதலைக் காட்டுகின்றன.

புறப்பாட்டிற் காணலாவதொரு செய்தி இம்மன்னற் குப் பெரிய மறுவினை யுண்டாக்குவ தென்பதில் ஐயமில்லை. அச்செய்தியாவது; வரையாத வள்ளன்மையால் உலகமுள் ளளவும் அழியாத புகழினைப் படைத்த கடையெழு வள்ளல் களில் ஒருவனும், திருக்கோவலூரை அரசிருக்கையாக உடையவனுமாகிய மலையமான் திருமுடிக்காரியின் மிக்க இளமையுடைய மக்களைப்பற்றிக் கொணர்ந்து யானைக் காலில் இடறுவிக்கத் துணிந்தமையேயாகும். இவன் அங் ஙனம் செற்றங் கொண்டமைக்குக் காரணம் இதுவாகு மென்று கருதப்படுகின்றது; கிள்ளிவளவன் புகாரிலிருந்து

அரசாண்டபொழுது நெடுங்கிள்ளி என்னும் சோழ மன்னன் உறையூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டு வந்தனன். கிள்ளிவளவனுக்கும் நெடுங்கிள்ளிக்கும் பகைமை மூண்டது. கிள்ளிவளவன் தம்பியும் இளவரசனுமாகிய நலங்கிள்ளி, நெடுங்கிள்ளியுடன் பல இடங்களிற் பொருது, முடிவில், காரியாறு என்னுமிடத்தில் நடந்த போரிலே அவனைக் கொன்றனன். அப்பொழுது நெடுங்கிள்ளிக்குத் துணையாக அங்கு வந்தெதிர்த்த சேர பாண்டிய மன்னர்களும் நலங்கிள்ளியால் முறியடிக்கப்பட்டனர்.

இங்ஙனம் நெடுங்கிள்ளியை வென்றபின்பு உறையூரும் கிள்ளிவளவற்கும் நலங்கிள்ளிக்கும் உரியதாயிற்று. இது நிற்க, திருமுடிக் காரியானவன் பெருவள்ளலாக விளங்கியதன்றி, ஒப்பற்ற வீரனாகவும் திகழ்ந்தான். அதனாலே, மூவேந்தர்கள் தமக்குள்ளே போர் நேர்ந்த காலையில் காரிக்குப் பெரும் பொருள் கொடுத்து அவனைத் தமக்குப் படைத் துணையாகும்படி தனித்தனி வேண்டுவர். காரியும் தளர்ந்தவர் பக்கல் துணையாகச் சென்று பொருது, தான்பெற்ற பொருளனைத்தையும் பரிசிலர்க்கு வழங்கிவிடுவான். இச் செயல் காரிக்கேயன்றி அவன் குடியிற் பிறந்தார் பிறர்க்கும் இயல்பாயிருந்தது. காரியானவன் நெடுங்கிள்ளிக்குத் துணைபுரிந்தமையாலோ, அவன் மக்களுள் ஒருவன் நெடுங்கிள்ளியின் மகனுக்கு அரசுநிலையிட முனைந்தமையாலோ கிள்ளிவளவனுக்கு மலையமான் மக்களிடத்துத் தகுதியில்லாத சீற்றமுண்டாயது. இக்கொடுஞ்செயல் நிகழ்வுதி அங்கு வந்திருந்த கோவூர்கிழார் என்னும் புலவர் கண்டு பதைபதைத்து இரங்கி, அரசனை நோக்கி, 'நீதான் ஓர் புறுவின் அல்லலன்றியும் பிறவுயிர்களுக்குற்ற துன்பத்தையும் தீர்த்தற்கு உயிர்க்கொடை பூண்ட சோழன் மரபினுள்ளாய்; இவர் தாம், அறிவால் உழுதுண்ணும் கற்றோரது வறுமைப் பகுத்துண்ணும் தண்ணிய அருளையுடையாரது மரபினுள்ளார்; இவர் இப்பொழுது களிற்றைக் கண்ட வியப்பால், முன்பு வெருவியழுத அழுகையை மறந்திருக்கின்ற சிறு

பிள்ளைகள் ; இம்மன்றினை வெருண்டு நோக்கி முன்பு அறியாத புதியதோர் வருத்தத்தையும் உடையர் ; இதனைக் கேட்டனையாயின், நீ விரும்பியதைச் செய்க' என்னும் பொருளமைந்த ஓர் பாட்டினைக் கூறினர்.

இதனைக் கேட்ட கிள்ளிவளவன் தன் குற்றத்திற்கு நாணி, அப்பிள்ளைகளைக் கொல்லாது விடுத்தனன். வளவன் முதலிற் செய்யத்துணிந்த காரியம்பற்றி அவனை எத்துணையும் எள்ளுதல் பொருந்து மேனும், பின்பு சான்றோர் சொற்கேட்டு அதனைச் செய்யாதொழிந்தமை கருதி அவனைப் பாராட்டவே வேண்டும்.

இனி, இவனுக்குச் 'சிறுகுடிகிழான் பண்ணன்' என்பான் சிறந்த நட்பாளனாயிருந்தான். பண்ணன்மீது இவ்வரசர் பெருந்தகை பாடிய செய்யுளொன்று புறநானூற்றில் உள்ளது. அச் செய்யுளிலிருந்து பண்ணனுடைய ஈகைத் தன்மையும், அவன்பால் வளவன் பூண்ட நட்பின் பான்மையும், வளவனது கவிபாடுந்திறனும் நன்கு விளங்கும்.

இனி, காவிரிப்பூம் பட்டினம் இவன் காலத்திலேயே கடலாற் கொள்ளப்பட்டதென்றும், இவன் வேறிடத்தை யடைந்தானென்றும் மணிமேகலை கூறுகிறது. இவன் அடைந்த வேறிடம் உறையூரோ காஞ்சி நகரமோ தெரியவில்லை. புகார் கடல் கோட்பட்டபின் மாதவி மகளாகிய மணிமேகலை காஞ்சிப்பதியை அடைந்தபொழுது அந் நகரத்தில் தொடு கழற்கிள்ளி யென்னும் சோழனொருவனும் அவனுக்குத் தம்பியாகத் துணையிளங்கிள்ளி யென்பானும் இருந்தாராக அக்காப்பியம் கூறுகிறது. அன்னார் கிள்ளி வளவனும் அவன் தம்பியுமாயின் அவர்கள் காஞ்சியை அடைந்தாராவர்.

இவ்வேந்தன் முடிவில், சேர நாட்டிலுள்ளதாகிய குளமுற்றம் என்னும் இடத்தில் நடந்த போரில் உயிர் துறந்தானவன். அதனால் இவன் பெயர் 'சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்' எனப் பின்பு வழங்குவதாயிற்று.

இவனைப் பாடிய புலவர்கள், புறத்தில், ஆலத்தூர் கிழார், வெள்ளைக்குடி நாகனர், மாறோகத்து நப்பசலையார், ஆவூர் மூலங்கிழார், கோவூர் கிழார், இடைக்காடனர், ஆடு துறை மாசாத்தனர், ஐயூர் முடவனர், நல்லிறையனர், எருக் காட்டூர்த் தாயங் கண்ணனர் என்போரும்; அகத்தில், நக் கீரரும் ஆவர். இவருள் நப்பசலையார் பெண்பாலரா யிருத் தல்வேண்டும். இவர்களில், இவ்வரசன் துஞ்சிய பின்னரும் இருந்து பிரிவாற்ருது வருந்திப் பாடியவர்கள் மாறோகத்து நப்பசலையாரும், ஆடுதுறை மாசாத்தனரும், ஐயூர் முடவ னரும் ஆவர். இன்னோர் இரங்கிக் கூறியவை நெஞ்சை உருக்குந் தன்மையன. மாசாத்தனர், 'ஈரமில்லாத கூற் றமே, நீ மிகவும் அறிவிலியாகின்ருய்; வாட்போரில் வல்ல வீரரும் யானையும் குதிரையும் போர்க்களத்தில் மாய எதிர் நின்று கொன்று நாடோறும் நினது பசியைத் தீர்த்தற்கு ஊட்டிய வசையற்ற வலிமையுடைய வளவனை நீ கொண்டா யாயின், இனி நின் பசியைப் போக்குவோர் யார்? சொல்வாயாக; விரகு இல்லாமையால் மேல்விளைந்து பயன் படும் விதையைக் குத்தியுண்டாய்; நினக்கு யான் கூறிய இவ்வார்த்தை பிறழாத மெய்யாதலை இன்னமும் காண்பை' என்று கையறு நிலையாகக் கூறினர். இங்ஙனம், கிள்ளி வளவன் துஞ்சியபின் பாடிய இச்செய்யுட்களிலிருந்து, நல்லிசைப் புலவர்கட்கு அவன்மேல் எத்துணை அன்பிருந்த தென்பது நன்கு புலனுகின்றது.

---

16. வள்ளல் - ஆய் - அண்டிரன்

[சிவ. குப்புசாமி பிள்ளை அவர்கள்]

இயல்—1. காட்சி—3.

இடம் :—பாடிநகர்.

காலம் :—மாலைப்போது.

உறுப்பினர் :—வேள் - ஆய் - அண்டிரன் ; நற்குடி - வேள் ; திருமேனி ; இளந்திரையன்.

ஆய்வேள், தன்மீது படையெடுத்துவந்த கொங்கனின் சிறுமை நோக்கி இகழ்தலும் பின்பு தன் படைத்தலைவனுக்குப் பரிசு வழங்கலும்

ஆய்வேள் :—(போர்க்கோலம் புனைந்து தனியே நின்று) உலகம் மகிழ உயர் நலஞ் சுரக்கும் உண்மைப் பொருளே! பெருங்கருணைப் பெருமானே! என்னே இவ்வுலகத்தின் மாண்பு! நீர்க்குமிழியன்ன இளமையும், நெடுந்திரை போன்ற செல்வமும், நீரின் எழுத்தாகும் உடலும் என்றும் அழிவுறாதனவென மயங்கலாகுமோ? 'நேற்று வாழ்ந்து மகிழ்ந்த ஒருவன் இன்று உயிரற்றுப்போனான்' என்ற பெருமையொன்றையே பேரணியாக இப்பூவுலகு பூண்டிருப்பதைத் தெளிவுறத் தெரிந்தும், ஒருநாளும் அதை நோக்காது வாழ்நாட்கள் யாவும் வீணாட்களாகச் செலவிடுவது நன்றாகுமா? நாக்குளற, கண் சுழல, காதடைக்க, மேலுயிர்ப்பெழுந்து, காலன் திசைநோக்கி வருந்துநாள் கூடுமுன், வீட்டுநெறி நாடி நல்வினையில் உள்ளத்தை ஊன்றாது, என்றும் அழிவுறும் இழிபொருள்களிலேயே கருத்தையூன்றி, மானம் மறுமைப்பயன் இவற்றை எள்ளளவும் உள்ளத்திற் கொள்ளாது உண்டு, உடுத்து, உயிர்த்து உறங்கும் ஒருவன், உலகெலாங் கட்டி ஆளினும் —சீ! அஃது ஒரு பேறாகுமா? அறவினையால் பெற்ற ஒன்றினையே உளமுவப்பக் கொண்டு, நல்வினை ஓம்பி, அல்வினை கடிந்து, வறியாரைப் புரந்து வாழுகின்றவனன்றோ எத்தகைய தாழ்ந்த மரபிற் பிறந்தவனாயினும், உயரிய

தகுதியும் உலகு போற்றற்குரிய புகழும் படைத்த பெரு மகனுவான்! அவனலன்ரே புயலும் பூமிசைப் பொழிகின் றது! மாநிலமும் தழைக்கின்றது! (அமைதியுடன் குனிந்து சற்று உலாவல்) அருட்குணக்குன்றே, யான் எந்நாளும் அக்கொங்கனுக்கு ஒரு தீங்கும் கருதியதில்லையே; முன்பு ஒருநாள் இந்நாட்டினின்று மணமிக்க சந்தனப் பேழை களும் களிற்றுக் கொம்புகளும் பிறவும் அவன் விழைந்த வாறே போதும் போதுமென அவா அடங்கிப் புகலுமள வும் நான் கொடுத்தபோது **'ஆய் நாட்டு மன்னன் என் தாய் நாட்டுத் தோழன்'** என வாயார வாழ்த்திய அவ்வரசனுக்கு இப்போதுற்ற கேடுதான் என்னையோ? **உள்ளத்தில் கள்ளமும், உதட்டில் வெல்லமும் கொண்டுள்ள அவ்வஞ்சகனும் ஒரு நாட்டு மன்ன னும்?** ஆம்! ஆம்!! ஊழ்வினையை வெல்ல யாரால்தான் ஆகும்? (உடைவாளை உருவிச் சினத்தால் பற்களைக் கடித் தல்) பேய்மகனே, ஆய்நாட்டு அண்டிரனது ஆண்மை மிக்க போர்த்திறனை நன்கு அறியாது இவண் போருக்கு எழுந்தனையா? கூற்றுவனும் என் வலிமைக்கு ஆற்ருது தோற்றுக் காற்றெனப் பறப்பானெனில், மெல்லியனுகிய நீ எற்கு எம்மாத்திரம்? நன்று! நன்று!! (அமைதியுறல்) எனது படை இதுகாறும் பகைஞருடன் போரிற் கை கலந் திருக்கும். இன்னும் ஒரு நாழிகைக்குள் எனக்கு வெற்றிச் செய்தி கிட்டாதாயின், யானே அவண் சென்று எனது மாற்றலர்தம் உயிரைக் கூற்றெனக் குடிப்பேன். (புறத்தே நோக்கி) எங்கே எனது அமைச்சர்? (அமர்தல்.)

நற்குடிவேள் :—(வந்து ஆய்முன் வணங்கி) என் தலைவ, யான் இங்கேயே இருந்தேன். பொறுத்தருள்க; தங்கள் சீற்றம் தணிவதாக. பெரும, நமது படைகள், வீர முழக் கத்துடன் போர்க்களஞ் சென்றபோது, நமக்கு ஒன்றன் பின் ஒன்ருகத் தொடர்ந்து, நன்னிமித்தங்கள் பல தோன் றின. மேலும், என்றுமில்லாத ஒருவகை எனது உள்ளத் துள்ளே பொங்கிக் கரைபுரண்டெழுகின்றது. இக்குறிக ளால் நாம் வெற்றி பெறுவோம் என்று தோற்றுகிறது.

ஆய்வேள் :—நன்று அமைச்ச! அவ்வாறே ஆகுக. நீ, ஏதேனும் நம் மாற்றலரின் நிலையினை உணர்ந்தாயோ?

நற்குடிவேள் :—பெரும! ஒரு சிறிது அறிவேன். அருளுடன் செவி சாய்த்திடுக. 'கொங்குமன்னன் ஆய் நாட்டைப்பற்ற ஆயத்தமாயுளன்' என்ற செய்தி நமக்குக் கிட்டியவுடன் நம் ஒற்றன் 'திருமேனி'யை அவனது படைத்திறனை அறிந்து வருமாறு அனுப்பினேன். அவன் கொங்குநாட்டிற் சென்று உளவறிந்து, அப்படைஞர் நம் எல்லையை அணுகுதற்கு ஆறு நாட்களின் முன்னரே என்னிடமும் நம் தானைத்தலைவர் இளந்திரையனரிடமும் யாவும் விளங்கக் கூறினன். அஃதாவது, 'கொங்கர், நமது படையைவிடப் பதின் மடங்கு பெரிய படையைப் பெற்றிருப்பினும் அப்படைத்தலைவனையும், அணிமுதல்வனையும் நம் சேனாதிபதிகளுடன் ஒப்பிடின் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை உண்டு' என்றனன். மேலும், 'கொங்கரது காலாட்படையை அணிவகுத்துள்ள முறை, நம் வீரர் அதற்குள் எளிதிற் புகுந்து சிதறடிக்கக் கூடியவாறுளது' என நம் படைத்தலைவரும் இன்று செய்தி அனுப்பியதோடு, 'தாங்கள் எதற்கும் அஞ்சவேண்டுவதில்லை; வெற்றி நமதே' என்ற உறுதிமொழியும் விடுத்துள்ளார்.

ஆய்வேள் :—நன்று! அமைச்ச! நீ கூறியது எமக்கு அளவிறந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. நமது படைஞர் மிக்க ஊக்கத்துடன் போர்முனையில் நின்று செருவாற்றும் திறம் பெற்றவர் என்ற உறுதி எமக்கு இருப்பினும், நாம் நேரே அவர்களது திறனைக் காணாது இங்கிருக்க உளம் இசையவில்லை. புறப்படுவாய்; நாம் இருவரும் போர்க்களஞ் சென்று, நமது படைத்தலைவரும் அவரது துணைத்தலைவரும் வீரத்துடன் பகைஞரைத் தாக்கிப் போர்புரியுமாறு ஊக்குவிப்போம்.

நற்குடிவேள் :—பெரும, தாங்கள் கூறுவதும் நலனே. தங்கள் திருவுளப்படியே புறப்படுவோம்.

ஆய்வள்ளல் :—நற்குடிவள்ளால், நாம் போர்க்களஞ் செல்லுமுன்நம் வெற்றிச்செல்வியாய வீரமாதேவியையும், நம் குலக்கடவுளாய முருகவேளையும் நமக்கு வென்றியும் புகழும் அருளுமாறு வழிபட்டுப் பரவுவோம்.

நற்குடிவேள் :—அண்ணலே, அவ்வாறே தொழுவோம். (தொழுகின்றனர்.)

ஆயும் அமைச்சனும் தலைவணங்கி நிமிர்தல்

நற்குடிவேள் :—ஆ! பெரும! நம் ஒற்றன் திருமேனி, அதோ ஓடி வருகின்றான். அவனது வேகத்தை நோக்கின் வெற்றிக்குறி தோற்றுகிறது. (ஒற்றன் ஓடிவந்து இருவர் முன் வணங்க) வருக! திருமேனி, நமக்குக் ‘கனி’ தானே?

திருமேனி :—‘கனி’ தான், பெரும! (ஆயை நோக்கி) தங்கள் இணையடி என் முடிமேலாக்கி அருள்க. நாம் **கனி கொள்வதன்றிக் காய் பெறுவதில்லையே.** நமது படை வீரர்க்குக் ‘**காய்**’ என்னுஞ் சொல் ‘செருக்களஞ் சென்று பகைஞர் கெடுமாறு சினத்தீயால் சுட்டெரி’ என்ற பொருள் பயக்குமேயன்றி வேறொன்றுண்டோ?

ஆய்வள்ளல் :—ஒற்ற, நன்று கூறினாய்! நின் நற் செய்தி என்ன? போர் நிகழ்ச்சி எவ்வாறுளது?

திருமேனி :—எம் குலநலம் காக்குங் கொற்றவ! நம் படைகள் இன்று கொங்கரோடு கைகலந்த அளவில், ஊழிப் பெருநாள்போல எங்கும் பேரொலியும் பெரு முழக்கமும், கேட்டவர் நெஞ்சம் திடுக்கிடுமாறு எழுந்தன. மேலும், நாற்றிசையிலும் ‘பிடி, தொடு’ என்பாரும், ‘வெட்டு, குத்து’ என்பாரும், ‘அடி, பிடி’ என்பாருமாகத் தோன்றினர். தரையில் எள் விழவும் இடமின்றிப் படைகள் ஒன்றோ டொன்று கலந்து பிணைந்து போர்புரிந்தன. மலைகளும் மலைகளும் பொருதாற்போலத் தேர்ப்படைகள் மலைந்தன. முகிற் கூட்டங்கள் மின்னிப் பெரு முழக்கத்துடன் பொழிவது போன்று, யானைப் படைகள் தம் வெள்ளிய கொம்புகளால் பகைவர்களைக் குத்தி வீரமுழக்கஞ் செய்து மும்மதம் பெருக்கின. பெருங்கடலிற் புரண்டோடும் பேரலைகளை

யொப்ப நமது குதிரைகள் மாற்றலர் தம் படைக் குழுவில் தாவிப்பாய்ந்து சமர் முறுக்கின. கடல்மடை திறந்தாற் போல நமது வில்லேருழவர், சீற்றத்துடன் அம்புகளை வாரி இறைத்துப் பகைவரின் வலிமையை ஒடுக்கி அழித்தனர். பெரும! இவை யாவும் ஒரு நொடிப்பொழுதில் நிகழ்ந்தன. ஒருமுறை கண்மூடித் திறப்பதற்குள் எத்தனை தலைகள் உருண்டன! அந்தோ! சொல்லொணாது. ஆய்நாட்டாரின் வலிமையை இப்போது நன்குணர்ந்துள்ளார்கள் அக் கொங்கர்கள். அவர்கள் வலியிழந்து புறங்காட்டி ஓடிய ஓட்டம் மறக்கமுடியாத ஒரு காட்சி. இனிமேல் அவர் நம்மைத் தலையெடுத்து நோக்கார். நாம் இருக்கும் திசை நோக்கித் தலைவைத்தும் சாயார். இத்துணைச் சிறுபொழுதில் அக் கொங்குமன்னன் நம்படைக்கு ஆற்றாது தோற்று எஞ்சிய படையுடன் ஓடுவான் என்று நான் கனவிலும் கருதவில்லை. தீவினையின் விளைவு! போர் என்றால் பொரி கடலை எனக் கருதி வந்தான் போலும்!

ஆய்வள்ளல் :—போதும் நின் விளக்கம். தம் நிலையில் தாழ்பவர் இவ்வாறுதான் இழிவுற நேரும். நம்பால் நண்பனாக நடித்து, உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த கொங்கன் நல்ல பரிசு பெற்றான். விதியை மதியால் வெல்லலாகும் எனினும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுமாயின் அதனைத் தடுக்க எவரால்தான் ஆகும்? நன்று! ஒற்ற, நம் படைத்தலைவர் இளந்திரையனை இவண் விரைவில் அழைத்து வருக.

திருமேனி :—பெரும, அவ்வாறே கொணர்கின்றேன். (வணங்கிச் செல்லல்; படைத்தலைவன் வருதல்.)

இளந்திரையன் :— (வணக்கத்துடன்) ஆய்குடிப் பெருவள்ளலே! வணக்கம். நம் பகைஞன் கொங்காள்வான், இனி நம் நாட்டின் பெயரைக் கேட்ட அளவிலேயே நடுநடுங்கி வெய்துயிர்த்து அஞ்சும் நிலையில், இன்று புறங்காட்டித் தோற்றோடினான். பெரும, இவை யாவும் நம் மிறைவன் திருவருளாலேயே நிகழ்ந்தன.

ஆய்வள்ளல் :—இளந்திரை, நின் வீரச்செயல் எம்மைப் பெரிதும் களிக்கச் செய்கின்றது. நீயன்றோ இந் நாட்டினைப் புரக்கும் வீரன்! நம் நாட்டின் பகைஞர் இனி ஆய் குடிப்படையெனில் தம் அடிவயிற்றில் பெருநெருப்பையன்றோ கொள்வர்? 'இளந்திரை' என்றால் 'இடியொலி கேட்ட நாகம்' போன்றல்லவோ அஞ்சுவர்! நமது பெருமை, தாய் நாட்டுப்பற்று, ஆய்குடிவேள் மரபின் உயர்வு இவற்றிற்காக நீ புரிந்த அரும்பெருந் தொண்டினைப் போற்றுகின்றேம். இன்றுமுதல் நினக்கு அரச அவைக்கண் இருக்க ஓர் அரியணையும், வெளியே செல்லுங்கால் **பொற்பல்லக்கு, ஈச்சோப்பி, நளி முரசு, களிற்றுப் படை** முதலிய விருதுகளும் தந்தனம். மேலும் இன்று முதல் நின்பெயர் 'கொங்குக் கூற்றன் தமிழ்வேள் இளந்திரை' என அமைவதாக. நமது ஆய்குடித் தோன்றல்—வீரமாச் செல்வன் — கொங்குக் கூற்றன் — தமிழ்வேள் இளந்திரை, எமது கொற்றவையாகிய வீரமாதேவியின் அருளாலும், எங் குலக்கடவுள் குமரவேளின் கருணையாலும், நாளும் புகழ்பரப்பி நலம்படைத்து நீடு வாழ்க. (யாவரும்) வாழ்க; வாழ்கவே.

ஆய்மன்னன், இளந்திரையனுக்கு முத்துமாலை சூட்டி, தனக்கு அருகே இட்ட அரியணைமீ தேற்றல்

இளந்திரையன் : — எனது ஆயும் ஐயனும் ஆசானும் அரசனும் ஆண்டவனுமாய அண்ணலே! தங்கள் பூங்கழல் எந்நாளும் என் தலைக்கு அணியாகுக. தாங்கள் அடியேனுக்கு அருளிய இத்தகைய பெறும்பேற்றைப் பெறுதற்கு உரியபெற்றி வாய்ந்த பேரறிஞர்கள் பலர் இவண் இருக்கவும், என்பாலுற்ற பேரன்பினால் என்னையும் ஒரு பொருளாக்கி ஏற்றமுந் தோற்றமுமளித்தீர்கள். இதற்கு யான் எழுமையும் நன்றியறிவுடையேனாவேன். (அவையோரை நோக்கி) பேரன்பர்களே, பெருங்குடி மக்களே, எளியன் இன்று நிகழ்ந்த போரில் பகைவரைவென்று ஆய்நாட்டு வீரக்கொடி உயர்த்திய செயல்—ஈண்டுள்ள வீரப் பெரு

மணிகளாகிய படையணித் தலைவர்களது துணைவலி யின்றி யாகுமா? 'ஒருவர் உழைக்க மற்றொருவர் திளைக்க' என் பதுபோல உங்கள் பெருமுயற்சியால் யான் பெருமை பெற் றேன். இப்பேறு அனைத்தும் எனது துணைவர்களாய படைத்தலைவர்கட்கே உரியதாகும். எவர் எவ்வாறு போர் புரியினும், நமது மன்னன் காட்சிக் கெளியனாய், கடுஞ் சொல்லறியானாய், நீதிநெறி யுணர்ந்து, மக்கட்கு எவ்வகைத் துன்பமும் நேராது புரந்து, வேண்டுவார்க்கு வேண்டுவன முகமலர்ச்சியுடன் அளித்து, செங்கோல் செலுத்தி, தளர்ச்சியுற்ற குடிகளைத் தக்கவாறு பேணி, அற்றார்க்கும் அலர்ந்தார்க்கும் அருள் செய்தலால் **வீரமாது வேறெவரையும் கருதாது, வேள்-ஆய் மன்னனையே என்றுந் தன்காதல் திருமகனாகக் கொண்டு இலங்குகின்றாள்.** இத்தகைய நல்வேந்தன் பன்னலமும் துய்த்துப் பல்லாண்டு வாழக் குறிஞ்சிக்கிழவனாய குமரனைப் பரவுவோமாக. (உயர்ந்த குரலில்) வாழ்க நம் மன்னர்; வாழ்க நம் நாடு.

[யாவரும்—வாழ்க, வாழ்கவே.]

குறிப்புரை

I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

இதனை இயற்றியவர் **கம்பர்**. இவரது வரலாறு கதைப்பகுதியிற் காண்க.

1. உள ஆக்கல் - உண்டாக்குதல். நிலைபெறுத்தல் - காத்தல். நீக்கல் - அழித்தல். அலகு - முடிவு. சரண் - அடைக்கலம்.

2. இதனைப் பாடியவர் **தாயுமானவர்**. இவர் சிறந்த சிவபக்தர்; வேளாளர்; 17-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்; மௌன குரு என்ற ஞானதேசிகரிடம் உபதேசம் பெற்றவர்; இல்லறத்தில் இருந்து பிறகு துறவு பூண்டவர்.

இறைவனது வருணனை இப்பாட்டில் சிறக்கக் காணலாம். விழுப்பொருள் - சிறந்த (மேலான) பொருள். விண்ணப்பம் - வேண்டுகோள்.

2. தமிழ்த்தாய் வாழ்த்து

இதனைப் பாடியவர் திருவனந்தபுரம் **சுந்தரம் பிள்ளை** M. A. என்பவர். இவர் கல்லூரிப் பௌதிகப் பேராசிரியர்; சிறந்த தமிழ்ப் புலமை உடையவர்; வேளாள மரபினர்; 19-ஆம் நூற்றுண்டின் இறுதியில் வாழ்ந்தவர்; 'மனோன்மணீயம்' என்னும் செந்தமிழ் நாடக நூல் செய்தவர். இப்பாடல் அந்நாடக நூலிற்றுன் உள்ளது.

நிலமகளுக்கு—

கடல் - ஆடை, முகம் - இந்தியா, நெற்றி-டெக்கான், திலகம் - திராவிடநாடு, திலகவாசனை - தமிழ். அணங்கு - தெய்வ மகள். பிறை நுதல் - உவமைத் தொகை. நறுந்திலகம் - பண்புத்தொகை.

II. நீதி

1. இனிது நாற்பது

இனிய பல பொருள்களை ஒவ்வொரு செய்யுளிலும் கூறும் நாற்பது செய்யுட்களை உடைமையால் இந்நூல் இனிது நாற்பது எனப் பெயர்பெற்றது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதனைச் செய்தவர் **கபிலர்**.

1. ஏவது - ஏவிய வேலை; வினையால் அணையும் பெயர். மாறு - மறுக்காத; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நவை -

குற்றமான வழி. இளங்கிளை - பிள்ளை. கோள் - கொள்ளுதல்; முதல் நிலை திரிந்த தொழிற் பெயர். தேரின் - ஆராயுமிடத்து; எதிர்கால வினையெச்சம்.

2. முன் - முதன்மையாக. மாராயன் - மா+ராயன் - சிறந்த அரசன். கோல் - செங்கோல்; நல்ல அரசாட்சி. கோடி - வளைந்து. உரையாமை - சொல்லாதிருத்தல்; எதிர்மறைத் தொழிற் பெயர்.

3. தானம் - (ஸ்தானம்) - இடம். வாழ்வு - வாழ்தல். ஊனம் - குற்றம்.

4. நட்டார் - சிநேகித்தவர் - நள்+ட்+ஆர் - வினையால் அணையும் பெயர். பட்டாங்கு - உண்மைநெறி. முட்டில் - முட்டு+இல்-குறைதல் இல்லாத. தக்குழி-தக்கஇடம். ஈதல் - ஈ+தல்-தொழிற் பெயர்.

5. சலவரை - வஞ்சகரை. சாரா - சாராமல்; எதிர்மறை வினையெச்சம். மலர்தலை - பரந்த இடத்தையுடைய; ஞாலம் - உலகம். ஞால்+அம் - தொங்குதல். உலகம் சார்பின்றி இழுக்கும் சக்தியால் தொங்கிக்கொண்டிருக்கும் காரணம் பற்றி வந்த பெயர்; தொழில் ஆகுபெயர். மன்னுயிர் - மன்+உயிர் - பொருந்தும் உயிர்.

மன்னுயிர் = மன் + உயிர்.
= மன் + (ன்) + உயிர்—'தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டும்.'
= மன்னுயிர்.

2. பழமொழி

இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. ஒவ்வொரு பழமொழியை இறுதியில் பெற்ற 400 வெண்பாக்களை உடைய நூல் பழமொழி என்று பெயர் பெற்றது.

இதன் ஆசிரியர் **முன்றுறை அரையனார்**. இவர் பாண்டிய நாட்டு 'முன்றுறை' என்னும் பதியின் அரசர்; சமண சமயத்தினர்.

1. உரை முடிவுகாணான் இளமையோன் - (உரைத்துக் கொண்ட வழக்கின்) வார்த்தை முடிவைக் காணமுடியாத இளைஞன் (கரிகாற் சோழன்). நரை முதுமக்கள் - கிழவர் இருவர். சொல்லால் - (வழக்கு உரைத்தவர்தம்) சொற்களைக் கொண்டே. முறை - நியாயத் தீர்ப்பு. விச்சை - வித்தை. பாகம்படும் - செம் பாகமாக அமையும். கரிகாற் சோழன் கிழவேடம் பூண்டு நீதி வழங்கிய செய்தி இதிற் கூறப்பட்டுள்ளது.

2. கட்டுரை - உறுதிச்சொல். கல்லாதவர் - வினையால் அணையும் பெயர். நல்லாய் - மகடூஉ முன்னிலை.

3. துயர்ப்படுக்கும் - துன்பத்தில் அகப்படுவான். நுணல் - தவளை. வாயால் கெடும் - (தன் குரலைக் காட்டித் தன்) வாயாலே தன்னைத் தின்பார்க்கு அகப்படுத்தும்.

4. நாடு - உலகத்தார்; இடஆகுபெயர். நல்கூர்ந்து - வறுமையுற்று, வட்குபவோ - தாழ்வரோ? தாழார், ஓ - எதிர்மறை, வலித்து - (நரம்பு) வலித்து, திரங்கி - சுருங்கி.

5. வன் - வலியவரை, பெய்து - உண்டாக்குவித்து, தம் சார்பு - தன்பலம், தேசு - புகழை (உண்டாக்கும் செயல்). மஞ்சு - மேகம், மஞ்சு.........மலைநாட! - ஆடூஉ முன்னிலை. அரண் - பாதுகாவல்.

3. சிறுபஞ்ச மூலம்

இது பதினென் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இதனைப் பாடியவர் **காரி யாசான்** என்பவர். செவ்வியம், சித்திர மூலம், கண்டு பரங்கி, பேரத்தை, சுக்கு ஆகிய ஐந்தும் கொண்டு இறக்கிய கஷாயம் போல இந்நூலில் ஒவ்வொரு பாட்டிலும் கூறப்படும் ஐந்து பொருள்களும் நன்மை செய்வன ஆதலின் இந்நூல் இப்பெயர் பெற்றது.

1. பூதர் - பூத பைசாசங்கள், முன் - மூப்பு வருதற்குமுன்பு (இளமையிலேயே), ஆதரே - அறிவில்லாதவரே, என்பார் - என்று தற்பெருமை பேசுபவர்.

2. வான்குருவி - தூக்கணங்குருவி, அரக்கு - (காடுகளில் உள்ள ஒருவகை பூச்சிகளால் செய்யப்படும்) செம்மெழுகு, வால் - வெண்மை, உலண்டு - புழுக்கள் நூற்ற நூல், கோல் தருதல், கோல்புழுவால் செய்யும் கூடு, வாய்ப்பன - செய்யமுடிவன, ஒல்காது - குறைவு படாமல்.

3. வருவாய் - பொருள்வரும்வழி, வழக்குஅறிந்து - செலவை உணர்ந்து, வீழ்ந்து - விரும்பித் தழுவி, தெய்வதையும் - தெய்வத்தையும்.

4. இல் - வம்ச உயர்வு, தன்னை - தன் கொள்கையை, கருதற்பாடு - மதிக்கப்படுதலை, வாழான் - வாழாதவனாய், முற்று எச்சம்.

5. மூவார் - எதிர்மறைப் பலர்பால் வினைமுற்று.

மூ	+ வ்	+ ஆ	+ ஆர்
↑	↑	↑	↑
பகுதி	எதிர்கால இடைநிலை	எதிர்மறை இடைநிலை புணர்ந்துகெட்டது	பலர்பால் வினைமுற்று விகுதி

4. ஆசாரக் கோவை

இது பதினென்கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று. இதனைப் பாடியவர் **பெருவாயின் முள்ளியார்.** ஆசாரக் கோவை - நல்லொழுக்க முறைகளைத் திரட்டிக் கோத்துவைத்துள்ள நூல்.

1. வைகறை - விடியல், செய்யும் - அடுத்த நாளில் செய்யப் போகும், ஒண்மை - ஒளிர்மை, பொருள் - பொருள் வருவாய்க் குரிய செயல், வாய்வது - உண்மை, முந்தையோர் - (நம்) முன்னோர்.

2. நெறிப்பட்டார் - நல்ல ஒழுக்கம் உடையவர், வினையால் அணையும் பெயர்; ஆய்ந்த - நூல் ஆராய்ச்சி உள்ள, காய்தல் - எண்ணெய் பெறாது தலைவற்றுதல், தலை ஒழிய - தலையை நீக்கி (கழுத்தளவு).

3. சுடர்இடை - விளக்கிற்கும் விளக்கின்முன் இருப்பவர்க்கும் இடையில், இடர் - குளிரான துன்பம், மாசுணி - (மாசு + உணி) - அழுக்குடைய உடை, கீழ்தம்மேல் - தம் கீழும் மேலும், உரைத்தல் - பிறர் மேல்படுதல், உதிரார் - உதறார், காட்சி-அறிவு, போகார் - போ+கு+ஆ+ஆர், கு - சாரியை, ஆ - எதிர்மறை இடைநிலை.

4. ஏவாமை - போ எனச் சொல்லுமுன், பெருந்தக்கார் - மிக்க தகுதிவாய்ந்த மாணவர், கேட்டீக - கேட்க, சொல் - பாடம் சொல்லல், நின்றக்கால் - வினையெச்சம்.

5. அன்பிற் செறப்பட்டார் - அன்பு நீங்கினவர், செறுதல் - அழித்தல், திறம் - உறுதியுடன் ஒருவழி நிற்றல், துன்புற்று - (துன்புறு+உ) துன்புறு - பகுதி, ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது; உ - வினையெச்ச விகுதி புணர்ந்துகெட்டது.

5. நாலடியார்

நாலடியார் பதினென் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. நான்கு அடிகளை உடைய வெண்பாக்களால் ஆக்கப்பட்டு உள்ளமையால் இது நாலடியார் என்னும் பெயர்பெற்றது. ஆர் விகுதி உயர்வுபற்றி வந்தது. இது "நாலடி நானூறு" என்றும் பெயர் பெறும். 'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்னும் பழமொழியால் இதன் பெருமை நன்கு விளங்கும். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. இங்குள்ள பாடல்கள் அறத்துப்பாலைச் சேர்ந்தவை. இப் பாடல்கள் நானூறும் **சமணப் புலவர்** பலரால் பாடப்பட்டவையாம். இந்நூலை ஜி. யு. போப் என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்

துள்ளார். இதன்காலம் கி. பி. ஐந்து அல்லது ஆறும் நூற்றுண்டு என்னலாம்.

1. கல்வி - கற்றற்குரிய நூல்களைக் கற்பது, வைப்புழி - வைத்த இடத்தினின்று, கோட்படா - (பிறரால்) கொள்ளப்படா, வாய்த்து - கிடைக்கப்பெற்று, செறின் - கோபித்தாலும், வவ்வார்- அபகரிக்க மாட்டார், 'வைப்புழி......வவ்வார்' என்பவை, செல்வப் பொருளுக்கும் கல்விப் பொருளுக்கும் உள்ள வேறுபாடு விளக்கின. எச்சம்என - (தனக்குப்பின்) எஞ்சிநிற்கும் பொருளாக, செய்வன - தேடிவைக்கும் பொருள்கள், விச்சை - வித்தை, பிற அல்ல என்க.

கல்விக்கு இடம் உள்ளமாகலின், அங்குநின்று அது பிறரால் கொள்ளப்படாதாயிற்று.

2. நல்லினஞ் சேர்தல் - நல்ல இனத்தவரைச் சேர்ந்தொழுகுதல்.

அங்கணநீர் - ஜலதாரைநீர், உரவுநீர் - மிக்கநீர்; ஆறு கடல் முதலியன. தீர்த்தமாம் - பரிசுத்தமான நீராகிவிடும், ஓரும் - உணர்கின்ற; தெரிகின்ற. குலமாட்சி - குலத்தின் பெருமை, குன்றுபோல் - மலைபோல் (எல்லோருக்கும் தெரியும்படி).

3. நட்பாராய்தல் - நன்னட்பு, தீநட்பு, கூடா நட்பு என்பவற்றை ஆராய்தல்.

ஓரிஇ - ஒருவி; நீக்கி. கெழிஇ - கெழுமி; தழுவி. மெய்யதுஆ- தன்னுடம்பில் தைத்திருப்பதாகவும், நாய் வால் குழைக்கும் என்க.

வால் குழைத்தல் உவகையின் மிகுதியால்; ஓரீஇ, கெழிஇ என்பனவற்றைச் சொல்லிசை யளபெடை என்று வழங்குவர்.

4. அறிவுடைமை - கல்வி முதலியவற்றுன் ஆகிய அறிவோடு உண்மை யறிவுள்ளவனுதல்.

இன்நீர் - நல்லநீர், ஈண்டு - மிகுந்த, உவரி - உப்புநீர் சேர்ப்ப - கடல்நாட்டையுடைய பாண்டியனே, மக்கள் என்பார் அறிவுடைய மக்கள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவர்.

'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்றதனுல், ஈண்டு மக்கள் என்றது மனவுணர்வு மிக்கவரை. அத்தகையார் தமது கொள்கையை விடுத்துத் தாம் சேர்ந்தோரது கொள்கையை மேற்கொள்ளார் என்க.

5. மானம் - வறியராய காலத்தும் இழிதொழில் புரியாமையும், தாழ்வுவரின் வாழாமையும் ஆகிய பண்பு.

கடமா - மதயானையை. தொலைச்சிய - தொலைத்த, இடம் - இடப்பக்கத்தில், இறக்கும் - (அவ்விடத்தை விட்டுக்) கடந்து செல்லும், இடம் - அகலம். விழுமியோர் - சிறப்பினையுடையவர். அழுங்க - கெட, வரின் - வருவதாயின், மானம் அழுங்கவரின் வானகமும் வேண்டார் என்க.

வீழ்ந்தது, வினையாலணையும் பெயர். 'கருங்கட் கேழல் இடம் பட வீழ்ந்தென, அன்றவண் உண்ணுதாகி வழி நாள்,...........நல் வலம் படுக்கும், புலி' என்பது காண்க.

6. கைத்து - செல்வம், அறிவாம் (நாம்) - தன்மைப் பன்மை வினைமுற்று, செய்ம்மின் - முன்னிலைப் பன்மை வினைமுற்று, தீவளி - சூறுவளி.

7. இன்னினி - (இன்+இனி) இப்பொழுதே, கேள் - சுற்றம், இங்குச் சுற்றத்தாரைக் குறித்தலால் பண்பாகு பெயர்; செய்க - வியங்கோள் வினைமுற்று; நின்றுன், இருந்தான், கிடந்தான், சென்றுன் - ஆண்பால் வினைமுற்றுகள்.

8. அறிவது - உறுதிப் பொருள்களை உணர்த்தும் நூல், அஞ்சுவது - அஞ்சத்தக்க பழிபாவங்கள், உறுவது - (நியாயமாகப்) பொருந்தும் நற்செயல்கள், உலகு - உலகத்தார், இடவாகுபெயர், இயல்புடையார் - வினையால் அணையும் பெயர்.

9. கால் - செல்வம், ஆடுபோழ்தில் - உள்ள காலத்தில், ஆடு போழ்து - வினைத்தொகை, கழிகிளைஞர் - உரிச்சொல் தொடர், உறவினர் பலர்; மேலாடுமீன் - விண்மீன்கள், ஏலா - ஏலாத, ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; தொடர்புடையேம் - தன்மைப் பன்மை வினைமுற்று, ஈர்ங்குன்றநாட ! - குளிர்ந்த மலை நாடனே ! இஃது ஆணை முன்னிலைப்படுத்திக் கூறலால் ஆடூஉ முன்னிலை × பெண்ணை முன்னிலைப் படுத்திக் கூறல் மகடூஉ முன்னிலை எனப் படும்.

10. கேண்மை - கேள்+மை - நட்பு, நந்தும்-வளரும், வரிசை வரிசை - அடுக்குத்தொடர், வானூர் மதியம் - வான்+ஊர் மதியம் - வானத்தில் செல்லும் முழுமதி; வைகலும்-நாள்தோறும், பெரியவர் × சிறியவர்.

வளர் பிறை - பெரியவர் நட்பு.

தேய் பிறை - சிறியார் நட்பு.

6. திருக்குறள்

இதனை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் இன்ன குலத்தைச் சேர்ந்தவர் என்பதை உறுதியாகக் கூறக்கூடவில்லை. வள்ளுவர்

என்னும் பெயர் குலம் பற்றி வந்ததென்றும், தொழில்பற்றி வந்ததென்றும் பலர் பலவாறு கூறுவர். இவர் காலம் கடைச்சங்கத்திற்கு முற்பட்டது என்றும், கடைச்சங்க காலம் என்றும் கூறுவர். இவர் மதுரையினர் என்றும், மயிலாப்பூரினர் என்றும் மயிலாப்பூரிற் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர் என்றும் கூறுவர். இவர் வரலாறு இன்னதுதான் என்று உறுதியாக அறுதியிட்டுக் கூறத்தக்க சான்றுகள் கிடைத்தில.

ஆயினும், இவரது திருக்குறள் நூலால், இவர் (1) மனம் ஒன்றுபட்ட மனைவியோடு வாழ்க்கை நடத்தியவர் ; (2) நற்குணங்கள் யாவும் நன்கு அமையப் பெற்றவர் ; (3) அரசியலை நன்கு அறிந்தவர் ; (4) உலகியல் அறிவு சிறக்கப் பெற்றவர் என்பன போன்ற பல செய்திகளை அறியலாம்.

திருக்குறள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. நான்கு வகைப் பேறுகளையும் கொண்ட வெண்பாக்கள் 40-க்குள் குறையாமலும் 1330-க்கு மிகாமலும் உள்ளது கீழ்க்கணக்கு நூல் ஆகும். திருக்குறள் ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், பாரசீகம், வங்காளம், ஹிந்தி, சமஸ்கிருதம் முதலிய பல மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது. இதைக் கொண்டே இதன் தனிச் சிறப்பை நன்கு உணரலாம்.

திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது. அவை முறையே அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால் என்பன. அவை 1330 குறட்பாக்கள் கொண்டவை; 133 அதிகாரங்களை உடையவை. இங்குள்ள பாடல்கள் பொருட்பாலைச் சேர்ந்தவை.

குறள் வெண்பா என்பது பாட்டில் ஒருவகை; அவ்வகைப் பாடல்களால் ஆகிய நூலும் குறள் என்றே பெயர் பெற்றது கருவி அகுபெயர். சிறப்பு நோக்கித் திரு என்னும் அடைமொழி சேர்க்கப்பெற்றது. எனவே, திருக்குறள் என்பது குறள் வெண்பாக்களால் ஆகிய சிறப்புடை நூல் எனப் பொருள்படும்.

1. திருக்குறள்=திருவாகிய குறள்=பண்புத்தொகை நிலைத் தொடர்.

2. திருக்குறள்=அடை அடுத்த கருவி ஆகுபெயர்.

கல்வி

1. கல்வி - கற்றல், தொழிற் பெயர்; கல் - பகுதி, வி - தொழிற்பெயர் விகுதி.

எண் - கணிதம், எழுத்து - இலக்கியம் (Letters), வாழும் உயிர் - வாழ்வதற்குரிய சிறப்புடைய மக்கள். எண்ணும்

எழுத்தும் நான்கு பேறுகளையும் கண்டு உணர்தற்குக் காரணமாக இருத்தலால் கண் எனப்பட்டன.

எண் என்ப ஏனை எழுத்து என்ப என்று சொல்லப்படுபவை, அஃறிணைப் பன்மைப் பெயர். கண் என்ப - என்பர், பலர்பால் வினைமுற்று.

2. கேணி - கிணறு, இங்கு நீருக்கு ஆகி வருதலால், இட ஆகு பெயர். தொடுதல் - தோண்டுதல்.

கேள்வி

3. கேள்வி - பயனுடைய நூற்பொருள்களைக் கற்றவர் சொல்லக் கேட்டல், கேள்வி - கேட்டல், தொழிற் பெயர்; கேள் + வி.

செவிச் செல்வம் - செவி (ஆல் + வரும்) செல்வம் - கேள்விச் செல்வம்; மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை. பிற செல்வங்கள் நிலையற்றவை; மேலும் துன்பம் தருபவை; ஆதலால் செவிச் செல்வம் தலையாயிற்று.

4. நுணங்கிய - நுட்பமான, பெயரெச்சம்; கேட்கப்படும் பொருளினது நுட்பம்; வணங்கிய வாய் - வணக்கத்தைக் காட்டும் சொல்; வாய் - வாயில் உண்டாகும் சொல், இட ஆகுபெயர்.

அறிவுடைமை

அறிவுடைமை - அறிவைப் பெற்றிருத்தல், தொழிற்பெயர்.

5. மெய்ப்பொருள் - மெய்யாகிய பயன், காண்பது - காண வல்லது. 'எப்பொருள் யார் கேட்பினும் யார் வாய்க் கேட்பினும்' என அமைத்துப் பொருள் கொள்க.

6. எல்லாம் உடையர் - செல்வங்கள் எல்லாம் அறிவினால் ஆக்கவும் காக்கவும் படுதலால் அவ்வறிவினை உடையார் 'எல்லாம் உடையார்' எனப்பட்டார்.

என் உடையரேனும் இலர் - செல்வத்தைக் காப்பதற்கும் அஃது அழிந்த இடத்து மீட்டும் சேர்த்தற்கும் கருவியாகிய அறிவு இல்லாதார், 'என் உடையரேனும் இலர்' எனப்பட்டார்.

அறிவு உடையார் - வினையால் அணையும் பெயர். எல்லாம் உடையர் - பலர்பால் வினைமுற்று. இலர் - பலர்பால் எதிர்மறை வினைமுற்று.

சிற்றினம் சேராமை

சிற்றினம் - கீழ்மக்கள், இனம் - இனத்தவர், பண்பாகு பெயர்; சேராமை - சேராதிருத்தல் - எதிர்மறைத் தொழிற் பெயர்.

7. திரிந்து - வேறுபட்டு, அற்றும் - அத்தன்மைத்தாகும்.

8. உணர்ச்சி - இயற்கை அறிவு, மனத்தால் ஆம் - மனம் காரணமாக உண்டாகும்.

தெரிந்து செயல் வகை

எதனையும் அதன் நன்மை, தீமைகளை ஆய்ந்து செய்யும் முறைமை.

9. ஆக்கம் - இலாபம், ஊக்கார் - மேற்கொள்ளார், எதிர் மறைப் பலர்பால் வினைமுற்று.

10. துணிக - வியங்கோள் வினைமுற்று, எண்ணுவம் (யாம்)- தன்மைப் பன்மை வினைமுற்று.

செங்கோன்மை

அரசன் செங்கோலனாக இருத்தல்.

11. உலகு - உயிர்கள், இட ஆகுபெயர்; குடி - குடிகள், பண்பாகுபெயர்; வான் - மேகம், தானி ஆகுபெயர்.

12. இறை - இறைவன், அரசன்; இறை காக்கும் - 'செய் யும்' என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று, முறை காக்கும் - ஒன் றன் பால் வினைமுற்று. முட்டா - தடையின்றி, செயின் - எதிர் கால வினையெச்சம்.

ஆள்வினை உடைமை

ஆள்வினை - முயற்சி, உடைமை - பெற்றிருத்தல், தொழிற் பெயர்.

13. தாளாண்மை - முயற்சி, வேளாண்மை-உதவி, செருக்கு- மேம்பாடு.

14. முயற்றின்மை - முயற்சி இல்லாமை, இன்மை-வறுமை.

சொல் வன்மை

சொல் வன்மை - சொல் ஆற்றல்.

15. நிரந்து - ஒழுங்குபடக் கோத்து, ஞாலம் - உலகம், இங்கு உலக மக்கள்; இட ஆகுபெயர். வல்லார் - வல்லவர், வினை யால் அணையும் பெயர்.

16. இணர் - கொத்து, ஊழ்த்தும் - மலர்ந்திருந்தும், நாறு - நாறுத (மணம் இல்லாத), ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; அனையர் - பலர் பால் வினைமுற்று, உரையாதார் - எதிர்மறை வினையால் அணையும் பெயர், உணர - பிறர் அறிய, வினை யெச்சம்.

வினைத்திட்பம்

தொழிலின்கண் மனவுறுதி. திட்பம் - (மன) உறுதி.

17. ....எளிய அரியவாம் - இவ்வாறு நான்கு சீர்களை உடைய ஒரே அடியில் முரண்பட்ட சொற்கள் வருதல் முரண் தொடை எனப்படும்.

வண்ணம் - விதம், எளிய அரிய - பலவின்பால் வினை முற்றுகள்.

18. எண்ணிய - எண்ணியவற்றை, பலவின்பால் வினையால் அணையும் பெயர்; எய்துப - அடைவர், பலர்பால் வினைமுற்று; எண்ணியார், திண்ணியர் - பலர் பால் வினையால் அணையும் பெயர்கள், பெறின் - எதிர்கால வினையெச்சம்.

எண்ணிய எண்ணியாங்(கு) எய்துப எண்ணியார் - இவ்வடியில் உள்ள நான்கு சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றாகவே (ஏகரமாகவே) வருதல் காண்க. இங்ஙனம் வருதல் முற்றுமோனை எனப்படும்.

மருந்து

19. யாக்கை - கட்டுதல், தொழிற் பெயர்; யா - பகுதி, கை - தொழிற் பெயர் விகுதி. இது கட்டப்பட்ட உடம்பைக் குறித்தலால் தொழில் ஆகுபெயர். அருந்தியது - உண்டது, அற்றது - சீரணித்ததை, போற்றி - குறிகளால் தெளிய அறிந்து, உணின் - எதிர்காலப் பெயர் எச்சம்.

20. நோய் நாடி - நோயை அதன் குறிகளால் இன்னதெனத் துணிந்து, நோய் முதல் - நோய்க்குக் காரணம். வாய் - உபாயம், வாய்ப்ப - முறைமை தவறாமல், செயல் - செய்க, வியங்கோள் வினைமுற்று.

III. கதை

1. நளவெண்பா

நளவெண்பா—நளனது வரலாறு கூறும் வெண்பாவினால் ஆகிய நூல். இதனைச் செய்தவர் வெண்பாப் பாடலில் புகழ் பெற்ற **புகழேந்திப் புலவர்.** இவர் தொண்டை நாட்டில் உள்ள பொன்விளைந்த களத்தூரில் வேளாலர் மரபில் பிறந்தவர். மள்ளுவ நாட்டில் முரணை என்னும் நகரில் இருந்து அரசாண்ட சந்திரன் சுவர்க்கி என்னும் சிற்றரசனால் ஆதரிக்கப்பட்டவர். இவர் சுமார் 750 ஆண்டுகட்கு முற்பட்டவர்.

நளவெண்பா வழிநூல்; இதற்கு முதல்நூல் வியாச பாரதத்தில் வரும் **நள உபாக்கியாநம்** ஆகும். நளவெண்பா (1) சுயம்

வர காண்டம், (2) கலிதொடர் காண்டம், (3) கலி நீங்கு காண்டம் என்றும் மூன்று காண்டங்களை உடையது.

சுயம்வர காண்டம்—நிடத நாட்டில் மாவிந்த நகரில் இருந்த நளன், விதர்ப்ப நாட்டு அரசனாகிய வீமன் மகள் தமயந்தியைச் சுயம்வரத்தில் மணந்ததைக் கூறும் பகுதி.

(1) **நளவெண்பா**=நளன்+வெண்பா
=நள+வெண்பா—'சில விகாரமாம் உயர் திணை'
=நளவெண்பா (புணர்ச்சி இலக்கணம்)

(2) **நளவெண்பா**=நளன் (ஐ+பற்றிய) வெண்பா—இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க நிலைத்தொடர். (தொடர் இலக்கணம்.)

1. காமர் - அழகு, காவி - நீலோற்பல மலர், தளை - கட்டு, முந்நாட்டும் - முன்வைத்துச் சொல்லப்படும், செந்தேன் -செம்மை (ஆகிய) தேன் - பண்புத்தொகை.

1. அவிழ்பூ - வினைத்தொகை, தாரான் - வினையால் அணையும் பெயர். தனிக்காத்தான் - பொது நீக்கித் தனக்கே உரியதாக்கிக் காத்தான், கிளியும் பருந்தும் - எண் உம்மை.

அருகூட்டும்=அருகு+ஊட்டும்
=அரு (க்+உ)+ஊட்டும் — 'உயிர்வரின் உக் குறள் மெய்விட்டு ஓடும்,
=அரு+க்+ஊட்டும்
=அருகூட்டும்.

பைங்கிளி=பசுமை+கிளி
=பசு+கிளி—'ஈறு போதல்'
=ப +கிளி—'இனையவும் பண்பிற்கே இயல்பே'
=பை +கிளி—'அடி அகரம் ஐ ஆதல்'
=பை +(ங்)+இனை—'இனம் மிகல்'
=பைங்கிளி

3. மாண் நிறத்தான் - மாட்சிமை பொருந்திய ஒளியையுடைய நளன், அப்புள் - அப்பு+உள் - தண்ணீரில், முளரி - முள்+அரி - தாமரை, முள் பொருந்திய தண்டினை உடையது. தலை - இடம்.

4. குழாம் - கூட்டம், வல்லியர் - வல்லிக்கொடி போன்ற பெண்கள், கொடு - கொண்டு, தொகுத்தல் விகாரம்; ஓர் அன்னத்

தைப் பல மயில்கள் ஓடி வளைப்பதுபோல அன்னப் பறவையைப் பல பெண்கள் வளைத்தனர் என்பது நயம் உடையது; தங்கோ - தம்+கோ - தம் அரசன்.

5. அஞ்சல் – பயப்படாதே, முன்னிலை ஒருமை வினைமுற்று; அனமே - அன்னமே, தொகுத்தல் விகாரம்; மட அனமே - இளமை பொருந்திய அன்னமே, உரிச்சொல் தொடர்; வஞ்சி அனையார் - வஞ்சிக்கொடி போன்ற பெண்கள், விஞ்சியது - மேற்பட்டதை, களிவண்டு - வினைத்தொகை.

6. செய்ய - சிவந்த, திரு - இலக்குமி, அடுமாற்றம் - கொல்லும் பகைமை, வினைத்தொகை; தடுமாற்றம் - கலக்கம்.

7. எழு - தூண், அடு - வெல்லும், அடுதோள் - வினைத்தொகை, மன்னன் - மன்னா! - ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டது - விளி வேற்றுமை; இழையோர் - நகையணிந்த பெண்டிர், கொடை - கொடுத்தல், தொழிற்பெயர்; கொம்பு - பூங்கொம்பு போன்ற தமயந்தி, உவமை ஆகுபெயர்; ஒலிநீர் - வினைத்தொகை.

8. நாற்குணம் - அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு. அச்சம் - உள்ள நிறைக்கு ஊறு நேருமோ என்னும் ஐயம் உண்டாகும் பொழுது தோன்றும் பயம்; நாணம் - பிறர் தன் அழகைக்காண நேரும்பொழுது உண்டாகும் கூச்சம்; மடம் - அறிந்தும் அறியாதவள்போல ஒழுகுதல்; பயிர்ப்பு - உடல் உணர்ச்சி; உடலைத் தீண்டியதும், தீண்டியவர் இன்னார் என்றறியும் உணர்ச்சி. நாற்படை - தேர், பரி, கரி, காலாள்; ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். இச்செய்யுள் உருவக அணி பெற்று வந்துள்ளது.

9. செல்லுங்கொல், காணுங்கொல், இயம்புங்கொல், மீளுங் கொல்; கொல்; ஐயப்பொருளில் வந்துள்ள இடைச்சொற்கள். உரையா - உரைத்து, ‘செய்யா’ என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம். மும்மதம் - கன்ன மதம், கபோல மதம், பீஜமதம்; கொல்யானை - வினைத்தொகை.

10. நாடல் - விரும்பி வந்தது, கன்னி - மணம் ஆகாதவள், நன்னுதல் - நல்ல நெற்றியுடைய தமயந்தி, பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

11. மறம் - வீரம், அறம்×மறம், அல்லனேல் - அல்லன் ஆயின், அவற்கு - அவன்+கு, அல்லன் - எதிர்மறை ஆண்பால் வினைமுற்று, நெஞ்சும் கண்ணும் வலியும் - எண் உம்மை.

12. ஆதி - ஆவாய், முன்னிலை ஒருமை வினைமுற்று; கா - சோலை, உரைத்தி - சொல்வாய், உரை + த் + இ

↓ ↓ ↓

பகுதி ; எழுத்துப்பேறு ; முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

பாவை - பொம்மை (போன்ற தமயந்தி), உவமை ஆகுபெயர்.

13. மன்றல் - வாசனை, நீலம் - நீலோற்பல மலர், முன்றில் - வீட்டு வாசல், கோதை - மலர்மாலை (அணிந்த தமயந்தி), ஆகு பெயர்; சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய் - தமயந்தியின் அன்புப் பார்வை பெறத் தவம் கிடந்த நளன்.

14. இச்செய்யுளில் உவமை, உருவக அணிகள் பொருந்தி உள்ளன. விழித்தாமரை - உருவகம், புக்காள் - நுழைந்தாள்.

விழி - தாமரை மண்டபம் - குளம் தமயந்தி - இலக்குமி	}	புகு ↓ பகுதி ஒன்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது.	+ ஆள் ↓ பெண்பால் வினைமுற்று விகுதி

15. பரிசு - விதம், கொடி - தமயந்தி, உவமை ஆகுபெயர்; தனி - ஒப்பற்ற. இயல் அணங்கு - கலைமகளை ஒத்த தோழி.

16. காணு - கண்டு, 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

17. கடிமாலை - மணமாலை, உரிச்சொல் தொடர்; அருள் - வியங்கோள் வினைமுற்று, மன்னவன் – கடவுள்.

18. காசினி - தரை, நறுந்தாமரை - பண்புத்தொகை, நன்னுதல் - இலக்குமி.

19. விண்ணரசர் = விண் + அரசர்

= விண் + (ண்) + அரசர் — 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்,

= விண்ணரசர்.

வெள்கி - வெட்கம் அடைந்து, ஞாலம் - உலகம், உலகத்தாரைக் குறித்தலால் இட ஆகுபெயர்; வன்மாலை - வலிய மயக்கத்தை, வயம் - வெற்றி, பொன் - இலக்குமி (போன்ற தமயந்தி) உவமை ஆகுபெயர்.

20. செந்தாமரை, வெண்டாமரை - பண்புத்தொகை, ஒள் தாரை - ஒளியும் கூர்மையும் பொருந்திய, கோமாலை - சிறந்த இயல்பினை உடைய, வேலான் - நளன், வினையால் அணையும் பெயர்; குலாமாலை - குலத்திற்கு மாலைபோன்ற, வேற்கண் - உவமைத்தொகை.

2. பெரிய புராணம்

அப்பூதி அடிகள் புராணம்

இது சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் கடைசியாகச் சேர்க்கப்பட்டது. இது பெருமை பெற்ற சிவன் அடியார்களது வரலாற்றை உரைப்பது. மக்களுள் பெரும்பாலோர் செய்தற்கரிய செயல்களைச் செய்து பெருமை பெற்ற சிவனடியாரது பெருமையைக் குறிக்கும் நூல் ஆதலால் இது பெரிய புராணம் என்னும் பெயர் பெற்றது. இது திருத்தொண்டர் புராணம் என்று கூறப்படும். புராணம் - பழைய வரலாறு.

இந்நூல் பாடுதற்கு உதவியாக இருந்தவை—(1) சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை. (2) நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருஅந்தாதி. (3) மூவர் பாடிய தேவரங்கள். (4) திருமூலர் திருமந்திரம், (5) காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமான் நாயனர், நக்கீரர் முதலியோர் பாடிய நூல்கள் (11-ஆந் திருமுறை). (6) **கல்வெட்டுகள்** (7) கர்ண பரம்பரைச் செய்திகள் (8) **சேக்கிழார் தலயாத்திரை** முதலியன.

இந்நூலாசிரியராகிய **சேக்கிழார்** தொண்டை நாட்டவர்; குன்றத்தூரினர்; வேளாளர் மரபினர்; சேக்கிழார் குடியினர். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பது. இவர் மூன்ரும் குலோத்துங்கனுக்கு அமைச்சராக இருந்தவர்; அரசன் வேண்ட இப்புராணம் பாடித் தில்லையில் அரங்கேற்றியவர்; 'தொண்டர் சீர் பரவுவார், உத்தம சோழப் பல்லவராயர்' என்னும் பட்டங்கள் அரசன்பால் பெற்றவர். இவரது காலம் ஏறக்குறைய 12-ஆம் நூற்ருண்டாகும்.

1. **பெரிய புராணம்**=பெரியார்+புராணம்—'சில விகாரமாம் உயர்திணை'
=பெரிய புராணம்

2. **பெரிய புராணம்**—பெரியவர் (ஐ+பற்றிய) புராணம் — இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

அடிகள்—மனமாசற்ற பெரியவர்.

1. தம்பிரான் — தம் + பிரான், தம் பெருமான் (சிவன்) — படர்க்கையிடம்.

எம்பிரான்—எம்+பிரான், எம் பெருமான்—தன்மையிடம்

உம்பிரான்—உம்+பிரான், உம் பெருமான் — முன்னிலையிடம்.

தகு காதல் – வினைத்தொகை, அப்பரைக் காணு முன்னமே அவர் பால் அன்பு பூண்டு ஒழுகி வந்தார்.

2. வாக்கின் வேந்தர் - நாவுக்கு அரசர் (சிவனுர் தந்த பெயர்), அடிமை - பக்திச் சிறப்பு, அஃதாவது சமணரும் சமண வேந்தனுன மஹேந்திரவர்மனும் விதித்த தண்டனைகளை அப்பர் தமது சிவ பக்தியின் சிறப்பினுல் வென்ருர் என்பது. அப்பர் அரசனையும் சைவமாக்கினுர்; உடனே தொண்டை நாடு சைவம் ஆனது. அப்பரது காலம் மஹேந்திரவர்மன் காலம். (கி. பி. 600–630) படி நிகழ் - உலகத்து நிகழ்கின்ற.

3. மந்தமாருதம் - இளங்காற்று. சந்தம் உற - அழகு பொருந்த.

4. ஆறு - கங்கையாறு, பகீரதன் கதை; ஈறு இல் - முடிவு இல்லாத, கொற்றம் - வெற்றி.

5. மறையோர் - வேதத்தில் வல்லவர் (அப்பூதி அடிகள்), கேளா – கேட்டு, 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; நாண் இல் அமண் பதகர் - அமணரில் வெட்கம் இல்லாத அற்பர் (அப்பர்க்குத் தீங்கு செய்த சமண முனிவர்), மன்னவன் - மஹேந்திரவர்மன், உறைப்பு - வலிமை, வேறொரு பேர் - இதனை மேல் பாட்டில் அப்பர் கூறினுர் அன்ருே? அதுவே அடிகள் கோபத்துக்குக் காரணம் ஆயிற்று.

6. கழல் - தானியாகு பெயர், செம்மை - சிவத்தொண்டு, வெம்மை - கொடிய.

7. பொங்கு கடல் - வினைத்தொகை, அங்கணர் - அம்+கண்ணர் - அழகிய நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான், தொகுத்தல் விகாரம்.

8. அவர் பெருமை - சிவனடியாரைச் சிறப்பு செய்யும் அடிகளது பக்தியை, பிறதுறை - பிற மதங்கள், சூலை - வயிற்றுவலி, இப்பாட்டில் அப்பரது அடக்கம் காண்க. அப்பர் சமண மதத்திலிருந்து சைவரானதற்குச் சூலை நோயே காரணம்.

9. கரகமலம், கண்ணருவி, சரண கமலம் - உருவக அணி.

10. வாகீசர் - வாக்கு + ஈசர் - அப்பர், வறியவன் பெருஞ் செல்வம் பெற்ருர்போல - உவமை அணி.

11. அப்பர் அமுதுண்ண இலை பறிக்கும் பாக்கியம் தனக்குக் கிடைக்கும்படி பெற்ருேர் செய்தமையால், மூத்த திருநாவுக்கரசு தன் பெற்ருேரை 'நல்ல தாய் தந்தை' என்று பாராட்டி

ஞன். ஒல்லை - விரைவைக் குறிக்கும் இடைச்சொல், புக்கு - நுழைந்து,

புகு + உ
↓ ↓
பகுதி ஒற்று இரட்டித்து } வினையெச்ச விகுதி
இறந்த காலம் காட்டியது } புணர்ந்து கெட்டது

மல்லல்=வளப்பம், வாள்=ஒளி, அழுங்கி=வருந்தி

அங்கை = அகம் + கை
= அம் + கை —'அகம் முன்செவி, கை வரின் இடையன (க) கெடும்.'
= அம் + கை
= அங்கை.

12. கண்ணெரி - கண்+எரி, பை - நஞ்சுப்பை, பாந்தள் - பாம்பு, கொடுப்பன (யான்) - தன்மை ஒருமை வினைமுற்று.

13. மாசுணம் - பாம்பு, அருந்தவர் - அரிய தவத்தினர் (அப்பர்), திருந்திய கருத்து - தெளிவான முடிவு, செழுமணி - பண்புத்தொகை.

14. ஏழாம் வேகம் - முழுவேகம், பாம்பின் விடம் ஏழு வேகங்களாக உடம்பிலே ஏறித் தலைக்கேறும்; விடம், கடித்த இடத்திலிருந்து இரத்தக் குழாய்கள் வழியே இரத்தாசயத்திற்குப் போய் அங்கிருந்து மீள வெளிவந்து உடம்பிற் பரவுவது ஓர் ஓட்டமாகும். அதற்கு ஒரு வேகம் என்பது பெயர். அப்படி ஒருமுறை ஓட்டம் வந்து முடிந்தால் உடம்பில் உள்ள ஏழு தாதுக்களில் ஒரு தாது வலி குன்றும். அப்படி ஏழுமுறை சுற்றி வந்தால், ஏழாம் வேகம் தலைக்கேறி மூர்ச்சை உண்டாகும். எட்டாம் வேகத்தில் உயிர் நீங்கும் என்று மருத்துவ நிபுணர் கூறுவர். ஏழாம் வேகத்தில் ஏழு தாதுக்களும் வலிகெடும்; பல்லும் கண்ணும் உடம்பும் விடத்தினால் கருகும், உணர்வு நீங்கும்.

15. வீழ்மகன் - வினைத்தொகை; துளங்குதல் - நடுக்கம், தொண்டர் - அப்பர்.

16. முன்றில் - இல்முன் - முன்பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை, புடை - பக்கம், அற - முழுவதும், விறல் - தெய்வசக்தி.

17. கேளா - கேட்டு, அண்ணலார் - பெருமை பொருந்தியவர் (சிவபெருமான்), பாஇசைப் பதிகம் - 'ஒன்றுகொலாம்' என்று தொடங்கும் பதிகம் (பதிகம் 10 பாக்களைக் கொண்டது)

பணி - பாம்பு, பாற்றுவித்தார் - மாற்றி யருளினர்.

18. எழுவானை - வினையால் அணையும் பெயர், சே - எருது, உகைத்தவர் - செலுத்துபவர் (சிவனார்), செய்ய - சிவந்த, பூவடி - பூப்போன்ற பாதம், உவமைத்தொகை;

பூவடி = பூ + அடி
= பூ + (வ்) + அடி - 'ஏனை உயிர்வழி வவ்வும்'
= பூவடி

புனிதநீறு அளித்தார் - நல்ல சைவர்கள் உணவின்முன் உட்கார்ந்ததும், திருநீற்றைப் பக்கத்தில் இருப்பவர்க்குக் கொடுத்துத் தாமும் இட்டுக்கொண்ட பிறகே உண்பர்.

19. கோமயம் - பசுவின் சாணம், கோநீர் - பசுவின் சிறுநீர், சுதை - கோலம், போக்கி - போட்டு, ஈர்வாய் - அறுபட்ட இலையின் வாய். இதனை உண்பவர் தம் வலப்புறம் வர வைத்தல் மரபு. இப்பாட்டில், அப்பர் அமுதுண்ணும் இடம் தூய்மை செய்யப்பட்ட விதம் காண்க

20. கொந்தவிழ் - கொந்து+அவிழ் - 'கொத்து' 'கொந்து' என வந்தது மெலித்தல் விகாரம்; வேணி - சடை, அம் தமிழ் ஆளியார் - அழகிய தமிழை ஆள்பவர்.

3. சீகாளத்திப் புராணம்

நக்கீரச் சருக்கம்

நக்கீரச் சருக்கத்தை இயற்றியவர் துறைமங்கலம் **சிவப்பிரகாச சுவாமிகள்.** இவர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்துவந்த குமாரசாமி தேசிகர் என்பவரின் முதற் புதல்வராவர். இவர் உடன் பிறந்தவர் வேலையர், கருணைப்பிரகாசர் என்பவர். சிவப்பிரகாசர் இளமையிலேயே துறவுபூண்டு கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர்; துறைமங்கலம் அண்ணாமலை ரெட்டியாரால் ஆதரிக்கப்பட்டார். இவரது சமயம் வீர சைவமாகும். இவர் வீரமாமுனிவரோடு சமயவாதம் புரிந்ததால், இவரது காலம் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கம் என்பர். இவர் இயற்றிய வேறு நூல்கள் சோண சைலமாலை, நால்வர் நான்மணிமாலை, பிரபு லிங்கலீலை முதலியன.

சீகாளத்திப் புராணம் சிவப்பிரகாசர், வேலைய தேசிகர், கருணைப்பிரகாசர் என்ற இம்மூன்று சகோதரர்களாலும் பாடப்பட்ட நூலாகும்.

கதைத் தொடர்ச்சி:—மதுரையின் மன்னனாக விளங்கிய வங்கிய சூடாமணி என்னும் பாண்டியன் நக்கீரர், கபிலர், பரணர்

முதலிய புலவர்கள் அடங்கிய தமிழ்ச் சங்கத்தை ஆதரித்து வந்தனன். ஒருநாள் பாண்டியன் தன் மனைவியோடு மேல்மாளிகையில் உலாவிக்கொண்டிருக்கும்போது, தென்றற் காற்றோடு கலந்து ஒரு நறுமணம் வீச, அவன் அதனைத் தன் மனைவியின் கூந்தலின் இயற்கை மணம் என மதித்தனன்.

1. ததைத்த - பொருந்திய, கிழி - முடிப்பு, தூக்கினன் - உயரக் கட்டிவைத்தான்.

2. பா - பாடல்கள், தலைவன் - பாண்டியன், மலைகொள் - மலைபோன்ற, வறிது - பயனின்றி.

3. திங்கள் மருகன் - சந்திரகுலத்தில் தோன்றிய பாண்டியன், பொற்ற பாட்டு - அழகிய பாட்டு, பொருக்கென - விரைவாக, பொருக்கு - விரைவுப் பொருளில் வந்த இடைச்சொல்.

4. துனைவு - விரைவு, தேங்கமழ் கடுக்கை - தேன்மணக்கின்ற கொன்றை மாலை, வேணிச் செல்வன் - சடையை யுடைய சிவபெருமான்.

5. அங்கயற்கண் - அழகிய கயல் மீன்போன்ற கண்களையும், கிளி உறழ் கிளவி பங்கன் - கிளியின் சொற்கள்போன்ற சொற்களையுமுடைய உமாதேவியைத் தனது இடதுபாகத்திற் கொண்ட சிவபெருமான், பாட்டியல் - பாடுந்தன்மையுடைய, கோட்டமில் - குற்றமற்ற.

6. நல்லார் - மகளிர், சில் இருங் கூந்தல் - குளிர்ந்த பெரிய கூந்தல், அன்று - அன்றி என்னும் வினையெச்சத் திரிபு. விண் மகளிர் - தேவலோகத்துப் பெண்கள்.

7. அரம்பை - அரம்பை முதலிய தெய்வ மகளிர், நறியநாற்றம் - நல்ல வாசனை, இன்று - (இயற்கையாக) உடையதன்று, குன்று இறை பயந்த செல்வி - பர்வதராஜன் புத்திரியாகிய பார்வதி, எற்று - எப்படிப்பட்டது, அற்று - அத்தன்மையதே.

8. எரிமருள் - நெருப்புப்போன்ற, மருள் - உவமவுருபு. மாற்றரு மருட்சியான் - நீக்கமுடியாத விபரீத ஞானத்தையுடைய நக்கீரன், மருள் - மயக்கமெனினுமாம், சாற்றிய - சொன்ன, தொலைவுஇலான் - அழிவற்ற சிவபெருமான்.

9. முரணி - மாறுபட்டு, வான்தோய்இமயமால்வரைப் பூங்கொம்பு - பார்வதி, மைமலி - கருநிற மிகுந்த, மறைசொல் - வேதத்தால் புகழப்படும், ஆனு மணம் கமழ் - கெடாத இயற்கை வாசனைவீசும், குழல் - கூந்தல், இறப்ப - மிகுதியாக, இச்செய்யுள் குளகம், 'அஞ்சி' என்பது, அடுத்த செய்யுளில் வந்துள்ள 'என்றான்' என்பதனோடு முடியும்.

10. பனித்து - நடுங்கி, முருகு அலர் கமலம் - வாசனை வீசும் தாமரை மலர். இழிபு - இழிந்த தன்மை, இலங்கு - விளங்கும்.

11. குன்று உறழ் புரிசை - மலைபோன்ற மதில், தென்றல் அம்பொதிய வெற்பின் - தென்றற் காற்றையுடைய அழகிய பொதிய மலையையுடைய, தென்னர்கோன் - பாண்டியன், எரி சினம் - வினைத்தொகை.

12. இப்பால் - இவ்விடத்து, சிற்குணன் - ஞானவடிவாகிய சிவபெருமான், நல் கவின் - நல்ல அழகு.

13. இறந்து - கடந்து, உலப்புஇல் - அழிவற்ற, கரை இல் பேர் அஞருள் - அளவில்லாத பெரிய துன்பத்துள்.

14. விளித்து - கூப்பிட்டு, மடன்அறு - அறியாமைஅற்ற, நமரங்காள் - நம்மவர்களே, படுபிணி - பொருந்திய குட்டநோய்.

15. நாவலர் - புலவர்கள், ஓவுஇல் - ஒழிதலில்லாத, வெறுவியம் இருப்ப - பயனற்றவர்களாகி இருக்க, ஆவல் வல்வினை - சூழ்ந்த வலிய தீவினை.

16. மேலோன் - நக்கீரன், பொன்றல்இல்-அழிதல் இல்லாத, புணர்வு - ஒரு தேயத்தராதல், பழகல் - பலதரம் கண்டு பேசுதல், உணர்ச்சி - ஒத்தஅறிவு. 'புணர்ச்சி பழகுதல்......தரும்' என்ற குறட்கருத்தைக் காண்க.

17. இணையிலான் - ஒப்பற்ற நக்கீரன், தன் திரைக் கையால் - தனது அலைகளாகிய கையால், தான்றி அம்குலை - தான்றி மரத்தின் காய்க்குலைகளை, மன்றல் - வாசனையுள்ள, மன்னோ - அசை.

18. சுவுந்தரேசன் - சோமசுந்தரக் கடவுள், தாயை - அங்கயற் கண்ணம்மையை, வேந்தன் - பாண்டியன், சங்கத்து உறவை - சங்கப் புலவர்களாகிய உறவினரை, பண்பாகு பெயர்.

19. நுணங்கு மாண்அறிவு - மாட்சிமைப்பட்ட சூட்சம அறிவு, தேர்த்தானை - தேர்ப்படை, உழு - உராயப்பெற்ற, அணங்குஉடை - (பகைவர்க்கு) அச்சம்தரும், அரிமான் - ஆண் சிங்கம், துப்பு - வலிமை, அரசர்கோன் - பாண்டியன், இணங்கு - பொருந்திய, நூல் - கல்வி, அரிமான் - இருபெயரொட்டுப் பண்புத் தொகை.

20. இனைந்து - வருந்தி, வெம் சுரம் இறந்து - கொடிய காட்டைக் கடந்து, புனல் திருநாடு - சிறந்தநீர் வளப்பமுள்ள சோழ நாடு, பெண்ணைநாடு - பெண்ணை யாற்றையுடைய நடுநாடு, அந்தண்பாலித் தண் நடை - அழகிய குளிர்ந்த பாலியாற்றையுடைய (தொண்டை நாட்டின்) குளிர்ந்த இடத்தை.

4. குசேல உபாக்கியானம்

குசேலோபாக்கியானம் - குசேலன் + உபாக்கியானம். குசேலனது வரலாறு என்பது இதன் பொருள்.

ஆசிரியர் :—**வல்லூர் தேவராச பிள்ளை.**

காலம் :—ஏறக்குறைய **100** ஆண்டுகட்குமுன் வாழ்ந்தவர்.

குசேலன் இயற்பெயர் :—**சுதாமா.** குசேலன் என்பது காரணப் பெயர்; கந்தை ஆடையை அணிந்திருந்த காரணத்தால் இப்பெயர் உண்டாயிற்று.

மனைவி பெயர் :—சுசீலை.

குழந்தைகள் :—இருபத்தேழு.

இந்நூல் சுக முனிவரால் பரீட்சித்திற்குச் சொல்லும் முறையில் அமைந்தது.

கதைச் சுருக்கம் :—குசேலன், மனைவி மக்களுடன் வாழும் நாளில் அவர்களை வறுமைவாட்டத் தொடங்கிற்று. அப்பொழுது சுசீலையின் தூண்டுதலினால், குசேலன் தன் இளமைக் கால பள்ளி நண்பனாகிய கண்ணனைக் கண்டு எல்லா நன்மையும் பெற்றான் என்பது. 'கண்ணனும் குசேலனும்' என்பது குசேலோபாக்கியானத்தின் ஒரு பகுதி.

1. எண் + அனை - எல்லோரும் எண்ணுகின்ற தாயாகிய திருமகள். கள் + நனை + துளவம் - தேள் கசியுந் துளசி. ஈந்து + அருள் ; ஈ - பகுதி. ஈந்து - ஈத்து, வலித்தல் விகாரம். அன்னை - அனை, தொகுத்தல் விகாரம்.

2. கால் - காற்று. நீத்தம் - வெள்ளம். எழுநீத்தம் - வினைத் தொகை. 'அணை...போல்' - உவமையணி. பொன்னடி - உவமத் தொகை.

3. திலகம் - நெற்றிச்சாந்து. ஐயன் - குசேலன். புளகம் - உடல்சிலிர்த்தல். நிரம் + உற - மார்புபொருந்த. குலமறைத்தலைவன் - கண்ணன். மலர்தலை - அகன்ற இடம். உலகம் - உலகத்தவர் ; இடவாகுபெயர்.

4. பாக்கியம் - முன்செய்த நல்வினைப்பேறு. பலித்த - பயன் தந்தன ; பலவின்பால் படர்க்கை வினைமுற்று. யோக்கியம் - தகுதி. தேக்கிய - நிறைந்த ; தேங்கிய என்பது எதுகைநோக்கி தேக்கிய என வலித்தல் விகாரமாயிற்று. புகழினன் - வினையாலணையும் பெயர். சிலைவலோய் - வில்வித்தையில் வல்லவனே என்று சுகன் பரீட்சித்தை விளிக்கின்றார்.

5. நத்தவம்; நற்றவம் என்பது எதுகைநோக்கி இவ்வாறு திரிந்தது. ஐயன் - கண்ணன். புத்தமுது - புதுமை+அமுது.

7. வரவு+அனைத்தும் - வரவனைத்தும் 'உயிர்...முற்றும் அற்று ஒரோவழி, என்பதனுல் ஆயிற்று. உவகைபூத்து - உவகை தோன்றி. வழிதரு - மிகுகின்ற; வழிதல் - பகுதி. அன்னவன் - குசேலன்.

9. இருந்தவர் - இரும்+தவர் - மிகுந்த தவமுடையவர்.

10. ஆயோர்கள் - ஆகியவர்கள். எண்மையில் - எளிதில்.

12. நீர்மை - தன்மை. மன் - கணவன். உஞற்றுவளே - செய்வாளோ? இப்பாடலை 'மனைத்தக்க......துணை' 'தற்காத்து... பெண்' என்ற குறள்களோடு ஒப்பிட்டுணர்க.

13. பைங்குதலை - பசுமை+குதலை - இனிய மழலைச்சொல். அங்கவரை...புரிந்தனையோ' என்பதை 'தந்தை......செயல்' என்பதோடு ஒத்து அறிக. அணிதர - சிறந்தவன்என்று மதித்துப் புகழ. சிங்கல் - குறைவு.

14. நோற்றல் - தவம்செய்தல். இவர்தல் - உயர்தல். 'இவர் ......நோற்ருள்' என்பதை 'மகன்...சொல்' என்ற குறளோடு ஒப்பிட்டறிக. உவர் - உவர்ப்பு. உவர் - அகச்சுட்டு.

15. இருவேம் - தன்மைப்பன்மை. சாந்தீபமுனி - குசேல கண்ணர்களின் ஆசிரியர். திருகு+ஆரா; திருகு - குற்றம். ஆரா - இல்லாத (ஆர் - பொருந்துதல்)ஆரா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

16. பந்தனை - பற்று. பக்கணம் - பட்சணம்; சிற்றுண்டி. வந்தனை - முன்னிலை ஒருமை வினைமுற்று. ஐ - மு. ஒ. வி. விகுதி.

17. அளித்தி - அளிப்பாய். இ - மு. ஒ. வி. விகுதி. செங் கரம் - பண்புத்தொகை. மலர்த்தி - விரித்து. அவற்கொடை - அவல்கொடுத்தல். கொடு - பகுதி.

18. நடலை - கபடம். தீர்ந்தவன் - வினையாலணையும்பெயர். மின்னனுர் - பெண்கள். தெய்வம் - சுசீலை; உருவகம்.

19. வலிதரும் அவற்றுள் - உடலுக்கு வலிமைதருவனவற் றுள்.

20. சிறந்த - சிறந்தன. பலவின்பால் படர்க்கைவினைமுற்று. 'அரிய...சிறந்ததேனும்' என்பதை, 'ஒப்புடன்...தானே' என்ற அவ்வையார் பாடலுடன் ஒப்பிட்டறிக.

5. அரிச்சந்திர புராணம்

அரிச்சந்திரபுராணம் - அரிச்சந்திரன்+புராணம். அரிச்சந்திரனது வரலாறு இதன்பொருள். மயானகாண்டம் - சுடுகாட்டில் நடந்த செய்தியைக்கூறும் பகுதி. காண்டம் - பெரும் பிரிவு.

நூலாசிரியர் காலம்:—100 ஆண்டுகட்கு முற்பட்டது.

கதைச் சுருக்கம்:—அயோத்திமன்னனாகிய அரிச்சந்திரன், வாய்மை, ஏகபத்தினிவிரதம், இல்லையென்னாது கொடுத்தல் ஆகிய இம்மூன்றினையும் காத்தற்பொருட்டு, நாடு முதலியவற்றைத் துறந்தான். விசுவாமித்திரனுக்குப்பட்ட கடனைத் தீர்க்க மனைவியையும் மைந்தனையும் விற்றுத் தானும் விலைப்பட்டான். சந்திரவதியும், அவள் மைந்தனும் வேதியனுக்கு அடிமைப்பட்டகாலத்து அவள் மைந்தன் தர்ப்பை கொய்யக் காடுபோந்து அரவு தீண்டி இறந்தான். மகனைச் சுட சந்திரவதி சுடுகாடு சென்றனள். அவ்விடத்து அரிச்சந்திரனும் சந்திரவதியும் ஒருவரை ஒருவர் அறிந்தனர். அங்கும் தம் கொள்கைகளைவிடாது காத்தனர். இறுதியில் அனைவரும் மேன்மைபெற்றனர்.

1. போடுபோடென - ஒலிக்குறிப்பு. மாடு - பக்கம். வனம் - வனத்திலுள்ள மாஞ்செடிகள்; இடவாகுபெயர். ஈடுபாடு - துன்பம்.

2. மண்டு - மிகுந்த; உரிச்சொல்.

3. இறைவனார் - அரிச்சந்திரன். ஏடி - என்னடி என்பது இவ்வாறு ஆயிற்று. மூடி - அறிவுகுறைந்தவள். கரவு - கள்ளத்தனம். அடைவோ - தகுதியோ? கான்முளை - மகன்.

4. படி - பூமி. வல்லி - சந்திரவதி; உவமையாகுபெயர். யாரும்இலி - இகரம் வினைமுதற்பொருள் விகுதி. அற - மிகவும். மறிந்த - இறந்த. வறியேற்கு - வறியவளாகிய எனக்கு; வினையாலணையும்பெயர்.

5. தெருள் - தெளிந்த அறிவு. தேயா - குறையாத; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். தஞ்சம் - பற்றுக்கோடு.

6. படியாக-என் செலவுக்காக. பொருட்கு+யான்-பொருட்கியான் 'யவ்வரின் இய்யாம்'. அற்தி, அடுதி - முன்னிலை ஒருமை வினைமுற்றுகள்.

7. கொள்ளிமுறிப்பாதி - கொள்ளித்துண்டம். மறித்தும் - மீண்டும்.

8. இந்திரசாலம் - மாயவித்தை. பல்லம் - அம்பு. 'வேடர் ...போல்' - உவமையணி.

9. அலேவு - மனம்அலேவு ; மனத்துன்பம். மங்கலம் - தாலி.

10. அற்பு - அன்பு. ஆழி - கடல். ஆழி+அன்ஞன். விற்ப - வில் பகுதி. பொற்பு - அழகு. நிறை - நாணம்.

11. உளம்நினேவு - மனேவி மகன் என்ற நினேவு. மறப்பையும் - தன்னே மறந்து இருந்தநிலேமையும், நீக்கினுன் - நீக்கித் தெளிவடைந்தான்.

12. தொழும்பன் - அடிமை. ஈகை - கொடுக்கவேண்டிய கட்டணம்.

13. சொன்னகாலம் - நீ வரவேண்டும் என்று நான் குறித்த காலத்திற்குள். தூசு - ஆடை.

14. அரக்கு - கோவைப்பூச்சி. அழல்கண்ணன் - நெருப்பைப் போலும் கொடிய கண்ணன். அற்பம் - சிறிதும்.

6. கம்ப ராமாயணம்

சொற்சுவை, பொருட் சுவை செறிந்து விளங்கும் காவியங்களுள் இது ஒன்று. கம்பராமாயணச் செய்யுட்களின் நடை தெளிவு, செறிவு முதலிய குணங்கள் பொருந்திப் படிப்போர்க்கு இன்பம் பயப்பதாய்ச் செல்கின்றது. கம்பர் கவிகள் இன்னேசையும் பொருள் ஆழமும் தெளிவும் ஆற்ருெழுக்கும் உடையதாய் இருக்கின்றன. **கம்பர்** விருத்தப் பாக்கள் பாடலில் பெயர் பெற்றவர்.

கம்பருடைய சிறப்பு வளர்ப்புகளேப் பற்றிய வரலாறு இருளிற் புதைபட்டுக் கிடக்கின்றன. அவர் பாடல்களே ஆராயின், (1) கம்பர் திருவெண்ணெய் நல்லூரில் (தஞ்சை ஜில்லா) இருந்த சடையப்ப வள்ளல் என்பவரால் ஆதரிக்கப்பட்டவர், (2) பெரும் புலமை பெற்றவர், (3) உலக அனுபவம் மிக்கவர் என்பன அறியலாம். 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்', 'கம்பநாடன் கவிதையிற்போல் கற்ருேர்க்கு உள்ளம் களியாதே', 'கல்வியிற் பெரியவர் கம்பர், என்பன கம்பரது புலமையை விளக்குவன ஆகும்.

கம்பர் காலம் கி. பி. 12-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியாகும். கம்ப ராமாயணம், (1) பாலகாண்டம், (2) அயோத்தியாகாண்டம், (3) ஆரணிய காண்டம், (4) கிஷ்கிந்தா காண்டம், (5) சுந்தரகாண்டம், (6) யுத்தகாண்டம் என்னும் ஆறு பிரிவுகளே உடையது ; 10,500 செய்யுட்கள் கொண்டது.

(1) கம்பராமாயணம் = கம்பர் + ராமாயணம்
= கம்ப + ராமாயணம் - 'சில விகாரமாம் உயர்திணை'
= கம்பராமாயணம்.

(2) கம்ப ராமாயணம் - கம்பர் (ஆல் பாடப்பட்ட) ராமாயணம் - மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

[**கதைத் தொடர்பு** :—வீடணன் இராமனுடன் சேரும்படி கும்பகருணனைத் தூண்டச் சென்ருன்.]

1. மழையினீர் வழங்கு கண்ணுன் - கும்பகருணன், இறைஞ்சினனை - வணங்கிய விபீஷணனை, உயிர்சூழ்கப் புல்லி - உயிராரத் தழுவி, உய்ந்தனை - பிழைத்து, முற்றெச்சம் ; சிந்தனை - எண்ணம், சிந்த - கெட.

2. மனக்கு நோய் துடைத்து - மனத்திலுள்ள துன்பத்தைப் போக்கி, வாழி - வாழ்வாயாக ; அசை எனினுமாம்.

3. தருமம் பார்ப்பார் - அறத்தைக் கருதுவோர், உணர்வரோ - ஆலோசிப்பாரோ? தூயவை துணிந்தபோது - பரிசுத்தமான செயல்களை உறுதிகொண்டு செய்யும்போது.

4. ஒக்கும் இன் உயிர் அன்னுரை - இனிய உயிர்போன்ற நண்பரை, இத் தொடர்ச்சி - அன்பின் தொடர்பு, மிக்கது - (அன்னுர் துறவாமல்) மிச்சமாக உள்ளது. நலனே - தருமமே.

5. உடலிடை - உடலில், தோன்றிற்ருென்றை - தோன்றிய ஒரு புண்ணை, உதிரம் ஊற்றி - கெட்ட இரத்தத்தை நீக்கி, சுடல் உற - காரம்வைத்து, கோட்டம் - உடலிற் பூசவேண்டிய வாசனைப் பொருளை, மடல் - இதழ், அலங்கல் - மாலை, மன்னே - அசை. இச் செய்யுள் பிறிதுமொழிதலணி.

6. திரு மறு மார்பன் - இலக்குமியையும் மச்சத்தையுமுடைய திருமாலின் அவதாரமான இராமன், நல்க - அருள, அனந்தரும் தீர்ந்து - தூக்கம் ஒழிந்து, ஈறிலா நாளும் பெற்ருய் - நீண்டநாள் வாழ்தலைப் பெறுவாய், பெற்ருய் - துணிவுபற்றிய கால வழுவமைதி.

7. உனைநலியும் ஈட்டார் யார் - உன்னை எதிர்த்து வருத்தக்கூடியவர் யாவர், காகுத்த வேடங்காட்டி - ககுஸ்த வம்சத்தில் பிறந்தவர்போல் தோன்றி.

8. இக்குடிக்கு இறுதி சூழ்ந்தான் - அரக்கர் குடிக்கு முடிவைத்தேடிய இராவணன், புன்மக்கள் - அரக்கர், புலமக்கள் - அறிவுடையோர்.

9. ஈறு - மரணம், துனிவரும் - கோபங்கொண்ட, செருநரான - பகைவரான. ஈற்றடி பிறிதுமொழிதலணி.

10. வேதநாயகன் - இராமன், விட்டான் - (என்னை) அனுப்பினான், திறம்பாது - மாறுபடாது, பொலன்கழல் இரண்டும் - அழகிய இரண்டு பாதங்களும், கழல் - தானியாகுபெயர்.

11. தும்பி - வண்டுகள், தொடையல் மாலை - தொடுத்தலைக் கொண்ட மாலை, படி - பூமி, பம்பு பொற்கழல்கள் - பரவிய பொற்கழலை யணிந்த திருவடிகள், பற்றினன் - பற்றி, முற்றெச்சம்; நின்றான் - நின்ற கும்பகருணன், நின்றான் - வினையாலணையும் பெயர், வெம்புணீர் - வெப்பத்தையுடைய இரத்தம்.

12. நீர்க்கோல வாழ்வு - நீரில் எழுதிய கோலத்தைப்போலச் (சிறிது காலமே நிற்கும்) அற்ப வாழ்வு, நச்சி - விரும்பி, அங்கு - இராமனிடத்து, கார்க்கோல மேனியான் - மேகம்போன்ற அழகிய வடிவமுள்ள இராமன்.

13. ஒருத்தரின் முன்னம் - தலைவர் மடிவதற்குமுன்னே, உண்டவர்க்கு உரியது - (ஒருவருடைய) உணவை உண்டவர்க்கு உரியசெயல், சாதல் - இறத்தல்.

14. தொடையல் - மாலை, வீரன் - இராமன், கணை - அம்பு, துரப்ப - விட, வெம்பு வெஞ்சேனை - கோபத்தையுடைய கொடிய சேனை, ஒருவன் - ஒப்பற்ற இராவணன்.

15. செம்பிட்டுச் செய்த இஞ்சி - செம்பினால் கட்டப்பட்ட மதில், வம்பு - வாசனை, தெரியல் - மாலை, எம்முன் - எனது தமையனான இராவணன், துன்னங்கொண்ட - தைக்கப்பட்ட, நெஞ்சு - மனம், ஆடல்கொண்டேன் - (போரில்) வெற்றிகொண்ட நான், வலியை அடக்கிய யான் எனினுமாம். ஒரு சமயம் முன்னே இராவணன் இறந்தாலும் தான் அப்பொழுதும் இராமனை அடைவதில்லை என்னும் தனது உறுதியினைக் கும்பகருணன் இவ்வாறு கூறினான் என்க.

16. போற்றினும் - காத்தாலும், சேகற - குற்றமற.

17. அவன்தன்னை - விபீஷணனை, புல்லி - தழுவி, வென்றி வெம் திறலினான் - வெற்றியையுடைய மிக்க பலமுள்ள விபீஷணன், அவன் - கும்பகருணன், அடித்தலம் - திருவடியில்.

18. வணங்கினான் - வணங்கினவனான விபீஷணன், உணங்கினான் - வாடினான், பிணங்கல் - மாறுபடுதல், குணங்களால் உயர்ந்தான் - நற்குணங்களாற் சிறந்த விபீஷணன்.

19. கள்ளநீர் - கள்ளத்தன்மை, காலும்விட்டான் - அரக்கர்

இயற்கை வழியையும் விட்டான், கால் - வழி அல்லது மரபு, பேதுறு நிலையணுகி - மனங்கலங்கி, வேலை - கடல்.

20. பெய்திற னெல்லாம் பெய்து - சொல்லக்கூடிய புத்தி மதிகளெல்லாம் சொல்லி, பெயரும் தன்மை - தன் கருத்தினின்று மாறும் தன்மை, குலத்துமானம் - குலாபிமானம்.

IV. பலசுவை

1. அழகர் அந்தாதி

அந்தாதி என்பது அந்தத்தை ஆதியாக உடையது. அஃதாவது முன் செய்யுளில் உள்ள ஈற்று எழுத்து, அசை, சீர், அடி முதலியவற்றுள் ஒன்று அடுத்துவரும் செய்யுளின் முதலாக வரும்படி அமைத்துப் பாடுவது.

தொலைந்து - வலிகுன்றி, ஆனை - கஜேந்திரன், தொலையானை - பழையவனை (முதல்வனை), அன்னை - கைகேயி (இராமன் இவளைத் தன் தாயாகவே பாவித்தான் என்க.) கலைந்தானை - (முடி) துறந்தவனாகிய இராமனை (திருமாலை), கலையானை - ஞானக் கலைகளை யுடையவனை, பாலின் அலையானை - பாற்கடல் அலைகளின் இடையே இருப்பவனை, மலைந்தானை - போரிட்டவனை, சோலை மலையானை - (திருமாலிருஞ்சோலை) மலையானை, மடம் - அறியாமை.

இப்பாட்டில் உள்ள (1) தொலைந்தானை......தொலையானை, (2) கலைந்தானை.........கலையானை, (3) அலைந்தானை.........அலையானை, (4) மலைந்தானை......மலையானை, என்னும் (சொல்) முரண் தொடை அணி அமைந்திருத்தல் காண்க.

மேலும் இப்பாட்டில், (1) கஜேந்திர மோக்ஷம், (2) இராமன் முடிதுறந்து காடு சென்றது, (3) வாணாசுரவதம் ஆகிய மூன்று கதைக் குறிப்புகள் வந்துள்ளன.

2. திருவரங்கக் கலம்பகம்

கலம்பகம் :—96 வகைப் பிரபந்தங்களில் ஒன்று. இது 100 பாடல்களை உடையது ; புய வகுப்பு, அம்மானை, ஊசல் முதலிய 18 உறுப்புகளைப் பெற்று வருவது.

தேன் - வண்டு, சானகி - சீதை, தாரம் - மனைவி.

3. கலைசைச் சிலேடை வெண்பா

சிலேடை :—இருபொருள் தருவது.

காவலரைச் சூழும் - அரசரைச் சுற்றியிருக்கும், கா அலரைச் சூழும் - சோலையிலுள்ள பூவை ஆராயும். ஆராய்தலாவது 'இம்

மலர் தேன் உண்ணுவதற்கு ஆகும்; இம்மலர் தேன் உண்ணுவதற்கு ஆகாது' என ஆராய்தலாம். அரிவை அம்பு ஆக - திருமாலைக் கூரிய பாணமாக, அரிவை - உமாதேவியாகிய பெண்ணை.

4. மீனாக்ஷி அம்மை குறம்

மீனாக்ஷி - மீன் (போன்ற) கண்ணி, உவமைத்தொகை. அம்மை குறம் - அம்மை (ஐ+பற்றிய) குறம் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

1. தமிழ் முனிவன் - அகத்தியன், தமிழை வளர்த்தவன்; கயற்கண் - கயல் (போன்ற) கண் - உவமைத்தொகை, பொங்கு அருவி - வினைத்தொகை, தூங்கும் - பாயும்.

2. வடகலை - சமஸ்கிருதம், தென்கலை - தமிழ், கந்தவேள் - முருகன், மலைநாட்டுக் கடவுள்; கனகம் - பொன், நவமணி - கோமேதகம், நீலம், பவளம், மரகதம், மாணிக்கம், முத்து, புஷ்பராகம், வைடூரியம், வயிரம் என்பன.

3. வெங்களிறு - வெம்மை (யாகிய) களிறு-பண்புத்தொகை, களிறு - ஆண் யானை × பிடி - பெண்யானை, பிணை - பெண்மான், மரை - ஒருவகை மான், வெம் - (யாவரும்) விரும்பும், கவிகை - குடை, அபிடேகவல்லி - மீனாக்ஷி அம்மை, மதுரையில் தடாதகைப் பிராட்டியராய்த் திருமுடி சூடினமையின் 'அபிடேகவல்லி' எனப் பட்டாள்.

4. தேறல் - தேன், மடுப்போம் - குடிப்போம், பசுந்தழையும்-தழையால் ஆகிய உடை, பாயல் - படுக்கை, கயற்கணி - மீனாக்ஷி, அடுத்த - ஏற்ற.

5. புல்வாய் - வாயில் புல்லை உடையது, மான்; விடர் - குகை, கடமான் - காட்டுப்பசு, இறப்பு - வீட்டின் இறப்பு, கருமலையில் வெள்ளருவி - முரண்தொடை, சில் × பல், துடி - உடுக்கை, சில்வளையும் பல்வாரும், சிறுதுடியும் பெருமுரசும் - முரண்தொடை, குறிச்சி - குறவர் இருப்பிடம், 'கள்ளக்குறிச்சி' என்னும் இடப்பெயர் நோக்குக.

5. வருணனை

மருத நிலம் :—வயலும் வயல் சார்ந்த இடமும்; இதுவே செழிப்பான நிலப்பகுதி; ஏனைய நிலங்கள் - குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை என்பன.

1. ஓசையைக் குறிக்கும் பல சொற்கள் இப் பாடலில் வந்துள்ளமை காண்க: அரவம், அமலை, ஓசை, ஓதை, தமரம், துழனி; மன்னர் - உழவர்.

2. தண்தலை - குளிர்ந்த சோலை, விளக்கம் - (மலர்ந்து) வெளிச்சம், கொண்டல் - (நீரைக் கொண்டுள்ள) மேகங்கள், முழவு - மத்தளம், குவளை - நீலோற்பல மலர், எழினி - அழகு, மகரயாழ் - மகரமீன்போலச் செய்யப்பட்ட யாழ். மருதம் கொலு இருக்கும் அழகு இப்பாவில் விளக்கப்பட்டுள்ளது.

6. அரிவையர் ஆடல்

சிலப்பதிகாரம் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று. ஏனையவை, சிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன. சிலப்பதிகாரம் கோவலன் வரலாற்றைக் கூறுவது; முப்பது காதைகளை உடையது; புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்னும் மூன்று காண்டங்களை உடையது. இது கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்டது.

இதனைப் பாடியவர் இளங்கோ அடிகள். இவர் தந்தையார் நெடுஞ் சேரலாதன் என்னும் சேர அரசன்; தமையன் செங்குட்டுவன் என்னும் பேரரசன். இவர் இளமையில் துறவுபூண்டவர்; சமணர்.

வஞ்சிக்காண்டத்தில் உள்ள வாழ்த்துக் காதையிலிருந்து இப்பாடல்கள் தரப்பட்டுள்ளன. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குத் தான் கட்டிய கோவிலில் அரசரோடு இருந்த சமயம், கண்ணகியைக் காணவேண்டி அவள் தோழியும், செவிலித்தாயும், அவள் அடித்தோழியும், ஐயை என்னும் இடைச்சிறுமியும் அங்கு வந்து, அவள் பிரிவால் வருந்திப் புலம்பினார்கள்.

அப்போது **கண்ணகி** தெய்வ வடிவில் செங்குட்டுவனுக்குத் தரிசனம் தந்ததோடு, தன்னைக் காணவந்த பெண்களை நோக்கித் தன்னோடு சேர்ந்து விளையாடவும் அழைத்தாள். இதைக் கேட்டிருந்த **வஞ்சி** நகரத்துப் பெண்களும் செங்குட்டுவன் ஆயத்தாரான மகளிரும் ஒன்றுகூடிக் கண்ணகியையும் தமிழ் நாட்டு மூவேந்தரையும் அம்மானை, கந்துகம் ஊசல் வரிகளால் வாழ்த்திப் பாடினர். அப்பாக்களில் சிலவே இங்குத் தரப்பட்டவை.

அம்மானை வரி - பெண்கள் அம்மானை ஆடும்போது பாடும் பாடல். **அம்மானை** மூன்று பெண்கள் முக்கோண வடிவில் அமர்ந்து பாடிக்கொண்டே கழங்கு எறிந்து ஆடும் ஆட்டம். முதற்பெண் ஒரு செய்தி கூறுவாள்; இரண்டாம் பெண் அது பற்றிக் கேள்வி கேட்பாள்; மூன்றாம் பெண் அக்கேள்விக்கு விடை கூறுவாள்.

1. வீங்குநீர் - பெருகுகின்ற நீரையுடைய கடல், வேலி - அரண், அரணம் - மதில், தூங்கு - அசைகின்ற, எறிந்த-அழித்த, உயர்......சோழன் - இவன், 'தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன்' எனப் பெயர்படைத்தவன், புகார் - காவிரிப்பூம்பட்டினம்; ஏல், ஓர் - அசை.

2. இப்பாட்டில் சிபிச் சக்கரவர்த்தியும், மனுநீதிச்சோழனும் குறிக்கப்பட்டனர். புறவு - புரு, நிறை - துலாக்கோல், பொன் உலகம் - தேவர், இட ஆகுபெயர்; கறவை - பசு, கறத்தலை யுடையது; தொழில் ஆகுபெயர்.

3. கந்துகம் - பந்து, கந்துகவரி - பெண்கள் பந்தாடும்போது பாடும் பாடல்; கோதை - மாலை, வில்இட - ஒளிவீச, மேகலை - இடையில் அணியும் ஓர் அணிவகை, தென்னன் - பாண்டியன், ஆர்ப்ப ஆர்ப்ப - அடுக்குத்தொடர்.

4. பின்னும் முன்னும் - பெயர்ந்து உலவி, மின்னும்மின் - மின்னுகின்ற மின்னல், நிலத்து - நிலமீது, தென்னன் - தென்னாட்டான்; பாண்டியன்.

5. ஊசல்வரி - ஊஞ்சற் பாட்டு, சேரன், பொறையன், மலையன் - இவை சேரனுடைய பல பெயர்கள்; உதியஞ் சேரலாதன் பாரதப் போரில் இருதிறத்துப் படைகட்கும் பெருஞ் சோறு படைத்த செய்தி இங்குக் கூறப்பட்டுள்ளது.

கார்செய் - கார்மேகத்தை ஒத்த, குழல் - கூந்தல், **கடம்பு எரிந்தஆ** - கடம்பரை அழித்த விதத்தைப் பாடி, கடம்பர் - மேல் கரைத் தீவுகளில் இருந்த கடற் கொள்ளைக்காரர், அவர்களைச் சேரமன்னன் கப்பல்களிற் சென்று போர்செய்து அழித்தனன் என்று பதிற்றுப் பத்தும், சிலப்பதிகாரமும் கூறுகின்றன.

6. **யவனர்**—இட்டாலியர், கிரேக்கர், அரேபியர், எகிப்தியர் இவர் அனைவரும் பண்டைத் தமிழரால் யவனர் என்றே அழைக்கப்பட்டனர்; வன்சொல் கடுமையான (உச்சரிப்பை யுடைய) சொல்; வன்பெருங்கல் - இமயமலை (வட எல்லை), வில், கயல், புலியான் - மூவேந்தர் தம் இலச்சினைகளைப் பெற்ற செங்குட்டுவன், மன்பதை - உயிர்கள், செய் - ஒத்த, உவம வுருபு; நுடங்க - அசைய, விறல் - வெற்றி.

7. தனிப்பாடல்கள்

புலவர் பலர், பலகாலத்துப் பல பொருள்களைப்பற்றி தனித் தனி பாடலாகப் பல பாடல்கள் பாடினர்; அவற்றை எல்லாம் எடுத்து ஒன்றுசேர்த்து அமைத்த நூலுக்குத் 'தனிப்பாடல்

திரட்டு' என்று பெயர். இங்கு வந்துள்ள தனிப் பாடல்கள் என்பனவும் அந்நூலில் இருந்து எடுத்தனவேயாம்.

1. வேழம் - யானை. பூழியர் - பாண்டியர். தெள் + நீர் - தெளிந்தநீர். உடைத்து என்பன, குறிப்பு வினைமுற்றுகள்.

2. சிலேடை - ஒன்றுக்குமேற்பட்ட பொருள் (ஒரு சொல்லுக்கே) தருவது. இரையும் - பெருமூச்சிவிடும், ஒலிசெய்யும். முகம் - பாம்பின்தலை; பார்த்தவர்முகம். பிண்ணாக்கு - (பிள் + நாக்கு) பிளந்தநாக்கு, பிண்ணாக்கு.

3. பெரியவிடம் - மிகுந்த நஞ்சு; அரசர், அறிஞர்முதலியவர் இடம். பித்தர் - சிவன், பைத்தியங்கொண்டவர். அரி - காற்று; அரியப்படுதல். மேல்உப்பும் - உடம்பு பருக்கும். உப்புமேல் - உப்பு (சுவை)ப் பொருள்மீது. எரிகுணம் - சீறும் குணம்; (புண்ணில் சாறுபட்டால்) எரிகின்ற குணம்.

4. எண்ணார் - மதிக்கமாட்டார். நுவல் - பேசப்படும். மகள் - திருமகள். ஆலாலம் - கொடிய நஞ்சு.

5. செல் - மேகம். செல் - போவாய். அல் - இரவு.

6. பூமாது - மலர்மகள் (திருமகள்). புவிமாது - நிலமகள். நாமாது - கலைமகள். நல் + நாவலர் - நந்நாவலர். சீமான்-பெருஞ் செல்வன்.

7. பருக்கை - சோறு. குற்றித்தைத்த தோற்செருப்பு என மாற்றுக. கனகதண்டி - பொன்பல்லக்கு.

8. வெம்காயம் - கொடியஉடம்பு. சுக்குஆனல் - சுக்கெனக் காய்ந்தால். வெந்தைஅத்தால் - கொடியவினையினால். இச்சரக்கு - இவ்வுடம்பு. மங்காத - குறையாத. சீர்அகம் - சிறந்தஇடம் (வீட்டின்பம்). பெரும்காயம் - வலிமையான உடல். ஏரகம் - திருவேரகம் (சுவாமிமலை). செட்டியார் - முருகர்.